உதயன்


18

60: பக்கங்கள் சுடர் 27 கதிர் 295 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 31 ஞாயிற்றுக்கிழமை (16/09/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 30.00

# கிழக்கு மக்களுக்கு துரோகமிழையாதீர்

## ஹக்கீமிடம் கோருகிறார் சம்பந்தன்



கொழும்பு, செப்ரெம்பர் 16

"ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கிழக்கில் ஆட்சி அமைப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் ஒத்துழைப்பு வழங்கினால் அது வாக்களித்த மக்களுக்குத் துரோகமிழைப்பதாக முடியும். ஆனால், முஸ்லிம் மக்களின் உணர்வுகளை நாம் பெரிதும் மதிக்கின்றோம். அதற்காக கிழக்கில் முஸ்லிம் ஒருவருக்கு முதலமைச்சர் பதவியை விட்டுக்கொடுக்கவும் தயாராக உள்ளோம். முஸ்லிம் மக்கள் தமக்கு வழங்கிய ஆணையைக் கருத்திற்கொண்டு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் முடிவெடுக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம். முதலமைச்சர் பதவிக்காக தமிழ் பேசும் மக்களுக்குக் கிடைத்துள்ள இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடுவதற்கு நாம் தயாராக இல்லை. எது எப்படியிருந்த போதிலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் தர்மம் வெல்லும் என்பதை நான் உறுதியாகக் கூறுகின்றேன்."

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நேற்றுத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

நாம் அரைமணி நேரம், 5 நிமிடங்களில் தீர்மானங்களை மேற்கொள்

பார்க்க பக்கம் 4

### கிழக்கு முதலமைச்சர் குறித்து அரசின் தீர்மானம் நாளை

கொழும்பு,செப் 16

கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் உள்ளிட்ட ஏனைய பதவிகள் குறித்து நாளை திங்கட்கிழமை இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் முன்னணி தெரிவிக்கின்றது.

தற்போது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் ஆரம்ப கட்ட இணக்கத்துக்கு வந்துள்ளதாக ஐ.ம.சு. முன்னணியின் பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த குறிப்பிட்டார்.

பின்னர் முதலமைச்சர் உள்ளிட்ட ஐந்து மாகாண அமைச்சின் பொறுப்புக்களுக்கான பிரதிநிதிகள் நியமிக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.மாகாண சபை தவிசாளர் மற்றும் உதவி தவிசாளர் பதவிகள் குறித்தும் தீர்மானிக்கப்படவுள்ளது.

இந்தப் பதவிகளை பகிர்ந்தளிப்பது தொடர்பில் ஸ்ரீலங்கா

பார்க்க பக்கம் 4

### உருக்குலைந்த நிலையில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், செப்.16

வேலணை, மண்கும்பான் பிரதேசத்தில் உருக்குலைந்த நிலையில் ஆணொருவரின் சடலம் நேற்று சனிக்கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளது.

பார்க்க பக்கம் 4

கச்சதீவை இலங்கையிடமிருந்து பறிக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளார் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா. 2

யாழ்.குடாநாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் குற்றச் செயல்கள் கடந்த வாரம் மட்டும் 100இக்கும் மேற்பட்டோர் கைதாகியுள்ளதாக பொலிஸார் பரபரப்புத் தகவல். 3

வடக்கில் கடந்தவாரம் 5 இடங்களில் இருந்து வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று யாழ்.பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார். 5

சூரியகாந்தி வாழ்வுக்காக போராடும் தமிழன், அணுவின் அழிப்பைத் தடுப்பதற்கு கூடங்குள கரையில் தவம் கிடக்கும் அவலநிலை. 3

### அமெ. தீர்மானத்துக்கு எதிராக ஆதரவு தேடுகிறது இலங்கை

கொழும்பு,செப் 16

இலங்கையில் போரின் போது இடம்பெற்ற, அனைத்துலக மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணை நடத்தக் கோரி அமெரிக்க நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணையைத் தோற்கடிப்பதற்கு இலங்கை அரசு ஆதரவு திரட்டி வருகிறது.

அமெரிக்க நாடாளுமன்ற

பார்க்க பக்கம் 4

## கிழக்கில் தேசிய அரசை அமைக்க ஜனாதிபதி அழைத்தால் பரிசீலனை

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவிப்பு

கொழும்பு, செப்.16

கிழக்கில் தேசிய அரசொன்றை அமைப்பது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தாமாக முன்வந்து கூறுவாராயின், அது குறித்து ஆக்கபூர்வமான முறையில் பரிசீலித்து பதிலளிக்க நாம் தயாராக உள்ளோம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் நேற்றுத் திட்டவட்டமாக அறிவித்தார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் வெற்றிபெற்ற தமது கட்சி உறுப்பினர்கள் ஐவரை விலைகொடுத்து வாங்குவதற்கு அரசு முயற்சிக்கின்றது என்றும் இது குறித்து உயர் மட்ட இராணுவ அதிகாரிகளும் தன்னுடன் பேச்சு நடத்தினர் என்றும்,

எச்சந்தர்ப்பத்திலும்- எக்காரணத்திற்காகவும் பணத்துக்காக சோரம்போய் அரசியல் செய்பவர்கள் நாங்கள் அல்லர் என்பதை

பார்க்க பக்கம் 4

### சுற்றுலா பஸ் விபத்தில் பளையில் 19 பேர் காயம்

யாழ்ப்பாணம், செப்.16

சுற்றுலா மேற்கொண்டு கைதடியிலிருந்து முல்லைத்தீவு நோக்கி 52 பேருடன் சென்ற பஸ் பளையில் விபத்துக்குள்ளானதில் 19 பேர் காயமடைந்து கிளிநொச்சி மற்றும் யாழ். போதனா வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பஸ் சாரதியைப் பொலிஸார் தடுத்து வைத்துள்ளனர்.

இந்த விபத்து பளையில் நேற்று முற்பகல் 9 மணி அளவில் இடம்பெற்றது.

வேகமாகச் சென்ற பஸ் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகிய தாக பஸ்ஸில் பயணித்தவர்

பார்க்க பக்கம் 4

### ஐ.நா. குழு பஸிலுடனும் பேச்சு

கொழும்பு,செப் 16

ஐ.நா மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் பிரதிநிதிகளுக்கும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

இடம்பெயர் மக்கள் நலன்புரி தொடர்பில் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, இலங்

பார்க்க பக்கம் 4

### காணாமற்போனோர், சாட்சிகளின் பாதுகாப்பு குறித்து ஆராய்ந்தது ஐ.நா. அதிகாரிகள் குழு

கொழும்பு,செப் 16

சாட்சிகளின் பாதுகாப்பு மற்றும் காணாமற்போனோர் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குழு கலந்துரையாடியுள்ளது.

இலங்கை வந்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகக் குழுவின்தலைவரான ஹன்னி மெகாலி மற்றும் ஒஸ்கார் சொலேரா ஆகியோரே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளை நேற்று முன் தினம் காலை சந்தித்தனர்.

இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றை மதிப்பீடு செய்வதற்கு இந்த அதிகாரிகள் குழு வந்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையாளர் கலாநிதி பிரதீபா மஹாநாம கூறினார்.

சாட்சிகள் பாதுகாப்புச் சட்டத்தை மூன்று மாதங்களுக்குள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் மேற்படி அதிகாரிகளுக்குக் கலாநிதி மஹாநாம தெரிவித்துள்ளார். 2012 ஜனவரி

பார்க்க பக்கம் 4

### ஐ.நா. குழு நாளை யாழ்ப்பாணம் வருகிறது

யாழ்ப்பாணம், செப்.16

இலங்கை வந்துள்ள ஐநா. மனிதஉரிமைகள்ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் நாளை திங்கட்கிழமை யாழ். மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளனர் என்று அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகத்தின் ஆசிய பசுபிக், மத்திய கிழக்கு, வடஅமெரிக்க

பார்க்க பக்கம் 4

சிங்கர் அறிமுகப்படுத்தும் அதிசிறந்த உறுதியான மோட்டர் சைக்கிள்கள்




SAFARI: 72 CC 4 ஸ்ட்றோக் என்ஜின், மின்சார, கிக் ஸ்ராட், அலோய் சில்லு, சிவப்பு, நீலம், கறுப்பு, சில்வர் வர்ணங்களில்

GALAXY 100: 100 CC ஸ்கூட்டர் 4 ஸ்ட்றோக் என்ஜின், மின்சார, கிக் ஸ்ராட், அலோய் சில்லு, டிஸ்க் பிறேக், சிவப்பு, நீலம், கறுப்பு வர்ணங்களில்

CAMY 80: 80 CC ஸ்கூட்டர் 4 ஸ்ட்றோக் என்ஜின், மின்சார, கிக் ஸ்ராட், அலோய் சில்லு, டிஸ்க் பிறேக், பாதுகாப்பு அலாம் மணி, சிவப்பு, நீலம், கறுப்பு வர்ணங்களில்

SUPER CUP: 4 Stroke 90cc Air Cooled Engine, Starting System : Electric/ Kick, Detachable Rear Seat, Alloy Wheels, Drum Brakes, Colours: RED/BLACK / GREEN

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். சுன்னாகம். மானிப்பாய். சங்கானை. நெல்லியடி. சாவகச்சேரி. கிளிநொச்சி

⇨ தவணைக் கொடுப்பனவு முறையிலும் பெற்றுக்கொள்ளலாம்

சிங்கர் - யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கச்சதீவு ஒப்பந்த வழக்கை உடன் விசாரிக்க வேண்டும்

## விரைவில் தமிழக அரசு உயர்நீதிமன்றில் மனு

**நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதல் இல்லாமல், கச்சத்தீவை தாரை வார்க்கும் ஒப்பந்தம் இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையே 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் ஏற்படுத்தப் பட்டது செல்லுபடியற்றதல்ல.**

சென்னை, செப்.15

கச்சதீவை இலங்கைக்குத் தாரைவார்த்த ஒப்பந்தம் செல்லுபடியானதல்ல என முதலமைச்சர் ஜெயலலிதாவால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர் நீதிமன்றம் உடனடியாக எடுத்து விசாரிக்க வேண்டும் என்று கோரித் தமிழக அரசு சார்பில் மனு தாக்கல் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து தமிழக முதல்வர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

1974ஆம் ஆண்டு கருணாநிதியின் தலைமையிலான தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கச்சதீவை இலங்கைக்கு இந்தியா தாரை வார்த்ததன் காரணமாக, ராமேஸ்வரம் பகுதியைச் சார்ந்த தமிழக மீனவர்களின் தொழில் பாதிக்கப்படுவதும், இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதும் தொடர்ந்து நடந்து வருகிறது.

இந்தப் பிரச்சினைக்குத் நிரந்தரத் தீர்வு காணும் வகையில், மேற்கு வங்க மாநிலம் பெருபாரி வழக்கில் உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பைச் சுட்டிக்காட்டி, கச்சதீவை இலங்கைக்கு இந்தியா தாரை வார்த்த ஒப்பந்தங்கள் சட்டப்படி செல்லத்தக்கவை அல்ல எனக் கூறி, உயர் நீதிமன்றத்தில் நான் 2008 ஆம் ஆண்டு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் என்ற முறையில் வழக்குத் தொடர்ந்தேன்.

இது மட்டுமல்லாமல், கடந்த 2011 ஆம் ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றவுடன், இந்த வழக்குக்கு வலு சேர்க்கும் விதமாக, கச்சதீவு குறித்த அனைத்து ஆவணங்களையும் தன் வசம் வைத்துள்ள தமிழக அரசின் வருவாய்த் துறை தன்னை ஒரு வாதியாகச் சேர்த்துக் கொள்ளும்படி உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்ய வேண்டும் என்று தமிழக் சட்ட மன்றப் பேரவையில் தீர்மானம் இயற்ற நடவடிக்கை எடுத்தேன். இந்தத் தீர்மானத்தினையடுத்து, தமிழக அரசின் வருவாய்த் துறையும் மேற்படி வழக்கில் தன்னை ஒரு வாதியாக இணைத்துக் கொண்டது.

என்னால் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், இந்திய நாட்டுக்குச் சொந்தமான ஒரு பகுதியை அந்நிய நாட்டிற்குக் கொடுப்பது தொடர்பான உடன்பாட்டை நாடாளுமன்ற இரு அவைகளின் ஒப்புதலோடு இந்திய அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலம் மட்டுமே நடைமுறைப்படுத்த முடியும் என 1960 ஆம் ஆண்டு உயர் நீதிமன்றம் பெருபாரி வழக்கில் தீர்ப்பளித்ததைச் சுட்டிக்காட்டி, இந்த உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு முற்றிலும் முரணான வகையில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதல் இல்லாமல், கச்சளதீவை தாரை வார்க்கும் ஒப்பந்தம் இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையே 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்டது செல்லுபடியற்றதல்ல என்று எடுத்துரைத்து இருக்கிறேன்.

தற்போது தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையின் தாக்குதல் குறையாத இன்றைய நிலையில், அது குறித்து நேற்றுமுன்தினம் எனது தலைமையில் ஓர் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தலைமைச் செயலாளர், உள்துறை முதன்மைச் செயலாளர், வருவாய்த்துறை முதன்மைச் செயலாளர், கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை செயலாளர், அரசு தலைமை வழக்குரைஞர், அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில், கச்சதீவை இலங்கைக்குத் தாரை வார்த்துவிட்ட ஒப்பந்தங்கள் செல்லுபடியற்றதல்ல என தாக்கல் செய்யப்பட்ட வழக்கை உயர் நீதிமன்றம் உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டும் எனக் கோரி ஒரு மனுவைத் தமிழக அரசின் சார்பில் தாக்கல் செய்வது என முடிவு எடுக்கப்பட்டது. இதன்படி, உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசின் சார்பில் மனுத் தாக்கல் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் - என்றுள்ளது. (த)

## போரில் பாதிப்புற்ற பகுதிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் நிதியுதவி

கொழும்பு, செப்.16

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் நிதியுதவியை வழங்கவுள்ளது.

அம்பாறை, வவுனியா, மன்னார் மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டை கருத்திற் கொண்டு இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளதாக இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி வில்லி வன்டென்பேக் தெரிவித்துள்ளார்.

தமது நிதியுதவிகள் ஐக்கிய நாடுகளின் நிறுவனங்கள் மூலம் பகிரப்பட்டு, பணித் திட்டங்கள் முன்னெடுக்கப் படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

போர் காரணமாக குறித்த பிரதேசங்களின் அபிவிருத்தி பாரியளவில் பின்னிலைக்கு உட்பட்டுள்ளதாக வன்டென்பேக் சுட்டிக்காட்டியுள்ளார். (த)

## திருநெல்வேலி வாள்வெட்டு இரு சந்தேகநபர்களே கைது

யாழ்ப்பாணம், செப்.16

முன்னைய முரண்பாடே திருநெல்வேலி சிவன் அம்மன் கோயிலை அண்மித்த பகுதியில் குடும்பஸ்தர் வெட்டிக்கொலை செய்யப்பட்டமைக்குக் காரணம் என்று ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கொலைக் குற்றச்சாட்டில் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு அவர்களிடம் மேலதிக விசாரணை நடத்திவருகின்றோம் என யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா நேற்றுத் தெரிவித்தார்.

பொலிஸ் வாராந்த ஊடக மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஞாயிறு பிற்பகல் அதே இடத்தைச் சேர்ந்த நாதன் ஜென்சிலன் (வயது 26) என்பவர் கத்தி வெட்டுக்கு இலக்காகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவருடன் நின்றிருந்த இரத்தினசிங்கம் விமலதாசன் (வயது 27) என்பவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

3 ஓட்டோக்களில் வந்திருந்த சுமார் 15 இற்கும் மேற்பட்டவர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலிலேயே ஒருவர் கொலையுண்டார். மற்றையவர் படுகாயமடைந்தார். இதனை நேரில் கண்டவர்கள் தெரிவித்திருந்தனர். எனினும் இரண்டு பேர் மாத்திரமே இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாக எரிக் பெரேரா தெரிவித்தார். (10-4)

## அரச வங்கி ஒன்றில் போலித் தங்கம் அடைவு

யாழ்ப்பாணம், செப்.16

மானிப்பாய் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அரச வங்கி ஒன்றில் போலித் தங்கம் அடைவு வைக்கப்பட்டமை தற்பொழுது கண்டறியப் பட்டுள்ளது. இது தொடர்பாக எவரும் கைது செய்யப் படவில்லை என்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

அடைவு வைத்தவர் 4 லட்சத்து 94 ஆயிரம் ரூபா பெறுமதியான பணத்தைப் பெற்றுச் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி போலித் தங்கம் அடைவு வைக்கப்பட்டுள்ளது. அதனைக் கடந்த 7ஆம் திகதி பரிசோதித்துப் பார்த்த போதே அது போலித் தங்கம் என்பது தெரியவந்தது. சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சந்தேக நபர் தொடர்பான சரியான ஆவணங்கள் உறுதிப்படுத்தப்படவில்லை. அதனால் கைது செய்யப்படவில்லை, விசாரணை மேற்கொள்ளப் படுகிறது என்றார் - பெரேரா. (த-4)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், செப்.16

யாழ்.மாவட்ட செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப் பட்டிருந்தது. இருப்பினும் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாகவும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (5)

## நெல்லியடி புலிக்கொடி விவகாரம் தேடப்படுபவர் வீட்டைக் காணோம்

நெல்லியடியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் புலிக்கொடியுடன் ஓடிய சம்பவம் தொடர்பில், மோட்டார் சைக்கிள் இலக்கத்துக்கு உரியவர்கள் தெரிவித்த முகவரி போலியானதென்பது தெரியவந்துள்ளதால் இருவருக்கும் மீண்டும் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

யாழ்.சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளின் இலக்கங்கள் நீதிமன்றினால் பொலிஸாருக்கு வழங்கப்பட்டு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

அந்த இரண்டு இலக்கங்களில் ஒன்று ஓட்டோ ஒன்றினுடையது என்பதும் மற்றையது மோட்டார் சைக்கிளினுடையது என்றும் அந்த இரண்டு இலக்கங்களுக்கும் உரியவர்கள் கொழும்பு-15 கொழும்பு ஜாஎல பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதும் உறுதியாகியது.

அவர்கள் இருவரும் விசாரணை செய்யப்பட்டனர். அவர்கள் கொடுத்த முகவரியின்படி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அந்த முகவரி போலியனது அப்படியொரு முகவரி இல்லை என்பது தெரியவந்துள்ளது. எனவே அந்த இரண்டு பேரையும் மீண்டும் பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு அழைப்பாணை அனுப்பியுள்ளோம் அவர்களில் ஒருவர் சிங்களவர், மற்றையவர் தமிழர். அது தொடர்பிலான விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது என்றார் எரிக் பெரேரா.

வடக்கில் காணி சுவீகரிப்புக்கு எதிராக கடந்த ஜூலை மாதம் 18 ஆம் திகதி நெல்லியடியில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பட்டத்திலேயே புலிக்கொடி காட்டப்பட்டது. (10-4)

## பிறந்து ஒரு நாளேயான குழந்தை விற்பனை

யாழ்ப்பாணம், செப்.16

பிறந்து ஒரு நாளேயான குழந்தையை, விலைக்கு வாங்கியவரையும் அதற்கு உடந்தையாக இருந்தவரையும் யாழ்.பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவரும் யாழ்ப்பாணம் பாஷையூரைச் சேர்ந்தவர்கள். இருவரும் கடந்த 13ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளனர்.

குழந்தையைப் பெற்ற தாயார் அல்லைப்பிட்டியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. அவர் இன்னும் கைது செய்யப்படவில்லை என்றும் அது தொடர்பில் விசாரணை மேற்கொண்டுள்ளதாகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை -

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நள்ளிரவு வீடு புகுந்து கத்தியால் வெட்டிவிட்டு பெண் ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயன்றதாகக் குற்றஞ்சாட்டப்படும் ஒருவரைத் தாம் கைது செய்துள்ளதாகவும் எரிக் பெரேரா தெரிவித்தார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவித்து கடந்த வாரம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாடு மற்றும் விசாரணையின் மூலமாக சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்து விசாரணை மேற்கொண்டுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-4)

## தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை அமைக்கும் பணிகள் பற்றி தகவல் இல்லை

யாழ்ப்பாணம், செப்.16

தெல்லிப்பழையில் புற்றுநோய் வைத்தியசாலை அமைக்கும் பணிகள் நேற்று சனிக்கிழமை ஆரம்பிக்கப் படும் என்று சுகாதார அமைச்சினால் அறிவிக்கப்பட்டிருந்த போதும் நேற்று எந்தவிதமான வேலைகளும் மேற்கொள்ளப் படவில்லை.

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை அமைப்பதற்கென நடைப்பயணம் மூலம் பெருமளவான நிதி திரட்டப்பட்டது. இந்த நிதித் திரட்டு நடவடிக்கை நிறைவுற்று ஒரு வருடம் கடந்த நிலையி[illegible] அமைக்கும் வேலைகள் எவையும் மேற் கொள்ளப்படவில்லை. இதற்கு சம்பந்தப்பட்டவர்கள் பதிலளிக்க வேண்டும் என்று வலி. வடக்கு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்த நிலையில், கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சில் கடந்த மாதம் 23ஆம் திகதி கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் 'கலர்ஸ் ஒப் ஹரேஜ்' நிறுவனத்துக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிதி அனைத்தும் தனியார் வங்கிக் கணக்கில் பேணப்படுவதுடன் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில் தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் [illegible] விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என்றும், 'கலர்ஸ் ஒப் ஹரேஜ்' நிறுவனம் கேள்வி கோரல் மூலம் நான்கு ஒப்பந்த காரரைத் தெரிவு செய்து சமர்பித்திருப்பதன் அடிப்படையில் பொருத்தமான ஒப்பந்த காரர் தெரிவு செய்யப்பட்டு செப்ரெம்பர் 15ஆம் திகதி பணிகளை ஆரம்பிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கட்டடம் அமைப்பதற்கான நடவடிக்கை எதுவுமே நேற்று மேற்கொள்ளப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆர்.கேதீஸ் வரனை தொடர்பு கொண்டு கேட்டபோது,

எனக்கு சுகாதார அமைச்சில் 15ஆம் திகதிக்கு முன்னர் பணிகளை ஆரம்பிப்பதாகத் தெரிவித்திருந்தார்கள். பணிகள் ஆரம்பிக்கப்படாமை தொடர்பில் நான் கடந்த வாரம் சுகாதார அமைச்சிடம் வினவியிருந்தேன்.

குறித்த வைத்தியசாலை அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட காணியினை ஊடறுத்து உயர் மின்னழுத்த இணைப்பு செல்கின்றது. இதனை வேறு மார்க்கமாக அமைப்பதற்கு 5 மில்லியன் ரூபா வரையில் இலங்கை மின்சார சபை கோரியுள்ளது. எனவே குறித்த நிதியை குறைப்பது தொடர்பில் 'கலர்ஸ் ஒப் ஹரேஜ்' நிறுவனம் இலங்கை மின்சார சபையிடம் கலந்துரையாடி வருகின்றது. இதன் பின்னரே பணிகள் ஆரம்பிக்கப் படும் என்றார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 110 குற்றவாளிகள் கடந்த வாரம் கைது

## யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் தகவல்

யாழ்ப்பாணம்,செப்.16

*நீதிமன்றங்களால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்களில் 30 பேர் மற்றும் போதையில் வாகனம் செலுத்திய 38 பேர் உட்பட பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 110 பேர் கடந்த வாரம் கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா இந்தத் தகவலைத் தெரிவித்தார்.*


யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் நீதிமன்றங்கள் பலவற்றிலும் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 30 பேர் கைது செய்யப்பட்டனர்.

போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 38 சாரதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொது இடத்தில் மது போதையில் இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் 18 பேரும் பொது இடத்தில் மது அருந்திய குற்றச்சாட்டில் 11 பேரும் சட்டவிரோத மது விற்பனையில் ஈடுபட்ட 9 பேரும் கஞ்சா விற்பனை செய்த குற்றச்சாட்டில் இரண்டு பேரும் சூழல் மாசடையும் வகையில் செயற்பட்ட குற்றச்சாட்டில் இரண்டு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த 10 பேரும் அவரவரது குற்றத்துக் கேற்ப பிணையில் விடுவித்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டும் உள்ளனர் என்று எரிக்பெரேரா மேலும் தெரிவித்தார். (ம-4-86)



காரைநகர் ஈழத்துச் சிதம்பர மூன்றாம் வீதியில் உள்ள கேணி, கால்நடைகள் நீர் அருந்துவதற்கு வசதியாக கடந்த வாரம் சிரமதானப் பணிமூலம் இறைத்து துப்புரவு செய்யப்பட்டது. (ம-250)

# கடற்றொழில் உபகரணங்களை பாதுகாக்க விரைவில் நடவடிக்கை

## காரைநகர் பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

காரைநகர்,செப்.16

காரைநகர் கசூரினா கடற்கரையில் கடற்றொழிலுக்கு ஏற்பட்டுள்ள இடையூறுகளை நீக்கி மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று காரைநகர் பிரதேசசபை தலைவர் வே.ஆனைமுகன் தெரிவித்தார்.

காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் காரைநகர் பிரதேச கடற்றொழிலாளர் சமாச தலைவரினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கசூரினா கடற்கரைக்கு வருபவர்களில் சிலர் மதுபோதையில் கடற்றொழிலாளர்களது பகுதிக்குள் புகுந்து அவர்களின் கடற்றொழில் உபகரணங்களை சேதப்படுத்துகின்றனர் என்று கூறப்பட்டது.

அத்துடன் கடற்றொழிலாளர்களால் கடலில் போடப்பட்ட களங்கட்டி வலைகளை நீந்திச் சென்று சேதமாக்குகின்றனர்.

இதனால் அதிகாலை வேளைகளில் தொழிலுக்குச் செல்வோர் ஏமாற்றத்துடன் கரை திரும்புகின்றனர்.

இந்த நிலை தினமும் இடம்பெற்று வருகின்றது.இதனால் இந்தப் பகுதி கடற்றொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அன்றாட சீவியத்துக்கும் பெரிதும் சிரமப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே கடற்றொழிலாளர்களின் பகுதியை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் எஸ்.ஜெயதீபன் கூட்டத்தில் கேட்டிருந்தார்.

இதற்குப் பதில் அளித்த பிரதேச சபை தலைவர் வே.ஆனைமுகன் இன்னும் ஒரு மாத காலத்தில் மீனவர் பகுதிக்கு சுற்றுலாப் பயணிகள் உட்செல்லாதவாறு முட்கம்பி வேலி போடுவதுடன் உபகரணங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். (ம-250)

# பனை வெல்லத்தை நாடு முழுவதும் விநியோகிக்க அனுமதி பெற முயற்சி

யாழ்ப்பாணம்,செப்.16

வெல்லம் மற்றும் பனம் பொருள்கள் உற்பத்தியில் முன்னணி தொழிற்சாலையாக பண்டத்தரிப்பு பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் விளங்குகிறது.

இது தனது உற்பத்தியான பனை வெல்லத்தை நாடு முழுவதும் விற்பனை செய்வதற்கு ஏற்றதாக தர நிர்ணய சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது.

அது கிடைத்த பின்னர் தமது சங்கத்தால் உற்பத்தி செய்யப்படும் வெல்லம் நாடு முழுவதும் விற்பனைக்கு விடத் தயாராக உள்ளது எனவும் பண்டத்தரிப்பு பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் கி.குணரத்தினம் தெரிவித்தார். (ம-7)



முன்னாள் ஆசிரியர் ச.மாணிக்கவாசகர் எழுதிய 'வேலணை ஒரு வரலாற்று அறிமுகம்' நூல் வெளியீட்டு விழா நேற்று சனிக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் சு.அருமைநாயகம் நூலை வெளியிட்டு வைக்க தொழிலதிபர் எஸ்.பி.சாமி பெற்றுக்கொண்டார். (ம-13)

# ரூ.21 ஆயிரம் அபராதம்

## போதையில் அனுமதிப்பத்திரமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியதால்

வடமராட்சி, செப்.16

மதுபோதையுடன், அனுமதிப்பத்திரமுமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய இரு இளைஞர்கள் 21 ஆயிரம் ரூபா அபராதத்தை பருத்தித்துறை நீதிமன்றத்தில் செலுத்தினார்.

நெல்லியடிப் பொலிஸ் பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள்களில் சென்ற இரு இளைஞர்களையும் பொலிஸார் தடுத்து நிறுத்தி சோதனை இட்டபோது இருவரிடமும் சாரதி அனுமதிப்பத்திரம் இருக்கவில்லை. அத்துடன் இருவரும் மது போதையிலும் காணப்பட்டமை தெரியவந்தது.

இருவர் மீதும் நெல்லியடிப் பொலிஸார் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் தனித் தனியே வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்குகள் பருத்தித்துறை மாவட்ட நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது இருவரும் தமது குற்றங்களை ஒப்புக்கொண்டதனையடுத்து தலா 10 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து நீதிவான் தீர்ப்பு வழங்கினார். (ம-8)

BMS
make learning happen

"நீங்கள்
மனிதர்களின் நோய்களுக்கான காரணங்கள்,
உடல் இழையங்கள், கலங்கள் மீதான தாக்கங்கள்,
நோய்கள் பற்றி கண்டறியவும், தடுக்கவும்,
சிகிச்சை அளிக்கும்முறைகள் பற்றி அறியவும்
ஆவலாக உள்ளீர்களா?

அப்படியானால்...

நீங்கள் தேடுவது உயிரியல்
விஞ்ஞான பட்டம் பெறுவதற்கான
பாடநெறியே!"

Higher National Diploma in
Biomedical Science

5th batch in Sri Lanka

BSc(Hons) Biomedical Science
பட்டத்துக்கு வழிவகுக்கும்

■ Duration: 18 Months ■ Commencement: October 2012

For registration: 071 480 6193

591, Galle Road, Colombo 6,
T: [illegible]250 4757 E: biomedical@bms.lk

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கிழக்கு முதலமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முஸ்லிம் காங்கிரஸுடன் கலந்துரையாடி, இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளவுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

மாகாண சபைக்குத் தெரிவாகியுள்ள உறுப்பினர்களின் பெயர்கள் நாளை திங்கள்கிழமை வர்த்தமானியில் பிரசுரிக்கப்படலாம் எனவும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார். (த)

## உருக்குலைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மண்கும்பான் பகுதியில் கடலில் அடித்து வரப்பட்டுப் கரையொதுங்கிய சடலமே இவ்வாறு நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது.

உடல் முழுவதும் உருக்குலைந்து எலும்புகள் வெளித்தெரிந்த நிலையிலேயே சடலம் கரையொதுங்கியுள்ளது. சடலத்தில் உள்ளாடை மாத்திரே காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமாலை 6 மணியளவில் சடலம் கரையொதுங்கியது. ஊர்காவற்றுறைப் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். (த-5-251)

## ஐ.நா. குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கைக்கு பயணம் செய்துள்ள பிரதிநிதிகளுக்கு விளக்கம் அளித்துள்ளார்.

இடம்பெயர் மக்களின் மனித உரிமைகளை அரசு பாதுகாத்துள்ளதாக பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யுத்த வலய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் அரசு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்கள் யுத்த பீதியின்றி வாழக்கூடிய ஓர் பின்னணியை அரசு உருவாக்கியுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவில் புகலிடம் கோரிய இலங்கை இடம்பெயர் மக்களை மீள்குடியேற்றுவது தொடர்பில் சில பிரச்சினைகள் நிலவி வருவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளைப் போன்றே புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கும் அரசு எவ்வித ஒடுக்குமுறையுமின்றி உணவு, நீர் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களை விநியோகம் செய்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இனவாத அரசியல் மேற்கொள்ளப்பட்ட போதிலும் கிழக்கு மாகாணத்தில் ஆளும் கட்சியே கூடுதலான வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளதாக அமைச்சர் பஸில் குறிப்பிட்டுள்ளார். (த)

## அமெ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உறுப்பினர்கள் ஏழு பேர் இணைந்து கடந்த 7 ஆம் திகதி இந்தப் பிரேரணையைச் சமர்ப்பித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் போதும் அதற்குப் பின்னரும் இரு தரப்பினராலும் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், மற்றும் ஏனைய மனித உரிமை மீறல்கள் குறித்தும் சுதந்திரமான அனைத்துலக விசாரணைப் பொறிமுறை ஒன்றை ஐ.நா உருவாக்க வேண்டும் என்று அந்தப் பிரேரணையில் கோரப்பட்டுள்ளது.

இலங்கையில் ஊடக சுதந்திரம் மற்றும் மனிதாபிமான அமைப்புகளுக்கு அனுமதி அளிப்பது, முன்னாள் போராளிகளுக்கான மறுவாழ்வு உள்ளிட்ட விவகாரங்களில் அனைத்துலகத் தலையீட்டை இது வலியுறுத்துகிறது.

அத்துடன் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு மூலம் அரசியல்தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இது இலங்கை அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ள நிலையில், இந்தப் பிரேரணையைத் தோற்கடிக்க அமெரிக்க நாடாளுமன்றத்தில் உள்ள இலங்கை ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை அரசு கோரியுள்ளது.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள, சிறிலங்கா வெளிவிவகாரச் செயலர் கருணாரட்ண அமுனுகம, இந்தப் பிரேரணையைத் தோற்கடிக்க இலங்கை ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் வொசிங்டனில் உள்ள இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய ஏற்கனவே பேச்சுக்களை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.(த)

## ஐ.நா. குழு நாளை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரிவுகளுக்குப் பொறுப்பான ஹன்னி மெகாலி மற்றும் சட்டத்தின் ஆட்சி, ஜனநாயகத் தெரிவுகளுக்கான மனித உரிமைகள் அதிகாரி ஒஸ்கார் சோலர்ஸ் இருவருமே நாளை யாழ். மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்துக்கு வருகை தரும் குழுவினர், வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலக்சுமியை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். தொடர்ந்து யாழிலுள்ள மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களையும் சந்தித்து போரின் பின்னரான நிலைமைகள் தொடர்பில் ஆராயவுள்ளனர். இதன் பின்னர் சாவகச்சேரியில் மீளக் குடியமர்த்தப்பட்ட மக்களை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

பிற்பகல் 4 மணியளவில் கிளிநொச்சி செல்லும் ஐ.நா. குழுவினர் இறுதிக்கட்ட போர் நடைபெற்ற பகுதிகளுக்கும் செல்வர். மீளக்குடியமர்ந்துள்ள மக்களை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். (உ-5)

## சுற்றுலா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கள் தெரிவித்தனர். தெய்வாதீனமாக உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை.

கைதடி வளர்மதி கல்விக் கழக மாணவர்கள் மற்றும் பெற்றோருடன் சென்ற பஸ்ஸே விபத்துக்குள்ளானது. பஸ் கண்ணாடிகளும் சேதமாகின.

காயப்பட்ட 15 பேர் உடனடியாகப் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். ஏனையவர்கள் கைதடிக்குத் திரும்பிச் சென்றபோதும் அவர்களில் நான்குபேர் திடீர் சுகவீனமுற்றதனால் நால்வரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். திருமதி ஏ.லிகிதா, திருமதி இ.தவமணி, திருமதி த.சசி மற்றும் செல்வி ம.சுவேதா ஆகியோர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

தே.அமிலன், த.விமலாதேவி, நா.பிரதீப், சி.துஷாந்தினி, சே.சந்திரவதனி, த.யதுர்ஷன், த.டிலக்ஷன், யோ.பிரியா, ம.கலாமதி, சு.தேவி, சே.டிலக்ஷன், யோ. சுரேயுதன், செ.மதனரூபன், த.விக்னேஸ்வரன் ஆகியோரே கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். விபத்து நடந்த இடத்தில் பளைப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-4-288)

## கிழக்கில் தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யும் தெளிவாக சொல்லிவைக்க விரும்புகின்றோம் என்றும் சம்பந்தன் எம்.பி. இடித்துரைத்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின், ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் கொழும்பிலுள்ள ஜானகி ஹோட்டலில் நடைபெற்றது. இதன்போது ஊடகவியலாளரொருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

கிழக்கு மாகாணத்தில் தேசிய அரசொன்றை அமைப்பது தொடர்பிலான கருத்துக்கள் வெளிவந்துள்ளன. எனவே, கிழக்கில் தேசிய அரசொன்றை அமைப்பது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தாமாகவே முன்வந்து கூறுவாராயின், அதனை நாம் நிராகரிக்க மாட்டோம். அது தொடர்பில் பரிசீலித்து ஆக்கபூர்வமாக பதிலளிப்போம்.

கிழக்கு மாகாணத்தில் எமது கட்சியின் சார்பில் வெற்றிபெற்ற ஐந்த உறுப்பினர்களை விலை கொடுத்து வாங்குவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

எமது உறுப்பினரொருவருக்கு ஐந்து கோடி ரூபா ரொக்கப்பணம், கொழும்பில் சொகுசு வீடு, விரும்பிய வாகனம் என்று அரசு விலை நிர்ணயம் செய்து பேரம் பேசியுள்ளது. இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் எனத் தங்களை அடையாளப்படுத்திக்கொண்டே இவர்கள் இவ்வாறு செயற்பட்டுள்ளனர். அதுமட்டுமல்லாது, இராணுவத்திலுள்ள உயர்மட்ட அதிகாரிகளும் இது விடயமாக என்னுடன் தொடர்பு கொண்டு பேசினர்.

குறித்த இராணுவப் புலனாய்வுப் பிரிவினர்கள் எம்முடன் தொடர்பு கொண்ட தொலைபேசி இலக்கம், அவர்கள் பாவித்த வாகன இலக்கங்கள் முதலான ஆதாரங்கள் எம்வசம் இருக்கின்றன. எம்மிடம் இருக்கின்ற ஆதாரங்களை வைத்து பொலிஸில் முறைப்பாடு செய்யலாம் என்றால் அதன் பிறகு ஏற்படும் அச்சுறுத்தல்கள் குறித்து எமது உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்குமிடையிலான தீர்வுத் திட்டப் பேச்சுகளை உடன் ஆரம்பிக்குமாறு இலங்கைக்கு விஜயம்செய்த தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர் ரொபர்ட் ஓ பிளேக் தெரிவித்திருந்தார். நாம் அரசுடன் பேச்சு நடத்தத் தயாராகவே உள்ளோம்.

கடந்த ஜனவரி மாதம் 17ஆம், 18ஆம், 19ஆம் திகதிகளில் எமக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சொன்று நடைபெறவிருந்தது. இதன்போது நாம் குறித்த இடத்திற்குப் பிரசன்னமாகியிருந்தோம். ஆனால் அரசதரப்பிலிருந்து எவரும் பேச்சிற்குப் பிரசன்னமாகவில்லை. அதனால் அன்றைய பேச்சு கைவிடப்பட்டது.கிழக்குத் தேர்தலில் போட்டியி டுவது குறித்து எமக்கு எந்த அழுத்தமும் எவராலும் பிரயோகிக் கவில்லை.

கிழக்கில் கடந்த நான்கு பொம்மை ஆட்சிதான் நடைபெற்று வந்தது. இதனைப் பயன்படுத்தி மத்திய அரசு தமது தேவைகளை நிறைவேற்றி வந்தது. இனிமேலும் இதற்கு நாம் அனுமதிக்க மாட்டோம் - என்றார் சம்பந்தன்.

## காணாமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முதல் 2013 ஒகஸ்ட் 13 ஆம் திகதிவரையில் இடம்பெற்ற 37 காணாமல்போன சம்பவங்கள், மற்றும் வெள்ளை வான் கடத்தல் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் நடைபெறுவதாகவும் அவர் கூறினார்.

மேலும் மூன்று காணாமல் போதல் சம்பவங்கள் குறித்து எமக்கு முறைப்பாடுகள் கிடைத்தன. ஆனால் அந்த நபர்கள் சட்ட விரோதமாக மேற்கு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்துவிட்டனர் என்பதை நாம் கண்டறிந்தோம். மற்றொரு முறைப்பாடு பின்னர் வாபஸ் பெறப்பட்டது' என அவர் கூறினார்.

அதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அதிகாரிகள் ஒருபோதும் புள்ளி விபரங்களைக் கேட்கவில்லை எனவும் அவர்கள் காணாமல் போன சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்தே கேட்டனர் எனவும் பிரதீப மஹாநாம தெரிவித்தார்.

ஊடக சுதந்திரம் அருகி வருகிறதென்ற முறைப்பாடு குறித்தும் அவர்கள் கேள்வி எழுப்பியதகாவும் மஹாநாம கூறினார்.எனினும், தாம் விசாரணைகளை மேற்கொள்வதற்காக வரவில்லை எனவும் உண்மை கண்டறிவதற்கான பயணமொன்றையே மேற்கொண்டுள்ளதாகவும் அவ்வதிகாரிகள் திட்டவட்டமாக கூறியதாக மஹாநாம தெரிவித்தார். (த)

## கிழக்கு மக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வோம். அதையே மற்றவர்களிடமும் எதிர்ப்பார்க்கமுடியாது. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் நன்றாகக் கலந்தாலோசித்து ஒரு தீர்மானத்தை எடுக்கட்டும். அதற்காக நாம் காத்திருக்கிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஜானகி ஹோட்டலில் நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிழக்கில் ஆட்சியமைப்பதற்கு தமது முழுமையான ஆதரவை யாருக்கு வழங்குவோம் என்பது குறித்து ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட குழுவினர் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

கலந்துரையாடலின் பின்னர் தாம் எடுக்கும் முடிவினை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பகிரங்கமாக அறிவிக்கும் வரை அது குறித்து எம்மால் ஒன்றும் கூறமுடியாது. இருப்பினும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமது முழுமையான ஆதரவை எமக்கு வழங்கும் என நாம் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்.

எமது இந்த எதிர்பார்ப்புக்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. முதலாவது தேர்தலில் தனியாகப்போட்டியிடுவதற்குத் தாம் தீர்மானித்த பின்னர் அமைச்சர் ஹக்கீம் உள்ளிட்ட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்கள் அரசை விமர்சித்துதான் தமது தேர்தல் பிரசாரங்களை முன்னெடுத்தனர். இதன் அடிப்படையில்தான் கிழக்கு வாழ் முஸ்லிம் மக்கள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு தமது ஆதரவை வழங்கினர்.

இரண்டாவது நாமும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து ஆட்சியமைக்க வேண்டும் என்பதற்காகவே முஸ்லிம் மக்கள் தமது வாக்குகளை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு அளித்து அங்கு ஏழு ஆசனங்கள் பெறுவதற்கு வழிவகுத்தனர். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்முடன் இணைந்து ஆட்சியமைக்கவேண்டும் என்பதே முஸ்லிம் மக்களின் எதிர்பார்ப்பு. முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணைய வேண்டும் என்று கூறி எந்தவொரு தனிநபரும். எந்தவொரு குழுவும், எந்த கருத்துகளையும் இதுவரையில் தெரிவிக்கவில்லை.

கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் மட்டுல்லாது முஸ்லிம், சிங்கள மக்களும் எமக்கு வாக்களித்தனர். இவர்களின் உணர்வுகளை நாம் மதிக்கின்றோம். விசேடமாக முஸ்லிம் மக்களின் உணர்வுகளுக்கு நாம் பெரிதும் மதிப்பளிக்கிறோம். இதனடிப்படையில் தான் கிழக்கில் முஸ்லிம் ஒருவருக்கு முதலமைச்சர் பதவியை விட்டுக்கொடுக்கவும் நாம் தயாராக உள்ளோம். இதனூடாக கிழக்கு வாழ் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அனைவரும் நிம்மதியாகவும், சமாதானத்துடனும் வாழக்கூடியதொரு சூழல் ஏற்படும் எனவும் நாம் எதிர்ப்பார்க்கின்றோம்.

பதவியை அடிப்படையாகக் கொண்டு நாம் அரசியல் நடத்தவில்லை. கிழக்கு மாகாண ஆட்சி முதலமைச்சர் பதவியில் மட்டும் தங்கியிருக்கவில்லை. அதற்கு அப்பால் பலவிடயங்கள் இருக்கின்றன.

பதவியை விட எமது மக்களின் உணர்வுகள் எமக்கு முக்கியம். தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் உணர்வுகளே எமக்கு முக்கியம். அதனை அடிப்படையாகக் கொண்டே நாம் எமது தீர்மானங்களையும் எடுப்போம்.

நாம் அரை மணி நேரத்தில் 5 நிமிடங்களில் முடிவுகளை எடுப்போம், அதுபோல் மற்றவர்களும் முடிவெடுக்க வேண்டும் என நாம் கூறமுடியாது தேர்தல் முடிவடைந்த பின்னர் ஒரு வாரம், ஒரு மாதத்திற்கு முடிவுகள் எடுக்க வேண்டும் என்று நாட்டின் அரசசாசனத்தில் கூறப்படவில்லை. எனவே முஸ்லிம் காங்கிரஸ் இது விடயத்தில் ஆழமாகச் சிந்தித்துத் முடிவெடுக்கலாம்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மக்கள் தமக்கு வழங்கிய ஆணையையும், மக்களின் உணர்வுகளையும் கருத்தில்கொண்டே எமக்குச் சாதகமான தீர்மானமொன்றை எடுக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம். அதன் முடிவுக்காக நாம் காத்திருக்கிறோம். கிழக்கில் முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராக வரவேண்டும் என முஸ்லிம் மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற நாம் தயாராக உள்ளோம். அத்துடன் முதலமைச்சர் பதவி தமக்கு வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் எமக்கு வேண்டுகோள் விடுத்தாலும் அந்தப் பதவியை அதற்குக் கொடுக்கவும் நாம் தயாராக உள்ளோம். சுழற்சி முறையிலான மாகாணசபை ஆட்சி குறித்து இரு தரப்பும் கலந்தலோசித்து முடிவெடுக்கலாம்.

நாம் அரசுடன் இணைந்து செயற்படமாட்டோம் என முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் தேர்தல் பிரசாரங்களில் தமது கருத்தை தெரியப்படுத்தியிருந்தனர். இவர்களின் இந்தக் கருத்தும் முஸ்லிம் காங்கிரஸ் எமக்கு ஆதரவு வழங்கும் என்ற எதிர்ப்பார்ப்புக்கு காரணமாக அமைந்தது.

முஸ்லிம் காங்கிரஸின் முடிவு என்ன என்பது எமக்கு இதுவரையில் தெரியாது நாம் அதை அண்மையில் சந்தித்துப் பேச்சு எதுவும் நடக்கவில்லை. ஆனால் நேற்று முன்தினம் எம் இரு தரப்புக்கும் இடையிலான சந்திப்பொன்று இடம்பெறவிருந்தது.

அமைச்சர் ஹக்கீம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்று முன்தினம் அலரி மாளிகையில் சந்தித்திருக்கிறார். அதனால் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாகவே எமது இந்த சந்திப்பு வைக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் அரசும் என்ன பேசுகின்றனர் என்பது பற்றி எமக்குத் தெரியாது. அதைப்பற்றி நாம் அதனிடம் கேட்கவும் இல்லை.

முஸ்லிம் காங்கிரஸ் தாம் கலந்தாலோசித்து எமக்கும் முடிவு எமக்குக் சாதகமாக இருக்கும் என நாம் எதிர்ப்பார்க்கிறோம். எச்சந்தர்ப்பத்திலும். தர்மம் வெல்லும் என்பது மட்டும் உறுதி - என்றார் சம்பந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கதிரன் கந்தையா
### (மாப்பிள்ளை கந்தையா)

இணுவில் தெற்கு துரை வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரன் கந்தையா நேற்று (15.09.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரன்-ஸ்ரீதேவி தம்பதியரின் அன்பு மகனும் சின்னாச்சியின் அன்புக் கனவரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இணுவில் தெற்கு,**
**துரைவீதி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## திருமதி கதிரிப்பிள்ளை மீனாட்சி

மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி தெற்கைப் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை மீனாட்சி நேற்று (15.09.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரிப்பிள்ளையின் அன்புமனைவியும், ரத்தினம் காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் மற்றும் ராசமணி, முருகையா, கந்தசாமி, பொன்மலர் ஆகியோரின் அன்புத்தாயும், சரஸ்வதி, செல்லம்மா, அருமைத்துரை, மிதா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றக்கொள்ளவும்.

மடத்தடி, அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி

தகவல்:
குடும்பத்தினர்

(22967)(8-14)

# 31ஆம் நாள் கண்ணீர் விழிகளுடன்



| உதிர்வு | மறைவு |
|---|---|
| 25 * 02 * 1950 | 18 * 08 * 2012 |

## எஸ்தாக்கி கொன்ஸ்ரன்ரைன்
### (பாலசிங்கம்) "பாலா சவுண்' உரிமையாளர்"

குடும்பத்தின் குல விளக்காய்
உறவுகளில் உத்தமனாய்
நண்பர்களின் நாயகனாய்
பாஷையூரில் பாலசிங்கமாய்
முத்துச்சிரிப்பில் முழுமதியாய் -வாழ்ந்து
இறையடி சேர்ந்தீர்களே அப்பா
கண்ணீருடன் கதறுகின்றோம்
கனவாகாதோ இவைகளென்று

17.09.2012 திங்கட்கிழமை காலை 6 மணிக்கு பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் நினைவுத் திருப்பலி ஒப்பு கொடுக்கப்படும்.

**இல 25, 2ஆம் குறுக்கு தெரு,**
**பாஷையூர்,**
**யாழ்ப்பாணம்.** (22953)(9.14)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# வீடு வாடகைக்குண்டு

யாழ் நகரில் முன்னணி பாடசாலைகள் அமைந் துள்ள சூழலில் சிறிய குடும்பம் வசிப்பதற்கு உகந்த மாடிவீட்டின் மேற்பகுதி வாடகைக்குண்டு.

* அரச மற்றும் பல்கலைக்கழகங்களில் வேலை செய்வோர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்.
* வாடகை பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு- 021 320 9635

(22962)(9.14)

# மரண அறிவித்தல்

## திருமதி சுதாகர் மல்லிகா



கைதடி கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுதாகர் மல்லிகாதேவி (15.09.2012) சனிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுதாகரின் பாசமிகு மனைவியும் தாரனியின் பாசமிகு தாயும் , யருனின் மாமியும், காலஞ் சென்றவரான குமாரசாமி மற்றும் அன்ன முத்து தம்பதியரின் அன்பு மருமகளும், வாமதேவா (கொழும்பு), பிரபாகரன் (லண்டன்), ரவீந்திரன் (கனடா), திலிபன் (லண்டன்), ரஜனி (லண்டன்) உமா (லண்டன்), உஷா (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை , இராசையா, மகேஸ்வரி, மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.09.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி, கிழக்கு.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# யாழ் நகரில் வீடு விற்பனைக்கு

யாழ் நகர்
கொட்டடியில்,
யாழ் கடைத்தெரு
விற்கு
அண்மித்ததாகவும்,
சுமார் 3 பரப்பில்
அமைந்ததும்
ஆகிய மாடி வீடு
விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0772279219

# மரண அறிவித்தல்

## சதாசிவம் பத்மநாதன்
### (தொழிலதிபர் கொழும்பு)



வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட தொழில் அதிபரான சதாசிவம், பத்மநாதன் (அகில இலங்கைச் சமாதான நீதிவான் நேற்று (15.09.2012) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் அமரர் சதாசிவம்-சின்னதங்கம் தம்பதியரின் அன்பு மகனும், ரோகினியின் அன்புக் கணவரும், லாவனியா, யாதவன் (Australiya) ஆகியோரின் அன்புத் தந்தையும், அமரர் கந்தசாமி-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், இராம நாதன் (Sri Lanka), சதாலட்சுமி (கனடா), பத்மலோஜினி (Swiss), சரோஜினி (கனடா), பாலச்சந்திரன் (கனடா), வின்சேந்திரராஜா (கொழும்பு), புவனேஸ்வரராஜா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரேணுகாதேவி (Sri Lanka), சிவகடாச்சம் (France), தஸ்மினி (Swiss), ஜெயதரன் (Swiss) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லத்தில் நாளை (17.09.2012) திங்கட்கிழமை காலை 8.00 மணிமுதல் மாலை 3.30 மணிவரை 26/1, அல்பிரட் பிளேஸ், கொழும்பு-03 இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மாலை 4.00 மணிக்கு கனத்தை மயானத் துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**26/1, அல்பிரட் பிளேஸ்,**
**கொழும்பு-03.** (சி/3300) (6,7,10)

தகவல்:
குடும்பத்தினர்.

# அந்தியேட்டி கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 ۞ 01 ۞ 1943 | 01 ۞ 09 ۞ 2012 |

## அமரர் அ.இ. கோபாலபிள்ளை
### ( உரிமையாளர் Gopalan Trading Company )

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 21.09.2012 வெள்ளிக்கிழமை காலை 05.00 மணியளவில் முகத்துவாரம் அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து வீட்டுக்கிரியைகளும் நடைபெறும்.

**22.09.2012** சனிக்கிழமை **மு.ப. 10.30** மணியளவில் பம்பலப்பிட்டி, இல.75, லோரன்ஸ் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். அவரது மரணச்சடங்கில் கலந்து கொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் சகல உதவிகளையும் முன்வந்து உறவாய் நினைத்து உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் நெஞ்சு நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கொழும்பு.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்


# COMPUTER EXPRESS
## Institute of Information Technology
No 15, Sirambiyadi Lane, Jaffna. 0212228250

80% OFF மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2012

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான புதிய வகுப்புக்கள்

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office 3 Month 2000/= | Diploma in Desktop Publishing 3 Month 2000/= | Diploma in Graphic Designing 3 Month 2000/= |
| Diploma in Hardware 3 Month 2000/= | Diploma in Web page Designing 3 Month 2000/= | Certificate in Tally 3 Month 1000/= |

Auto CAD 3000/=


Latest Version Software களினூடாக தமிழ் மொழி விளக்கங்களுடன் நீண்டகால அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
வரையறையற்ற செய்முறை பயிற்சி.

**Advance Courses**
Diploma in Computer Science
Diploma in Video Editing
Diploma in Multimedia
Diploma in Computerized Accounting
3000/=

வகுப்புக்கள் ஆரம்பம்
Batch I : 16/09/2012
Batch II: [illegible]
Batch III: 21/09/2012
Batch VI: 22/09/2012
11AM-3.00PM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

Study in
# China

Sri Lanka UGC Recognized University

Able to apply with pending Results*

**Degrees in English Medium**

Final Intake for the Year 2012. Hurry, call now! Limited Seats Available.

- M.B.B.S
- Aeronautical Engineering
- Mechatronics Engineering
- Telecommunication Engineering
- International Economics & Trade
- Computer Science & Technology

Free Consultancy and VISA Assistance

(சி/3394)(2-6-7)

Hotline - 077 514 9965, 0777 813 450
**Win Lanka Educations**
No. 38, Embuldeniya Junction, Nugegoda.

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Nissan ரக 301 - xxxx சில்வர் நிறம் விற்பனைக்கு உண்டு. விலை 17½ LKS

தொடர்பு: 077 9515394 (22895)(5-6-7)

## வீடு வாடகைக்கு

யாழ். நகரப் பகுதியில் இருந்து 500m தொலைவில் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள 1400 சதுர அடி பரப்பளவுள்ள வீடு வாடகைக்கு விடப்படும்.

அரச சார்பற்ற நிறுவனம்/அரச நிறுவனம்/தனியார் நிறுவனங்களுக்கு ஏற்றது. வாகனத் தரிப்பிட வசதியுள்ளது. கிழமை நாள்களில் பி.ப. 4.00 மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும்.

(22898)(5-6-7) தொடர்பு:071 847 4308

## BIG OPPORTUNITY IN VAVUNIYA-JAFFNA

A/L WHAT NEXT?

16வருடங்களாக வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கும் *MULTI NATIONAL COMPANY* மேலும் புதிய கிளைகளுக்கான புதவி வெற்றிடங்கள்.

50 பேருக்கு முன்னுரிமை, தகமை O/L 18-30வரை பயிற்சி அவசியமாயின் பயிற்சி அளிக்கப்படும். EARNING குறைந்தது 45,000/= (சி/3397)(2-6)

தொடர்பு கொள்ள: 0779994807/0114986066

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் பொன்னம்பலம்



பருத்தித்துறை, புலோலி கிழக்கைச் சேர்ந்த திருமதி சிவபாக்கியம் பொன்னம்பலம் நேற்று முன்தினம் (14.09.2012) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் யோகேஸ்வரன் (முன்னாள் பிறப்பு, இறப்பு பதிவாளர்),சண்முகநாதன், தர்மரத்தினம், மனோரஞ்சிதம் (மணி) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2012) ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பருத்தித்துறை, கோரியடி இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

ஒடை ஒழுங்கை, புலோலி வடக்கு, பருத்தித்துறை. (சி/3388)(5-6-7)

தகவல்: குடும்பத்தினர்.

# STUDY IN LONDON
## BEDFORDSHIRE, CAMBRIDGE, WALES

* SPOT ASSESSMENT
* SCHOLARSHIPS AVAILABLE
* WORK PLACEMENTS

**Postgraduate & PhD / Undergraduate Courses**

| | | | |
|---|---|---|---|
| MBA | Computer Networks | Media Art & design | Biomedical Sciences |
| ACCA | Computer Information Systems | Animation | Biotechnology |
| Business Management | Software Engineering | Fashion & Textiles | Toxicology |
| Project Management | Computer Science, I.T | Interior Design | Medical Microbiology |
| Accounting & Finance | Computer Security & Forensics | Product Design | Psychology |
| Law - LLB, LLM | Architecture | Photography | Biochemistry |
| Hospitality | Civil Engineering | Illustration | Pharmacology |
| Travel &Tourism | Mechatronics, Mechanical Eng. | Video & Film Production | Physiotherapy |
| Culinary Arts | Marine Engineering | Music, Dance | Podiatric Medicine |
| Events Management | Engineering Design Management | Theatre Studies | Herbal Medicine |
| Airline & Airport Mgt. | Automotive Engineering | Film Studies | Nursing Studies Top Up |
| Sports Sciences | Quantity Surveying | Computer Games Design | |
| Sports Coaching | Port & Maritime Management | Advertising | |
| Sport Management | Electrical & Electronic Eng. | MA in Drama | |
| Food Nutrition | Telecommunication | | |
| Social Sciences | Construction | | |
| Journalism | | | |

**Over 300 Courses Available**

English Literature, Early Childhood Studies, Special Education Needs, Linguistics, Education Studies Top Up, ESOL, Teaching English for Speakers of Other Languages (TESOL), Primary Studies with Qualified Teacher Status (QTS)

- PhD STUDENTS APPLICATIONS APPROVAL TIME APPROX. 4 WEEKS
- MATURE STUDENTS ARE WELCOME TO APPLY
- Advanced entry for students with CIM, CIMA, ABE, NCC, BCS, HND, ACCA and other recognized qualifications
- G.C.E. A/L students can apply pending results
- Students Having good O/L's / other qualifications / related work Experience may be considered.

February 2013 Intake

* IELTS is not compulsory *** Conditions Apply

PostGraduate Students can apply with Dependents *** Conditions Apply

| | |
|---|---|
| University of East London | - www.uel.ac.uk |
| University of Bedfordshire | - www.beds.ac.uk |
| University of West London | - www.uwl.ac.uk |
| University of Worcester | - www.worc.ac.uk |
| University of Wales, Newport | - www.newport.ac.uk |
| Anglia Ruskin University | - www.anglia.ac.uk |
| Bradford College | - www.bradfordcollege.com |

HELPLINE CALL LOHO 0777 917929

LOHOS TOPS 400 STUDENTS

*Over the last 6 years Mr Loho has successfully counselled, guided and placed more than 400 students to U.K. Universities*

Meet Mr. LOHO ✓ LOHOS GROUP

**Please call Sri Lanka Representative's office for more details**

Lucky Plaza Building, 4 / 7, 4th Floor, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03. Tel : 2577768 / 0777 917929

E-mail: lohosgroup@sltnet.lk www.lohosgroup.com

தமிழில் தொடர்புகளுக்கு : Dr. இந்திராணி - Tel : 0773-498660

FREE ADMISSIONS FREE VISA GUIDANCE

சில சந்தர்ப்பங்கள் பெறுமதியானவை...............

Prince City Campus இன் பட்டப்படிப்பு போல

The world standard undergraduate programme

## EdHat IHD in Law leading to LL.B (UK)




Affordable course fee

Qualified lecture panel

Dual standard LL.B (UK) Degree

**Registration is open for New Batch**

Don't miss the free seminars on 15th and 16th of September, 2012

Join us, and obtain your dream degree

**Prince City Campus**
No. 275, Clock Tower Road, Jaffna.
Hotline: 0775 949 272 (சி/3280)(6-2)
E-mail: Princeenquiries@Yahoo.com

## உலகப் புகழ் பெற்ற வாகன சேவை உபகரணங்கள் கொழும்பு ஏஜென்சியில்

* இத்துறையில் 56 வருட அனுபவமுடைய
* நம்பிக்கையுடன் கூடிய உத்தரவாதம்
* விற்பனைக்குப் பிந்திய சேவை
* தேவையான அளவு உதிரிப்பாகங்கள்



# Colombo Agencies Limited

932A, கோட்டே வீதி, எதுல்கோட்டே, கோட்டே.

தொலைபேசி:- 0112-878200, 0117-388777 பெக்ஸ்: 0112-884411

கொழும்பு - 0777 443899, தெற்கு - 0777 2398747, மத்திய - 0777 2398748,

வடமத்திய - 0777 551981, வடக்கு/கிழக்கு - 0773832969 (சி/3290)(6-2)

## வாகனம் விற்பனைக்கு உண்டு

LG 87 xxxx எனும் தொடரிலக்கமுடைய அலுமினிய Body இசுசு லொறி விற்பனைக்கு உண்டு.

சு.நிமலேந்திரன்
வட்டு. கிழக்கு, வட்டுக்கோட்டை
தொடர்பு: 077 645 8346 (22895)(5-6-7)

# வீசா

கனடா Working Permit வீசா
(5 ஆணும் 1 பெண்ணும்)

4c- 6,1/3, Fussels Lane, Wellawatte, Colombo 06
Tel : 077 3152327 (சி/3253)(2-6-7)

## விற்பனைக்கு

ஒரு வீட்டுக்குரிய ஓடு, மரம், நிலை, கதவு, யன்னல் என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0777 286069 (சி/3389)(5-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## தமிழ்ப் பிரதேச வர்த்தகர்களின் தொழிற்றுறை நலிவுற்றால்...?

ஒரு நாட்டின் அல்லது பிரதேச மக்களின் பிரதான அன்றாடத் தேவைகளை நிறைவேற்றுவதில் வர்த்தகத் துறையினருக்குப் பெரும் பங்கும் அதனோடு சேர்ந்த பொறுப்பும் உண்டு. குறிப்பிட்ட பிரதேசத்தின் பொருளியல் மேம்பாட்டில் தம்மைப் பங்காளி களாகச் சேர்த்துக் கொள்ளும் கடமையும் உள்ளது.

பிரதேசத்தின் விவசாயம், கைத்தொழில்கள், சிறுகைத் தொழில்கள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வாணிபம் ஆகியவற்றின் மேம்பாட்டுக்கும் அவர்கள் பங்களிக்கிறார்கள்.

மேற்குறிப்பிட்ட வகைகளில் அடங்கும் அவர்கள், ஒரு நாட்டின் அல்லது பிரதேசத்தின் பொருளியல் வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிகிறார்கள். அதே அளவுக்கு மக்களின் அன்றாடப் பொருள் தேவைகளையும் பூர்த்தி செய்கிறார்கள்.

கடந்த மூன்று தசாப்த காலத்தில் குடாநாட்டு வர்த்தகர்கள் மக்களுக்குத் தேவையான பொருள்களை- உணவுப் பொருள்கள் உட்பட மற்றும் நுகர்வுப் பொருள்களை-இங்கே கொண்டு வந்து சேர்ப்பதில் பல தடங்கல்களையும், இடையூறுகளையும் எதிர் கொள்ள நேர்ந்ததை இலகுவில் மறக்க இயலாது.

உணவுப் பொருள்களை இங்கே கொண்டுவந்து சேர்ப்பதற்கு முதலில், கூட்டுப் படைத் தலைமையகத்தில் அதற்கான அனுமதியைப் பெறுவது கல்லில் நார் உரிப்பது போன்றதாக இருந்தது. அதன் பின்னர் அவற்றைக் கொழும்பிலிருந்து கொண்டு வந்து சேர்ப்பது அதனை விடவும் பல மடங்கு சிரமமும், இழப்புக்களைத் தரும் தொழிலாகவும் அமைந்தது.

தரைவழியாக அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு வருவதில் அனுபவித்த கஷ்டங்களையும் நட்டங்களையும் போலவே, கப்பல் மூலம் அவற்றைக் கொண்டு வந்த வேளைகளிலும் வர்த்தகர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க நேர்ந்தது. தடைமுகாம்கள் பலவற்றில் பொருள்களை ஏற்றி இறக்குவது, அதனால் உணவு மற்றும் பாவனைப் பொருள்களின் அளவு குறைந்ததும், அதனூடு அவர்கள் பெற்ற நட்டங்களையும் பட்டியலிட்டால், வியாபாரம், வர்த்தகம் என்பவற் றினூடு அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய தொழில் இலாபத்துக்குப் பதிலாக நட்டத்தின் மேல் நட்டமாகவே விளைந்தது. அதனால் பலர் தமது தொழிலையே கைவிட நேர்ந்தது. எனினும் அவர்களில் ஒரு சிலர், பொருள்களைக் கட்டுப்பாட்டு விலைகளுக்கு விற்காமல் கூடிய விலைகளில் கள்ளச் சந்தைகளில் விற்று, மிகக் கஷ்டங்கள் நிறைந்த காலத்தில் மக்களின் பணத்தைச் சுரண்டினார்கள் என்ற குற்றச் சாட்டுகள் எழுந்ததையும் மறப்பதற்கில்லை.

அடுத்த பக்கத்தில், தமிழ்ப் பகுதிகள் மீது அப்போதைய கொழும்பு அரசு பொருளாதாரத் தடையை விதித்திருந்த காலத்தில், பல மத்தியதர, சிறு தர வர்த்தகர்கள் தமது தொழிலை அடியோடு கைவிட்டதையும் மறப்பதற்கு இல்லை. வடக்கின் மீதான அரசின் பொருளாதாரத் தடை, மக்களைக் கீழே தள்ளி வீழ்த்தியது என்றால், வர்த்தகப் பெருமக்களை ஒட்டாண்டிகளாக்கிற்று!

ஆனால், போர் முடிந்து வழமை நிலை மீண்டு மூன்று வருடங்கள் கழிந்த நிலையில், குடாநாட்டின் சிறியதர நடுத்தர வர்த்தகர்கள் மட்டுமன்றி, பெரும் வர்த்தகர்களும் தமது தொழிலைச் செய்யமுடியாமல் திண்டாடும் நிலை இப்போது உருவாகியுள்ளது . பலருக்கும் அக்கதியே ஏற்பட்டுள்ளதால், யாழ்ப்பாண மாவட்டத்தில் வர்த்தக நடவடிக்கைகள் முடங்கிவிடும் அபாயமும் உருவாகியுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

இது குறித்துக் கனத்த மனதுடன் எச்சரிக்கை விடுத்துள்ளார் யாழ்.வர்த்தகர் சங்கத்தின் தலைவர் ஆர்.ஜெயசேகரம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வர்த்தக முயற்சிகளை மேற்கொண்டு வரும் சிறிய ரக மற்றும் பெரிய ரக வர்த்தகர்களுக்கு வழங்கி வந்த கடன் உதவிகளை இங்கு இயங்கும் வங்கிகள் அண்மைக்காலமாக நிறுத்திவிட்டன. அத்தோடு நிற்காமல், மேலும் ஒரு படி உயரச் சென்று, பல வங்கிகள் தாம் வர்த்தகர்களுக்கு ஏற்கனவே வழங்கிய கடன் உதவிகளுக்கான வட்டிப் பணத்தை 4 சதவீதத்தினால் உயர்த்தியுள்ளன.

போருக்குப் பின்னரான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில், குடாநாட்டில் வர்த்தக முயற்சிகளில் ஈடுபடுவோருக்கு, இலகு கடன் மீளளிக்கும் திட்டம் என்பவற்றை வர்த்தக வங்கிகள் பலவும், சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தின.

தமக்குக் கிடைக்கவிருக்கும் உதவிகளை மனதில் கொண்டு, வர்த்தகர்கள் பலரும் தமது பெறுமதியான உடைமைகளை வங்கிகளில் ஈடு வைத்துத் தொழிலில் ஈடுபட்டனர். ஆனால் வங்கிகள் தத்தமது கடன் வழங்கும் திட்டங்களை திடீரென நிறுத்தியதோடு, ஏற்கனவே பெற்ற கடன்களுக்கான வட்டிவீதங்களையும் இப்போது உயர்த்தியுள்ளன.

அதன் விளைவாக, தாம் பெற்ற கடன்களை திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் வர்த்தகர்கள் பலர் தமது வியாபார நிலையங்களை இழுத்து மூடிவிட்டனர். சொத்துக்களை அடைவு வைத்துத் தமது தொழில் முயற்சிகளை ஆரம்பித்த, மேற்கொண்ட வர்த்தகர்கள், இப்போது இரண்டும் கெட்டான் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். குடாநாட்டுச் சமூகத்தில், வர்த்தகர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். பொருளாதார முன்னேற்றத்தின் முக்கிய பங்காளிகள். அவர்களின் தொழிற்றுறை தேய்ந்து போனால் ஏற்படப்போகும் பாதிப்பு பல வட்டகைகளிலும் பெருமளவில் தாக்கத்தை உண்டாக்கும்.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வர்த்தக நடவடிக்கைகள் இப்போதுதான் துளிர்த்து வருகின்றன. வங்கிகளின் புதிய நடவடிக்கைகள் அந்தத் துளிர்களைக் கருகச் செய்து வீழ்த்தும் பெரும் அபாயத்தைத் தோற்றுவித்துள்ளன!

இத்தனைக்கும், போருக்குப் பின்னரான காலத்தில், வடக்கில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காகத் தாம் தாராளமாகக் கடன் வசதிகளை வழங்கப்போவதாகப் போட்டி போட்டுக்கொண்டு வங்கிகள் அறிவித்திருந்தன.

போருக்குப் பின்னரான இன்றைய காலப்பகுதியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் மக்களின் வாழ்வாதாரங்கள், தொழில் வளங்கள் மற்றும் தொழில் வாய்ப்புகளைப் பெருக்குவதற்கான செயற்றிட்டங்களையும் விரைவு கெதியில் செயற்படுத்தப்படுவதாகவும் அதற்கான உதவு திட்டங்கள் மட்டுமன்றி நிதிவளங்களும் ஒதுக்கப்படுவதாகவும் அனைத்துலக நாடுகளின் பொறுப்பு வாய்ந்த பிரதிநிதிகளுக்குப் பிரசங்கம் செய்யும் அரச தரப்புகள்-

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகளை நிறுத்தியதோடு, வட்டி வீதங்களை உயர்த்திய செயற்பாடுகளைத் தடுப்பதற்கு முன்வராது, அது தெரிந்தும் தெரியாதது போன்று கண்மூடி மௌனிகளாக அவை இருப்பது ஏன்? அது என்ன நியாயம்?

# வடக்கில் கடந்த வாரத்தில் 5 இடங்களில் வெடிபொருள் மீட்பு

யாழ்ப்பாணம், செப்.16

வடக்கில் கடந்தவாரம் 5 இடங்களில் இருந்து வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று யாழ்.பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

வவுனியா, செட்டிகுளம் பகுதியை அண்மித்து மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 3 ஆயிரத்து 100 துப்பாக்கி ரவைகளை பொலிஸார் மீட்டுள்ளனர். அதே பகுதியில் மற்றொரு இடத்திலிருந்து கட்டுத்துவக்கு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி முழங்காவில் பகுதியை அண்மித்து சி4 வகை வெடிபொருள்கள் 980 கிராமும், 5 குண்டுகளும் மீட்கப்பட்டுள்ளன. இதனுடன் தொடர்புடைய சந்தேகத்தில் ஐந்துபேர் கடந்த 10 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு கரையா முள்ளி வாய்க்கால் பகுதியை அண்மித்து ரி-56 ரக துப்பாக்கியினுடைய ரவைகள் 10 ஆயிரத்து 74, ஏனைய வகை ரவைகள் 400 என்பன மண்ணில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன. கடந்த 10 ஆம் திகதி இவை மீட்கப்பட்டன.

கிளிநொச்சி செல்வபுரம் பகுதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மோட்டார் குண்டுகள் 39, மற்றும் பரா குண்டுகள் 2 என்பன மீட்கப்பட்டுள்ளன.

வவுனியா மல்லாவி ஆலங்குளம் பகுதியில் வெங்காய வெடி வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டு நீதி மன்றத்தில் முற்படுத்தப்பட்டார். அவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

யாழ். குருநகர்ப் பகுதியில் ரி.என்.ரி வெடிபொருள்கள் 650 கிராம் மற்றும் டெற்ரனேற்றர்கள் 50 ஆகியவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த மூன்று பேர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 13 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளனர் என்று பெரேரா மேலும் தெரிவித்தார்.

(ம-4)

## பட்டதாரி அரச அலுவலருக்கு வினைத்திறமைகாண் பரீட்சை

யாழ்ப்பாணம், செப்.16

50 ஆயிரம் பட்டதாரிகள் திட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரி அரச அலுவலர்களுக்கு வினைத்திறமை காண் தடைப்பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுக் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் இதனைத் தெரிவித்துள்ளார்.

1999, 2005 ஆகிய இரு ஆண்டுகளிலும் உள்வாங்கப்பட்ட வட மாகாண பட்டதாரி அரச அலுவலர்களுக்கே இந்தப் பரீட்சை இடம் பெறவுள்ளது.

வடக்கில் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பணியாற்றும் பட்டதாரி அரச அலுவலர்கள் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதாயின் எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம் என்றும் கூறப்பட்டது.

விண்ணப்பங்களை செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, 10 ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, புத்தூர் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு செயலாளர் கேட்டுள்ளார். (ம-41)

## காலபோக நெற்செய்கை தொடர்பாகக் கலந்துரையாடல்

காரைநகர்,செப்.16

காரைநகர் கிழக்கு கமக்காரர் அமைப்பின் காலபோக நெற்செய்கை தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு திக்கரை கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் கமக்கார அமைப்பின் தலைவர் சி.சங்கரப்பிள்ளை தலைமையில் நடைபெற உள்ளது.

இதில் காலபோக நெற்செய்கையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது

(ம-250)

## நெல்லியடியில் புலிக்கொடி அழைப்பாணை அனுப்பியும் விசாரணைக்கு வரவில்லை

வலி.வடக்கு, செப்.16

நெல்லியடியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது புலிக் கொடி காட்டிய சம்பவத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் இலக்கத்துக்கு உரியவர்கள் எனக் கருதப்பட்ட கொழும்பு-15 மற்றும் ஜால பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்ட போதிலும் குறிப்பிட்ட இருவரும் யாழ்.பொலிஸ் நிலையத்துக்கு வருகை தரவில்லை என்று யாழ்ப்பாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா கூறினார்.

குறிப்பிட்ட இருவரையும் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து விசாரிப்பதற்காக இருவரும் வசிக்கும் பிரிவு பொலிஸ் நிலையங்களுக்கும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதனை உரியவர்கள் தொடர்ந்து உதாசீனப்படுத்துவார்களாக இருந்தால் யாழ்ப்பாணத்தில் இருந்து பொலிஸார் நேரடியாகச் சென்று இரு நபர்களையும் அழைத்து வந்து விசாரணை மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் கூறினார். (ம-86)

## வரணி ஆஸ்பத்திரிக்கு அடிப்படை தேவையை பூர்த்தி செய்க

### பிராந்திய சுகாதாரப் பணிப்பாளருக்கு கடிதம்

வரணி, செப்.16

வரணி பொது வைத்திய சாலையில் நிலவும் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்குமாறு யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கோரிக்கைகள் உள்ளடங்கிய கடிதம் ஒன்றை வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் சுகாதாரப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வைத்தியசாலையின் கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு கருதி சுற்றுமதில் ஒன்றை அமைத்தல், ஆண் நோயாளர் விடுதி ஒன்றை அமைத்தல், வைத்தியசாலையின் தேவைகருதி குழாய்க் கிணறு ஒன்று அமைத்தல், நோயாளரின் வசதி கருதி பிரதேசத்தில் தெரிவு செய்த 3 இடங்களில் ஆரம்ப சுகாதார சேவை நிலையங்களை அமைத்தல், நோயாளர்கள் 24 மணி நேரமும் சிகிச்சை பெற வசதியாக தற்சமயம் கடமை புரியும் வைத்திய அதிகாரிக்கு உதவிடும் வகையில் மேலதிக வைத்தியர் ஒருவரை நியமனம் செய்தல், அம்புலன்ஸ் ஒன்றை இவ் வைத்தியசாலைக்கு வழங்குதல், மற்றும் மேலதிகமான சுகாதார தொழிலாளி ஒருவரை வைத்தியசாலைக்கு நியமித்தல் போன்ற விடயங்களில் நட்வடிக்கை எடுத்தல் வேண்டும்.- என்றுள்ளது.

இதன் பிரதிகள் யாழ். மாவட்ட அரச அதிபர் மற்றும் தென்மராட்சி பிரதேச செயலர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது என சங்க செயலாளர் செ.நவரட்ணசாமி தெரிவித்தார். (ம-122)

## அரச பொது ஊழியர் சங்கம் அட்டவணைப்படுத்தப்படாத பணியாளர் ஒன்றியத்தை இணை நிறுவனமாக்குகிறது

யாழ்ப்பாணம்,செப்.16

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தினர் வடக்கு, கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் பணியாற்றும் அட்டவணைப்படுத்தப்படாத பணியாளர்களுக்கான ஒன்றியத்தைச் சங்கத்தின் இணை நிறுவனமாக சேர்க்கவுள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை ஆகியவற்றில் கடமை புரியும் அட்டவணைப் படுத்தப்படாத பணியாளர்களின் பதவி உயர்வு தொடர்பாக கடந்த 18 வருடங்களாக தொடர்ந்தும் பதவி உயர்வுத் திட்டம் ஒன்றை தயாரித்து பதவி உயர்வு வழங்குவதற்கு ஜனாதிபதி தொடக்கம் மாகாண ஆளுநர்கள் வரை கோரிக்கை விடுக்கப்படுகிறது.

எனினும் இதுவரை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதால் இந்த ஊழியர்கள் பதவி உயர்வு இல்லாது பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனைக் கருத்தில் கொண்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கடமை புரியும் பணியாளர்களின் முன்னேற்றத்திற்காகவும் பதவி உயர்வுக்காகவும் ஒன்றியம் ஒன்றை தொழிற் சங்கத்தின் இணை நிறுவனமாக ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒன்றியத்தின் உறுப்பினராக விரும்பும் பணியாளர்கள் 'எஸ்.லோகநாதன், தலைவர், அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம், தலைமைச் செயலகம், கல்முனை என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு சங்கப் பொதுச் செயலாளர் எம்.எம்.ஏ.வகாப் அறிவித்துள்ளார்.

(ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவு வலயத்தில்

# சம்பள நிலுவை வழங்கப்படவில்லை ஆசிரியர்கள் பாடு திண்டாட்டம்

வவுனியா,செப்.16

முல்லைத்தீவு கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிகமான ஆசிரியர்களுக்கு வழங்கப்படவேண்டிய சம்பள நிலுவை கள் நீண்டகாலமாக வழங்கப்படவில்லை என்று தெரி விக்கப்படுகிறது.

முல்லை வலயத்திலுள்ள பல ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு (தரநிலை மாற்றம்) வழங்கப்படும்போது அவர்களுக்கான புதிய சம்பள மாற்றத்திற்கேற்ப சம்பள நிலுவை வழங்கப்படுவதில்லை.

2004 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தராதரம் மாற்றியமைக்கப்பட்ட பலருக்கு 8 வருடங்கள் கடந்த நிலையிலும் சம்பள நிலுவை வழங்கப்படவில்லை.

வன்னியில் இடம்பெற்ற போரின்பின் இடம்பெயர்ந்து தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள ஆசிரியர் பலர் பொருளாதார நெருக்கடி காரணமாகத் தமது வீடுகளை புனரமைக் முடியாது திண்டாடிவருகின்றனர். இன்னும் பலர் நலன்புரி முகாம்களில் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனால் மனப் பாதிப்புக்குள்ளாகிய ஆசிரியர்கள் பலர் தமக்குரிய சம்பள நிலுவைகளை வழங்குமாறு முல்லைத்தீவு வலயத்திடம் வேண்டுகோள் விடுத்தனர். எனினும் இதுவரை எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் மேற் கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் நூறுக்கு மேற்பட்ட ஆசிரியர் களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாவுக்கும் மேல் சம்பள நிலுவை வழங்கப்படவேண்டும்.

தற்போது 50 ஆயிரத்துக்கு உட்பட்ட தொகையை நிலுவையாகக் கொண்டவர்களுக்கு சம்பளநிலுவை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதற்கு மேற்பட்ட தொகையை நிலுவையாகக் கொண்டவர்களுக்குரிய நிலுவையை வழங்க நிதி இல்லை என்றும் கல்வித் திணைக்களத்தால் ஆசிரியர் ஒருவருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பல்வேறு துன்ப சுமைகளுக்கு உட்பட்டு பொருளாதார சுமையுடன் வாழும் தமக்கு இக்கூற்று மேலும் தம்மை பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளுவதாக ஆசிரியர் ஒருவர் கவலை தெரிவித்துள்ளார். (ம-410)

# புதுக்குடியிருப்பு வேணாவிலில் நாளை மறுதினம் மீள் குடியமர்வு

வவுனியா,செப்.16

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு வேணாவில் பகுதியைச் சேர்ந்த மக்கள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர்.

இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெயர்ந்து செட்டிகுளம் மனிக்பாம் ஆனந்த குமாரசாமி, கதிர்காமர் ஆகிய நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் சுமார் 202 குடும் பங்கள் இவ்வாறு அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படவுள்ளன. இது தொடர்பாக முல்லைத்தீவு செயலகத்தினர் அறிவித்திருப்பதாவது:-

கண்ணிவெடி அகற்றும் பணிகள் நிறைவடையாத காரணத்தினால் இந்தப் பகுதிக்கான மீளக்குடியமர்வு நடவடிக்கை காலம் தாழ்த்தப்பட்டு வந்தது. தற்போது இந்தப் பகுதியிலுள்ள கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக அந்தப் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டுவரும் நிறுவனம் அதற்குரிய சான்றிதழை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திடம் ஒப்படைத்துள்ளது.

இதனையடுத்து நாளை திங்கட்கிழமை வேணாவில் பகுதி மக்களை மீளக் குடியர்த்துவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. மனிக்பாம் நலன்புரி நிலையங்களிலிருந்து அவர்களுடைய உடமைகளுடன் அழைத்து வரப்படும் மக்கள் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் தங்கவைக்கப்பட்டு மீளக்குடியமர்வுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அத்துடன் அங்கு வைத்து மீளக்குடியமரவுள்ள மக்களுக்கான மீளக்குடியமர்வுக் கொடுப்பனவுகள் மற்றும் நிவாரணப் பொருள்கள் என்பன வழங்கப்படவுள்ளன.

தொடர்ந்து மறுநாள் அவர்கள் சொந்த இடங்களில் சென்று குடியமர அனுமதிக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மனிக் பாம் நலன்புரி நிலையங்க ளில் தங்கியுள்ள கேப்பாப்புலவு மக்களை கோம்பாவில் திம்பிலி இடைத்தங்கல் முகாமில் தங்க வைப்பதற் கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் எதிர்வரும் 25ஆம் திகதிக்குள் மனிக்பாம் பகுதியில் தங்கியுள்ள மந்துவில் பகுதி மக்களையும் மீளக்குடியமர்த்துவதற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்றும் அத்துடன் மீள்குடியமர்வுப் பணிகள் நிறைவுபெற்று முகாம் நலன்புரி நிலையங்கள் மூடப்படவுள்ளன என்றும் ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-400)

# மனித உரிமை ஆணைக்குழுவால் கிளிநொச்சியில் புதிய ஏற்பாடு

**சிவில் சமூகங்களுக்கு இடையில் வலைப்பின்னல்**

கிளிநொச்சி,செப்.16

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ்ப்பாணப் பிராந்தியக் காரியாலயம் கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் தடவையாக சிவில் சமூகங்களுக்கு இடையிலான சிறந்த வலைப்பின்னலை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளின் முதல் நிகழ்வு எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பிராந்தியங்கள் தோறும் இயங்கும் சிவில் சமூகங்களுக்கிடையில் பலமான உறவைப் பேணும் நோக்குடன் பல்வேறுபட்ட கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றது.

இந்த வகையில் கிளிநொச்சியில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (க)

# விசுவமடு ம.வியில் ஆண்டு விழாவையொட்டி நிகழ்வுகள்

முல்லைத்தீவு,செப்.16

விசுவமடு மகா வித்தியாலயத்தின் ஆண்டு விழாவை முன்னிட்டு பரிசளிப்பு விழா வும், சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 20ஆம் திகதி காலை நிகழ்வாக 'விஸ்வநா தம்' சஞ்சிகையின் வெளியீட்டு நிகழ்வும், மாலை நிகழ்வாக கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

காலை நிகழ்வுகளில் சிறப்பு விருந்தினராகப் பேராசிரியர் ரகுநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும் இந்தப் பாடசாலை ஆரம்ப காலத்தில் அதிபராக இருந்த சு.விஸ்வநாதருக்கு மதிப்பளிக்கப்பட வுள்ளது.

1978ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலை முல்லைத்தீவு மாவட்டத்தின் முக்கிய பாடசாலைகளில் ஒன்றாகத் திகழ்கின்றது. மேலும் இந்தப் பாடசாலை தனது 34 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது. (க)

# திருடர்கள் அட்டகாசம் முகாம் மக்கள் அச்சத்தில்

வவுனியா,செப்.16

மனிக்பாம் கதிர்காமர் நலன்புரி நிலையங்களில் திருடர்களின் தொடர் கைவரிசை இடம்பெற்று வருவதனால் முகாம் வாழ் மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர்.

மனிக்பாம் கதிர்காமர் நலன்புரி நிலையங்களில் நெருக்கமாக வாழ்ந்த மக்களில் பலர் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப் பட்டுள்ளனர்.

இதனால் மக்கள் செறிவு குறைந்துள் ளது. மக்களின் வீடுகளின் நெருக்கம் குறைவடைந்துள்ளது.

இதனை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் திருட்டுக் கோஷ்டியினர் இரவு வேளையானதும் பெண்கள் தனிமையில் இருக்கும் வீடுகளில் புகுந்து தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

கடந்த திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாள்களில் இரவு வேளையில் உட்புகுந்த திருடர்கள் பெறுமதி வாய்ந்த பொருள்களைச் சூறையாடியுள்ளனர்.

கடந்தவாரம் ஒரு வீட்டினுள் நுழைந்த திருட்டுக் கும்பல் தனிமையில் இருந்த பெண்ணிடம் இருந்து 5-பவுண் நகையை அபேஸ் செய்துள்ளது.

அதேபோல் கடந்த செவ்வாய்க்கிழமையும் இந்த வீட்டினுள் நுழைந்த திருடர்களைக் கண்டதும் பெண் கூக்குரல் இட்டதை அடுத்து அவர் அணிந்திருந்த ஒன்றரைப் பவுண் சங்கிலி அறுத்துக் கொண்டு ஓடித் தப்பிவிட்டனர்.

இதேவேளை இராணுவக் காவலரணுக்கு அருகில் இருந்த வாய்பேச முடியாத பெண் ஒருவர் தங்கியிருந்த வீடொன்றில் தவறான நோக்கத்துடன் உள்நுழைந்த மூவர் அவருடன் தவறான செயலில் ஈடுபட முயற்சித்ததாகவும், அந்தப் பெண் சத்தமிட அவர்கள் ஓடித்தப்பிவிட்டதாகவும் முகாம்வாசிகள் தெரிவிக்கின்றனர்.

முள் கம்பிகள் சுற்றிவர அமைக்கப்பட்டு 24 மணி நேரமும் இராணுவமும் பொலிஸாரும் காவல் கடமையில் ஈடுபட்டிருக்கும்போது இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இதனால் மக்கள் தொடர்ந்து அந்தப் பகுதியில் தங்கியிருக்க அச்சம் தெரிவிக்கின்றனர்.

(ம-400)

# புதுக்குடியிருப்பில் பல பகுதிகளுக்கு வருடம் கடந்தும் மின்சாரம் இல்லை

வவுனியா,செப்.16

இடம்பெயர்வின் பின் மீளக்குடியமர்த்தப்பட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலர்பிரிவைச் சேர்ந்த பலபகுதிகளுக்கு இதுவரை மின் இணைப்பு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக் கப்படுகிறது.

இறுதிக்கட்டப் போர் நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்கள் மற்றும் உறவினர் வீடுகளில் தங்கியிருந்த புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த மந்துவில், வேணாவில் தவிர்ந்த இடங்களில் மீளக்குடியமர்த்தல் நடவடிக்கைகள் நிறைவடைந்து பல மாதங்கள் கடந்து விட்ட நிலையிலும் இதுவரை மின் இணைப்பு வழங்கப்படவில்லை.

குறிப்பாக புதுக்குடியிருப்பு கிழக்கு இரணைப்பாலை, கோம்பாவில், புதுக்குடியிருப்பு மத்திய பகுதி, சிவநகர் உட்பட பல கிராம சேவகர் பிரிவுகளில் மக்கள் குடி யமர்த் தப்பட்டு ஒரு வருடம் கடந்து விட்டது.

பரந்தன் பகுதியில் இருந்து சுமார் 36 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள புதுக்குடியிருப்பு சந்திவரை மின் இணைப்பு வழங்கப்பட்டு அந்தப் பகுதியிலுள்ள இராணுவ முகாமுக்கும், புதுக்குடியிருப்பு சந்தியிலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்திலுள்ள பொன்னம்பலம் வைத்தியசாலையில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகம் வரை மின் இணைப்பு வழங்கப்பட்டு மின்சாரம் வழங்கப்படுகின்றது.

ஆனால் வீதியோரங்களில் காணப் படும் வீடுகள் தவிர வேறு எந்த வீடுகளுக்கும் மின்சார இணைப்பு வழங்கப்படாமையால் இந்த வருடம் சாதாரணதரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் உட்பட பலரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதேவேளை இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மாதாந்தம் ஆயிரம் ரூபாவுக்கு மேல் வாடகையாக பணம் செலுத்தி தமக்கான மின்சாரத்தைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-400)

# 'பசுமையை நோக்கி' அபிவிருத்தித் திட்டம் முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேசங்களில்

முல்லைத்தீவு,செப்.16

'பசுமையை நோக்கி' அபிவிருத்தித் திட்டமானது முல்லைத் தீவின் மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய்ப் பிரதேச செயலகப் பிரிவுகளில் நடைமுறைபடுத் தப்படுகின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதிப்பங்களிப்புடனேயே இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

இந்தத் திட்டத்தின் விசேட அங்கமாக கிராம மட்டத்தில் பயிர்கள் தெரிவு செய்யப்பட்டு, அந்தப் பகு திக்கான விவசாயப் போதனா சிரியர்களுடன் இணைக் கப் பட்டு அவர்களுக்குத் தேவையான பயிர்ப் பாதுகாப்புத் தொழில் நுட்பப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் விவசாயப் போதனாசிரியர்களின் தொழில் நுட்ப வழிகாட்டலுடன் விவ சாய நடவடிக்கைகளுக்குப் பெரும் சவாலாக விளங்கும் பீடைகளைச் சூழலுக்குக் குறைந்தளவு பாதிப்புடன் முகாமைத்துவம் செய்வதை இலக்காகக் கொண்டு நடமாடும் பயிர்ச் சிகிச்சை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும் விவசாயிகள் தமது பயிர்களில் ஏதாவது பீடைத் தாக்கம் ஏற்பட்டிருந்தால் குறிப்பிட்ட பயிர் மாதிரி யுடன் பயிர்ச் சிகிச்சை நிலையங்களுக்கு வருகை தந்து இலவசமாக ஆலோசனைகளைப் பெற்றுச் செல்லலாம்.

நேற்றையதினம் ஆலங் குளம் பொது மண்டபத்திலும், கோட்டை கட்டியகுளம் மற்றும் அம்புலப் பெருமாள்குளம் பொது மண்டபங்களிலும் இந்த நடமாடும் பயிர்ச் சிகிச்சைகள் இடம் பெற்றன.

இன்று சிராட்டிக்குளம் மற்றும் பூவரசன்குளம் பொது நோக்கு மண்டபங்களிலும், நட்டாங்கண்டல் அ.த.க. (பழைய) பாடசாலையிலும் நாளைதினம் மல்லாவிப் பொதுச் சந்தைக்கு அருகிலும் மற்றும் வன்னி விளாங்குளம், அம்பாள்புரம் பொது நோக்கு மண்டபங்களிலும் முற்பகல் 10 மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை இந்த நடமாடும் சிகிச்சைகள் இடம்பெறவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

# ஆனந்தபுரம் பாடசாலையை இயங்கச் செய்ய நடவடிக்கை

வவுனியா,செப்.16

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு கோட்டத்தைச் சேர்ந்த ஆனந்தபுரம் அ.த.க.பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை முல்லைத்தீவு கல்வி வலயம் மேற் கொண்டுள்ளது.

இறுதிக் கட்டப் போரின்போது இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங் களில் தங்கியிருந்த இந்தப் பிரதேசத் தைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் கடந்த வாரம் குடியமர்த்தப்பட்டனர். இதனை அடுத்து இந்தப் பகுதி யைச் சேர்ந்த மாணவர்களின் நன்மை கருதி ஆனந்தபுரம் அ.த. க.பாடசாலையின் [illegible] அமைக்கப்பட்டு கற்றல் செயற்பாடுகள் எதிர்வரும் புதன் கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக இந்தப் பாடசாலையைச் சேர்ந்த தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்கள் அனைவரையும் நாளை திங்கட் கிழமை பாடசாலைக்கு வருகைதருமாறு [illegible] அதிபர் க.கனகரட்ணம் கேட்டுள்ளார். (ம-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

நெல்லியடி சந்தியிலிருந்து MMV வீதியில் மகாவித்தியாலயத்திற்கு முன்னர் வரும் காளி கோவிலருகில் இரண்டு பரப்புக் காணியில் உள்ள 4 அறைகள் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு. (தரகர் இல்லை)

(சி/3278)(5-6-7)

தொடர்பு : 0777822873

## விற்பனைக்கு

220cc(புதிய மொடல்) சிவப்பு நிற பள்சர் NP WV xxxx இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 651 2374

(22937)(5-6-7)

## வீடு விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை பிள்ளையார் கோயிலுக்கருகில் பலாலி வீதிக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய 4 பரப்புக் காணியிலமைந்த வீடும் 8 பரப்பு தோட்டக்காணியும் விற்பனைக்கு.

தொடர்பு:077 219 7194

(சி/3284)(5-6-7)

## வீடு விற்பனைக்கு

இல.807, கே.கே.எஸ். வீதி, சிவலிங்கப் புளியடி யாழ்ப்பாணத்தில் 3 பரப்புக்காணியுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்கு.

077 509 5202, 077 389 3953 / 236 2945

(சி/3288)(5-6-7)

## ஏல விற்பனை

RA4661,240 பாகிஸ்தான் உழவு இயந்திரம் ஒன்று விற்பனைக் குண்டு. உழவு வேலை செய்ய வில்லை.

(22931)(5-6-7) தொடர்பு: 077 566 5780

## வெள்ளவத்தையில் வீடு விற்பனைக்கு

- 2 மாடி வீடு (2007 இல் கட்டப் பட்டது)
- 5.4பேர்ச் 4 -அறைகள்.
- இன்னொரு மாடி கட்டக்கூடிய வசதி
- வாகனத் தரிப்பிடம் இல்லை.

48ஏ, பெர்னான்டோ வீதி, கொழும்பு-6.
(வெள்ளவத்தை டெல்மன் வைத்தியசாலைக்கு அடுத்த வீதி-கடற்கரைப் பக்கம்)
ஆகக் கூடிய விலை கோரலுக்கு விற்கப்படும்.

(சி/3286)(5-6-7) தொடர்பு: 077 778 1080

## துயர் பகிர்கின்றோம்



எமது சக ஆசிரியர் திருமதி இராஜேஸ்வரி கைலைநாதன் அவர்களின் தந்தை

**வாரித்தம்பி கிருஷ்ணபிள்ளை**

அவர்களின் பிரிவுத்துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை ஆசிரியர் நலன்புரிசங்கம்
கிளி/ கனகபுரம் ம.வி. கிளிநொச்சி.

(19327) (45.6.7)

## விசா சேவை

UK,Canada, France,Australia, Swiss, German போன்ற நாடுகளுக்கும் ஏனைய நாடுகளுக்கும் வீசா பெற்றுத்தர Bank Balance வசதி செய்து கொடுக்கப்படும்.(நிபந்தனைகளுக்குட்பட்டது.)

தொடர்பு:077 363 7864

(சி/3287)(5-6-7)

## ஸ்டிக்கர்

ஓட்டோ,வான்,மோட்டார் சைக்கிள் வாகனங்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டித் தரப்படும்.
இடம்: Rockman net Cafe,No.: 04பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(அப்பலோ ஆஸ்பத்திரி அருகில்) 021 222 1940, 077 906 2221

(22915)(5-6-7)

## விற்பனைக்கு

Print More 27, HP Canon Printer Toner (Remanufacture) விற்பனைக்குண்டு.
HP 12A, 35A, 85A. யாழ்ப்பாணம்.
தொடர்பு:077 791 4279

(சி/3281)(5-6-7)

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி வளாக ஒழுங்கையில் பலாலி றோட்டை அண்மித்ததாக பெரிய வீடு சகல வசதிகளுடனும் வாடகைக்குண்டு. அரச சார்பற்ற நிறுவனங்களும் விரும்பப்படும்.

தொடர்பு:071 446 8174, 021 222 1956, 077 220 0928

(22934)(5-6-7)

## வீடு விற்பனைக்கு

பிறவுண் வீதி, அரசடி வீதிக்கு அண்மையில் 2¾ பரப்புக் காணியுடன் சகல வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

(22933)(5-6-7) தொடர்பு:077 087 1721

## A.C மலிவு விற்பனை

484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப் பாணம். எனும் முகவரியில் AC விற் பனைக்கு உண்டு. நேரில் வந்து பார்வையிடலாம்.

தொடர்பு: 077 954 6485, 077 412 8114

(22892)(5-6-7)

# Come & Grow with us

## VACANCIES

Asia Asset Finance PLC is a listed company in the Colombo Stock Exchange and a finance company licenced and regulated by the Central Bank of Sri Lanka. Due to the expansion of our Businuss Activites we are seeking young, dynamic individuals to join our growing team. We will be providing an attractive remuneration package and also the company is committed to rewarding employees with a stimulating and participative working environment with satisfying career opportunities.

### Manager/Assistant Manager – (Killinochchi)

**Job Description**

- Marketing Company's products to potential customers and activities related to Branch administration and supervision of junior staff

**Personal Profile**

- Possess very good result in GCE A/L Examination
- Degree from a recognized university or those who are pursuing further studies in Business Administration, Banking, Economics, Marketing, and Finance, Accountancy or any other related field will be preferd
- Age less than 30 years
- Have an outgoing personality with good inter-personal skills
- Be proficient in English and Tamil and able to communicate effectively
- Be willing to work long hours and achieve given targets
- Possess a valid riding/driving license

### Marketing Executives - (Jaffna/Killinochchi)

**Job Description**

Marketing Company's lending products to potential customers and follow up

**Personal Profile**

- Possess very good result in GCE A/L Examination
- Age less than 25 years
- Have an outgoing personality with good inter-personal skills
- Be proficient in English & Tamil and able to communicate effectively
- Be willing to work long hours and achieve given targets
- Possess a valid riding/driving license

Please forward your CV including details of two non related referees and a passport size photograph to within 10 days of the advertisement indicating the position and Branch applied.


The Manager
Human Resource Division
Asia Asset Finance PLC
No. 76/1, Dharmapala Mawatha, Colombo 3
Tele: 0112 574 682-5 Fax: 0112 577 477
E-mail: careers@asiaassetfinance.lk
Web: www.asiaassetfinance.lk

ASIA ASSET FINANCE PLC
The Unconventional Finance Company ...
Reg. No.PB 139

Nidro 0776 934 816

(சி/3273)(2-6)

## கண்ணீர் அஞ்சலி



எமது உறவினரும், நண்பருமாகிய

**சுப்பிரமணியம் மங்களேஸ்வரன்**

அவர்கள் கடந்த (14.09.2012) வெள்ளிக்கிழமை காலமான செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடை வதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ். மைதிலி ஜுவெலறி
79 Z, செட்டித்தெரு,
கொழும்பு - 11

மைதிலி நகை மாடம்,
89 V, கஸ்தூரியார் வீதி, யாழ்.

(சி/3379)(6-7-8)

## கண்ணீர் அஞ்சலி



மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபை உறுப்பினர்

**சுப்பிரமணியம் மங்களேஸ்வரன்**

அவர்கள் கடந்த (14.09.2012) அன்று காலமான செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைவதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆலய பரிபாலனசபை,
மண்கும்பான் வெள்ளைப்புற்றடி
ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம், மண்கும்பான்.

(சி/3380)(6-7-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு

கொழும்பு- மதுரை -கொழும்பு

**7500/= Return**

வண்ண வண்ண சேலை கட்டும் மீனாட்சி மதுரையிலே
நாங்கள் போகலாம் நேஷன் ரவல்ஸ்னிலே
எண்ணமெல்லாம் உங்கள் கையினிலே!

**3DAY 2NIGHT**
விமானப்பயணச்சீட்டுக்கள், தங்குமிடவசதிகள், **16925/=** +Tax
பயணஒழுங்கமைப்புக்கள் அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளன. தொலைபேசியூடாக பதிவுசெய்யலாம்

Through telephone you can preregister for the seat.

**Nation Popular Travels & Tours**
#82பிறவுண் வீதி,யாழ்ப்பாணம். (நாவலடிப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக) (சி/3385) (6-2)
www.nationtravels.com
Hot line 0114651199 Jaffna 0214920920
நீங்கள் பறந்து செல்ல நாங்கள் சிறகுகளாகின்றோம்



# STUDY MEDICINE IN EUROPE

**MEDICAL DEGREE FROM RIGAS STRADINA UNIVERSITY, LATVIA**

We are the official agent of Rigas Stradina University, Latvia. (www.rsu.lv/eng) (சி/3395)

# WORK AS A DOCTOR IN EUROPE

Hurry
Apply on or before 30th September for February 2013 intake

Enjoy Visa-free travel to Schengen and other EU countries.

Medical Degree recognized by S.L.M.C and all European Countries. | Lectures conducted entirely in English medium.

**RUSHO INTERNATIONAL CONSULTANTS**
132,2/1, Suntel Building, High Level Road, Nugegoda.
E Mail : rushoint@sltnet.lk

Consultation in Tamil Language
**Austin Fernando**
Former Chief Manager of Bank of Ceylon
071-8251782

Consultation in English Language
**G. R. M. T. Bandara**
Former Senior Manager of Seylan Bank
078-5379665



# Midea Electro Mart — விசேட விலைக்கழிவ — Midea PC Show Room

கையிருப்பு உள்ளவரை மட்டுமே

LG Authorized Dealer for **Abans** Ltd.



Haier 32",LED T.V. with Free LG DVD Player 45 900/=

LG.32",LED T.V. with Free LG DVD Player 61 900/=

Samsung. 32", LED T.V. with Free Sony DVD Player 64 900/=

**Abans** நிறுவனத்தின் உத்தரவாதத்துடன்

| COMPUTER | INTEL DUAI CORE | INTEL DUAI CORE | INTEL CORE i3 |
|---|---|---|---|
| Processor | Intel Dual core 2.60GHZ | Intel Dual core 2.60GHZ | Inter Core I3 1.GHZ |
| Mother board | Intel Board DH61 | Intel Board DH61 | Intel Board DH61 |
| Memory | 2GB DDR-III, 800MHZ | 2GB DDR-III, 800MHZ | 2GBDDRIII |
| Hart disk | 250GB SATA-7200RPM | 500 GB SATA-7200RPM | 500GB SATA-7200RPM |
| Disk drive | DVD Writer | DVD Writer | DVD Writer |
| Casing | ATX 500W | ATX 500W | ATX 500W |
| Moniter | Monitor 16" LED | Monitor 19" LED | Monitor 19" LED |
| Key board | Optical mouse USB | Optical mouse USB | Optical mouse USB |
| Mouse | Multimedia key board | Multimedia key board | Multimedia key board |
| Speaker | Multimedia Speaker | Multimedia Speaker | Multimedia Speaker |
| Price | price =47900 | price=50900 | price= 60900 |

**HP Mini**
Atom 1.6 GHz
Free Dos
RAM 2GB DDRIII
Intel Graphics
H.D 320GB
LED 10." HD
DVD Writter
Wifi, BlueTooth
webCamera With Mic
Energy Star power
Price=45900

**compaq cq43**
Intel Dual core 2.2GHz
Free Dos
RAM 2GB DDRIII
Intel HD Graphics
H.D 500GB
LED 14.0" HD
DVD super multi
Wifi, BlueTooth
webCamera With Mic
Energy Star power
Price=60900

**HP pavilion G6**
Intel core i3 2.2 GHz
Free Dos
RAM 2GB DDRIII
Intel HD Graphics
H.D 500 GB
LED 15.6. HD LED
DVD Writter
Wifi, BlueTooth
webCamera With Mic
Energy Star power
Price=70900

**HP probook 4530s**
IntelCorei5-2.10 GHz
Free Dos
4GBDDR3RAM
Intel® HD Graphics
500 GB HDD
LED 15.6. HD LED
DVD Writer
Wifi, BlueTooth
webCamera With Mic
Energy Star power
Price=88900

**HP 630**
IntelCorei3-2.30 GHz
Free Dos
2GBDDR3RAM
H.D 320 GB
LED 15.6" HD
DVD Writer
Wifi, BlueTooth
webCamera With Mic
Energy Star power

Special price 64900/=

**Terms & Contdition**
1.3Years Manufacturer's warranty,
1 Year Service Warranty

(C/3384) (2-6)

**No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA. Tel: 021-2224566 Fax: 021-2221646**
e-mail:midea21@gmail.com www.mideamart.com


## Training Coordinator and Training Assistant for Frontline Officer Training Project Japan International Cooperation Agency (JICA)

**The Project aims to enhance the community development competencies of the frontline public officers in northern, eastern and north central provinces.**

**Location** : Management Development Training Institute (MDTI), Kondavil Road, Jaffna.

### Training Coordinator :-

**Overview of the Positions:**

Coordinate training program for frontline officers with the related governmental sectors in Northern Province.

**Responsibilities/Duties:**

1. Collect and organize the information on good practices of community development activities in Northern Province for study tour candidates.
2. Support the project stakeholders to conduct Training of Trainers and Training for frontline officers on community development.
3. Coordinate project meetings at the provincial level.

**Qualifications:**

1. At least 3 years working experience on community development.
2. Experience of organizing training/workshop regarding community development at community level in cooperation with government sectors is required.
3. Sufficient English and Tamil skills in writing and reading are required.

### Training Assistant :-

**Overview of the Positions:**

Provide administrative assistance and support the project stakeholders for project implementation.

**Responsibilities/Duties:**

1. Assist Training Coordinator and the project stakeholders to conduct Training of Trainers and Training for frontline officers on community development.
2. Assist JICA experts to manage administrative arrangements for the project activities with the related stakeholders and other project staff members.
3. Establish and maintain document files, records, and communications.

**Qualifications:**

1. Working experience on community development.
2. Experience of organizing training/workshop regarding community development at community level in cooperation with government sectors is required.
3. Sufficient English and Tamil skills in speaking and reading are required.
4. Sufficient skill in using Computer (Word, Excel, Power point, etc.) is required.

**Employment Period** : From November 2012 to end of March 2013 (Normal working hours from 8:30am to 4:30pm) (சி/3292) (6-2)

**Salary Scale** : Rs. 30,000/month (negotiable according to one's ability)

**Condition:**

After acceptance, required to register for a temporary employment agency (Maritime Placement (Pvt) Ltd.)

Please send your CV with the document (A4 size, only 1 page) that clearly specifies the position title (Coordinator or Assistant) you are applying for and simply introduces your special fields according to our required qualifications

Your entry must be sent by post and arrive at JICA office in Colombo by **September 26, 2012.**

**The mailing address is:**
Project for Training of Frontline Officers,
c/o JICA Office 13th Floor, DHPL Building,
No 42 Navam Mawatha, Colombo 2

**Contact person:**
S. Sumith Raj Kumar(Mr.)
JICA Project Administrative Coordinator,
E-mail: ssumithraj@yahoo.com




ஸ்ரீ
# வல்லிபுரஆழ்வார்
திருவிழாக்கால உந்சவத்தை
முன்னிட்டு
நெல்லியடி
# SINGER Plus
காட்சியறையில் பொருட்களிற்கான
விசேட விலைக்கழிவுகள்..
வட்டியில்லா இலகுதவணைமுறைக் கொடுப்பனவுகள்
மற்றும் பரிசுப்பொருள்கள்..

ஆலயவீதியில் பிரத்தியேகமாக
அமைக்கப்பட்ட காட்சியறையும்,




(18749) (6-2)

Dialog, Airtel, Etisalat, Mobitel, CEB, SLT,Lankabell, HSBC
ஆகிய பில் கட்டணங்களையும் எம்மிடம் இலகுவாக மேற்கொள்ளலாம்.
மற்றும்
வெளிநாடுகளில் இருந்து அனுப்பும் பணத்தை இலகுவாகவும், விரைவாகவும் பெற்றிட **WESTERN UNION**

இல.34 பருத்தித்துறை வீதி, நெல்லியடி. 021-226-4937 0756354832


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HALO TRUST

The HALO Trust Seeking an experienced candidate to fill the Position of
**Administrative Assistant**
in Jaffna

The HALO Trust is a British based non-political; non-religious Non-Governmental Organization specialized in the removal of the land mines and other explosive remnants of war and has been operating in Northern Province of Sri Lanka since 2002, currently working in Jaffna, Killinochchi and Mullaitivu and has a support office in Colombo.

**Qualifications / Minimum requirements:**

* Working experience in a similar role
* Excellent spoken and written English
* Excellent computer skills including MS office (in particular strong command of Excel and Word)
* Very good organizational and management skills
* Experience in database management
* Previous experience with an International institution or NGO is an advantage.

Interested candidates should submit their bio-data, contact details to:

**12, NALLUR CROSS RD, JAFFNA,**
**SRI LANKA.**

Applications to be submitted by the 20th September 2012 (சி/3376) (6,7,10)

# கண்ணீர் அஞ்சலி



கோண்டாவில் பிரதேச வைத்தியசாலையில்
மருந்துகலவையாளராக கடமையாற்றும்
திருமதி சிவதர்சினி மதியழகனின்
அன்பு மாமன்
சின்னத்தம்பி செல்லத்துரை (சந்திரியார்)

கடந்த (13.09.2012) அன்று அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

கோண்டாவில் பிரதேச வைத்தியசாலை
வைத்தியரும், சக உத்தியோகத்தர்களும்.
(22928) (45.6.7)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இமெல்டா ராஜரட்ணம்



கற்குழி, சாவகச்சேரியை வசிப்பிட மாகக் கொண்ட திருமதி இமெல்டா ராஜரட்ணம் கடந்த 13.09.2012 வியாழக்கிழமை கிறிஸ்துவிற்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் ராஜரட்ணத்தின் அன்பு மனைவியும் சுதாகரனின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (17.09.2012) திங்கட் கிழமை முற்பகல் 10 மணிக்கு நியூ லிவிங் பிளேம் சேர்ச்சில் (இருபாலை றோட், இருபாலை கிழக்கு, இருபாலை) நடைபெற்று சபைச் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இருபாலை றோட்,
இருபாலை கிழக்கு, இருபாலை.
(22935) (45.6.7)

தகவல்:
ராஜரட்ணம்,
சுதாகரன்.

## ஜோசப் அல்பிரட் (இராசிங்கம்)



உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசப் அல்பிரட் கடந்த 12.09.2012 புதன் கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மத்தேயு ஜோசப்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் மரினாவின் (டக்கி) அன்புக் கனவரும் காலஞ்சென்றவர் களான சூசைப்பிள்ளை, லூர்த்தம்மாவின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அருளானந்தம் மற்றும் ஜோண்சிங்கம் காலஞ்சென்ற வன்னியசிங்கம் (டேவிட்) மற்றும் இராசமலர், இராசராணி (பட்டு- லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நீல்மரின்(லண்டன்), நொயலின்மரின் (ஜேர்மனி) காலஞ்சென்ற நொயல்மரின் மற்றும் நெல்சிமரின் ஆகியோரின் பாசமிகு தந்தையும் மொனிக்கா, (லண்டன்) ஜெயரூபன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் ஜெனோஜா மலர்விழி, ஜெயோல்மரின், நொயல்மரின் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (17.09.2012) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் ஆனையூர் தூய அடைக்கல அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்பு கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்திற்காக ஆனையூர் அடைக்கலநாயகி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ஆவேமரியா', உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.
(22965)(9.14)

தகவல்:
யோ.யோண்சிங்கம்
(சகோதரன்)

## விற்பனைக்கு

நல்ல இன ஒரு வயது நிரம்பிய நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு- 0771945002
(22909) (9.14)

## வீடு விற்பனைக்கு

கொட்டாஞ்சேனை மேபில் றோட்டில் உள்ள தொடர்மாடி கட்டடத்தின் 2ஆம் மாடியில் 3 அறை, ஹோல், 2 பல்கனி, வாகனத் தரிப்பிட வசதிகளுடன் கூடிய வீடு உடனடி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு- 0771464454 சி./3283) (9.14)

## வைத்தியம்

உடைவு முறிவு, மூட்டுக்கள், மூட்டுவாதம், பக்கவாதம், தசைநெரிவு நாள்பட்ட நோவு விசேஷமாக முள்ளந்தண்டு சம்பந்தமான நோய்களுக்கு சித்த ஆயுள்வேத முறைப்படி சிகிச்சைகள் அளிக்கப்படும். நாள்கள் ஒவ்வொரு வியாழன், வெள்ளிக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை பதிவுகளை முன்கூட்டியே செய்யவும்.

தொலைபேசி எண் : 077 6544338
இடம் : யாழ். சிவன் கோயிலடி வைத்தியசாலை,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்
(கோப்பாய் A.G.A காரியாலயத்திற்கு முன்பாக)
வைத்தியர் Dr.சோமசுந்தரம் T. விஜயன் Reg.No.8688
(22902)(6-7-10)

## நீண்டகால வேலை வாய்ப்புகளுக்கு தனியார் நிறுவனத்தில் நிரந்தரமான வேலை வாய்ப்பு

Heavy, Light சாரதிகளும், டென்ரைவர் ஊழியர், J C B ஸ்க்கவேட்டர், டோசர், பொக்கேட் Forcift Operatator செய்யக்கூடிய ஆள்கள் வெகு விரைவாக தேவைப்படும். இலங்கை முழுவதும் வேலை செய்ய முடியும்.

★ தொழில் தகுதிக்கேற்ப 20,000 - 45,000 வரை உணவு, தங்குமிடம் உண்டு.
★ வயது: 18 - 55 சேர்த்துக் கொள்ளப்படுவார்கள், அநுராதபுரம்,

தொடர்புகளுக்கு: 071 3460 295
(20884) (45-6-7)

## செய்து கொடுக்கப்படும்

மிக அழகான முறையில்
(LONDON STYLE)
PANTRY CUP BOARD
செய்யும் Carpenter மூலம்
குறித்த நேரத்தில்
குறைந்த விலையில்
PANTRY CUP BOARD
செய்து தரப்படும்.
தொடர்பு:077 755 6244
(22878) (5-6-7)

## விநியோகஸ்தர் தேவை

### வடக்கு, கிழக்கு

மாகாணங்களில் பிரபல
*Pharma Costumer Products* களை விநியோகம் செய்வதற்கு விநியோகஸ்தர் தேவை.

கீழ்கண்ட விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்

- வங்கி உத்தரவாதம் 6,00000/=
- அனுபவம்
- *Marketing Network*

**HOLYCHEMS**
**530/17, Negombo Road, Wattala**
**Tel : 0777553014**
**E,mail - polychmsaymail.com**

## வேலையாள்கள் தேவை

ஐப்பசி மாதம் புதிதாக திறக்கப்படவுள்ள எமது கிளை நிறுவனத்துக்கு விற்பனையாளர்கள் தேவை. (ஆண், பெண் இருபாலாரும்) பழக விரும்பு கிறவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 8000/=, தகைமைக் கேற்ற ஊதியம் வழங்கப்படும். நேரில் வரவும்.

**நல்லி சில்க்ஸ்**
121/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/3367) (6,7,10)

## காணி விற்பனைக்கு

யாழ் மாநகர சபைக்குட்பட்ட யாழ். போதனா வைத்திய சாலை கிழக்கு, பருத்தித்துறை வீதி, 1ஆம் ஒழுங்கை யில் அமைந்துள்ள 3 ¾, பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு:
0778263717, 021 4909415.
(22929) (6,7,10)

## கட்டடம் வாடகைக்கு

No15, சிவப்பிரகாசம் வீதியில், கங்காதரன் வைத்தியசாலை அருகில் 2200 சதுர அடி பரப்பளவுள்ள வாகன தரிப்பிட வசதியுடன் கூடிய கட்டடம் வியாபாரம், களஞ்சியசாலை, அலுவலகங்களுக்கு வாடகைக்கு கொடுக்கப்படும்.
தொடர்புக்கு:077[illegible], 071[illegible]902,
0212221480.
(22913) (6,7,10)

## இன்று அகவை 99இல் கால்பதிக்கும் முதுபெரும் புலவர், புலவர்மணி



### வை.க. சிற்றம்பலம் ஐயா அவர்கள்

சாஹித்திய கர்த்தாவாக,
சைவசமய விழுமியங்கள் பேணும்
சமய உபாசகராக,
மரபுவழி கவிதை படைக்கும்
சந்தப்பாவலராக, நூலாசிரியராக,
புராணபடன வித்தகராக, இலண்டன்,
கனடா நாடுகளிலும் இலக்கிய மான்மிய,
பிரபந்தங்களைச் செறிவூட்டிய
கலாபூஷணம் ஐயா அவர்கள்
நூறாண்டுகள் வென்று, சகல
சௌபாக்கியங்களோடு
நீடு வாழ வாழ்த்துகின்றோம்.

சி. ஸ்ரீஸ்கந்தராஜா குடும்பம்
சி. சிவானந்தராஜா குடும்பம்
சி. சிவஞானராஜா குடும்பம்

கொக்குவில் (22914) (6,7,10)

ஓம் சக்தி துணை

## யாழ். அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோயில்

## கேள்வி கோரல் விண்ணப்பம்

யாழ். அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோயில் கல்யாண மண்டபம் அமைப்பதற்கான கேள்வி கோரப்படுகின்றது.

கல்யாண மண்டப வரைபடமும், மேலதிக விவரங்களையும் கோயில் அலுவலகத்தில் காரியாலய நேரத்தில் 16.09.2012 ஆம் திகதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். இவற்றை பார்வையிட்டு கூலிக்கான கேள்வியை மூடிய உறையினுள் இட்டு சீல் வைத்து 22.09.2012 ஆம் திகதிக்கு முன்னர் கோயில் அலுவலகத்தில் கிடைக்கச்செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

85, இலந்தைக்குளம், வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

திரு.செ. ஜெயபாலன்,
கௌரவ செயலாளர்,
யாழ். அரியாலை பிரப்பங்குளம்,
மகாமாரி அம்மன் கோயில்.
(22884) (45.6.7)

## ஒரு நாள் அழகுக் கலை பயிற்சிப் பட்டறை



* Diamond Facial (டயமண்ட் பேஷியல்)
* Face Make up (முக ஒப்பனை)
* Pedicure (கால் பராமரிப்பு)
* Manicure (கை பராமரிப்பு)
* Eye Brow Shape (இமை சீர் செய்தல்)

கட்டணம் ரூபா 1000/=

திகதி: 22.09.2012 (சனிக்கிழமை)
நேரம் :10.30-2.30 வரை
இடம்: ஒறிபிளேம் யாழ் கிளை நிறுவனம்
187/30, யூனியன் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சத்திரசந்தி கொட்டடி வீதி)
**(பதிவு காலம்: 16.09.2012-20.09.2012)**
தொடர்பு: 021 588 8000/021 588 8001

(50 பதிவுகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். பதிவுகளை எமது கிளை நிறுவனத்தில் மேற்கொள்ளலாம் அல்லது உங்களது பெயர், அடையாள அட்டை இல.. போன்றவற்றை கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்திற்கு SMS செய்யவும்....)
**(072 771 2604)**
**விசேட சலுகை -3 நண்பர்களை அழைத்து வருபவர்களுக்கு 50%கழிவு(500/= மட்டுமே...)**
(22908)(5-6-7)

## வாழ்க்கையை வெற்றி கொள்ள எம்முடன் வந்து கைகோருங்கள்

சம்பளம் 20,000 - 35,000/= எங்களது தலை நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அதி நவீன தொழிற்பட்டறைகளில் ஜாம், பிஸ்கட், சொக்லேட்,கோடியல்,PLC, கிளவுஸ், சிமெந்து, ஐஸ் கிறீம்,பால்மா,போஸ்லென் போன்ற உற்பத்திகள் பலவற் றிற்கு உற்பத்தி/பொதி செய்தல்/லேபல் ஒட்டுதல் போன்ற பிரிவுகளுக்கு 17-55 வரையான ஆண்கள், பெண்கள் தேவைப்படுகின்றனர். உணவு, தங்குமிட வசதிகளுடன் அனைத்து வரப்பிரசாதங்களும் கொடுக்கப்படும். நண்பர்கள் கூட்டமாகவோ அல்லது திருமண தம்பதிகளாகவோ ஒரே கம்பனியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

கப்பலில் தொழில்புரிய உங்களுக்கு விருப்பமா? நிரந்தர மாக வேலைவாய்ப்பிற்கு. தனியார் துறைமுகத்தில் கப்பல் புனர்நிர்மாண வேலைக்கு பயிற்றப்பட்ட/பயிற்றப் படாத சாதாரண சேவையாளர்கள் மேசன்,வெல்டர், இலக்ரீசியன் மற்றும் பாரமான வாகன சாரதிகளும் தனியார் விமான நிலையத்தில் துப்புரவு செய்தல்/கெடரின் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் 18 - 55 வயதிற்குட்பட்டோர் தேவைப்படுகின் றனர். திறமைகள் அடிப்படையில் சம்பளம் 18,000 - 50,000 வரை உணவு, தங்குமிட வசதிகளுடன் கொடுக்கப்படும். பயிற்சியுடன் வரப்பிரசாதங்களும் கிடைக்கப்பெறும்.

(20883)(5-6-7)
**தொடர்பு : 071 346 0295**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

வாய் பேச முடியாத சுயதொழில் செய்யும் மணமகனுக்குத் தகுந்த மணமகளைப் பெற்றோர் எதிர் பார்க்கிறார்கள்.
(1987.04.30)
தொடர்பு: 0771317970, 0773048648 (19326) (2-6-7)

## விற்பனைக்கு அல்லது வாடகைக்கு (W/operator)



**D4D CATER PILLAR**
(டோசர்) 4 ¾ Converter Model.
Not Used in Srilanka.
Contact:
077 244 3004, 0773063401 (22876) (2-6-7)

## வீடு விற்பனைக்கு/ வாடகைக்கு

யாழ்ப்பாணத்தில் கண்டி றோட்டில் HOLIDAYINN (A9 HOTEL RESTRAURANT க்கு அருகில்) எல்லா வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்கோ அல்லது வாடகைக்கோ உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு 0773965369 (காலை 8.00 மணி தொடக்கம் மாலை 8.00 மணிவரை மட்டும் தொடர்பு கொள்ளவும்)
தொடர்பு:- 0778078661 (22840) (2-6-7)

## ஐரோப்பிய நாடான சைப்பிரஸிற்கு Student Visa

G.C.E (O/L) மட்டும் போதுமானது
IELTS தேவையில்லை

மாதாந்தம் இலட்சம் ரூபாய் வரை சம்பளம் தரக்கூடிய பகுதி நேர வேலைவாய்ப்புக்கான ஆலோசனை
**விரைந்து வாருங்கள்** (22857)(5-7-8)

புதன்கிழமைகளில் விடுமுறை

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் (PV82703)**
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 021 221 9016



தொலைபேசியூடாக வியாபார விசாரணைகள் இடம் பெறமாட்டாது.

## அறிவித்தல்

2012.06.16 வரையும் வைத்திய பணிப்பாளராக சென்றல் நர்சிங் ஹோமில் பல வருடங்களாகக் கடமையாற்றிய வைத்திய கலாநிதி
**Dr.R.தெய்வேந்திரன்**
தற்சமயம் எமது வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில்
காலை 9.00 மணி - 1.00 மணி
மாலை 3.30 மணி - 5.30 மணி வரையும் நோயாளர்களைப் பார்வையிடுவார்.

நிர்வாகம்,
புதிய யாழ்.வைத்தியசாலை,
வெளிநோயாளர் பிரிவு,
335, பலாலி வீதி,
பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி
T.P. 021 221 9332, 021 459 1202 (F/3335) (2-6-7)


## மரண அறிவித்தல்

### திருமதி. பொன்னையா தங்கம்மா



நந்தாவில் ஒழுங்கை கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா தங்கம்மா (இரத்தினக்கா) நேற்று முன்தினம் (13.09.2012)வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும், சந்திரலீலா (கொக்குவில்), யோகதாசன் (கனடா), சாந்தகுமாரி (கனடா), செல்வகுமாரி (கனடா), நந்தகுமாரி (லண்டன்), மோகனதாசன்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் சீதாலட்சுமி(கனடா), தவராஜா(கனடா), மகேஸ்வரன்(கனடா), ஸ்ரீதரன்(லண்டன்), சகுந்தலா(கனடா), ஆகியோரின் அன்பு மாமியும், அசோகன்(யாழ். மாநகர சபை), சோபனா (AVIVA NDB INSURANCE), ஜெயசீலன் (கனடா) அனுசா (கனடா), மேனகா(கனடா), சுதாகரன்(கனடா), ரேகா(கனடா), தசிகா(கனடா), தஷாந் (கனடா), லவன் (கனடா), லாவன்ஜா(கனடா), நிருஜா(லண்டன்), மிதுசா (லண்டன்), மிசாலினி(கனடா), சாஜினி(கனடா), அசோக் (பிரான்ஸ்), வினோத் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கரிஷ், ஹரினி, நிகாஷ்(கனடா), நிக்கிஷா (கனடா) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (22921)(2.6)

'கரிஷ் காடின்',
நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில்கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,பூட்டப்பிள்ளைகள்


## கடை தேவை

இணுவில் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் மாத வாடகை அடிப்படையில் கடை தேவை.
தொடர்பு: S.மதிவண்ணன்
077 697 1243
075 648 8750 (22810)(5-6-7)

## வாகனம் விற்பனைக்கு

நீள் முகமுடைய நல்ல நிலையில் உள்ள LE 1613 தொடர் இலக்க முடைய TATA டிப்பர் வாகனம் விற்பனைக்கு உண்டு.
விலை - 1.7 மில்லியன் ரூபா.
(22799)(5-6-7) தொடர்பு: 077 260 0539

## விற்பனையாகிறது

S.பிரசாந்தன் எழுதிய A/L மாணவர்களுக்கான GIT மாதிரி வினாத்தாள்கள் யாழ் முன்னணி புத்தகசாலைகளில் விற்பனையாகிறது.
(22375)(5-6-7) தொடர்பு: 071 511 4080

## விற்பனைக்கு

கண்டாவளை ஆற்று மணலில் அரியப்பட்ட கல் உண்டு.
உங்கள் மேற்பார்வையில் நீங்கள் விரும்பும் வகையில் அரிந்தும் தரப்படும்
தொடர்புகளுக்கு: 077 2485941
(22584)(6-8)

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற்பனையாகின்றது. தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 8 மணி வரை திறக்கப்படும்.
நல்லூர் பாம் சென்ரர்,
# 19, முருகேசர் ஒழுங்கை,
(222488)(5-6-7) நல்லூர்,யாழ்ப்பாணம்


## காணவில்லை



மாவிட்டபுரம் கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் தற்காலிகமாக காலையடி பண்ணாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் சிவகரன் (அப்புச்சி - வயது 15) என்பவரை கடந்த 28.08.2012 தொடக்கம் காணவில்லை. இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் அறியத்தரவும்
தொ.பே. 077 0066 037, 077 8515 318
077 3618 580
தகவல்: கயல்விழி (அக்கா - கௌரி)


## கையடக்க தொலைபேசி திருத்தும் பாடநெறி MOBILE PHONE PEPAIRING COURSE

கை நிறைய சம்பாதிக்க சரியான வழி
September 19
காலை -9 மணி முதல்
19,20,21,22 நான்கு நாள்கள் யாழ் நகரில் புதிய பரிமாணத்துடன் 14ஆவது பிரிவு ஆரம்பம். உங்கள் எதிர்காலத்திற்கு மாதம் 10,000இக்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர தொழில் வாய்ப்பு கையடக்க தொலைபேசி திருத்தும் துறையில் 6 வருட அனுபவம் கடந்த வருடத்தில் 500 இக்கு மேற்பட்ட மாணவர்களை உருவாக்கிய பெருமை தொடர்ந்தும் முதல் தர ஆசிரியராக
No.1 ஆசிரியர் GANESH.K
நீங்கள் பாடசாலை கல்வியை இடைநிறுத்தியவரா? சுயதொழில் ஒன்றை செய்ய எதிர்பார்ப்பவரா? வேலை செய்து கொண்டு பகுதி நேரமாக வருமானம் ஈட்ட வேண்டுமா? அப்படி என்றால் இப்பாட நெறியை நிறைவு செய்த பின் மிக குறைந்த முதலீட்டில் சுயமாக தொழில் ஒன்றை ஆரம்பிக்கலாம்.

* Housing கழற்றுதல்
* IC கழற்றுதல்
* IC களை மாற்றுதல்
* IC களில் வரும் பிரச்சினைகளை கண்டறிதல்
* போனில் வரும் பிரச்சினைகளை கண்டறிதல்
* உதிரிப்பாகங்களை பரிசோதித்தல்
* உதிரிப்பாகங்களை மாற்றுதல்
* சைனிஸ் டிஸ்பிளே ஒட்டுதல்/கழற்றுதல்
* Hot airgun பாவிக்கும் முறை
* Resetting பண்ணும் முறை
* ஆரம்பம் முதல் சரளமாக கற்பித்தல்
* உங்கள் அனைத்துக் கேள்விகளுக்கும் சரியான பதில் பதிவுகளுக்கு விரையுங்கள்.

**IISEES NALLUR CAMPUS No.760**
பருத்தித்துறை வீதி,நல்லூர். 021 222 4728, 075 065 0084 (20885)(5-6-7)


# NOTICE



This is to inform the general public that Mr. Nagarasa Jaeyabalakrishnan (Naga) (bearing NIC No. 582580758 V) the Center Manager has ceased to be in the employment of CINEC Jaffna Campus since 25th May 2012 and is not authorized to transact any business on behalf of the Company. We will not be responsible for any transaction negotiated or entered into by him after the aforementioned date.

CINEC Jaffna Campus
448/3, KKS Road,
Maruthanamadam,
Jaffna.

Tel : 0214925925

(C/3274)(6-7)

www.adinnovations.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு
17.07.1925
உதிர்வு
17.08.2012

## திருமதி கமலாம்பிகை இராசலிங்கம்

என்றும் எம்மை அன்பாலும் பண்பாலும்
அரவணைத்து எம்மைக் காத்த
தெய்வமே...
எங்கள் உயர்வுக்கு உறுதுணையாய்
நல்வாழ்வுக்கு வழிகாட்டியாய் அமைந்த
உங்கள் அன்பு முகம் காணத் துடிக்கின்றோம் என்றும்
எம் இதயத்தால் வாழ்த்தி வணங்குவோம் அம்மா...

கடந்த (17.08.2012) வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தாயாரின் மறைவுச் செய்தி கேட்டவுடன் அன்னாரது இல்லத்துக்கு வருகை தந்து அனுதாபம் தெரிவித்தும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டும், சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர்கள், சாவகச்சேரி நகராட்சி மன்ற சமூகத்தினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருந்து தொலைபேசி மூலமாகவும், தந்தி மூலமாகவும், ஈ-மெயில் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"கமலபவனம்", மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (சி/9366) (2,6,7) - குடும்பத்தினர்.

## விற்பனைக்கு

பொம்மேரியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு.
தொடர்பு: 077 934 6599
துர்க்கா பாமா பவர் ஸ்ரேசன், சுன்னாகம்.
(சி/3345)(5-6-7)

## O/L, A/L கணக்கீடு

வவுனியாவில் பிரத்தியேக, குழு வகுப்புக்கள் கற்பித்துக் கொடுக்கப்படும்.
(20879)(5-6-7) தொடர்பு: 077 714 7604

## காணி விற்பனைக்கு

மல்லாகம் கே.கே.எஸ் வீதியில் 2¼ பரப்புக் காணி விற்பனைக் குண்டு. (சோடாக் கம்பனி ஒழுங்கை) தரகர் தேவையில்லை.
(22855)(5-6-7) தொடர்பு: 077 753 2994

## கார் விற்பனைக்கு

NISSAN SUNIY (SUPER SALON)
FB-14, 301-xxxx Full Option
விலை- 1.6m. தொடர்பு: 077 714 7604
(20880)(5-6-7)

## கடை வாடகைக்கு

யாழ். கன்னாதிட்டி சந்திக்கு அருகில் சகல வசதியுடன் கூடிய கடை வாடகைக்கு கொடுக்கப்படும்.
தொடர்பு: 021 222 9372, 077 400 2780
(22879) (45.6.7)

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி ஆடியபாத வீதியில், பலாலி வீதிக்கும் Medical Campus இற்கும் இடையில் உள்ள வீட்டின் ஒரு பகுதி (Annex) வாட கைக்கு உண்டு. சிறிய குடும்பம் அல்லது University students விரும்பத் தக்கது.
தொடர்பு: த.சண்முகலிங்கம்
(22843)(5-6-7) 077 323 8486,021 321 7953

## வீடும் வளவும் விற்பனைக்கு

திருநெல்வேலி ஆடியபாத வீதியில் வீடும் வளவும் 3½ பரப்பு தனிக்கிணறு, நான்கு பக்க சுற்றுமதில் ஆகியனவுடன் விற்பனைக்கு உண்டு. இது பலாலி வீதிக்கும் Medical Campus இற்கும் இடையில் உள்ளது.
தொடர்பு: த.சண்முகலிங்கம்
(22853)(5-6-7) 077 323 8486,021 321 7953

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள NP GH xxxx தொடரிலக்கமுள்ள YCLS (பெரிய பெட்டி) Yamaha Mate 50 விற்பனைக் குண்டு. தொடர்பு: 077 424 2327, 072 724 2327
(22861)(5-6-7)

## வேலையாள் தேவை

மருந்தகம் ஒன்றுக்கு கணக்கு வேலைகள் செய்வதற்கு A/L படித்த பெண் பிள்ளை தேவை. (யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்)
தொடர்பு: 021 222 9288
(22890) (2.6.7)

## நீங்கள் தேடுவது அதிக வருமானம் தரும் தொழிலா?

எமது Multinational Advertising கம்பனியின் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற இடங்களில் புதிய கிளைகளுக்கு 25 பேர் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். இலவச பயிற்சிக்குப் பின் நிரந்தர தொழில் பயிற்சியின் போது 10,000 - 20,000/= வரை வருமானமும் பயிற்சிக்குப்பின் 45,000/= மேல் வருமானமும் பெற்றுக்கொள்ளலாம்.

உடன் தொடர்புகளுக்கு:
077 2684 542, 075 0363 985
(20882) (45-6-7)

## ஐஸ் பக்கற் மெஷின்



ரூபா 2/=, 5/=, 10/= என்ற அளவுப் பிரமாணங்களில்
தற்போது ஐஸ் பக்கற்களை இலகுவாகவும் உடனடியாகவும்.....!
மணித்தியாலத்துக்கு 2000 ஐஸ் பக்கற்றுக்கள் வீதம் பெற்றுக்கொள்ள முடியும்.
(சி/3286) (2-6-7)

**WORLDWIDE EXPORTS**
201, காலி வீதி, இரத்மலானை (பிரிவென வீதி)
011 - 2721259 / 2721055
071 - 4726220

நம்பிக்கையானது...
உறுதியானது....

City Tower
Your Dream Home....
20,2nd lane,Dehiwala.

# தெஹிவளையில்

ரம்மியமான சூழலில் உங்களுடைய கனவு இல்லம் அமைந்தால்....கற்பனைசெய்யுங்கள்





ஏற்கனவே கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

**இன்னும் ஒரு சில வீடுகள் மாத்திரமே உள்ளன!!**

தாமதிக்காமல் உடனே அழையுங்கள்

**0777 368 764**



MMW

**Civi Mec Construction(Pvt)Ltd**
(சி/3279) (2-6-7)
Office : 156,1/1,W.A Silva Mawatha, Wellawatte, [illegible]
E-Mail : info@civimec.com | Web : www.civimec.com | Hotline : 0777 763 148 | Tel : 011 2367878 | Fax : 011 2367818

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 82

# வயிற்றிலுள்ள சிசுவின் துடிப்பு - கவனமாயிருங்கள்

**01)வயிற்றிலுள்ள சிசுவின் சாதரணமான துடிப்பு எவ்வாறு இருக்கும்?**

-அநேகமான கர்ப்பிணிப் பெண்கள் தமது சிசுவின் துடிப்பை முதலாவதாக 18-20 கர்ப்ப வாரங்களில் உணர்ந்து கொள்வர். அது உங்களின் முதலாவது கர்ப்பம் எனின் 20 கர்ப்ப வாரங்களுக்கு அண்மித்ததாகவும் இரண்டாவது மூன்றாவது கர்ப்பம் எனின் 16 கர்ப்ப வாரங்களிலும் உணரப்படலாம்.

-வயிற்றிலுள்ள சிசுவின் அசைவானது உதைத்தல், அசைதல், நீந்துதல், உருளுதல் போன்று உணரப்படலாம்.

-சிசு வளரும் போது அசைவின் வகையும் ,எண்ணிக்கையும் சிசுவின் செயற்பாட்டிற்கு ஏற்ப மாறுபடலாம்.

-அநேகமாக மதியம், மாலை வேளைகளில் அதிக அசைவுகளை உணரலாம்.

-சிசுவின் நித்திரை கொள்ளும் நேரம் 20-40 நிமிடம் வரை வேறுபடலாம். இந்நேரத்தில் சிசு அசைவுகளை மேற்கொள்ளாது.

-அசைவுகளின் எண்ணிக்கை 32 கர்ப்ப வாரங்கள் வரை அதிகரித்துப் பின் மாறாது காணப்படும். ஆனால் அசைவின் வகை மாறுபடலாம்.

-நீங்கள் வேலையில் ஈடுபடும் போது எல்லா வகையான அசைவுகளையும் உணர முடியாது போகலாம்.

-உங்கள் சிசுவின் அசைவு பிரசவத்தின் போதும் உணரப்படும்.

**02) சிசுவின் அசைவுகள் ஏன் முக்கியமானது?**

-உங்களது கர்ப்ப காலத்தில் வயிற்றிலுள்ள சிசுவின் அசைவு அதன் உடல் நலனைக் குறிக்கின்றது.

-சிசுவின் அசைவின் எண்ணிக்கை குறைந்தால் அல்லது அசைவின் வகை அசாதாரணமாக இருந்தால் சிசுவின் நலன் பாதிப்புற்றிருக்கலாம். நீங்கள் உடனடியாக உங்கள் பிரதேச மருத்துவ மாதைத் தொடர்பு கொண்டு சிசுவின் நலனை அறிதல் வேண்டும்.

**03)எத்தனை அசைவுகள் போதுமானது?**

-அசைவுகளின் எண்ணிக்கை ஆளுக்காள் வேறுபடும். ஆனால் உங்களின் கர்ப்ப காலத்தின் சிசுவின் அசைவு எண்ணிக்கையும், வகையும் வேறுபடுவது (அதிகரித்தல் , குறைதல்) குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

-சிசுவின் அசைவு எண்ணிக்கை முந்தியதிலும் குறைதலும் வகை வேறுபடுதலும் முக்கியமான மாற்றங்களாகும்.

**04) சிசுவின் அசைவை உணர்வதைப் பாதிக்கும் காரணிகள் எவை?**

-நீங்கள் உங்கள் வேலையில் அதிக கவனம் செலுத்தலும் வேலைப்பளுவும்.

-சூல்வித்தகம் கருப்பையில் முன்பக்கச் சுவரில் காணப்படுதல்.

-சிசுவின் கிடை ( முதுகுப்புறம் முன் நோக்கி இருப்பின் அசைவு குறைவாக உணரப்படும்)

**05) சிசுவின் அசைவைக்குறைக்கும் காரணிகள் எவை?**

-சில மருந்துகள் (வலி நிவாரணி, நித்திரை குளிசை)

-புகைத்தலும் மதுபானம் பாவித்தலும்.

-சிசுவின் நரம்பு, தசைத்தொகுதி பாதிப்பு.

-சிசுவின் உடல் நலன் பாதிப்பு.

**06) எவ்வாறு சிசுவின் அசைவை அவதானிக்கலாம்?**

-சிசுவின் அசைவின் எண்ணிக்கையையும் வகையையும் அட்டவணைப் படுத்துங்கள்.

-இரண்டு முறைகள் பின்பற்றப் படுகின்றன.

1) Cardif "count 10" |formula நீங்கள் ஒவ்வொரு நாளும் குறித்த நேரத்திலிருந்து (மு.ப 8.00) அசைவை எண்ணத் தொடங்குங்கள். பத்து அசைவுகளை எண்ணி முடித்து நேரத்தைக் குறித்துக் கொள்ளவும்.

-தொடர்ந்து 2 நாட்களுக்கு 12 மணித்தியாலத்தில் 10 அசைவுகளை விட குறைவாக துடித்தால் அல்லது ஒரு துடிப்பும் 12 மணித்தியாலத்தில் உணரப்படாது விட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெறவும்.

2)நாளாந்த சிசுவின் துடிப்பு எண்ணிக்கை

(Daily fetal movement count) - காலை, மதியம், மாலை மூன்று வேளையும் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கு அசைவுகளை எண்ணி 4 ஆல் பெருக்கவும். 10 இலும் குறைவானதாயின் மருத்துவ ஆலோசனை பெறவும்.

-தொடர்ந்து 3 மணித்தியாலம் அல்லது அதற்கு மேல் துடிப்பு உணரப்படாது விடின் வைத்திய ஆலோசனை பெறவும்.

**07) சிசுவின் துடிப்பு நிச்சயமற்று காணப்படின் என்ன செய்யலாம்?**

-அமைதியாக கட்டிலிலோ, தரையிலோ இடது பக்கம் திரும்பிப் படுக்கவும்.

-தொடர்ந்து இரு மணித்தியாலத்திற்கு சிசுவின் துடிப்பின் மீது கவனத்தைச் செலுத்தவும்.

-இரு மணிநேரத்தினுள் 10 இலும் குறைந்த அசைவுகளை உணர்ந்தால் வைத்திய ஆலோசனையை நாடவும்.

**8) பிள்ளையின் துடிப்பு முன்னையிலும் குறைவாகக் காணப்படின் என்ன செய்ய வேண்டும்?**

-எப்போதும் வைத்தியரை நாடி ஆலோசனை பெறவும். துடிப்பு குறையின் அதனை புறக்கணிக்க வேண்டாம். குறைந்தது மருத்துவ மாதை தொடர்பு கொண்டு அவர் மூலம் சிசுவின் அசைவைப் பரீட்சிக்கலாம்.

-ஒரு முறை மட்டும் துடிப்புக் குறைவை உணர்ந்த அநேகமான பெண்கள் நலமான பிள்ளைகளைப் பெற்றெடுப்பினும் திரும்பத் திரும்ப துடிப்பு குறைவு காணப்படின் மகப்பேற்று வைத்திய நிபுணரின் கவனிப்புப் பெறுதல் மிக அவசியம். ஏனெனில் சிசுவை உடனடியாக பிரசவிக்க நேரிடலாம்.

-எனவே உங்களின் வயிற்றிலுள்ள சிசுவின் அசைவு அல்லது துடிப்பு குறைவாக அல்லது வித்தியாசமாக உணரப்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனையை நாடவும். ★

போ.சிவாகரன்
மருத்துவர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

# பாதுகாப்பற்ற உடலுறவும் அபாயங்களும்

இலங்கையில் உள்ள பாலியல் நோய் தடுப்புப் பிரிவினரின் கருத்துப்படி பாதுகாப்பற்ற பாலுறவினால் பாலியல் சம்பந்தமான பல தரப்பட்ட நோய்கள் விரைவாகப் பரவி வருவது கண்கூடு. இவர்களின் கருத்துப்படி நிமிடத்துக்கு ஒருவர் என்ற ரீதியில் பாதுகாப்பற்ற உடலுறவுக்கு நிர்ப்பந்திக்கப்படுவதாகவும் தெரியவருகிறது. மேலும் இவர்களின் கணிப்பீட்டின்படி நாட்டில் 40,000 பாலியல் தொழிலாளர்கள், 35,000 ஓரினச் சேர்க்கையாளர்கள் 40,000 ஹெரோயின் பாவணையாளர்கள் இருப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி தகவல்கள் பாலியல் சார்ந்த நோயின் அபாயம் பற்றி எம்மை எச்சரிப்பவையாக உள்ளன. இன்று யாழ்ப்பாணத்திலும் இவ்வகையான பாலியல் பலாத்காரம் பற்றி தினமும் பத்திரிகைகளில் செய்திகள் வந்த வண்ணமே உள்ளன. தெரியவருவது சில, தெரியாமல் நடப்பது பல. முக்கியமாக யாழ்ப்பாணத்தில் உள்ள இளைய சமுதாயமே விழித்துக் கொள்ள வேண்டும். நாளை பாலியல் சம்பந்தமான நோயினால் பீடிக்கப்படும் நபர் நீங்களாக இருக்கலாம்.

பாலியல் தேவைகள் ஒரு மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று. அவை சரியான வழிமுறையில் நிவர்த்தி செய்யப்படவேண்டும். தமிழ்ச் சமூகத்துக்கு என்று விசேடமான பண்பாடுகள் உண்டு. அதில் மிகவும் முக்கியமானது பாலியல் சார்ந்த செயற்பாடுகளை நிதானமாக கையாளும் தன்மை. இன்று இது கேள்விக் குறியாகியுள்ளது. அவசரமான உலகில் பாலுணர்வை தீர்த்துக்கொள்வதிலும் அவசரம்தான். அவசரத்தின் விளைவு அநியாயமான பாலியல் நோய்களா?

பாலியல் நோய்கள் பாலியல் தொடர்பின் போது தொற்றுதலடைந்த ஒருவரில் இருந்து மற்றொருவருக்கு பரவும் நோய்களாகும். தொற்றுதல் அடைந்த ஒருவருடன் யோனி வழி, குதவழி, வாய்வழி பாலியல் தொடர்பு கொள்வதால் இந்த நோய்கள் பரவ இடமுண்டு.

**இந்த நோயினால் ஏற்படும் பாதிப்புகள்**

இந்த நோய் ஏற்பட்டதும் அநேகம் பேர் வெட்கத்தின் காரணமாக சரியான மருத்துவ சிகிச்சை பெறத் தயங்குவதும் அனுபவமற்ற உள்ளூர் வைத்தியமுறைகளை நாடுவதாலும் நோயின் தாக்கம் அதிகரிக்கின்றது. இதனால் ஆண், பெண் மலட்டுத்தன்மை ஏற்படலாம். இதயம், மூளை, நரம்பு ஆகியவற்றில் பாதிப்புகள் ஏற்படலாம். சிலநோய்களின் கிருமிகள் கர்ப்பகாலத்தில் தாயிடம் இருந்து குழந்தைக்கும் கடத்தப்படலாம். சில வகை நோய்க்கிருமிகள் பிரசவத்தின் போது தாயிடம் இருந்து குழந்தைக்கு கடத்தப்படலாம். சரியான முறையில் சிகிச்சை எடுக்காவிடின் குணம் குறிகள் மீண்டும், மீண்டும் தோன்றும்.

**இந்த நோய்கள் பரவும் ஆபத்தை ஏற்படுத்தும் பாலியல் நடத்தைகள்**

* பலருடன் பாலியல் தொடர்பை வைத்திருத்தல்.
* அறிமுகமில்லாதவருடன் பாலியல் தொடர்வு கொள்ளல்.
* பாலியல் துணையை அடிக்கடி மாற்றுதல்.
* குடிபோதையில் இருக்கையில் பாலியல் தொடர்பை ஏற்படுத்தல்.
* ஊசி மூலமாக போதை மருந்துகளை ஏற்றுதல்.
* விபச்சார நடவடிக்கையில் ஈடுபடுதல்.
* விலை மாதருடன் பாதுகாப்பற்ற பாலியல் தொடர்பு.

**நோயின் குணங்குறிகள்**

நோயின் தன்மையைப் பொறுத்து குணம் குறிகள் வேறுபடும்.

* பாலுறுப்புகளில் பருக்கள் ஏற்படலாம். பின்னர் இவை கொப்புளங்களாக மாறி புண்கள் ஏற்படும்.
* பெண்ணின் யோனிமடல் பகுதியில் இருந்து மணத்துடன் கூடிய திரவக்கசிவு.
* ஆணின் சிறுநீர்வழியின் ஊடாக சீழ் அல்லது வெண்ணிறமான திரவம் வெளியேறுதல்.
* பாலுறுப்பு உண்ணிகள்.
* பெண்களின் அடிவயிற்றுப் பகுதியில் நோ.
* சலக்கடுப்பு.

**குணம் குறிகள் காணப்பட்டால் செய்ய வேண்டியவை**

* இயன்றளவு விரைவாக அருகில் உள்ள பாலியல் மூலம் கடத்தப்படும் நோய்கள் தொடர்பான கிளினிக்கில் அல்லது அருகே உள்ள வைத்தியசாலை வைத்தியரொருவரிடம் காட்டி உரிய சிகிச்சையையும் ஆலோசனையையும் பெறவும்.
* மீண்டும் இரத்தப் பரிசோதனைகள், சோதனைகளுக்காக வரும்படி அறிவிக்கப்பட்ட தினத்தில் தவறாது கிளினிக்குச் [illegible] பூரணமாக [illegible]
* நோயின் குணம் குறிகள் வெளித் தெரியாவிட்டாலும் வைத்தியரின் ஆலோசனையை குறித்த காலம் வரை பெறுதல் வேண்டும்.
* பாலியல் துணைவரை/ துணைவியை கிளினிக்கு அல்லது சிகிச்சை தேவை ஏற்படும் போது சரியான வழிப்படுத்தல் வேண்டும்.
* உரியவகையில் சிகிச்சை பெறுவதன் மூலம் Gonorrhea, syphzlis Chlamydia போன்ற பாலியல் தொற்றுநோய்களை குணப்படுத்தலாம்.
* பாலியல் செயற்பாட்டின் மூலம் பரவும் எல்லா நோய்களையும் இரத்தப் பரிசோதனை மூலம் மட்டும் கண்டு பிடித்து விடமுடியாது. சில நோய்களை இனம் காண்பதற்கு வெவ்வேறு மாதிரிகளை சோதித்தல் வேண்டும்.

**பாதுகாப்பு பெறுதல்**

* பாரம்பரியமாக நாம் பின்பற்றி வரும் பண்பாடான ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற பண்பாட்டை பின்பற்றுதல்.
* பாலியல் இன்பம் ஒவ்வொரு மனிதனதும் அடிப்படைத் தேவை அதை சரியான முறையில் சுயகட்டுப்பாட்டுடன் அனுபவித்தல்.
* நம்பிக்கையான ஒருவருடன் மட்டும் பாலியல் தொடர்பை வைத்திருத்தல்.
* தெரியாத நபர்களுடன் பாலியல் செயற்பாட்டை தவிர்த்தல்.
* அற்ப சொற்ப தேவைகளுக்காக கற்பை இழத்தல் கூடாது.
* ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களுடன் பாலியல் தொடர்புகளில் ஈடுபடும் போது சரியான முறையில் பாதுகாப்பு ஆணுறை (Condom) அணிதல் வேண்டும்.
* பாலியல் நோய் உள்ளவர்கள் பாலியல் செயற்பாடுகளை தவிர்த்து உரிய சிகிச்சை பெறுதல் வேண்டும்.

எனவே இளைஞர், யுவதிகளே விழித்துக் கொள்ளுங்கள். நீங்கள் சரியாகச் சிந்தித்து செயற்படுங்கள். பாலியல் செயற்பாடு அவசரத்தில் இச்சையை தீர்த்துக் கொள்ளும் ஒரு செயற்பாடல்ல. அதனால் ஏற்படும் தொற்றுகள் வேண்டத்தகாத கர்ப்பங்கள் என பல பிரச்சினைகள் எழலாம்.

கோ.நந்தகுமார்,
விரிவுரையாளர்,
தாதியர் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி சின்னத்தம்பி பூரணம்



வேலணை கிழக்கு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இருபாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி பூரணம் நேற்று (15.09.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், அன்னலக்சுமி, காலஞ்சென்ற காந்தரூபி மற்றும் மனோன்மணி, உதயகுமார் (பிரான்ஸ்), விஜயகுமார்ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2012) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இருபாலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(22396) (45.6.7)

தகவல்:

இருபாலை. சி. விஜயகுமார் (மகன்)

# மாணவர்களை வீதியில் இறக்கும் முயற்சியில் அரசியல்வாதிகள்

கொழும்பு,செப்.16 சிறுவர்களின் உயிர்களைப் பணயம் வைத்து அதிகாரத்தைக் கைப்பற்ற சில அரசியல் வாதிகள் முயற்சிப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார். சிறுவர்களின் உயிர்களை அரசியல் இறையாகக் கொள்வதற்கு எவருக்கும் இடமளிக்கப்போவதில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

நாட்டிலுள்ள அனைத்துச் சிறுவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுப்பதற்கு அரசு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

நுகேகொடை சமுத்திராதேவி மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இந்த விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களை வீதியில் இறக்குவதற்கான பாரிய முயற்சியொன்று நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இதன்போது ஜனாதிபதி கூறினார்.

சிறுவர் மனங்களை மாசுபடுத்தாமல் அவர்களின் உலகை அவர்களுக்கே விட்டு வைப்பதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன்செயற்படவேண்டுமெனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

## கைபேசி கொள்வனவு செய்வோர் அவதானம்

கையடக்கத் தொலைபேசி கொள்வனவு செய்யும் போது அதன் தரம் குறித்துக் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

தரமற்ற கையடக்கத் தொலைபேசிகள் பல சட்ட விரோமாகச் சந்தைப்படுத்தப்பட்டுள்ளதாக அந்த ஆணைக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதனைத் தடுக்கத் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு வசமுள்ள அதிகாரம் வரையறுக்கப்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் அவதானமாக இருந்தால் தரக் குறைவான கையடக்கத் தொலைபேசி வியாபாரத்தைத் தடுக்க முடியும் என தொலைத் தொடர்புகள் ஒழுங்கு படுத்தல்ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கையடக்கத் தொலைபேசி கொள்வனவு செய்யும் போது அதன் தரத்தை அறியும் முறை தொலைத் தொடர்புகள் ஒழுங்கு படுத்தல் ஆணைக் குழு வசமுள்ளது.

தொலைபேசியின் எமி இலக்கத்தை 1909 என்ற இலக்கத்துக்குக் குறுந்தகவல் அனுப்புவதன் மூலம் அந்தக் கையடக்கத் தொலைபேசியின் தரம் குறித்து அறிந்துகொள்ள முடியும் எனத் தொலைத் தொடர்புகள் ஒழுங்கு படுத்தல் ஆணைக் குழு அறிவித்துள்ளது.


**Study & Work in UK, Australia & Canada**

*2012 September Intake.*

"ஐரோப்பிய ... நழுவவிடாதீர்கள்"

Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும். ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.

Colombo T.P:0729994777/0117208752
Jaffna T.P : 0727685691/0772479683

(22940)
(6-2)

V T L Management, 01, Deanston House, Deanston Place, Colombo.



# உங்கள் பொறியியல் கனவை நனவாக்கும்...

சர்வதேச அங்கீகாரம் பெற்ற

# பொறியியல்

## கற்கை நெறிகள்





**Civil Engineering**


**Quantity Surveying**

**Electrical & Electronics**

**Motor Vehicle**

**Mechanical**

நீங்கள் எந்த நிலையில் இருக்கின்றீர்கள்?




### எமது மாணவன் தொழில் பெற்ற கதை…

"யாழ் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று கொண்டிருக்கும் நான் கடந்த நவம்பர் மாதம் உதயன் பத்திரிகையில் வந்த City & Guilds விளம்பரத்தைப் பார்த்து Diploma in Civil Engineering கற்கை நெறியில் என்னை இணைத்துக் கொண்டேன். மொத்தமுள்ள 6 பாடங்களில் கடந்த June மாதம் நடை பெற்ற பரீட்சையிலே 3 பாடங்களில் தோற்றி இரண்டு பாடங்களில் 'Distinction' தரமும் ஒன்றில் 'Merit' தரத்தினையும் பெற்றுக் கொண்டேன். எஞ்சிய பாடங்களை டிசம்பர் மாதம் தோற்றுவதற்கு தயாராகி வருகின்றேன்.

இந்த நிலையில் இங்குள்ள வெளிநாட்டு NGO ஒன்றில் Field Supervisor பதவிக்கு வெற்றிடம் இருப்பதை அறிந்து அதற்கு விண்ணப்பித்து, நடத்தப்பட்ட நேர்முகத்தேர்வில் நான் தேர்வு செய்யப்பட்டேன். இங்கு குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் நான் படித்த 3 பாடங்களில் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் அவர்கள் என்னை தெரிவு செய்தமைதான். இன்று கவர்ச்சிகரமான சம்பளத்துடன் தெல்லிப்பளையில் நடைபெறும் Housing project ஒன்றில் Field supervisor ஆக பணியாற்றுகின்றேன்.

இதே துறையில் Advanced Dip மற்றும் Graduate Dip முடித்து இச் சமுகத்தில் ஒரு Civil Engineer ஆக வருவதே எனது வாழ்வின் இலட்சியமாக காணப்படுகின்றது"

ஜெயந்தன்
யாழ்ப்பாணம்

0214 666 699
0771 067 394

SMS மூலம் விபரங்களைப் பெற ..
உங்கள் (Name) (Address) (Course) போன்ற விபரங்களை Type செய்து 0777 762 283 க்கு SMS செய்யுங்கள்.

City & Guilds
Approved Center

SCOT

**SKILLS COLLEGE OF TECHNOLOGY**

Jaffna Campus
No. 207, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Email : jaffna@skillsinternational.lk
Website : www.skillsinternational.lk
Like us on Face book
www.facebook.com/scot.jaffna

(சி/3276)
(6-2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுளம்பு வலை விநியோகம்

தென்மராட்சி, செப்.16

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் தென்மராட்சி கிழக்கில் அண்மையில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட கரம்பகம் கிராம அலுவலர் பிரிவில் மீளக்குடியேறியுள்ள குடும் பங்களுக்கு கடந்த வெள் ளிக்கிழமை நுளம்பு வலை களை வழங்கியுள்ளனர்.

யாழ். பிராந்திய சுகாதார திணைக்களத்தினால் வழங் கப்பட்ட நுளம்பு வலைகள் நேற்றுமுன்தினம் பிரிவு பொதுசுகாதார பரிசோதகர் முன்னிலையில் மீளக்குடி யமர்ந்த குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (3)

## காரைநகரில் சிரமதானம்

காரைநகர், செப்.16

காரைநகர் கல்லந்தாழ்வு பிரதேசம் சிரமதானப் பணி மூலம் நேற்று சனிக்கிழமை துப்புரவு செய்யப்பட்டுள் ளது.

கல்லந்தாழ்வு பிரதேச தாய்மார் கழகத்துடன் இணைந்து சுகாதாரத் தொண் டர்கள், மருத்துவ மாது, பொதுச்சுகாதாரப் பரி சோதகர், அப்பிரதேச மக்கள் எனப் பலரும் இந்த சிரம தானப் பணியில் ஈடுபட்ட னர்.

இந்தச் சிரமதானப் பணி யின் மூலம் அந்தப் பகுதி யில் உள்ள பொதுஇடங்கள், ஆள்கள் அற்ற வளவுகள், வீதிகள் என்பன துப்புரவு செய்யப்பட்டுள்ளது.(3-250)

# தமிழக அகதிகள் முகாமிலிருந்து ஈழத் தமிழர்கள் 6 பேர் மாயம்

தமிழ்நாடு - ஓசூர், கெல வரப்பள்ளி இலங்கைத் தமி ழர் அகதி முகாமில் இருந்து ஆறு பேர் காணாமற் போயுள்ள தாக இந்திய ஊடகங்கள் தெரிவித் துள்ளன.

இதில், இருவரை மைசூர் மற்றும் இந்தோனேஷியா வில் பொலிஸார் மீட்டுள்ள னர். ஓசூர் அடுத்த கெல வரப்பள்ளி அணை, இலங் கைத் தமிழர் அகதி முகாமில், 149 குடும்பங்கள் இருக்கின் றன. முகாமை விட்டு வேலை நிமித்தமாக வெளியே செல் வோர் முகாம் நுழைவாயிலில் வைக்கப் பட்டிருக்கும் வரு கைப் பதிவேட்டில், செல்லும் இடம், நேரம், காரணம் ஆகிய வற்றைப் பதிவு செய்தே வெளியில் செல்ல வேண்டும்.

தற்போது, இலங்கையில் அமைதி திரும்பி வருவ தால், முகாமில் வசிப்பவர் கள், தக வல் தெரிவிக்காமல் முகா மில் இருந்து தப்பி வெளியே சென்று விடுகின் றனர்.

இதேவேளை, தமிழகத் தின் பல முகாம்களில் வசிக் கும் இலங்கைத் தமிழர்கள், ஆஸ்திரேலியா செல்லும் ஆர்வத்தில் அரசின் அனு மதி பெறாமல் முகாம்களை விட்டு மாயமாகி வருகின் றனர்.

ஓசூர் கெலவரப்பள்ளி முகாமில், ஒரு வாரத்துக்கு முன், முகாமைச் சேர்ந்த தம்பியா (19), இன்பன் (35), நவநீ தன் (25), ராஜேந் திரன், (36), அமுதன், (38), உள்ளிட்ட, ஆறு பேர் மாய மாகினர். தகவல் அறிந்த கியூ பிரிவு பொலிஸார், அவர் களைத் தேடி வந்தனர்.

நவநீதனை கியூ பிரிவு பொலிஸார், கர்நாடகா மாநிலம் மைசூரில் மீட்டனர். இந்தோ னேஷியாவில் அமுதனை மீட்டனர். மற்ற வர்கள் குறித்த விவரம் தெரியவில்லை. மீட்கப்பட்ட நவநீதனை, கியூ பிரிவு பொலி ஸார், கெலவரப்பள்ளி அணை முகாமில் சேர்த்தனர். அமு தனை எங்கு வைத் துள்ளனர் எனத் தெரியவில்லை. (3)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், செப்.16

யாழ். மாவட்ட முன்பள் ளிச் சிறார்களின் விளை யாட்டு விழா இன்று பிற்பகல் 2மணிக்கு யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதா னத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளை யாட்டு அமைச்சின் ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத் திப் பிரிவினரால் இந்த விளை யாட்டு விழா நடத்தப்பட வுள்ளது.

அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் தலைமை யில் நடைபெறும் இந்த விளையாட்டு நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தாவும், கௌரவ விருந் தினராக வடமாகாண ஆளு நரின் செயலாளர் இ. இளங் கோவனும் கலந்து கொள் வர். (3-9)

* * *

தென்மராட்சி, செப்.16

தென்மராட்சி கல்வி வலய விசேட தேவை யுடைய மாணவர்களுக்கான விளையாட்டு விழா நாளை திங்கட்கிழமை காலை 9மணிக்கு கைதடி நவீல்ட் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

வலயக் கல்விப் பணிப் பாளர் கு.பிரேமகாந்தன் தலைமையில் நடைபெறும் விளையாட்டு விழாவுக்கு முதன்மை விருந்தினராக யாழ். கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ஆ. இரவீந் திரனும், சிறப்பு விருந்தின ராக யாழ்ப்பாணம் துடுப் பாட்ட பயிற்சி ஆலோசகர் வீ.கே. சண்முகலிங்கமும் கலந்து கொள்வர். (3-9)

## மது தலைக்கேறியதால் ரூ. 48 ஆயிரம் இழப்பு

### நீதிமன்றால் அபராதம் விதிப்பு

வடமராட்சி, செப்.16

நெல்லியடி பொலிஸ் பிரிவில் பல்வேறு இடங் களில் மதுஅருந்தி பொது மக்களின் இயல்பு வாழ் வுக்கும், அமைதிக்கும் பங் கம் விளைவித்த எட்டுப் பேருக்கு பருத்தித் துறை நீதிவான் நீதிமன்றம் 48000 ரூபாவை அபராதமாக விதித்து தீர்ப்பளித்தது.

மதுபோதையில் இருந்த இந்த எட்டுப் பேரையும் நெல்லியடிப் பொலிஸார் கைது செய்து அவர்கள் மீது தனித்தனியே வழக்கு களை யும் தாக்கல் செய்து பருத் தித்துறை நீதிவான் நீதிமன் றத்தில் முற்படுத்தினர். இந்த வழக்குகளை விசாரணை செய்த பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் தலா 6 ஆயிரம் ரூபா வீதம் மொத்தம் 48 ஆயிரம்ரூபாவை அபராத மாக விதித்து தீர்ப்பளித்தார். (3-8)

## வருடாந்த பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், செப்.16

செம்மலை ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தின் வரு டாந்த பெருந்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

இடம்பெறும் திருவிழாக் களில் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த் தத் திருவிழாவும் இடம் பெறும்.

(3-14)

## வீதியை புனரமைக்க நடவடிக்கை எடுங்கள்

காரைநகர், செப்.16

மிகவும் மோசமாகச் சேத மடைந்துள்ள காரைநகர் சுப்பிரமணியம் வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்களும் பொது அமைப் புக்களின் பிரதிநிதிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப் பட்டது. அந்தக் கோரிக்கை யில் தெரிவிக்கப்பட்டிருப்ப தாவது:-

பாடசாலை மாணவர் கள், விவசாயிகள் மற்றும் ஊர்காவற்றுறைக்கு செல் வோர் என தினமும் நூற்றுக் கணக்கான மக்கள் இந்த வீதியைப் பயன்படுத்தி வரு கின்றனர்.

மிக மோசமாகச் சேத மடைந்துள்ள இந்த வீதியின் ஊடாகப் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர். எனவே இந்த வீதியை முழுமையாகப் புனரமைப் பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ள னர். (3-250)


தருவது வித்தியா

## இன்றைய நாள்


### உங்களுக்கு எப்படி?

நாளை

புரட்டாதி - 01 திங்கட் கிழமை 17.09.2012
திதி: பிரதமை கா. 07.06 வரை துதியை பி.இ. 05.16
நட்சத்திரம்: அத்தம் பி.இ. 02.23 வரை
சுபநேரம்: 12.03- 01.33 வரை
ராகுகாலம்: 07.33- 09.03 வரை




**மேடம்:** குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத்தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புது வேலையாள்கள் அமை வார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவு வீர்கள்.




**இடபம்:** முக்கிய பிரமுகர்களைச் சந்திப் பீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் அதி கரிக்கும். தாயாருடன் கருத்து மோதல்கள் ஏற் படும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய் வீர்கள். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறு வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.




**மிதுனம்:** உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன் பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். வீடு வாங்கத் திட்டமிடுவீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.




**கடகம்:** கடந்த இரண்டு தினங்களாக இருந்த சோர்வு நீங்கி உற்சாகமடைவீர்கள். குடும்பத்தில் அமைதி திரும்பும். உறவினர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் இழந்ததை மீட் பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.




**சிங்கம்:** ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று வேலைகளை இழுத்து போட்டு பார்க்க வேண்டி வரும். எதிலும் அவசரப்பட வேண் டாம். கோபத்தால் இழப்புகள் ஏற்படும். உதவி கேட்டு தொந்தரவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் புது முதலீடுகளைத் தவிர்க்கவும். உத்தியோகத்தில் அதிகாரி களுடன் அளவாகப் பழகுங்கள்.




**கன்னி:** சில காரியங்களை அலைந்து, திரிந்து முடிக்க வேண்டி வரும். எதிர்பாராத பயணங்கள், செலவு களால் திணறுவீர்கள். சிக்கனமாக இருங்கள். வியாபாரத்தில் போட்டி களையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிப்பீர்கள்.



**துலாம்:** சாதுர்யமாகப் பேசுவீர்கள். பெற் றோர் ஒத்துழைப்பர். உங்களால் வளர்ச்சி யடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தி யோகத்தில் தைரியமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.




**விருச்சிகம்:** உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயற் படுவார்கள். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தம் கைச்சாத்தாகும். அலுவலகத்தில் மரியாதை அதிகரிக் கும்.




**தனுசு:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். நீண்ட நாள்களாகப் பிற்போட்ட காரியங்கள் முடியும். புது நட்பு மலரும். உத்தியோகத்தில் புதிய பொறுப்புகள் தேடிவரும். புத்துணர்ச்சி அதிகரிக்கும்.



**மகரம்:** ஒரு விடயத்தை நினைத்து அதி களவில் குழப்பம் அடைவீர்கள். வியாபாரம், உத்தியோகத்தில் மற்றவர்களை நம்பி எந்தப் பொறுப்புகளையும் ஒப்படைக்க வேண்டாம். நாவடக்கம் தேவை.



**கும்பம்:** மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். விரும்பிய பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர் வீர்கள்.



**மீனம்:** வர வேண்டிய பணம் கைக்கு வரும். உறவினர், நண்பர்களால் ஆதாயம் உண்டு. அரசால் வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் அதிரடியான திட் [illegible] உங்களின் திறமையைக் கண்டு மேலதிகாரி வியப்பார்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | 3 | | 7 | | | 8 | |
| 5 | 4 | | | | 8 | 7 | | 6 |
| 9 | | | 3 | | 6 | 2 | 5 | |
| | 5 | | | | | 4 | | |
| 8 | | 9 | | | | 6 | | 5 |
| | | 4 | | | | | 9 | |
| | 8 | 6 | 2 | | 3 | | | 7 |
| 4 | | 2 | 1 | | | | 6 | 9 |
| | 9 | | | 8 | | 3 | | 2 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 6 | 3 | 4 | 2 | 8 | 7 | 1 |
| 1 | 2 | 7 | 8 | 6 | 9 | 4 | 5 | 3 |
| 4 | 3 | 8 | 1 | 5 | 7 | 9 | 6 | 2 |
| 8 | 7 | 1 | 2 | 9 | 4 | 6 | 3 | 5 |
| 9 | 6 | 3 | 5 | 7 | 1 | 2 | 4 | 8 |
| 2 | 4 | 5 | 6 | 3 | 8 | 7 | 1 | 9 |
| 6 | 1 | 2 | 4 | 8 | 5 | 3 | 9 | 7 |
| 7 | 8 | 4 | 9 | 1 | 3 | 5 | 2 | 6 |
| 3 | 5 | 9 | 7 | 2 | 6 | 1 | 8 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத் தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 – 9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1 – 9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேகாலையில் மொபிடெல்லின் கிளை

தகவல் தொழில் நுட்பத்தை கிராமங்களுக்கு எடுத்துச்செல்லும் முகமாக மொபிடெல் தனது பிராந்திய தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் நிலையத்தை கேகாலையில் நிறுவியுள்ளது.

தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சர் கௌரவ ரஞ்சித் சியம்பலாபிட்டியவினால் மொபிடெல் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் டி சில்வா மற்றும் பிரதம அதிதிகள் முன்னிலையில் இந்த நிலையம் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

மேலும் இத்திட்டமானது அதி மேதகு ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனை இதிரி தெக்ம செயற்றிட்டத்திற்கமைய தொலைத் தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சரின் எண்ணக்கருவில் உருவானதென்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின்போது மொபிடெல்லின் இம் முயற்சிக்கு ஆதரவு வழங்கிய கௌரவ அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவைப் பாராட்டி லலித் டி சில்வா ஒரு நினைவுப் பரிசினையும் வழங்கினார்.

ஓர் அரச நிறுவனம் வாடிக்கையாளரின் விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் நிறுவனம் எனக் கருதப்படும் மொபிடெல், நாட்டின் பல பகுதிகளிலும் திறந்து வைக்கப்படவிருக்கும் ஏனைய நிலையங் களுடன் இந்த நிலையத்தையும் இணைத்து வைக்கிறது.

ஸ்ரீலங்கா ரெலிகொம் மொபிடலின் பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் டி சில்வா சர்வதேச தரத்திலான அதிநவீன வலையமைப்பு இடம்பெறுவதை நிச்சயிப்பதே எமது முக்கிய நோக்கமாகும் என்று கூறினார்.

என்ற ரீதியில் நாம் இலாப மீட்டும் அதேவேளை, தேசியக்கொள்கைகளை நிறைவேற்றுவதும் எமது முக்கிய நோக்கமாகும்.

அந்த வகையில், அண்மையில் மொபிடெல் தனது முதலாவது வலய அழைப்பு நிலையத்தை சூரிய வெவயில் திறந்து வைத்தது.

இன்றுவரை அது ஒரு கையடக்கத் தொலைபேசி சேவை வழங்குநரினால் கொழும்புக்கு அப்பால் திறந்து வைக்கப்பட்ட முதலாவது அழைப்பு நிலையமாகத் திகழ்ந்து வருகிறது என்றார். (த)

# ஜோர்ஜ் ஸ்டுவர்ட் இன்ஜினியரிங் உதயம்

ஜோர்ஜ் ஸ்டுவர்ட் குழுமம் ஜோர்ஜ் ஸ்டுவர்ட் இன்ஜினியரிங் எனும் தனது இணை நிறுவனத்தினை கொழும்பில் மிகவும் கோலாகலமாக ஆரம்பித்து வைத்தது.

லங்கா கிரேடிவ் என முன்னர் அழைக்கப்பட்ட இந்நிறுவனம் உள்நாட்டு பொறியியல் துறைக்கு பாரிய சேவைகளை ஆற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், ஜோர்ஜ் ஸ்டுவர்ட் இன்ஜினியரிங் எனும் பெயரில் ஆரம்பிக்கப்படும் இந்நிறுவனம் தனது கட்டட பொறியியல் துறைசார் தீர்வுகளின் ஊடாக நடுத்தர மற்றும் மத்திய கட்டுமான துறைகளில் அதிக கவனத்தினைச் செலுத்தவுள்ளது.

கட்டுமானத்துறையில் 10 வருட வரலாற்றினைக் கொண்டுள்ள ஜோர்ஜ் ஸ்டுவர்ட் இன்ஜினியரிங் மின்வலுத் துறையின் அபிவிருத்தி, நிர்மாணம், தொலை தொடர்பு, பொறியியல் பிரிவு, நெடுஞ்சாலை மற்றும் வடிகாலமைப்பு துறைகளில் மேலும் விசேட நிபுணத்துவத்துடன் தனது சேவையைத் தொடரவுள்ளது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட ஜோர்ஜ் ஸ்டுவர்ட் இன்ஜினியரிங் நிறுவனத் தலைவர் பேராசிரியர் கிறிசான் தேஹரகொட கருத்து தெரிவிக்கையில், இலங்கையில் ஏற்பட்ட யுத்தம் முடிவுற்றதை அடுத்து இலங்கை மூன்று வித சவால்களுக்கு முகங் கொடுத்துள்ளது.

மீள்கட்டமைப்பு, மீள்குடியேற்றம், நல்லிணக்கம் ஆகியவையே இம்மூன்று துறைகளுமாகும். மீள்கட்டமைப்பு மற்றும் மீளக்குடியேற்றம் என்பன கட்டுமானத்துறையினைச் சார்ந்தவையாகும்.

இவ்விரண்டு துறைகளையும் உயிர்ப்பான, ஆற்றல் மிகுந்த ஈடுபாட்டுடன் கூடிய செயற்பாட்டின் மூலமாக கட்டியெழுப்புதல் அவசியமாகும்.

# சன்சில்க் பயிற்சிபட்டறை

சன்சில்க் 2012 ஆம் ஆண்டுக்கான கூந்தல் பராமரிப்பு செயற்பாடுகளின் ஓர் அங்கமாக அண்மையில் பண்டாரவளையில் பயிற்சிப் பட்டறை ஒன்றை நடத்தியது.

இந் நிகழ்வில் 300 இக்கும் அதிகமான அழகுக் கலை நிபுணர்களும், 3500 பார்வையாளர்களும் கலந்து கொண்டனர்.

பராமரிப்பு, சிகிச்சைகள், சருமப் பாதுகாப்பு, அழகு சிகிச்சை மற்றும் எடுப்பான தோற்றம் குறித்து முன் னணி சிகையலங்கார நிபுணர்கள் மூலம் விளக்கமளிக்கப்பட்டது.

யுனிலீவர் நிறுவனத்தின் கூந்தல் பராமரிப்பு பிரிவின் தலைவர் வத்சலா அலுத்கெதர கருத்து தெரிவிக்கையில், ''முன்னணி கூந்தல் பரா மரிப்பு வர்த்தக நாமமான சன்சில்க் இலங்கையின் பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த பெண்கள் எதிர்கொள்ளும் பொருளாதார பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக பயிற்சிய ளித்தது.

இதன் மூலம் இளம் பெண்களின் அழகை மெருகூட்டி அவர்களின் தொழில் வாய்ப்பு மற்றும் கனவுகளை நனவாக்கிக் கொள்ள முடியும்'' எனக் கூறினார்.

இப் பயிற்சி பட்டறையின் ஓர் அங்கமாக பண்டாரவளை மற்றும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களை சேர்ந்த மொடல்களாக திகழ விரும்பும் 80 பெண்கள் கலந்து கொண்டனர்.

# எயார்டெல்லுக்கு வெள்ளி விருது

எயார்டெல், அண்மையில் நடத்தப்பட்ட 2012 ஆம் ஆண்டுக்கான மனித வள முகாமைத்துவ விருதுகள் வழங்கும் நிகழ்வில் வெள்ளி விருதைப் பெற்றது.

நாட்டிலுள்ள 79 முன்னணி கூட்டுப் பொறுப்புமிக்க நிறுவனங்களுடன் போட்டியிட்டு இந்த விருதினை வென்றுள்ளது.

மனித வள முகாமைத்துவத்திற்காக வழங்கப்படும் இவ்விருது, எயார்டெல் நிறுவனம் இலங்கையில் மனித வள செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் மிகச் சிறந்த நிறுவனங்களில் ஒன்று என்ற அங்கீகாரத்தை அதற்கு வழங்கியிருக்கின்றது.

எயார்டெல்லின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சுரேன் குணவர்தன இச்சாதனை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், நாங்கள் உலகளாவிய மனித வள செயன்முறைகளை நடைமுறைப்படுத்துவதில் முன்னணியில் இருப்பதற்கு எப்பொழுதும் முயற்சி செய்து வருகின்றோம்.

அத்துடன், அத்தகைய ஒரு மன்றத்தில் எங்களது அர்ப்பணிப்பு, கடப்பாடு என்பன அடையாளம் காணப்பட்டிருப்பது தொடர்பில் நாங்கள் மிகவும் பெருமையடைகின்றோம்.

இலங்கையில் தொலைத் தொடர்புத் துறையில் புரட்சியை ஏற்படுத்தியுள்ள இளம் நிறுவனம் என்ற வகையில் இது ஒரு மிகப் பெரும் சாதனையாகும்.

இந்நாட்டின் பெறுமதிமிக்க மனித வள விருதுகளில்ஒன்றானவெள்ளிவிருதை வென்றிருப்பது நாங்கள் எதிர்காலத்தில் எங்களது அதிக பட்ச இலக்கை அடைவதற்கான வெற்றியை நோக்கிய கட்டமைப்பை ஏற்படுத்தி வரும் எங்களுக்கு ஓர் அடக்கமிக்க அனுபவமாகும்.

எயார்டெல் நிறுவனம் இலங்கையில் 2009 ஜனவரி 12 ஆம் திகதி அதன் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்ததோடு, இலங்கையில் 10 லட்சம் வாடிக்கையாளர்கள் என்ற இலக்கை அடைந்த ஸ்தாபனம் என்ற புகழையும் பெற்றது.

# இலங்கை சந்தையில் நுழையும் பிர்லா ரோட்மெக்ஸ் டயர்கள்

றிச்சர்ட் பீரிஸ் டயர் நிறுவனம் உலகப் புகழ் பெற்ற பிர்லா ரோட் மெக்ஸ் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிகளுக்கான டயர்களை இலங்கையில் அறிமுகம் செய்துள்ளது.

இந்தியாவின் முன்னணி டயர் உற்பத்தி நிறுவனமான பிர்லா நிறுவனத்தின் மூலம் இத்தாலி நாட்டின் தொழில் நுட்பத்துக்கு அமைவாகத் தயாரிக்கப்படும் டயர்கள் வெவ்வேறு அளவுகளில், ரியுப் கொண்ட, ரியுப் அற்ற பல்வேறு விதங்களில் விற்பனைக்கு வந்துள்ளன.

பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்யும் வகையில், முன் மற்றும் பின் டயர்களுக்கு விசேடமாக அமைந்த தயாரிப்புகள் காரணமாக, இந்தியா உள்ளடங்கலாக பல நாடுகளில் மோட்டார் சைக்கிள் செலுத்துபவர்களின் அபிமானத்தை வென்ற டயர் வகையாக இது அமைந்துள்ளது.

இதற்கமைவாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் முன்னணி மோட்டார் சைக்கிளின் முதல் டயராக இந்த டயர் வகை காணப்படுவதும் விசேட அம்சமாகும்.

பிர்லா ரோட் மெக்ஸ் மோட்டார் சைக்கிள் டயரை இலங்கையில் அறிமுகம் செய்யும் நிகழ்வு அண்மையில் றிச்சர்ட் பீரிஸ் டயர் நிறுவனத்தின் பொது முகாமையாளர் பிரதீப் சமரதுங்க அவர்களின் பங்களிப்புடன் நடைபெற்றது.

இந்நிகழ்வில், நாட்டின் முன்னணி டயர் விநியோகத்தர்களுக்கு பிர்லா ரோட் மெக்ஸ் டயர்களை விற்பனை செய்வதற்கான அங்கீகாரம் உத்தியோக பூர்வமாக வழங்கப்பட்டது. (த)

# முன்னிலையில் செலான் வங்கி

2012 ஜூன் 30ஆம் திகதியுடன் முடிவடைந்த முதலாவது அரையாண்டு காலப்பகுதியில் செலான் வங்கி வரிக்குப் பின்னரான இலாபமாக 1.02 பில்லியன் ரூபாவைப்பெற்றுக்கொண்டது.

பெறுமதிசேர் வரி மற்றும் வருமான வரி என்பவற்றுக்கு முன்னரான இலாபம் கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியில் 832 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட நிலையில், இந்த அரையாண்டில் 2.01 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

இது கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியோடு ஒப்பிடுகையில் 142வீத வளர்ச்சியாகும்.

அதிகரிக்கும் வட்டி வீதங்கள் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட கடன் வளர்ச்சியின் போக்கு போன்ற நிலைமைகளுக்கு மத்தியிலும், செலான் வங்கியின் மிக முக்கிய வங்கியியல் நடவடிக்கைகளில் ஏற்பட்ட வளர்ச்சியே வங்கியின் உறுதியான செயற்பாடுகளை முன் கொண்டு சென்றுள்ளது.

கடுமையான போட்டிச் சூழலின் மத்தியிலும் செலான் வங்கி தனது வைப்புத் தளத்தினை 10.3 பில்லியன் ரூபாவாக அதிகரித்துக் கொண்டுள்ளது.

செலான் வங்கி யின் பொது முகாமையாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கபில ஆரியரத்ன கருத்துத் தெரிவிக்கையில், செயற்பாட்டு நடவடிக்கையில் மேம்பட்ட தன்மை மற்றும் வாடிக்கையாளர் சேவை, இடர் முகாமைத்துவம் போன்றவற்றை மையமாகக் கொண்ட தொழிற்பாடு போன்றவற்றின் பக்கபலத்துடனான வர்த்தக விரிவாக்கல் உபாயங்கள் எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலனைப் பெற்றுத்தர ஆரம்பித்துள்ளன.

அது மாத்திரமன்றி, ஸ்திரமான வளர்ச்சி மற்றும் முன்னேற்றகரமான இலாபம், உழைக்கும் தன்மை ஆகியவற்றை அடைந்து கொள்வதற்குத் தேவையான சிறந்ததொரு தளத்தையும் எமக்கு ஏற்படுத்தித் தந்துள்ளது என்று தெரிவித்தார். (த)

# மினிட் மெய்ட் மென்பானத்தின் நான்காவது வகை அறிமுகம்

மினிட் மெய்ட் ஒரேஞ், மாம்பழம், அப்பிள் சுவை கொண்ட குளிர்பானங்கள் ஊடாக வாடிக்கையாளர்களின் சுவையுணர்வுக்கு ருசி கூட்டிய கொக்கோ- கோலா ஸ்ரீலங்கா, மினிட் மெய்ட் மிக்ஸ்ட் ப்ரூட் என்ற நான்காவது வகை சுவையூட்டப்பட்ட ருசிமிகுந்த பானத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

மினிட் மெய்ட் மிக்ஸ்ட் ப்ரூட், மாம்பழம், வாழைப் பழம், பப்பாசிப் பழம் மற்றும் கொய்யாப் பழங்களின் நற்சுவை நிறைந்த பழக் கலவை பானமாகும். 200 மில்லிலீற்றர் கண்ணாடிப் போத்தலில் 45 ரூபா விலையில் கிடைக்கின்றது.

குறித்த ஒவ்வொரு வகை பானத்திற்கும் வித்தியாசமான ருசி மற்றும் வாடிக்கையாளர்




விரும்பியதை தேர்ந்தெடுப்பதற்கு வசதியாக பலவித அளவுகளில் கிடைக்கின்றது. இலங்கையில் மினிட் மெய்ட் ஒரேஞ், மாம்பழம், அப்பிள் சுவைகளில் மினிட் மெய்ட்டை வழங்குகின்றது.

இந்த மென்பானத்தின் அறிமுகமானது, தொலைக் காட்சி மற்றும் ஏனைய ஊடகங்கள், வீதிச் சுற்றுலாக்கள், சுவைத்துணரச் சொல்லும் செயற்பாடுகள் போன்ற பல விளம்பர யுக்திகளின் ஊடாக பிரபல்யப்படுத்தப்படுகின்றது.

கொக்கோ - கோலா நிறுவனத்தின் இலங்கை முகாமையாளர் சௌமிந்த்ர பட்டாச்சார்யா இதுகுறித்துத் தெரிவிக்கையில் ''கொக்கோ- கோலா சுவையுணர்விற்கு ருசிகூட்டும் பலவித உற்பத்திகளைத் தன்னிடம் கொண்டுள்ளது. மினிட் மெய்ட் மிக்ஸ்ட் ப்ரூட் மென்பானத்தின் அறிமுகம் ஊடாக எமது உற்பத்தி வகைகளை விஸ்தரித்துள்ள நாம், எமது உள்நாட்டு வாடிக்கையாளர்களுக்கு கெடுதல் விளைவிக்கும் எந்த வித மேலதிக பாதுகாப்பு மூலகங்கள் சேர்க் [illegible] பழங்களின் சுவைகொண்ட மென்பானத்தை வழங்குகின்றோம்'' என்றார்.

# 50 ஆயிரம் Face book ரசிகர்களை இணைத்தது Lassasa Flora நிறுவனம்

Lassasa Flora நிறுவனம் Face book பக்கத்தில் 50,000 இற்கும் அதிகமான ரசிகர்களைப் பெற்று அதன் சமூக வலையமைப்பு முன்னெடுப்பை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் சென்றுள்ளது.

ஒரு மலர் நிறுவனத்துக்குரிய ஓர் அரிய சாதனையாக இது உள்ளதுடன்,இந்தமைல் கல்லை அடைந்துள்ள முதலாவது மலர் நிறுவனமாக திகழ்வதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

உள்நாடு மற்றும் வெளிநாட்டிலுள்ள எமது ஆயிரக் கணக்கான ரசிகர்களுக்கு இந்த நேரத்தில் எமது உளமார்ந்த நன்றியை நாம் தெரிவித்துக் கொள்கிறோம் என Lassasa Flora [illegible] துவப் பணிப்பாளர் வைத்தியர் லசந்த மாலவிகே தெரிவித்தார்.

> 2010 ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்ட Lassasa Flora வின் Face book பக்கம் இலங்கை மற்றும் உலகின் பல பாகங்களிலுமுள்ள பல ரசிகர்களைக் கவர்ந்துள்ளது.

2010 ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்ட Lassasa Flora வின் Face book பக்கம் இலங்கை மற்றும் உலகின் பல பாகங்களிலுமுள்ள பல ரசிகர்களைக் கவர்ந்துள்ளது.

தெளிவான செயற்பாடுகளே இதன் வெற்றி என நான் நம்புகிறேன். நாம் எமது படைப்பாற்றல் மற்றும் திருமண வடிவமைப்பில் உள்ள புதிய நடைமுறைகளை பகிர்ந்து கொள்கிறோம்.

எமது ரசிகர்களுக்குப் பரந்த தெரிவுகளை இது வழங்குவதுடன், இலங்கையின் மலர் வடிவமைப்புத் துறையின் தரம் மற்றும் படைப்பாற்றலை இது மேம்படுத்துகின்றது.

நாம் பெற்றுக்கொண்டுள்ள கருத்துகளின் அடிப்படையில் எமது படைப்பாற்றல் மிக்க வடிவமைப்புகள் இலங்கையர்கள் மட்டுமல்லாது வெளிநாட்டினரிடையேயும் பலத்த வரவேற்பைப் பெற்றுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

Lassasa Floraவின் Face book பக்கம் ஒருபடி மேலே போய் அடிக்கடி விசேட பரிசுகளையும் வழங்கி வருகின்றது. இந்த பரிசுகள், விலைக் கழிவுகள் இலங்கை முழுவதும் மலர் மற்றும் பரிசு விநியோகத்தை உள்ளடக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறை அன்ரனிஸ் ஹென்றிஸ் அணிகள் வெற்றி

வலி.வடக்கு,செப்.16

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட உடற் பயிற்சிப் போட்டியில் யாழ்.மாவட்டத்தின் சார்பில் பங்குபற்றிய ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் தேசியமட்டத்தில் இரண்டமிடத்தையும் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி தேசிய மட்டத்தில் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

இந்தப் போட்டி நேற்றுக் கொழும்பில் நடைபெற்றது.

இதில் பெண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டிகள் இன்று இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-16-86-130)

## பேராதனைப் பல்கலைக் கழகத்தில் வெளிவாரியாக 2011 ஆம் ஆண்டு கலைமாணி (B.A) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களிற்கான அவசர கலந்துரையாடல்

இடம்: புதிய உயர்கல்லூரி மண்டபம் ஆரியகுளம்
காலம்: இன்று (16.09.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி
பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
ஏற்பாட்டுக்குழு.
(22894) (6.7.45)



## விநியோகஸ்தர்கள் தேவை

எமது உற்பத்திகளான **Bottle Water, Fruit Drinks** மற்றும் பல

### விநியோகஸ்தர்களுக்கு தேவையானவை

★ பிணைக்கட்டணம் செலுத்தக்கூடிய வசதி, வாகனவசதி/ களஞ்சிய வசதி / பிரதேசம்

★ யாழ்ப்பாணம் கிளிநொச்சி
வவுனியா மன்னார்
முல்லைத்தீவு

தொடர்புகளுக்கு : 077 5082365

## 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
01★10★1939

மறைவு
16★09★1996

அமரர் **பூதர் இரத்தினம்**

(முன்னாள் காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர், முன்னாள் தலைவர் - ஐக்கிய வாலிபர் சனசமூக நிலையம், தெல்லிப்பழை)

ஈரெட்டு ஆண்டுகள் கழிந்தாலும்
எம் இதயங்களின் நினைவுகள் அழியாது.

தபாற்கந்தோர் அருகில்,
தெல்லிப்பழை.
குடும்பத்தினர்.
(22941) (45.6.7)

## விற்பனைக்கு

TOYOTA VITZ JAPAN CAR(1300cc) (Silver, Gray colour) விற்பனைக்கு. மிகவும் நல்ல நிலையில் உள்ள 2007 Model Full option, GPS Navigation, Reverse Camera, TV, DVD, AUX, USB I POD, Radio, APS, Air bags, BT, Power Mirror. Auto AC, KM-xxxx 12000km, 20km/L, 1st Owner.

T.P.: 072 958 6931
(22932)(5-6-7)

## திருத்திக் கொடுக்கப்படும்

அனைத்து வகையான மடிக்கணினிகள் (Dell, Hp, Compaq, Samsung, Acer, Toshiba, etc) திருத்திக் கொடுக்கப்படும். மடிக்கணினிகளுக்கான உதிரிப் பாகங்களும் எம்மிடம் உண்டு.

நாடவேண்டிய இடம்:
**iBuy Computers**
75/10, முன்னொழுங்கை, பலாலி வீதி,
திருநெல்வேலி.
தொ.பே.:077 707 2092
(22891)(5-6-7)

# தோஷம் இருப்பதாக கூறி சிறுமி மீது வன்புணர்வு

கொழும்பு, செப்.16

திஸ்ஸமகாராம பிரதேசத்திலுள்ள வீடொன்றுக்கு மந்திரம் செய்வதற்காகச் சென்ற மந்திரவாதி ஒருவர், அங்குள்ள 16 வயதுச் சிறுமிக்கு தோஷம் இருப்பதாகவும் அவருக்குக் குறி மந்திரம் செய்ய வேண்டும் எனவும் கூறி, சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீரகெடிய பிரதேசத்தைச் சேர்ந்த மேற்படி நபர், திஸ்ஸமகாராம பிரதேச வீட் டில் மந்திரம் செய்ய வந்ததை அடுத்துப் பொலிஸுக்கு முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்தே கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தை அடுத்து பாதிக்கப்பட்ட சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு பொலிஸார் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (த)

## வைத்தியர்கள் தேவை

மானிப்பாயில் இயங்கும்
பிரபல வைத்தியசாலைக்கு
வைத்தியர்கள் (MBBS OR RMP)
உடன் தேவை
077 8994 077
(22945)(45-6-7)

## படி A/C லொறி விற்பனைக்குண்டு

ஜப்பானில் தயாரிக்கப்பட்ட ஐ ஜெட்டை யாட் சோA/C உடன் Cooler கருவி இணைக்கக் கூடிய பைபர் படி லொறி விற்பனைக் குண்டு.
தொ ர்பு: 077 022 1119 (22944)(5-6-7)

## வாடகைக்கு

மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையில் தொலைபேசி விற்பனை நிலையம் வாடகைக்கு உண்டு.(அதில் உள்ள தொலைபேசிகளும் விற்பனை செய்யப்படும்.)
(சி/3383)(5-6-7) தொ ர்பு: கீப் இன் ரச் -077223 3267

## பதவி வெற்றிடங்கள் (Immediate Vacancies)

**Branch Manager**
(Male, A/L or Degree is a must, age limit 24-45 years, Full Time, Good knowledge of English, )

**Student Counselors**
(Male or Female, A/L is must, age limit 21-40 years, Full Time, Good knowledge of English, )

**Cor-ordinators & Marketing**
(Male or Female, A/L is a must, age limit 18 - 45 years, Full / Part Time,

**GREENWICH COLLEGE**
39, 3rd Lane, Power House Road, Jaffna.
Contact : 0728342490
info@greenwich.lk
(சி/3289)

## ENGLISH, SINHALA

வெளிநாடு செல்பவர்களுக்கும் பல்கலைக் கழக மாணவர்களுக்கும் ஆங்கிலமும், உத்தியோகத்தர்களுக்கு சிங்களமும் ஓய்வுபெற்ற ஒருவரினால் தனியாகவோ அல்லது குழுவாகவோ வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புக்கு: 077 404 1904
(22929) (6,7,10)

## தவறிவிட்டது

தில்லையம்பலவாணர் கோபாலகிருஷ்ணன் என்பவரது சாரதி அனுமதிப் பத்திரம் 13.09.2012 அன்று அனுராதபுரத்திற்கும் நொச்சியாகமத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் குறிப்பிட்ட விலாசத்திற்கு அல்லது தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்
தொடர்பு: தி.கோபாலகிருஷ்ணன் (22892)
புத்தூர் மேற்கு, புத்தூர். 077 524 5860 (5-6-7)

முதல் தடவையாக அறிமுகமாகும் உயர்தர பட்டப்படிப்பு
UKRAIN நாட்டில் விமான பொறியியல் பட்டப்படிப்பு
O/L, A/L, Maths - 3 S Male/Female
மலேசிய வேலை வாய்ப்பு
❋இரண்டே வாரத்தில் பயணம்.
❋மலேசியாவில் உள்ள தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு
❋ மருத்துவம், உணவு, தங்குமிடம் இலவசம்
உடனடி வேலை வாய்ப்பு / அதிக சம்பளம்+OT
Hotel&Restaurant
தொடர்பு: Lanka Voice
Vavuniya - 075 065 0084
(20945)(5-6-7)

## உதயன் விளம்பரத் தொடர்புக்கு

advt@uthayan.com
021 5671111

## மணமகள் தேவை

1960-08-27 இல் பிறந்த யாழ். இந்து கௌரவ குடும்பம் கிளிநொச்சியில் வசிக்கும் சாதாரண தொழில் செய்யும் தாரம் இழந்த ஓர் பெண்பிள்ளை பொறுப்பில் உள்ளவருக்கு தகுந்த துணை தேவை. சாதி, சமயம், நிறம், ஜாதகம் கவனிக்கப்படமாட்டா. வாழ்விழந்தவர்கள், ஆண் பிள்ளை மட்டும் உள்ளவர்கள், ஊனமுற்றவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புக்கு: 071 9208225 (22929) (6,7,10)

## ஐஸ்கிறீம் வான் விற்பனைக்குண்டு



நல்ல நிலையில் உள்ள
ஐஸ்கிறீம் வான்
விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
077 3098042
(22943)(6-7-8)

## விசேட அறிவித்தல்

எமது ஸ்தாபனத்தில் திருத்துவதற்காக ஒப்படைத்து மீளப்பெறாமல் உள்ள பொருள்களை ரசீதைச் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ள வும். 15.09.2012 இல் இருந்து ஒரு மாதத் துக்குள் மீட்கப்படாத பொருள்களுக்கு நாம் பொறுப்பாளிகளல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

V.K.இராசரத்தினம்
1C ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/3381)(5-6-7)

## Metro Travels & Tours (PVT) LTD

விசேட விமானக் கட்டணங்கள்

| | |
|---|---|
| Colombo-Chennai-Colombo | 18200 |
| Colombo-Tiruchirapally-Colombo | 18500 |
| Colombo-Doha | 23500 |
| Colombo-London | 62500 |
| Colombo-Toronto | 91000 |
| Colombo-Singapore-Colombo | 31500 |
| Colombo-kualalumpur-Colombo | 31500 |
| Colombo-Frankfurt | 62500 |
| Colombo-Milan | 59500 |
| Colombo-Rome | 60000 |
| Colombo-Paris | 62500 |
| Colombo-Zurich | 70000 |



All Taxes included, credit card Accepted with a surcharge & Travel insurance,
Above Fares Are Subject to seat Availability
Terms & Conditions Apply.

மேலதிக தொடர்புகளுக்கு

METRO TRAVELS & TOURS (PVT) LTD
(Branch Office) No - 272/1, Stanly Road, Jaffna
Tel : 021 2224647, 021 2219424
Office Hours : Weekend From 8.30 am to 5.00 pm
Saturday From 9.00 am to 1.30pm
New Branch Office : No - 34, New Bus Stand Complex, Vavuniya. Tel : 024 222 6800/024 222 6801
(சி/3386)(5-6-7)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லப்பா நாகேஸ்வரி



வயாவிளானைப் பிறப்பிடமாகவும், மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும், பின்பு வெள்ளவத்தையில் வசித்தவருமான திருமதி செல்லப்பா நாகேஸ்வரி (பூரணம்) *14.09.2012* அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை செல்லப்பாவின் அன்பு மனைவியும், செல்வகுமார் (மூன்றுமுறிப்பு), உதயகுமார் (சுவிஸ்), சுபாசினி (சுவிஸ்), சுகந்தினி (கனடா), வினோதினி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற செ.சுந்தரலிங்கம் (கனடா) அவர்களின் பாசமிகு சகோதரியும், சுதாகரன் (சுவிஸ்), செல்வழகன் (நோர்வே), உதயாணி (மூன்றுமுறிப்பு), தயாழினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், நர்மதா (கனடா), பிரதீபா, சிவானுசாந்தன், றஜீவன், பிரவீன் (சுவிஸ்), சுருதி (சுவிஸ்), அட்சயா (சுவிஸ்), சௌமியா (சுவிஸ்), சங்கீதன் (கனடா), கம்சாரணி (கனடா), ஆதித்தன் (கனடா), ஆகர்ஷி (நோர்வே) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், தனுஸ்காவின் (கனடா) அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (17.06.2012) திங்கட்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் பி.ப 2.00 மணியளவில் நடைபெற்று, பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7 5/6, கொலிங்வூட் பிளேஸ்,
வெள்ளவத்தை.
தகவல்:
குடும்பத்தினர்.
(சி/3289) (6,7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்டே ஒப்சேவர் மற்றும் மொபிட்டெல் நிறுவனம் என்பன இணைந்து நடத்திய பாடசாலை மட்டத்தின் சிறந்த கிரிக்கெட் அணித் தெரிவில் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்ட சென். ஜோன்ஸ் கல்லூரி கிரிக்கெட் அணி வீரர்கள், பாடசாலை அதிபர் என்.ஜே.ஞானப்பொன்ராஜா மற்றும் பொறுப்பாசிரியர் குமணனுடன்

(த-23)

# மானிப்பாய் இந்துவை வென்றது யாழ். இந்து

யாழ்ப்பாணம், செப்.16

மதுசனின் அற்புதமான துடுப்பாட்டம் , மற்றும் பந்து வீச்சு ஆகியவை கைகொடுக்க மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை யாழ். இந்துக் கல்லூரி அணி வெற்றி கொண்டது

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் அகில இலங்கை ரீதியாக நடத்தப்படும் பிரிவு 3 இற்கான 17 வயதுப் பிரிவுக்குட்பட்ட அணிகளுக்கிடையிலான 2 ஆவது சுற்று ஆட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை, மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி மோதிக் கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. யாழ்.இந்துவின் பந்துவீச்சில் திணறிய மானிப்பாய் இந்துக் கல்லூரி 33.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சார்பாகக் குகபிரசாத் 35 ஓட்டங்களையும், பிரதீபன், திலக்ஸன் ஆகியோர் முறையே 21 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் யாழ்.இந்துக் கல்லூரி அணிசார்பில் மதுசன் 3 இலக்குகளையும், சிந்துஜன்,வைகரன் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளையும் கைப்பற்றினர்.

126 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனப் பதிலுக்குப் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய யாழ். இந்துக் கல்லூரி அணி 9.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் இரண்டு இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் மதுசன் 26 பந்துகளில் 2 சிக்சர்கள், 15 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டம் இழக்காமல் 83 ஓட்டங்களையும், சஜீகன் ஆட்டமிழக்காது 13 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சார்பில் பிரதீபன் இரண்டு இலக்குகளை கைப்பற்றினார்.

(த-23)

## வவுனியா பிறிமியர் லீக்

# பிரன்ட்ஸ்-றெக்கிறேசன் சூடினர் வெற்றி வாகை

யாழ்ப்பாணம், செப்.16

வவுனியாவில் செவ்வானம் விளையாட்டுக்கழகம் நடத்தும் வவுனியா பிறிமியர் லீக் கிரிக்கெட் போட்டிகளில் கடந்த வார இறுதியில் நடைபெற்ற போட்டிகளில் பிரன்ட்ஸ் விளையாட்டுக் கழகம், றெக்கிறேசன் விளையாட்டுக் கழகம், ஆகியன வெற்றி பெற்றுள்ளன.

முதலாவது ஆட்டம் பிரன்ட்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும், யுனிபைட் விளையாட்டுக் கழகத்துக்கும் மிடையில் இடம் பெற்றது. போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பிரன்ட்ஸ் விளையாட்டுக் கழகம் முதலில் துடுப் பெடுத்தாடி 20 பந்தப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 148 ஓட்டங்களைப்பெற்றது.

பிரன்ட்ஸ் விளையாட்டுக்கழகம் சார்பாகப் பாஸ்கர் 17 பந்துகளில் 28 ஓட்டங்களையும், ராம் 24 பந்துகளில் 28 ஓட்டங்களையும் பெற்றனர்

பந்துவீச்சில் யுனிபைட் விளையாட்டுக்கழகம் சார்பாக கார்த்திக் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 25 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

149 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யுனிபைட் விளையாட்டுக்கழகம் 20 பந்துப்பரிமாற்றங்கள்நிறைவில் 8 இலக்குகளை இழந்து 77 ஓட்டங்களை மட்டும் பெற்றுத் தோல்வியடைந்தது.

இதில் றமணன் 21 பந்துகளில் 20 ஓட்டங்களையும், லிகன் 12 பந்துகளில் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் பிரன்ட்ஸ் விளையாட்டுக்கழகம் சார்பாக சதீஸ் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 5 இலக்குகளைக் கைப்பற்றிய அதே வேளை, போட்டியின் ஆட்ட நாயகனாகவும் தெரிவானார்.

இரண்டாவது றெக்கிறேசன் விளையாட்டுக்கழகத்துக்கும், யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்திற்குமிடையில் இடம் பெற்ற 18 பந்துப் பரிமாற்றங்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய றெக்கிறேசன் விளையாட்டுக் கழகம் 18 பந்தப் பரிமாற்றங்கள் நிறைவில் 7இலக்குகளை இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் றெக்கிறேசன் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த திலீபன் 35 பந்துகளில் 29 ஓட்டங்களையும், ராஜன் 16 பந்துகளில் 28 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்துவீச்சில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் அணி சார்பாக [illegible] 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

106 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 18 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 102 ஓட்டங்களை மட்டும் பெற்று தோல்வி யடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஜெசி 24 பந்துகளில் 28 ஓட்டங்களையும்,மனோஜ் 13 பந்துகளில் 17 ஓட்டங்களையும் தமது அணிசார்பாகப்பெற்றனர்.

பந்துவீச்சில் றெக்கிறேசன் விளையாட்டுகழகம் அணி சார்பாக டிலுக்சன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்த வீசி 20 ஓட்டங்களை கொடுத்து 3 இலக்குகளையும், சக்தி 4 பரிமாற்றங்கள் பந்த வீசி 20 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக, 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 20 ஓட்டங்களை கொடுத்து 3 இலக்குகளைக் கைப்பற்றிய றெக்கிறேன் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த டிலுக்சன் தெரிவானார்.

(த-23)

# இன்றைய ஆட்டங்கள்



கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றுகின்ற அணிகளின் விவரங்கள் வருமாறு-

பி.ப. 3.30 மணிக்கு

டைமன்ஸ் வி.க எதிர் றேஞ்சஸ் வி.க

பி.ப. 4.30 மணிக்கு

குருநகர் பாடும்மீன் வி.க எதிர் கருணாகரன் விளையாட்டுக் கழகம்

* * *

கலட்டி நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும், நியூஸ்ரார் பிறிமியர் வெற்றிக் கிண்ணத்திற்கான 20/20 கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறுகின்ற ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு-

காலை 8.30 மணி

வட்டுக்கோட்டை ஓல்கோல்ட் வி.க எதிர் திருநெல்வேலி வை.எம்.ஏச்.ஏ. வி.க .

முற்பகல் 11 மணிக்கு

ஜொனியன்ஸ் வி.க எதிர் கே.ஸி.ஸி.ஸி வி.க

பிற்பகல் 2.30 மணிக்கு

மானிப்பாய் பரிஷ் வி.க எதிர் ஸ்ரீகாமாட்சி வி.க

மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்கு பெற்றும் அணிகளின் விவரம் -

காலை 8.30 மணி

பற்றீசியன் வி.க எதிர் அரியாலை மத்திய வி.க

பிற்பகல் 1 மணி

திருநெல்வேலி கிரிக்கெட் வி.க எதிர் யாழ்.சென்றல் வி.க .

* * *

வவுனியா செவ்வானம் விளையாட்டுக்கழகம் நடத்தும் 'வவுனியா பிறிமிர் லீக் 20/20' கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்ற உள்ள அணிகளின் விவரம் வருமாறு -

காலை 8.30 மணி

பிரன்ட்ஸ் வி.க எதிர் வவுனியா றெக்கிறோசன் வி.க

பிற்பகல் 1 மணிக்கு

தவசிக்குளம் செவ்வானம் வி.க எதிர் வவுனியா வடதாரகை வி.க .

* * *

யாழ். உதைபந்தாட்ட லீக், வலிகாம் உதைபந்தாட்ட லீக் ஆகியவற்றின் ஆதரவுடன் இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் பிரான்சிஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறுள்ள அரையிறுதியாட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு -

நாவாந்துறை சென். நீக்கிலஸ் வி.க அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் வி.க அணி மோதவுள்ளது.

* * *

இணுவில் இந்து விளையாட்டுக்கழகம், இணுவில் சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் இந்துவின் வெற்றிக்கிண்ணத்துக்கான மென் பந்த கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு செ. இலகுநாதன் தலைமையில் இணுவில் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு -

திருநெல்வேலி முத்துத் தம்பி வி.க எதிர் கொக்குவில் பொற்பதி இந்து வி.க .

17 வயதுப் உட்பட்டவருக்கான இறுதிப் போட்டியில் எவெரெஸ்ட் கல்வி நிலைய வி.க அணியை எதிர்த்து அருள் கல்வி நிலைய வி.க அணி மோதவுள்ளது.

(த-23-86)

# மின் நிர்மாணக் கட்டமைப்பு கரப்பந்தாட்டத்தில் வெற்றி

வவுனியா, செப்.16

இலங்கை மின்சாரசபை வவுனியா கிளையால் ஊழியர்களுக்கிடையில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மின் நிர்மாணக் கட்டமைப்பு அணி வெற்றி பெற்று சம்பியனாகியது.

மின்சாரசபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் வருடாந்தம் கிரிக்கெட், கரப்பந்தாட்டம் உதைபந்தாட்டம் போன்ற விளையாட்டுக்கள் நடத்தப்பட்டு வருகின்றது

அதன் ஓர் அங்கமாகவே வவுனியா மின்சார சபையினரால் கடந்தவாரம் கரப் பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நடத்தப்பட்டன.

இதில் கிளிநொச்சி மின் பாவனையாளர் சேவை நிலையம், வவுனியா மின் நிர்மாணக் கட்டமைப்பு, முல்லைத்தீவு மின் பாவனையாளர் சேவைநிலையம், மற்றும் வவுனியா - கிளிநொச்சி பிரதேச காரியாலய மின் பாவனையாளர் சேவை நிலையம் ஆகியவற்றின் அணிகள் பங்குபற்றின.

இதன் இறுதியாட்டத்தில் வவுனியா மின் நிர்மாணக் கட்டமைப்பு அணியினரும் வவுனியா கிளிநொச்சி பிராந்திய அணியினரும் மோதிக் கொண்டனர்.இதில் வவுனியா மின் நிர்மாணக் கட்டமைப்பு அணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது.

இந்த அணி யாழ். மாவட்டத்தில்இடம்பெறவுள்ள போட்டியில் பங்கு பற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனை படைத்த சங்கா

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் 2012 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கும் விழா நேற்று இரவு கொழும்பில் நடைபெற்றது. இதில் இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் குமார் சங்ககார மூன்று விருதுகளை வென்று அசத்தினார். அத்துடன் இலங்கை நடுவரான குமார் தர்மசேனவும் சிறந்த நடுவராக தேர்வானார்.

ஐ.சி.சியினால் வருடாந்தம் நடத்தப்பட்டுவரும் விருது வழங்கல் விழா கொழும்பில் நேற்று நடைபெற்றது. வழமை போன்று விருதுப் பட்டியல் வெளியிடப்பட்டு அதிலிருந்து வீரர்கள் வாக்குகள் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

இந்த ஆண்டுக்கான சிறந்த வீரர், சிறந்த டெஸ்ட் வீரர், மக்கள் மனங்கவர் வீரர் ஆகிய மூன்று விருதுகளையுமே சங்ககார தட்டிச் சென்றார். முதல் முறையாக மூன்று விருதுகளைப் பெற்ற வீரர் என்ற பெருமையையும், மக்கள் விருதுகளை தொடர்ச்சியாக இரண்டு தடவைகள் வென்ற வீரர் என்ற சாதனையையும் படைத்தார்.

சிறந்த ஒரு நாள் போட்டி வீரராக இந்தியாவின் இளம் நட்சத்திரம் விராத் ஹோக்லி தெரிவானார். இந்த விருதுக்கான பெயர்ப் பட்டியலில் சங்கா, மலிங்க மற்றும் டோனியின் பெயரும் உள்ளடக்கப்பட்டிருந்தது. சிறந்த புதுமுக வீரர் விருதை மேற்கிந்தியத்தீவுகளின் அசத்தல் பந்து வீச்சாளர் சுனில் நரைனும், சிறந்த 'ரி-20' வீரராக தென்னாபிரிக்காவின் லெவியும், சிறந்த நடுவராக இலங்கையின் குமார் தர்மசேனவும், சிறந்த விளையாட்டுணர்வுடன் விளையாடிய வீரராக நியூஸிலாந்தின் வெற்றோரியும் தெரிவாகினர். (5)






# பயிற்சி ஆட்டங்களின் முடிவுகள்

**இந்தியா எதிர் இலங்கை**

நாணயச் சுழற்சியில் வெற்றி: இந்தியா

| இந்தியா 146/5 (20) | இலங்கை 120/10 (19.3) |
|---|---|
| துடுப்பாட்டம் | துடுப்பாட்டம் |
| டோனி 55 * (42) | சங்ககார 32 (32) |
| ரோகித் சர்மா 37 (26) | ஜீவன் மென்டிஸ் 26 (22) |
| பந்து வீச்சு | பந்து வீச்சு |
| குலசேகரா 2 | இப்ரான் பதான் 5 |

**சிம்பாப்வே எதிர் பங்களாதேஷ்**

நாணயச் சுழற்சியில் வெற்றி: பங்களாதேஷ்

| சிம்பாப்வே 134/6 (20) | பங்களாதேஷ் 135/5 (18.2) |
|---|---|
| துடுப்பாட்டம் | துடுப்பாட்டம் |
| சிபண்டா 40 | அஷ்ரபுல் 38 (25) |
| ரெயிலர் 21 | சகிப் அல் ஹசன் 28 (17) |
| பந்து வீச்சு | பந்து வீச்சு |
| அப்துர் ரஷாக் 2 | கீர்மர் 2 |

**ஆப்கானிஸ்தான் எதிர் இலங்கை 'ஏ'**

நாணயச் சுழற்சியில் வெற்றி: இலங்கை 'ஏ'

| ஆப்கானிஸ்தான் 209/7 (20) | இலங்கை 'ஏ' 158/10 (18.2) |
|---|---|
| துடுப்பாட்டம் | துடுப்பாட்டம் |
| மொஹமட் நபி 51 (24) | கோசல குலசேகர 63 (38) |
| அஸ்கர் 50 (39) | ஷெகான் ஜெயசூர்ய 20 (14) |
| பந்து வீச்சு | பந்து வீச்சு |
| நுவான் பிரதீப் 3 | டவால்ட் ஷட்ரான் 3 |
| கௌசல்ய லொக்கு ஆராய்ச்சி 3 | |

**நியூஸிலாந்து எதிர் ஆஸ்திரேலியா**

நாணயச் சுழற்சியில் வெற்றி: நியூஸிலாந்து

| ஆஸ்திரேலியா 139/6 (20) | நியூஸிலாந்து 83/10 (17.0) |
|---|---|
| துடுப்பாட்டம் | துடுப்பாட்டம் |
| வொட்ஸன் 27 | ரெயிலர் 20 |
| வேட் 25 | வில்லியம்ஸன் 17 |
| பந்து வீச்சு | பந்து வீச்சு |
| பிரேஸ் வெல் 2 | ஹொக் 3 இலக்குகள் |
| மைல்ஸ் 2 | |

# 2009 ஆம் ஆண்டு இரண்டாவது ரி-20

பரபரப்புடன் முதலாவது உலகக் கிண்ணம் நிறைவு. அதன் விளைவு அணிகளின் சுற்றுலாத் தொடர்களில் 'ரி-20' ஆட்டங்களும் தங்களின் பங்குகளை நிரவுகை செய்தன. ரசிகர்களை வேகமாக வென்றெடுத்தது 'ரி-20'. மவுசு ஏற்றம் கண்டதால் ஐ.பி.எலும் தொடக்கம். அதன் பின்னராக வந்தது இரண்டாவது உலகக் கிண்ணம். பயிற்சிகள் ஏராளத்துடன் களமிறங்கின அணிகள். தொடர் நடந்தது இங்கிலாந்தில்.

முதலாவது ஆட்டத்திலேயே அதிர்ச்சி. சொந்த மண்ணில் கத்துக்குட்டி நெதர்லாந்து புரட்டி எடுத்தது இங்கிலாந்தை. 'ரி-20' யாரும் எதிர்பார்க்காத முடிவை கொடுக்கும் இந்த ஆட்டம் சொன்ன பாடம். இந்தத் தொடரில் இலங்கையர்கள் கொஞ்சம் எழுப்பமாக ஆடினர். புதுத் தலைமை சங்காவின் வழி நடத்தல்.

கிரிக்கெட்டில் புது 'ஷொட்'. இலங்கையின் அதிரடி நாயகன் சனத். இதை மாற்றிய மைந்தன் டில்ஷான். இந்தத் தொடரில் டில்ஷானால் கிரிக்கெட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது புது 'ஷொட்'. அது தான் 'டில்ஷ்ஹூப்'. பல அணிகளுக்கு இந்த 'ஷொட்டால்' டில்ஷானின் ஓட்ட வேட்டையை கட்டுப்படுத்த முடியவில்லை. இது இலங்கை இறுதி ஆட்டம் வரை செல்வதற்கான தடையைத் தகர்த்தெறிந்து கொடுத்தது.

மறுபுறம் நடப்புச் சம்பியன் பட்டத்துடன் களமிறங்கிய இந்தியா வெறுங்கையுடன் ஊர் திரும்பிய பரிதாபம். கடந்த உலகக் கிண்ணத்தில் தொலைத்த சம்பியன் பட்டத்தை வெல்லத் துடித்தது பாகிஸ்தான். அவர்களது துடிப்பு இறுதி ஆட்டம் வரையில் கொண்டு சென்றது.

மீண்டும் 'ரி-20' அரங்கில் இரு ஆசிய அணிகள். வெள்ளைத் தோல்களுக்கு தொடர்சியான ஆசிய அணிகளின் வரவு பிடிக்கவில்லை. இருந்தும் பலனில்லை. இறுதி ஆட்டத்துக்கு நாணயத்தை சுற்றிப் போட்டனர். சங்காவுக்கு இதில் வெற்றி. துடுப்பாட்டம் என்பது அவர் தெரிவு. இந்தத் தொடரெல்லாம் பந்து வீச்சாளர்களுக்கு தண்ணி காட்டிய டில்ஷான் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர். இருந்தும் இறுதி ஆட்டம் அவருக்கு வாய்ப்பில்லை. கொஞ்ச காலத்துக்கு முன்னர் சிறைக்கம்பிகளை விட்டு வெளியே வந்துள்ள அமீர் அன்று டில்ஷானுக்கு எமனானார்.


முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே டில்ஷானை பூச்சியத்துடன் பவிலியனுக்கு அனுப்பி விட்டார். ஒரு துணை இழந்த இலங்கை தடுமாறியது. இதனால் ஓட்ட வேகம் மந்தமாகியது. சங்கா தனித்து ஆட்டம். இறுதிவரையில் ஆட்டமிழக்காது 64 ஓட்டங்கள் பெற்றுக் கொடுப்பு. இலங்கை 6 இலக்கை பறிகொடுத்து பெற்றதோ 138. இது போதாத இலக்கு என்பது இலங்கைக்கு தெரியும். இருந்தும் நம்பிக்கையுடன் களத்தடுப்புக்கு புகுந்தது.

ஆரம்பத்திலிருந்தே அவர்கள் அசத்தல் ஆட்டம். இரண்டு இலக்குகளை மட்டும் அவர்கள் தவறவிட்டனர். பூம்பூம் அப்ரிடி, கடந்த முறை தவறவிட்டதை இந்தமுறை பெற்றுக் கொடுத்தார். இறுதி வரை களத்தில் நின்ற அவர் அரைச்சதம் தாண்டினார். பாகிஸ்தான் 19 பந்துப் பரிமாற்றங்களிலேயே இலங்கையின் இலக்கை எட்டிப் பிடித்தது.

கிண்ணம் பாகிஸ்தான் வசம். ஏமாற்றியது இலங்கை. ஆட்ட நாயகன் அப்ரிடி. இருந்தும் தொடர் நாயகன் 'டில்ஷ்ஹூபை' அறிமுகம் செய்த டில்ஷான். (5)




செப்.18 முதல் - ஒக். 7 வரை



தினம் ஒரு பரிசு

உதயன் வழங்கும் விசேட பரிசு மழையில் நனைவதற்குத் தயாராகுங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் வடமாகாண நூலகங்களுக்கு நூல்கள் கையளித்தல் மற்றும் நூலகர்களுக்கான பயிற்சிப்பட்டறை நிகழ்வு அண்மையில் இடம்பெற்றன. இதில் பங்கு பற்றிய நூலகர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்கப்படுகிறது. பங்குபற்றிய நூலகர்களையும் காணலாம். (ம-14)



வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட உடுத்துறை கிராமத்தில் கருவாடு பதனிடும் பயனாளிகளுக்குப் பாசிக் நிறுவனத்தால் உலர் மீன் பதனிடும் நிலையம் அமைத்து வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் மற்றும் பாசிக் நிறுவன தலைமை அதிகாரி இனயோ ரீக்கோ ஆகியோர் இணைந்து திறந்து வைக்கின்றனர். (ம-8)




நடிகமணி வி.வி.வைரமுத்துவின் 23 ஆவது நினைவு நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன. இதில் நடிகமணியின் நினைவுப் பாடல்களை திருமதி மனோகரி சற்குருநாதன் பாடுகிறார். நாடகப் பாடல்களை மகன் வைரமுத்து சாரங்கனும் சகோதரி திருமதி வசந்தா ஐயாத்துரையும் பாடுகின்றனர். (ம)



ஹெந்தல லயன்ஸ் கழகத்தினால் வழங்கப்பட்ட ஊன்றுகோல்களை சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.எஸ்.தங்கராஜா யாழ்.போதனா வைத்தியசாலை முறிவு நெரிவு பிரிவுக்கு கையளிக்கிறார். (ம-9)



கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தின் ஆங்கில செயற்பாட்டறை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இதில் கலந்து கொண்ட விருந்தினர்கள் வரவேற்கப்படுகின்றனர். (ம)



கைதடி வறுமையின் கரங்கள் என்னும் அமைப்பு போரால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் நலிவுற்ற மாணவர்களுக்கு மருத்துவ உதவிகள் மற்றும் கல்வி ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்கி வருகிறது. இந்த நிலையில் அண்மையில் மாணவர்களுக்கு ஒரு தொகுதி சைக்கிள்கள் வழங்கப்பட்டன. (ம)



பருத்தித்துறை நகர சபையை உறுப்பினர்கள் பொறுப்பேற்று ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு நடத்தப்பட்ட இரத்ததான நிகழ்வில் இளைஞர்கள் இரத்ததானம் செய்கின்றனர். (ம-8)



உடுவில் பிரதேச செயலகக் கலாசார விழா பிரதேச செயலாளரும் [illegible] பேரவைத் தலைவருமான மு.நந்தகோபாலன் தலைமையில் இணுவில் இளம் தொண்டர் சபை மண்டபத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். [illegible] சுந்தரம் அருமைநாயகம் கலந்துகொண்டார். இணுவில் சந்தியில் இருந்துவிருந்தினர்கள் தமிழ் மக்களின் பாரம்பரிய வாத்தியங்களான சங்கு, தாரை, தம்பட்டை, மேளம், நாதஸ்வரம், உடுக்கு, சல்லாரிகளுடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன. (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணையத்தள கற்கைநெறிகள் 077 947 1771

- Professional Web Designing (40 hours)
- Professional Web Development (120 hours)
- Web-Based System Development

உங்களை முன்னேற்றப் பாதையில் அமைத்துச் செல்லும் கற்கைநெறி ஒன்றினைக் கற்றுக் கொள்ளுங்கள். இணையத் துறையில் முன்னணி நிறுவனத்துடன் இன்றே இணையுங்கள். எமது கற்கை நெறி உங்களை ஒரு சிறந்த இணையத்தள வடிவமைப்பாளர் ஆக்குவதுடன் நேர்த்தியான வழிமுறைகளில் இணையம் மூலம் பணம் ஈட்டுவதற்கும் வழிகாட்டுகின்றது.

webster networks
MAKING DREAMS REALITY
Webstar Info Systems (Pvt) Ltd

இல 9/4, யாழ்–மானிப்பாய் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். [வைத்தீஸ்வரா கல்லூரிக்கு அருகில்]

021 222 0261, 0779 471 771

## CIMA கல்வி @ CAPSTONE

0771 250 350

No. 154,A/1, Navalar Road, Jaffna.

## உதயன் விளம்பரத் தொடர்புக்கு—

advt@uthayam.com
0215671111

## Computers விற்பனைக்கு

BRANDED WITH WARRENTY
Pentium - 4, Pentium - D Computers
P4 : 2.66 GHz / 512/40GB/CD R.S: 9,900/=
P4 : 3.0GHz / 1GB/80GB/DVD R.S: 13,900/=
PD : 2.8GHz/1GB/80GB/DVD R.S. 15,800/=

மேலதிக தொடர்புகளுக்கு: 075 9044068

(22801)(6.14)

## German Swiss மொழிகள்

தமிழ் மொழி பெயர்ப்புடன் Embassy யில் கேட்கப்படும் A1 Certificate க்கு ஏற்றவாறும் Go the Institute ல் நடைபெறும். Exam க்கு ஏற்றவாறும் நடைபெறுகிறது.
10, Palaly Road, Jaffna.
German Institute
Miss. Kajenthini,
T.P: 077 1604823

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

Weekday batches : Monday, Wednesday (17th and 19th September) 9.00 am
Weekend batch : Saturday(22th September) 9.00 am

A/L பரீட்சையின் பின்னர் உங்கள் பொன்னான நேரத்தினை தகுந்த முறையில் பயன் படுத்திட 30 வருடங்களுக்கும் மேலான கணினி துறையின் அனுபவத்தையும் மற்றும் 55 இற்கும் மேற்பட்ட கிளைகளினை இலங்கை பூராகவும் கொண்டுள்ள எம்முடன் இணைந்து நீங்களும் ஒரு சர்வதேச தரம் வாய்ந்த பட்டதாரி ஆகிடுங்கள்.

OCTOBER 1ம் திகதிக்கு முன்னதாக IHD / HND கற்கைநெறிகளுக்கு தமது பதிவுகளை மேற்கொள்ளும் மாணவர்கள் 50% கட்டண சலுகையினை Semester 1 இல் பெற்றுக்கொள்ளலாம்.

- International Diploma in Computing
- International Diploma in Business Management
- Diploma in Hardware & Networking
- Diploma in Web Engineering
- Diploma in Computerized Accounting Package
- Certificate in Programming Languages (Java, C, C++, C#.Net, VB.Net, ASP.Net, PHP & MySQL)
- 2D & 3D Auto CAD
- Advanced Diploma in Computer Network
- CCNA(Cisco Certified Network Associate)

IHD / HND in
Software Development
Business Management
Computer Networks

Register On or before 30th of September
OFFER
8 GB Pen drive

IDM Nations Campus
Jaffna Branch
Managed by Aharam Solution (Pvt) Ltd

Hotline : 021 222 9901
Mobile : 077 5632056
#216, Navalar Road, Jaffna, Srilanka.

(AJ/3387)

## TOSHIBA Leading Innovation Notebooks




Authorised dealer & service provider in Northen Province for John Keells Office Automation (Pvt) Ltd.

North Link Engineering(Pvt) Ltd.
#360/3 Main street, Jaffna 0212224099, Vavuniya 0242224537
Hotlines : 0777 593 743, 0773 956 612, 0777 448 133

(22684)

## ஆங்கிலம் / கணிதம்

பிரத்தியேக வகுப்புக்கள்

- English & Tamil Medium
- தரம் 6 முதல் O/L வரை
- இவ்வருட O/L மாணவர்களுக்கு கடந்த 10 வருட கால Past Paper உடன் ஏராளமான மாதிரி வினாக்களும் செய்து விடப்படும்.

வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்
075 0715058
பெற்றோர்மட்டும் தொடர்பு கொள்ளவும்

(18144)(6-7-8)

## பண்டத்தரிப்பில் கடை விற்பனைக்கு

பண்டத்தரிப்பு சந்தியில், மகளிர் கல்லூரிக்கு முன்பாக கடை விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :
(காலை 8.00 மணியிலிருந்து இரவு 8.00 வரை)
077 2231238, 021 3206832

(21670)(6-8)

## வேலைக்கு ஆள் தேவை

வீடுகளுக்கு சென்று வியாபார பரப்புரை செய்யக் கூடிய திறன் கொண்ட ஊழியர் ஒருவர் வேலைக்குத் தேவை.

- யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
- கவர்ச்சியான ஊதியம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 955 0363

(22851)(5-6-7)

## உங்கள் தேவைக்கு உடனே வாகனங்கள்

குளிரூட்டப்பட்ட, நவீன ரக கார்கள், வான்கள், கப்கள்

நாங்கள் தருகிறோம், நீங்களே செலுத்தலாம்

NEW PEAKING
Rent A Car service 0777484820

## CITY DRIVING SCHOOL

அரச அனுமதி பெற்ற சாரதி பயிற்றுனர் பாடசாலை ( DS 390 )



உங்களை நம்பிக்கையான சாரதியாக்குவதே எமது பொறுப்பு !

இன்றே எம்மை நாடுங்கள்...

No.05, Vaverset Place, Colombo - 06.

HOT LINE
0777 344 844

- உங்கள் நம்பிக்கையான சாரதி பயிற்சி நிலையம்
- (Instructor License) உள்ள அனுபவமிக்க பயிற்றுனர்களை கொண்டு பயிற்சியளிக்கப்படும்.
- உங்களுக்கு வசதியான நேரத்தை நீங்களே தெரிவு செய்யலாம்.
- அனைத்து வகையான வாகனங்களையும் இங்கே பயிற்சி பெறலாம்.
- ஆண் / பெண் இருபாலாருக்கும் பயிற்சியளிக்கப்படும்.

Tel : 011 2505672

MMW

## வீடு வளவு விற்பனைக்கு

முனி கோயில் இருபாலை கிழக்கில் 2¼ பரப்புடன் சகல வசதிகளும் கொண்ட குளியல் அறை, மற்றும் 3 அறைகள், வெளியில் குளியல் அறையுடன் கூடிய மலசல கூட வசதிகளை உடைய புதிய வீடு உடனடி விற்பனைக்கு உண்டு.

மேலதிக விபரங்களுக்கு
077 523 5414
021 222 5124

(22812)(5-6-7)

## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்

**S.N. குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?

எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை)
பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691

(20772)(5-14)

## Aptech COMPUTER EDUCATION

Unleash your potential

உலகின் No. 1 கணனிக்கல்லூரியின் 65 இலட்சம் மாணவர்களுடன் நீங்களும் இணைந்து மிகக் குறைந்த கட்டணத்தில் உலகத்தரம் வாய்ந்த சான்றிதழைப் பெற்று உலகளாவிய ரீதியில் தொழில் வாய்ப்பை உறுதிசெய்யுங்கள்




ACCP பயிற்ச்சி நெறியில் இணைபவர்களுக்கு Laptop இலவசம்
* Conditions Apply

புதிய பிரிவுகள் ஆரம்பம்
15/09/2012
17/09/2012
19/09/2012

தொழில்வாய்ப்பிற்கு ஏற்ற பயிற்சி நெறிகள்

- Desktop Office Specialist
- Website Developer
- DataBase Programmer
- Web Application Developer
- System Administrator
- IT booster - .NET
- IT booster - Java
- Smart Professional - .NET
- Smart Professional – Java
- Smart Accountant
- Smart Professional MIS
- C / C++ / C# Programmer
- AutoCAD Designer

0212219456

APTECH Computer Education World Wide
No.04, Clock Tower Lane, Navalar Road, Jaffna.
(பொருளியல் கல்லூரி அருகாமை, Science corner ஒழுங்கை)

## ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா நியூசிலாந்து குடும்ப விசா

### ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா

- ★ 54 வயதிற்குட்பட்ட கணவன் அல்லது மனைவி
- ★ 2 வருடத்தில் சட்ட ரீதியாக PR பெறும் வாய்ப்பு
- ★ இலவச தொழில் ஆலோசனை
- ★ குழந்தைகளின் கல்விக்கான ஆலோசனை

### ஆஸ்திரேலியா குடும்ப விசா

ஆலோசனையில் தடமாகாணத்தில் தனித்துவம் வாய்ந்த வெற்றிகரமான சாதனைகள் படைத்ததே எமது நிறுவனம்

### நியூசிலாந்து குடும்ப விசா

- ★ கணவன்/மனைவி பட்டதாரி அல்லது டிப்ளோமாதாரி
- ★ ஆங்கில மொழி மூலம் பட்டப்படிப்பை மேற்கொண்டால் IELTS தேவையில்லை.
- ★ பட்டப்படிப்பை மேற்கொண்ட துறையில் 3 வருட தொழில் அனுபவம்.

இதுவரை 2 குடும்பங்கள் நியூசிலாந்து விசா ஆலோசனை பெற்று குடிபெயர்ந்துள்ளன. புதன்கிழமைகளில் எமது நிறுவனம் திறக்கப்படமாட்டாது.

திசைகாட்டி பிறைவேற் லிமிட் : ( pv 8270.
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

021 221 9016 தொலைபேசி மூலம் வியாபார விசாரணைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
ஆலோசனை பெற விரும்பினால் ஆளடையாளம் உறுதி செய்யப்படல் வேண்டும்.

(22807)(6.8)

## நியூசிலாந்திற்கு Student Visa ஆலோசனை

- IELTS 5.5 ACADEMIC
- வேறு ஒருவரின் கணக்கில் உள்ள பணம் வங்கி அனுசரணையாகக் காட்டலாம்.
- பகுதி நேரத் தொழில் வாய்ப்பிற்கான ஆலோசனை
- 2 வருடத்தில் நிரந்தரக் குடியுரிமை பெற சட்டரீதியான அருகதை

நாம் அந்தந்த நாட்டுக் குடிவரவுக் கொள்கைகளிற்கமைவாகவே ஆலோசனை வழங்குகின்றோம். அதனை மீறி வெற்றிகரமான சட்ட சம்மதமற்ற ஆலோசனைகளை மாணவர்களிற்கு ஒரு போதும் வழங்குவதில்லை.

புதன்கிழமைகளில் எமது நிறுவனம் திறக்கப்படமாட்டாது

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் (PV82703)
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

021 2219016 தொலைபேசி மூலம் வியாபார விசாரணைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஆலோசனை பெற விரும்பினால் ஆளடையாளம் உறுதி செய்யப்படல் வேண்டும்.

(22808)(6.7.8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## நாகநாதபிள்ளை ஜெயநாயகம்

(முன்னாள் அதிபர் யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, யா/ வட்டு இந்துக் கல்லூரி, ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் (துணுக்காய் கல்வி வலயம்)

அராலி வடக்கு வட்டுக்கோட்டையை பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாத பிள்ளை ஜெயநாயகம் நேற்று (15.09.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள்பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி வடக்கு, வட்டுக்கோட்டை. (22965)(9.14)

தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## ஐயம்பிள்ளை கந்தையா

(முன்னாள் அலை அரசி பா கோட்டி, தண்டயல்), யோகலட்சுமி பா கு உரிமையாளர்)



அனலைதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை கந்தையா கடந்த (12.09.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் திரு திருமதி ஐயம்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும், யோகம்மாவின் அன்புக்கணவரும், சின்னம்மா மற்றும் காலஞ்சென்றவர்களான செல்லையா, நாகமுத்து, மாரிமுத்து, சின்னத்துரை, யோகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், அமராவதிதேவி (ஜேர்மனி), ரஞ்சினி, சுசிலாதேவி (கனடா), சாந்தகுமார் (சுவிஸ்), பிரேமகுமார் (சுவிஸ்), கருனந்தகுமார் (பிரான்ஸ்), யோகானந்தவதி, இளம் முருகன் (டென்மார்க்), தயாநிதிதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தகப்பனாரும், அன்னலிங்கம் (ஊர்காவற்துறை), கனகையா (கனடா), தருமசீலி (சுவிஸ்), மங்கயற்செல்வி (சுவிஸ்), கலைச்செல்வி (பிரான்ஸ்), சிவலிங்கம் , தர்மினி (டென்மார்க்), ஞானேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும். ஆவ

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2012) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அனலைதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அனலைதீவு, 3 ஆம் வட்டாரம். (22911)(8.14)

தகவல்: க. சாந்தகுமாரன் (மகன், சஞ்சிகா ரவல்ஸ் உரிமையாளர், )

# தவறிவிட்டது

தெய்வேந்திரம் பத்மநாதன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல (702320437V) கொழும்புத்துறைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 0750489615 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (22957)(9.14)

# STUDY IN LONDON



- எதுவித முற்பணமும் இல்லை
- கல்லூரிக்கட்டணம் Sponsor வசதிகளை எங்கள் நிறுவனமே உங்களிற்காக செலவு செய்கின்றது.
- இதைவிட உங்களிற்கு எங்கள் மீது வேறு என்ன நம்பிக்கை வேண்டும்.
- ஆகவே நீங்கள் எங்களுடன் இணைந்து U.K. செல்லும் கனவை நினைவாக்கிடுங்கள்

குறிப்பு: முதல் வரும் பத்து மாணவர்களுக்கே இந்த அரிய வாய்ப்பு

WEC World Education Consultancy (WEC)

சங்கத்தானை சாவகச்சேரி

தொடர்புகளுக்கு: 077 926 5447

Skype ID : Usremi (Uthayan)

(22959)(8.14)

# 31 ஆம் நாள் நினைவலைகள்



தோற்றம் 1938 ★ 10 ★ 23

மறைவு 2012 ★ 08 ★ 07

திதி:அமாவாசை

## சரவணமுத்து சுப்பிரமணியம்

அன்புடன் எமைப் பேணி
பண்பாக நாம் வாழ
பள்ளிக்கு கொண்டு சென்று
பாங்காக அழைத்து வந்து
பெற்றவர் காட்டின் அத்தனையும்
புரிந்த அன்புத் தாத்தாவே எங்கு சென்றீர் நீர்
அழகையுடன் தேடுகின்றோம்
வானகத்தில் இருந்து வையகத்தில்
எம் சிறப்பை பார்த்து மகுழும்
தாத்தாவின் ஆத்மா
சாந்த பெற அஞ்சலிக்கின்றோம் நாம்

பேரப்பிள்ளைகள், குடும்பத்தினர். (சி/3392)(8.14)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு- advt@uthayan.com 0215671111

# மணமகள் தேவை

(UK Citizan) Ye-39 றோகினி நட்சத்திரம் சொந்த வர்த்தகம் செய்பவர் ( விவாகரத்து பெற்றவர்) பிள்ளைகளுடன் இருப்பவர்களும் தொடர்பு கொள்ள லாம்.

T.P .NO : 0044 7908707555

(22964)(8.14)

# Brilliant International Studies (BIS)

சங்கத்தனை சாவகச்சேரி

தூதரக வேலைகளிற்காக சர்வதேச மொழிகள் கல்வித்தரம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன.

| ஜேர்மன் , சுவிஸ் -டொச் Mr.R.Mayooran | பிரான்ஸ், கனடா -பிரெஞ் Mr.V.Jegan |
|---|---|
| (Geothe இன்சிற்றியூட்டில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்) | (பிரான்ஸ் நாட்டில் ஆசிரிய பயிற்சி பெற்ற ஆசிரியர்) |

புதிய வகுப்புகள் Mon - Fri 8.00 - 10.00 am

மேலதிக விபரங்களிற்கு - 0779265447 / 077667944

# துயர் பகிர்கின்றோம்

தேசிய கல்வி நிர்வாக யாழ். மத்திய கல்லூரி பிராத்திய நிலைய கல்விமானி பட்ட கற்கை நெறி விரிவுரையாளர். திரு.க. ஈஸ்வரன் அவர்களின் மாமனார் திரு. செல்லையா நடராசா அவர்கள் அமரத்துவமடைந்து விட்டார்.

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்விமானி பட்டகற்கைநெறி, தேசிய கல்வி நிறுவாகம், யாழ்.மத்திய கல்லூரி பிராந்திய நிலையம் யாழ்ப்பாணம். (22951)(9.14)

இணைப்பாளர், விரிவுரையாளர், 1ஆம், 2ஆம், வருட மாணவர்கள்.

# மரண அறிவித்தல்



## செ. நடராசா

புகையிரத நிலைய வீதி, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட செ. நடராசா நேற்று (15.09.2012) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தேவியின், அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னையா செல்லம் தம்பதியரின் அன்புமருமகனும், இராஜதுரை (மட்டக்களப்பு), தர்மலிங்கம், மகேசன் (கனடா), வசந்தா ஆகியோரின் அன்பு சகோதரனும், மல்லிகா, சாரதா, இராஜமலர், லயன் இராஜேந்திரன் (J.P) ஆகியோரின் அன்பு மைத்துனரும், தயானந்தராசா (லண்டன்), தயாளினி, மோகனறாஜ் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்மினி (லண்டன்), ஈஸ்வரன் (ஆசிரியர், யா/நாவற்குழி ம.வி) ஆகியோரின் அன்புமாமனும், அபிஷனா, அபிநயமேனன், அமஸ்வி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1 மணிக்கு கோண்டாவில் இல்லதில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு, கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புகையிரத நிலைய வீதி, கோண்டாவில். (சி/1559)(8-14)

தகவல்: குடும்பத்தினர்

# வாடகைக்கு

யாழ். ஸ்ரான்லி வீதியில் கடை வாடகைக்குண்டு. தொடர்புகளுக்கு: 077 4767213

(22963)(8.14)

# வீடு வாடகைக்கு

நல்லூர், கோவில்வீதிக்கு அண்மையில் வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு:-077 6648656

# காணி விற்பனைக்கு

இளவாலை மெய்கண்டான் சந்தியில் 4¾ பரப்பு மேட்டுக்காணியும் இளவாலை பொயித்திலேனில்லூர்த்து மாதா கோயிலுக்கு முன்பாக 15 பரப்பு நெற்காணியும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு

T.P .NO : 077 844 9687

(22960)(8.14)

# விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 5 சிறி XXXX தொடரிலக்க முடைய மொரிஸ் மைனர் கார் விற்பனைக் குண்டு.

தொடர்பு

077 7740511, 077 0417003

(22297)(8.14)

# மண் சல்லி விற்பனைக்கு

கண்டாவளை ஆற்றுமண் டிப்பர் மூலம், சல்லிகள் ரக்ரர் மூலம் உங்கள் இடத்திற்கு விநியோகிக்கப்படும்.

தொடர்பு: 077 473 5228

(22966)(8.14)

# உடனடி வேலைவாய்ப்பு

D.M.I சர்வதேச கம்பனிக்கு முகாமைத்துவ் பயிற்சியாளர்கள் தேவை.

0- பதவி வெற்றிடங்கள் உள்ளன.


தகமை- க.பொ.த சாதாரனம் (O/L)

(06) மாதகால பயிற்சி, பயிற்சியின்போது 8000 - 12000 வரை பெற்றுக்கொள்ளலாம். பயிற்சியின் பின் 35000 - 45000 வரை பெறலாம்.

குறிப்பு - புனர்வாழ்வு முகாம்களில் இருந்து வந்தவர்களுக்கு முன்னுரிமை (தங்குமிட வசதி இலவசம் - ஆண்களுக்கு)

T.P 0776219536, 0771980851


# METAL CRUSHERS / PARTS



Popular Brands

- கோண் கிரஷ்ஷர்ஸ்
- மொபைல் கிரஷ்ஷர்ஸ்
- வைப்ரேட்டிங் ஸ்கிரீன்ஸ்
- பீடர்ஸ்
- ஜோவ் கிரஷ்ஷர்ஸ்

தொடர்புகளுக்கு: எஸ்.சண்முகசுந்தரம்

43/E, அநாகரிக தர்மபால மாவத்தை, தெஹிவளை.

பொரலஸ்கமுவ: 011 4204058, 011 5661728

Tel: 011 2732962

விஜேசூரிய மார்க்கட்டிங் சேர்விஸஸ் பிரைவேட் லிமிடெட்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



பிறப்பு
2000
★
12
★
06

இறப்பு
2012
★
08
★
30

கடந்த 2012.08.30 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்பு மகள்

# சிறிசோமஸ்கந்தன் துஷாந்தி

அவர்களின் அந்தியேட்டி இன்று 16.09.2012 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் சட்டநாதர் சிவன்கோயிலுக்கு அருகிலுள்ள திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதியபோசனமும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதத்துடன் வருகை தந்து அதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்..

★ தனிப்பட்ட அழைப்பில் தவறியவர்களும் தயவுசெய்து இம் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு மிக தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.


புதிய செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

செ. சிறிசோமஸ்கந்தன்
(சிறிசோமஸ் அரைக்கும் ஆலை),
ஆனைப்பந்தி.

(22961)(8.14)

# திருநெல்வேலி அபான்ஸ் வழங்கும்

## LED தொலைக்காட்சி சலுகை விலை






**LG 32"LED வர்ண தொலைக்காட்சி விலை**
~~89,990~~ - 64,990/= (12 மாதங்கள் வட்டி இல்லாத கொடுப்பனவு

**32" SHARP LCD** வர்ண தொலைக்காட்சி
~~52,990~~ 41990/=

**42" LG LCD** வர்ண தொலைக்காட்சி
~~109,990~~/= 87990/= FAN இலவசம்

**LG HIFI** ஓடியோ சிஸ்ரம்
~~32,000~~/= 27990/=
20 மாதங்கள் வட்டி இல்லாத தவணை கொடுப்பனவு



உடன் நாடுங்கள் திருநெல்வேலி அபான்ஸ் காட்சியறைக்கு 021 222 0247
269, பலாலி வீதி, கந்தர்மடம்.

## யாழ் மாணவர்களுக்காக நாம்....

# மாபெரும் புலமைப்பரிசில் திட்டம்



யாழ் நகரில் தடம் பதித்து எமக்கெனதனியான ஒருபாதையில் திறம்பட பிரயாணித்துக்கொண்டிருக்கும் எமது கல்லூரியின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு "யாழ் மாணவர்களுக்காக நாம்" எனும் தொனிப்பொருளில் மாபெரும் புலமைப்பரிசில் திட்டத்தை முன்வைத்துள்ளோம்.

எமது தகுதிகாண் பரீட்சையில் **80%** சித்தியெய்தும் மாணவர்களுக்கு **100%** பூரண கட்டணச் சலுகை வழங்கப்படும்.

60%சித்தியெய்தும் மாணவர்களுக்கு **75%** கட்டணச் சலுகை வழங்கப்படும்.

40%சித்தியெய்தும் மாணவர்களுக்கு **50%** கட்டணச் சலுகை வழங்கப்படும்.

வயதுக்கட்டுப்பாடின்றி அனைத்து தரப்பினர்களும் இணைந்து கொள்ளலாம்.

கட்டணச் சலுகைவழங்கப்படும் அலகுகள் விண்ணப்பப்படிவத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் தமது விருப்பத்திற்கேற்ப ஆகக்குறைந்தது ஒரு அலகு தொடக்கம் ஆகக் கூடியது மூன்று அலகுகள் வரை தெரிவு செய்து கொள்ளலாம்.

இப் புலமைப்பரிசில் திட்டத்தில் இணையவிரும்பும் மாணவர்கள் தங்கள் விண்ணப்பங்களைதபால் மூலமாகவோஅல்லது SMS மூலமாகவோ அல்லது எமது இணையத்தள முகவரி ஊடாகவோ எமக்கு அனுப்பி வைக்கலாம்.

## COURSE DETAILS

### ENGLISH COURSES

**CERTIFICATE COURSES.**
- Certificate in Spoken English
- Certificate in English.

**DIPLOMA COURSES.**
- Diploma in English.
- Diploma in Spoken English.
- Diploma in Business English

**INTERNATIONAL COURSES.**
- IELTS - Academic And General
- City & Guilds (A1 to C2)
- City & Guilds Young learners Programme.

### IT COURSES.

**CERTIFICATE COURSES.**
- Certificate in MS.Office 2010.
- Certificate in DTP.
- Certificate in ICT.
- Certificate in web designing.
- Certified in java Programming.
- Certified in vb.net Programming.
- Certified in C# Programming.

**DIPLOMA COURSES.**
- Diploma in Computer Studies.
- Diploma in Hardware & Networking.
- Diploma in Website Design.
- Diploma in Graphic Design.
- Diploma in Accounting Package.
- Diploma in Software development.
- Diploma in Website Development.
- Diploma in 3D Modeling & Animation.
- Diploma in Advance Multimedia.
- Diploma in Computer Programming.

**PROFESSIONAL DIPLOMA COURSES.**
- Professional Diploma in Graphic Design.
- Professional Diploma in Website Development.
- Professional Diploma in Software development.
- Professional Diploma in Computer Hardware.
- Professional Diploma in Networking.
- Professional Diploma in Computer Programming.

**Jaffna-021 7538395 / 021 2227230**

**Application closing Date: 31-09-2012**

LONDON METROPOLITAN COLLEGE

197, Arasady Road, Jaffna.
Between Kantharmadam Junction & Hindu Ladies College

**SCHOLARSHIP APPLICATION FORM**

Full Name :
Address :
Mobile Number :
Home Phone :
Select Courses :

Mailing address :
**No 197, Arasady Road, Kanthermadam, Jaffna.**


SMS அனுப்பும் முறை Full name SPACE Select Courses Names
SMS அனுப்பவேண்டிய இலக்கம் 0774765990

Web Application : http://www.lmcjaffna.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உள்ளூருக்கு உயிரூட்டுங்கள் 08


கூடங்குளத்தில் பறிபோகும் உயிர்கள் 09


ஈரான் மீது இஸ்ரேல் தாக்கும் அறிகுறி 06


பாதாளத்தினுள் பாதுகாப்பு 22


யாரோடுநோவோம் யார்க்கெடுத்துரைப்போம் 23



# சூரியகாந்தி

உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
01

உதயன் | 16 செப்ரெம்பர் 2012 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள்: இருபத்தெட்டு


# இயற்கையும் கொல்கிறது

விஷ்ணு

போர் அழிவுகளால் இடம்பெயர்ந்து திரிந்த நாம் தற்போது இயற்கை அழிவுகளால் இடம்பெயரவேண்டிய நிலைக்கு மெல்லத் தள்ளப்பட்டு வருகிறோம். திடீரென பெரியளவில் ஏற்பட்ட போர் அழிவுகளைக் கண்டு மிரண்ட நாம் மெல்லத் தாக்கத்தை ஏற்படுத்திவரும் பல விடயங்கள் பற்றிச் சிந்திக்காமலே இருந்துவிடுகிறோம்.

தற்போது இங்கு பெரிய பிரச்சினையாக உருவெடுத்து தீர்க்கப்படாது தொடர்ந்து கொண்டிருக்கும் விடயம் வறட்சி. வடமாகாணத்தில் அனைத்து மாவட்டங்களிலும் வறட்சியின் பாதிப்பு உணரப்பட்டாலும் யாழ்ப்பாணம், வவுனியா மன்னார் மாவட்டங்களில் பாதிப்பு கொடுமையானதாக மாறிவிட்டது.

மூன்று மாவட்டங்களிலும் அனேகமாக எல்லாக் குளங்களிலும் நீர் வற்றி நிலம் வெடித்துள்ளது. இன்னும் பல குளங்கள் சேறும் சகதியுமாக சாவுக்குக் காத்திருக்கின்றன.

இதேமாத காலப்பகுதியில் இதுவரை காலமும் வற்றாத குளங்களில்கூட தற்போது புழுதி பறக்கின்றது. மழை இல்லாததன் பிரதி பலிப்பை இவை நன்றாகவே உணர்த்துகின்றன.

தீவகத்தில் இந்த நிலை உச்சக்கட்டமாகிவிட்டது. அங்கு இதுவரை 33 கால் நடைகள் நீரின்றி உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. தொற்றுநோய் மூலமாகவோ வேறு எந்தக் காரணத்தினாலோ அந்தக் கால்நடைகள் உயிரிழக்கவில்லை என்று வேலணை பிரிவு கால்நடை வைத்திய அதிகாரி மகாதேவன் உறுதிப்படுத்துகிறார்.

குடிதண்ணீர் இல்லாத நிலையில் கால்நடைகள் நடக்கும்போதோ ஓடும்போதோ கால்கள் தடுக்குண்டு விழுந்துவிடுமாயின் பின்னர் அவை இறப்பதைத் தவிர அவற்றுக்கு வேறு வழியிருக்கமுடியாது அப்பகுதி மக்கள் குறிப்பிடுகின்றனர்.

தீவகத்தில் மக்கள் தமது கால்நடைகளை கட்டி வளர்க்காது கட்டாக்காலிகளாகவே விட்டு விடுகின்றனர். அவை பல இடங்களில் மேய்ச்சலுக்குச் செல்லும். தமக்கு எட்டிய குளங்களில் நீரைப் பருகி விடும். தற்போது மேய்ச்சலுக்கும் தண்ணீருக்கும் அலைந்து அவை கிடைக்காமல் வீழ்ந்து சாகின்றன.

மக்களே குடிதண்ணீர் இன்றி பெரிதும் துன்பப்படுகின்ற நிலையில் அவர்களால் மாடுகளுக்கு எப்படித்தண்ணீர் தரமுடியும்? நன்னீர் இல்லாது ஏனோதானோ என இருக்கும் பயிர்களே காய்ந்து விடும் போது மேச்சலுக்கு எங்கு புல், பூண்டு இருக்கப்போகிறது. காரைநகரிலும் இதே நிலையே தொடர்கிறது.

பயிர்கள் சருகாகும் நிலை ஆரம்பித்துள்ளது. விவசாயிகளின் நிலை பரிதாபகரமாகிவிட்டது. மனித தேவைக்குக்கூட நீரை முழுமையாகப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மன்னாரிலும் இந்த நிலைமைதான். இந்த விடயத்தில் யாழ்ப்பாணத்தை விட நாம் சளைத்தவையல்ல என்பதனை அங்குள்ள பெரிய குளங்களே நிரூபிக்கின்றன. அங்கும் நிலம் வெடித்த பூமியையே காண முடிகிறது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில்கூட பெருங்குளங்களில் தண்ணீர் வற்றிவிட்டது. இங்கு அதிக எண்ணிக்கையான குளங்கள் ஆழ, அகலமான குளங்களாக உள்ளபோதும் வறட்சியின் வேகத்தை நன்றாகவே அவதானிக்க முடிகிறது. இங்கும் சில குளங்கள் முழுமையாக வற்றிவிட்டன. பெரிய குளங்களில் நீர் மட்டம் குறைந்தாலும் தண்ணீர் முற்றுமுழுதாக வற்றாததால் கால்நடைகளுக்கு ஓரளவுக்காவது தண்ணீர் கிடைக்கின்றது.

> இந்த ஆளைக்கொல்லும் வறட்சியில் இருந்து மீள்வதற்கான நடவடிக்கை என்ன என்பது பெரிய கேள்வியாகவே முன்நிற்கின்றது. அரச அதிகாரிகளிடம் இருந்து இதுவரை உருப்படியான உதவிகளோ திட்டங்களோ மக்களைப் போய்ச் சேரவில்லை.

இந்த ஆளைக்கொல்லும் வறட்சியில் இருந்து மீள்வதற்கான நடவடிக்கை என்ன என்பது பெரிய கேள்வியாகவே முன்நிற்கின்றது. அரச அதிகாரிகளிடம் இருந்து இதுவரை உருப்படியான உதவிகளோ திட்டங்களோ மக்களைப் போய்ச் சேரவில்லை. வறட்சியினால் குடிதண்ணீர் இல்லை, புற்கள் இல்லை, அதனால் கால்நடைகளைத் தொடர்ந்து வளர்க்க முடியவில்லை. பராமரிக்க முடியவில்லை. பயன்பெறமுடியவில்லை. எனவே அவற்றை விற்றுவிட அதன் உரிமையாளர்கள் துணிந்து விட்டனர். தீவனம் இன்றி தமது கண்முன்னே கால் நடைகள் உயிரிழந்து போவதை எவர்தான் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பார்கள்?.

அவற்றை விற்றுப் பணமாக்கிவிட்டால் வறட்சி தீர்ந்த பின் மீண்டும் கால்நடைகளை வாங்குவதற்குப் பணமாவது இருக்கும். கால்நடைகளையும் இழந்து பணத்தையும் இழந்துவிட அவர்கள் தயாரில்லை.

அநேகர் கால்நடைகளைப் பிறருக்கு வளர்ப்புக்காக விற்பதைக் காண்பது மிக அரிதாகவே உள்ளது. பெரும்பாலும் இறைச்சிக்கே விற்றுவிடுகின்றனர். அவ்வாறு இறைச்சிக்கே அவற்றை விற்கமுற்படுவது எருதுகளை மட்டுமன்றி பசுக்களையும்தான். இது கொடுமையான விடயம். யாராலும் அனுசரிக்க முடியாத விடயம். ஆனால் அவர்களுக்கு அதனைவிட வேறு வழியில்லை.

கால்நடைகளை விற்பதற்காக அனுமதிபெற வேண்டும் என்று பிரதேச செயலகங்கள் இப்போது சொல்ல ஆரம்பித்து விட்டன. இந்த விடயம் மக்கள் மத்தியில் சோகத்தையும் கவலையையும் உண்டு பண்ணியுள்ளது. தாம் கால்நடைகள் மூலமாகக் கிடைக்கும் வருமானத்திலேயே பல குடும்பங்கள் வாழ்க்கை நடத்துகின்றன. தற்போது நிலையால் அதிலும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

பசுக்களையோ, 12 வருடங்களுக்குக் குறைந்த வயதான கால்நடைகளையோ கொல்வது சட்டரீதியாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அதனை மீறுபவர்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் என வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் யோ.வசீகரன் கூறுகிறார். "சட்டத்துக்கு அமைய நடவடிக்கைகள் நகர்த்தப்பட வேண்டும். அதேநேரம் மக்களுக்கு இழப்போ கால்நடைகளுக்கு பாதிப்போ ஏற்படுவதையும் தவிர்த்தாக வேண்டும்" இப்போதைக்கு மாற்று வழியாக தீவகத்தில் இருந்து கால்நடைகளை வன்னியில் உள்ள தனது உறவினர் வீடுகளுக்கு சிலர் நகர்த்துகிறார்கள்.

தீவகத்தைச் சேர்ந்த ஒருவர் தனது 160 இற்கும் மேற்பட்ட ஆடுகளை வன்னிக்குக் கொண்டு செல்ல தம்மிடம் அனுமதி கோரியுள்ளார் என்று தெரிவிக்கிறார் வசீகரன். தான் வன்னிக்கு இடம்பெயர்ந்து சென்று ஆடுகளை வளர்க்க விரும்புவதாக அந்த விவசாயி தெரிவித்துள்ளார். தவிர உரிய அனுமதியுடன் ஒன்றிரண்டு கட்டாக்காலிகளை உரிமையாளர்கள் வன்னியிலுள்ள தமது உறவினர்கள் வீடுகளில் வைத்துப் பராமரிக்கவென கொண்டு செல்கிறார்கள்.

கால்நடைத் திணைக்களத்தினர் வறட்சியிலிருந்து கால்நடைகளைப் பாதுகாக்க மெல்லமெல்ல நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். ஆனால் உருப்படியான எந்த நடவடிக்கையும் இதுவரை இல்லை என்பது தெரிகிறது. யாழ்ப்பாணத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கவென 3.3 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 2 மில்லியன் வழங்கப்பட்டது. மிகுதித்தொகையும் வழங்கப்படும் என்று கூறப்படுகிறது.

தவிர வடக்கின் வறட்சி நிலையை அறிந்து ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கவென வடக்குக்கு வந்து சென்றார் இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரவீர. அவர் இதுவரை என்ன அறிக்கை சமர்ப்பித்தார் என்பது தெரியவில்லை. நடவடிக்கைகளையும் காணமுடியவில்லை.

வறட்சிப் பகுதிகள் சிலவற்றுக்கு முன்னைய காலங்களைப் போன்றே குடிதண்ணீரை பௌசர்களில் வழங்கி வருவதைத்தான் இம்முறையும் காணமுடிகிறது.

அவற்றைவிட ஆக்கபூர்வமான வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக அறிய முடியவில்லை. இது கவலைக்குரிய பாரதூரமான விடயம்.

இவைபற்றி அரசு கவனத்தில் கொள்வதாகத் தெரியவில்லை. மக்களைப் பற்றி அதற்கு என்ன கவலை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்திரிகா கிராமங்களில் இறங்கியபோது பலருக்கு அவரை அடையாளம் தெரிந்திருக்கவில்லை. சிலருக்கு அவர் சந்திரிகாதான் என்று சொன்ன பின்னரும் அடையாளப்படுத்த முடியவில்லை. சிறிமாவின் மகள் என்றபோதுதான் புரிந்தது. பின்னர் நட்புறவுடன் பழகினார்கள். சந்திரிகாவின் நிறுவனத்தால் கொடுக்கப்பட்ட சூரிய சக்தி மின்கலத் தொகுதியால் தமது பிள்ளைகள் பயன்பெறுகிறார்கள் என்பதே அனேகரின் கருத்தாக அமைந்தது.

# மீண்டும் சந்திரிகா..!

ரேணுபிரேம்,விஸ்ரி

1976ஆம் ஆண்டில் நாட்டின் பிரதமராகப் பதவி வகித்தவர் சிறிமாவோ பண்டாரநாயக்கா. அதே யாண்டில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். தமிழ் மக்கள் அவருக்கு நிலபாவாடை விரித்து அழைத்துச் சென்று பெரு வரவேற்பு வழங்கினர்.

யாழ்ப்பாண மக்களால் பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்கப்பட்ட தென்பகுதிச் சிங்கள அரசியல் தலைவர்களில் சிறிமாவோவே கடைசியானவர் எனவும் கூறப்படுவதுண்டு.

சிறிமாவோவின் மகளான சந்திரிகா 1994ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேளை, தமக்கு தமிழ் மக்களது ஆதரவு கோரி யாழ்ப்பாணத்துக்கு வரவில்லை. வரும் நிலைமையும் இருக்கவில்லை. ஆனாலும் சமாதான தேவதையாக அவரை ஆதரித்தார்கள் யாழ்.குடாநாட்டு மக்கள்.

சந்திரிகா அரியணைக்கு உரிமை கோரியபோது அவர் பற்றி யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் மதிப்பு நிலவி வந்தது. 'சந்திரிகா காப்பு', 'சந்திரிகா பாக்', 'சந்திரிகா குடை', 'சந்திரிகா சீலை' என்ற பெயரில் பல பொருள்கள் யாழ்ப்பாணத்தில் விற்கப்பட்டன.

விடுதலைப் புலிகளுக்கும் சந்திரிகாவின் தலைமையிலான அரசுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் இடம்பெற்றமையால் சந்திரிகாவின் புகழ் யாழ்ப்பாணத்தில் பிரபலமடைந்திருந்தது. அந்தச் சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்த பின்னர் சமாதான தேவதை என்ற சந்திரிகாவின் பிம்பம் அடியோடு மாறியது.

யாழ். குடாநாட்டை விடுதலைப் புலிகளிடமிருந்து பிடுங்க அவர் எடுத்த இராணுவ நடவடிக்கை சந்திரிகாவை நரபலியெடுக்கும் தெய்வங்களுக்கு நிகராக யாழ்ப்பாண மக்களிடம் மாற்றியது.

சந்திரிகாவின் அரச படைகள் 1995ஆம் ஆண்டு யாழ். குடாநாட்டைக் கைப்பற்றின. அதற்கான போரை அடுத்து அதேயாண்டு ஒக்ரோபர் மாதம் ஒரே நாளில் குடாநாட்டைச் சேர்ந்த சுமார் 5 லட்சம் மக்கள் இடம்பெயர்ந்தனர். பல நூறுபேர் இறந்தனர்; பலர் காணாமல்போயினர்.

குடாநாட்டைப்பிடித்த வெற்றியைக் கொண்டாடும் விதத்தில் இலங்கையின் தேசியக் கொடியை அங்கு ஏற்றி வைக்க யாழ்ப்பாணம் வந்தவர்கள் அப்போதைய பாதுகாப்புப் பிரதி அமைச்சரும் சந்திரிகாவின் மாமனுமான அனுருத்த ரத்வத்தை.

இந்தச் செயல் குடாநாட்டு மக்களின் மனங்களைச் சுக்குநூறாக்கியது. அவர்களின் மன வேதனையை அதிகரிக்கும் விதத்தில் யாழ்ப்பாணம் வெல்லப்பட்ட செய்தியை பேழையில் வைத்து - மன்னர் ஆட்சிக் காலத்தைப் போன்று - சந்திரிகாவுக்கு அறிவித்தார் ரத்வத்த.

யாழ்ப்பாணத்தில் சிங்கக் கொடி ஏற்றப்பட்டமை குறித்தும் ரத்வத்தை வெற்றியை அறிவித்த விதம் குறித்தும் தமிழர்களிடம் இருந்து அப்போது கடுமையான கண்டனங்கள் வெளியாகின. ஆனால் சந்திரிகா அது பற்றி அலட்டிக்கொள்ளவில்லை.

சிங்கக் கொடி ஏற்றி வைக்கப்பட்டமை தொடர்பாக தமிழ் மக்கள் கவலை கொண்டுள்ளதாக அந்த வேளையில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர்கள் சந்திரிகாவுக்குத் தெரியப்படுத்தினர்.

தனது செல்வாக்கு தமிழ் மக்களிடம் சரிந்துவிட்டது என்பதை அவர் புரிந்துகொண்டார். எனவே தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தும் நோக்கில் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஊடாக அரசியல் தீர்வுப் பொதியொன்றைத் தயாரித்தார். ஆயினும் இப்பிரச்சினைக்குத் தீர்வு [illegible] நோக்கில் தயாரிக்கப்பட்ட அந்த அரசியல் தீர்வுப்பொதி யோசனை தமிழ் மக்களது அரசியல் விருப்பைப் பூர்த்தி செய்வதாக அமையவில்லை.

அதன் பின்னர் இராணுவ ரீதியில் விடுதலைப் புலிகளை அடக்கியொடுக்க சந்திரிகா முயற்சித்ததன் காரணமாக தமிழ் மக்கள் மத்தியில் சந்திரிகா அடியோடு மதிப்பிழந்து போனார். எனினும் 1999ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்களின் ஆதரவு இன்றியே சந்திரிகா மீண்டும் ஜனாதிபதியானார். அந்தப் பதவிக் காலத்தின் போதும் அவர் ஒருபோதும் யாழ்ப்பாணத்துக்குச் வரவில்லை. புலிகளின் தாக்குதல் அச்சம் அதற்குக் காரணம் என்று கற்பித்துக்கொண்டார்கள்.

1971ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்துக்கு பயணம் செய்ததன் பின்னர் இரு வாரங்களின் முன்னரே அவர் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு வந்தார்.

அண்மைய அவரது யாழ்ப்பாணப் பயணம் இந்த நாட்டில் இயங்கும் வெளிநாட்டுத் தூதராலயங்களின் கடும் கவனத்தை ஈர்க்கும் ஒரு சம்பவமாக அமைந்தது. அது மட்டுமன்றி, சந்திரிகாவின் அண்மைய யாழ்ப்பாணப் பயணத்துக்கான அடிப்படை நோக்கம் குறித்தும் பல தரப்புக்கள் மத்தியிலும் வெவ்வேறு அபிப்பிராயங்கள் நிலவின.

சந்திரிகாவின் பயணம் மிக இரகசியமாகவே இருந்தது. இராணுவப் புலனாய்வாளர்கள் பொலிஸார் என்போருக்கே தெரியாத அளவுக்கு அவரது பயணத்தின் இரகசியம் பேணப்பட்டது. அவர் யாழ்ப்பாணம் வந்த பின்னரே அவர்களுக்கும் அது பற்றிய செய்திகள் [illegible] [illegible] அவர்களால் பின்னரும்கூட சந்திரிகா ஏன் வந்தார் என்ற காரணத்தை முற்றாக அறியமுடியவில்லை.

சந்திரிகா ஏ-9 பாதை வழியே தன்னுடைய வாகனத்தில் வந்தார். இரண்டு பாதுகாப்பு வாகனங்களும் கூடவே வந்தன. அவரது பயணம் குறித்து தெற்கைச் சேர்ந்த ஒரேயொரு ஊடகத்தைத் தவிர வேறு எவருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

செம்மணியை வந்தடைந்த பின்னர் அவர்களது வாகன அணி அங்கு சற்று நேரம் நின்றது. பின்னர் கிழக்கு அரியாலைப் பக்கமாகத் திரும்பிப் பயணித்தது.

சந்திரிகா தலைவராக இருக்கும் நீதி மற்றும் ஜனநாயக நிதியத்தின் மூலம் போரால் பாதிக்கப்பட்ட வறிய மக்களுக்கு வழங்கப்பட்ட சூரிய சக்தி மின்கலத் தொகுதிகள் எவ்வளவு தூரம் மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கின்றன என்பதைப் பரிசோதிப்பதற்காகவே அவர் யாழ்ப்பாணம் வந்தார் என்று சொல்லப்பட்டது.

கிழக்கு அரியாலை மற்றும் நீர்வேலி ஆகிய இடங்களுக்குச் சென்று சந்திரிகா பார்வையிட்டார். இந்தப் பயணத்தின் போது சந்திரிகா எந்தவொரு இடத்திலும் முறையான, சிறப்பான வரவேற்பைப் பெறவில்லை. அவர் மீதான வெறுப்பால் மக்கள் அப்படி நடந்துகொண்டார்கள் என்று சொல்ல முடியாது. சந்திரிகா வருகிறார் என்று அவர்களுக்குத் தகவல் தெரிந்திருக்கவில்லை.

சந்திரிகா கிராமங்களில் இறங்கியபோது பலருக்கு அவரை அடையாளம் தெரிந்திருக்கவில்லை. சிலருக்கு அவர் சந்திரிகாதான் என்று சொன்ன பின்னரும் அடையாளப்படுத்த முடியவில்லை. சிறிமாவின் மகள் என்றபோதுதான் புரிந்தது. பின்னர் நட்புறவுடன் பழகினார்கள். சந்திரிகாவின் நிறுவனத்தால் கொடுக்கப்பட்ட சூரிய சக்தி மின்கலத் தொகுதியால் தமது பிள்ளைகள் பயன்பெறுகிறார்கள் என்பதே அனேகரின் கருத்தாக அமைந்தது.

சந்திரிகா நல்லூர் ஆலயத்துக்குச் சென்றார், நாகவிகாரைக்குச் சென்றார், நயினாதீவுக்கும் செல்வார் என்றெல்லாம் ஊடகங்கள் பல கதைகள் திரித்தபோதும் அவற்றில் எதுவும் நடந்திருக்கவில்லை. சந்திரிகா அன்று பிற்பகலில் நல்லூரில் உள்ள சைவ உணவு விடுதியில் மதிய உணவை அருந்தினார். அவர் அங்கு உணவருந்திக் கொண்டிருந்தபோது மேலே சுற்றிக்கொண்டிருந்த காற்றாடி ஒன்று கழன்று விழுந்தது. எனினும் அதனால் சந்திரிகாவுக்கு ஆபத்து ஏதும் ஏற்படவில்லை. உணவு முடிந்ததும் சந்திரிகா உடனடியாகவே கொழும்பு புறப்பட்டுவிட்டார்.

யாழ்ப்பாணத்துக்கான இரகசியப் பயணம் உள்ளிட்ட சந்திரிகாவின் அண்மைக்கால போக்கைப் பார்க்கும்போது, அவர் ஏதோ ஓர் அரசியல் பாய்ச்சலை மீண்டும் நடத்தத் தயாராகி வருகிறார் என்பது புலப்படுகிறது. அவர், அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகள் சார்பான பொதுவேட்பாளராகப் போட்டியிடத் தயாராகி வருகிறார் என்று ஒரு தரப்பினர் சந்தேகம் வெளியிட்டு வருகின்றனர். அதற்காக தமிழ் மக்களிடம் தனக்குள்ள செல்வாக்கை நாடிபிடித்தறியவே அவர் யாழ்ப்பாணம் வந்தார் என்றும் அந்தத் தரப்பினர் கூறுகின்றனர்.

உண்மையில் தேர்தலில் தோல்வியைத் தழுவியதன் காரணமாக அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொண்டவரல்லர் சந்திரிகா. பதினேழு ஆண்டுகள் கால ஐ.தே.கட்சியின் அதிகாரத்தை முடிவுக்குக் கொண்டு வந்து சுதந்திரக் கட்சியை ஆட்சி அதிகாரத்தில் அமர வைத்தவர் சந்திரி

(26 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் மேலெழும் உடைப்பு அரசியல்...

சந்திரசேகர ஆஷாத்

ஒருவரையோ ஒரு தரப்பையோ முறியடிப்பதற்கு அல்லது தனது கைக்குள் கொண்டு வர சாம, பேத, தான, தண்டம் என நான்கு வழிகள் உண்டு என்று கூறப்படுவதுண்டு. சாமம் என்பது நட்புடன் பழகி தனது நோக்கத்தை நிறைவேற்றுவது, பேதம் என்பது முரண்படுவதன் மூலம் நெருக்கடிகளைக்கொடுத்துவழிக்குக்கொண்டு வருவது. தானம் என்பது எதையாவது இலவசமாகக் கொடுத்து மடக்குவது. முன்பு பூதானம், கோதானம், கன்னிகாதானம் எனப் பல வகைகள் இருந்தன. இப்போது லஞ்சம், பதவி, வர்த்தகக் கோட்டா எனப் பலவகையாக விரிந்துவிட்டது. இவ்வாறே தண்டம் என்பது தண்டனை கொடுப்பது என இருந்து இப்போது உயிர் அச்சுறுத்தல், மிரட்டல், வெள்ளை வான் கடத்தல், காணாமற் போதல் எனப் பல வகையாக வளர்ச்சி பெற்றுவிட்டது.

இலங்கை அரசியலில்எதிரணிகளைஉடைத்துப் பலவீனப்படுத்தவும் தமது நோக்கங்களை நிறைவேற்றவும் இந்த சாம, பேத, தான, தண்டம் என நான்கு வழிமுறைகளும் தேவைக்கு ஏற்ற முறையில் தனித்தனியாகவும் ஒன்றாகவும் பயன்பட்டு வருகின்றன. ஆட்சியில் உள்ளவர்களுக்கும் அவர்களின் ஆதரவாளர்களுக்கும் இவற்றைத் தாம் விரும்பிய நேரத்தில் விரும்பிய விதத்தில் பாவிக்க மறைமுகமான அனுமதி வழங்கப்பட்டுள்ளது போலவே தோன்றுகிறது.

சப்பிரகமுவ, வடமத்திய, கிழக்கு மாகாணங்களுக்கான தேர்தல்கள் அண்மையில் இடம்பெற்று முடிந்தன. சப்பிரகமுவ வடமத்திய மாகாணங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி அறுதிப் பெரும்பான்மை பெற்றுவிட்டதால் அங்கு எவர் ஆட்சியமைப்பது என்பது பற்றி எவ்வித பிரச்சினையும் இருக்கவில்லை. ஆனால் கிழக்கில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 14 ஆசனங்களையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 11 ஆசனங்களையும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 7 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 4ஆசனங்களையும், தேசிய சுதந்திர முன்னணி 1 ஆசனத்தையும் பெற்றன. எந்த ஒரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறவில்லை.

எனினும் கூடுதல் ஆசனங்களைப் பெற்ற வகையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன கூடுதலான ஆசனங்களைப் பெற்ற காரணத்தால் வேறு கட்சிகளுடன் சேர்ந்து ஆட்சியமைக்கக் கூடிய ஒரு வாய்ப்பைப் பெற்றன. எனவே இரு தரப்பினரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவைப் பெற முயன்றன.

அந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சர் டலஸ் அழகப்பெரும முஸ்லிம் காங்கிரஸ் அரசின் பங்காளிக்கட்சியாதலால்கிழக்குமாகாண சபையில் ஆட்சியமைக்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவளிக்கும்என்றுதெரிவித்தார். முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளிக்கும் என்ற கருத்தைக் கேள்விக்குள்ளாக்கும் வகையில் அரச தரப்பிலிருந்து வேறு சில குரல்கள் ஒலித்தன. அதாவது முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி என்பவற்றிலிருந்து தமது பக்கம் இணையப் போவதாகத் தெரிவித்த கருத்துத்தான்.

அது நடக்கும், நடக்காது என்பது வேறு விடயம். ஆனால் அந்தக் கட்சிகளிலிருந்து சிலரை உடைத்து எடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பது தெளிவாகவே வெளிப்படுகிறது.

அதேவேளையில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மாகாணத் தேர்தலில் வெற்றி பெற்ற சிலருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் அவர்களின் பாதுகாப்புக் கருதி அவர்களை ஓரிடத்தில் கூட்டி பாதுகாப்பாக வைத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற சகல உறுப்பினர்களும் கொழும்புக்கு அழைக்கப்பட்டுவிட்டனர்.

இவை இந்த உடைப்பு அரசியலுக்கு எதிரான நியாயபூர்வமான பாதுகாப்பு ஏற்பாடுகள் என்றே கூற வேண்டும். ஏற்கனவே பல்வேறு சந்தர்ப்பங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட ஏராளமான தமிழ் உணர்வாளர்கள் பகிரங்க இடங்களில் வைத்துப் பலர் முன்னிலையில் படுகொலை செய்யப்பட்டனர். பலர் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டு நிரந்[illegible] காணாமற்போயினர்.

இப்படியான வன்முறைகளை அவர்கள் செய்தனர் என்பதையும் அவர்களின் இன்றைய ஜனநாயக வேடத்தின் உண்மைத் தன்மை பற்றியும் மக்கள் நன்கறிவர்.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களுடனோ, முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களிடமோ தமது உடைப்பு அரசியலை மேற்கொள்ள பதவி, பணம் போன்ற தானங்கள் பேரம் பேசப்படலாம். தானங்கள் ஏற்கப்படாத நிலையில் படுகொலைகள், கடத்தல்கள் தண்டமாக விதிக்கப்படலாம்.

இப்படியான சம்பவங்கள் ஏற்கனவே நடக்காமலும் இல்லை; இனி நடக்காது என நம்பவும் இடமில்லை.

இலங்கையைப் பொறுத்தவரையில் உடைப்பு அரசியல் என்பது ஒரு புதிய நடைமுறையல்ல. இலங்கையில் எதிர்த் தரப்பினரை முறியடிக்க முதல் முதலாக இது ஐக்கிய தேசியக் கட்சியாலேயே மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அந்த உடைப்பு அரசியலைக் கையில் எடுத்துத் தொடர்ச்சியாகவும் லாவகமாகவும் இலங்கையில் கையாண்டு வருவதில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நிகராக வேறு எவரையும் கூறிவிட முடியாது. சாம, பேத, தான, தண்டம் என்ற வழிமுறைகளைச் சரியான சந்தர்ப்பத்தில் அதற்கேற்ற நபர்கள் மூலம் கையாண்டு வெற்றி பெறுவதில் அவர் பல சாதனை [illegible] தன்னிடம் [illegible] விசுவாசமான அடிமைகளாக வைத்திருப்பது எப்படி என்பதும் அவருக்குத் தெரியும்.

ஏரிக்கரைப் பத்திரிகைகளைத் தேசிய மயமாக்கும் மசோதா நாடாளுமன்றத்தில் 1965 ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சியால் கொண்டு வரப்பட்டது. ஏற்கனவே வெளிநாட்டு உளவு நிறுவனங்களின் உதவியுடன் ஐக்கிய தேசியக் கட்சியால் விலைக்கு வாங்கப்பட்ட சி.பி.டி. சில்வா தலைமையிலான 13 பேர் கொண்ட குழுவினர் வாக்கெடுப்பு இடம்பெற்ற கடைசி நிமிடத்தில் எதிர்க்கட்சிக்கு மாறி மசோதாவை எதிர்த்து வாக்களித்தனர். அதன் காரணமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சி கவிழ்ந்தது. ஒரு உடைப்பு அரசியல் மூலம் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமராயிருந்தபோது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியை விழுத்திய கதை.

ஆனால் 2000 ஆம் ஆண்டில் மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக இருந்தபோது வீழ்ச்சியடையவிருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியை உடைப்பு அரசியல் மூலம் காப்பாற்றினார் என்பதுதான் இங்கு ஒரு முக்கிய விடயம்.

2000ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஒரே ஒரு அதிகப்படியான ஆசனத்தைப் பெற்று ஆட்சியமைத்தது. நாடாளுமன்றத்தைக் கூட்டி எந்த ஒரு தீர்மானத்தையுமே நிறைவேற்ற முடியாத நிலை. இந்த நிலையில் 2005 இல் இடம்பெற்ற தேர்தலின் பின்பு ஐக்கிய தேசியக் கட்சியை கருஜெயசூரிய தலைமையிலான ஒரு குழுவினர் உடைத்து வெளியேறி அரசில் இணைந்தனர்.

1965 இல் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உடைக்கப்பட்டு அதன் ஆட்சி வீழ்த்தப்பட்டது. மஹிந்த காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி உடைக்கப்பட்டு அதன் ஆட்சி காப்பாற்றப்பட்டது.

ஆனால் மஹிந்த ராஜபக்ஷ அத்துடன் உடைப்பு அரசியலைக் கைவிட்டு விடவில்லை. இலங்கை வாழ் முஸ்லிம்களின் தனித்துவத்தைப் பேணவும் ஐக்கியமான ஒரு சக்தியாக எழுந்து நிற்கவும் ஒரு அடித்தளமாக அமரர் அஷ்ரப் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கினார். அஷ்ரப்பின் இறப்பின் பின்பு முஸ்லிம் காங்கிரஸின் மேல் உடைப்பு அரசியல் பிரயோகிக்கப்பட்டது. முஸ்லிம் காங்கிரஸிலிருந்து வெளியேறியோர் ரிசாட் பதியுதீன் தலைமையில் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் எனவும் தேசிய காங்கிரஸ் என அதாவுல்லா தலைமையிலும் பிரிந்தனர்.

முஸ்லிம் மக்களின் பலம் சிதைக்கப்பட்டது. தங்களுக்குள் ஐக்கியப்பட முடியாத அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸும் தேசிய காங்கிரஸும் அரசுக்கு ஆதரவு வழங்குவதிலும் முஸ்லிம் காங்கிரஸைப் பலமிழக்கச் செய்வதிலும் ஒன்றுபட்டு நிற்கின்றனர்.

எப்படியும் மஹிந்த ராஜபக்ஷவில் உடைப்பு அரசியல் முஸ்லிம் மக்களின் மீது கொடிகட்டிப் பறக்கிறது.

இப்போது கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் பின்பு இன்னமும் முஸ்லிம்களின் நம்பிக்கைக்குரிய சக்தியாக விளங்கும் மு.கா. மேலும் உடைப்பு அரசியல் ஏவிவிடப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் வரலாற்றில் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜே.வி.பி என சக்திமிக்க அமைப்புகள் மேல் உடைப்பு அரசியல் நடத்தி பல வெற்றிகளை ஈட்டிய பெருமை உண்டு. தமிழீழ விடுதலைப் புலிகளைக் கூட உடைத்தது ஐ.தே. கட்சியாக இருந்தபோதும் அதன் பலனை அனுபவிப்பது மஹிந்த ராஜபக்ஷவே.

இன்று அதே உடைப்பு அரசியல் கிழக்கு நோக்கிப் பாய்கிறது.

உடைப்புக்கு உட்படுத்தப்படக் கூடிய அமைப்புகளும் அதன் தலைமைகளும் சில விடயங்களில் தெளிவாக இருக்க வேண்டும். எந்த ஒரு அமைப்புக்குள் முரண்பாடுகளும் மோதல்களும் உண்டோ அந்த முரண்பாடுகள் சிநேகபூர்வமான முரண்பாடுகள் என்ற மட்டத்திலிருந்து எதிர் முரண்பாடு என்ற கட்டத்துக்கு விரிவடையாது பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு முரண்பாடு இல்லாமற் போகும்போது இன்னொரு முரண்பாடு உருவாகும் என்பதில் தெளிவிருக்க வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக எதிராளிகளால் கையாளப்படக் கூடிய முரண்பாடுகளை இனம் கண்டு அவற்றை இல்லாமற் செய்ய வேண்டும். எமக்கும் எதிராளிகளுக்குமிடையேயுள்ள முரண்பாடுகளை கூர்மைப் படுத்துவதன் மூலம் எம் மத்தியில் உள்ள முரண்பாட்டை வலிமையிழக்கச் செய்து இரண்டாம் பட்சத்துக்கு பின்தள்ள முடியும்.

சிறந்த மனத்துடன் நாம் சார்ந்திருக்கும் மக்களின் நலன்களின் அடிப்படையில் தூரநோக்குப் பார்வையுடன் விவாதங்களை நடத்துவதன் மூலம் ஐக்கியத்தை வலுப்படுத்த முடியும்.

எப்படி இருப்பினும் அதிகாரப் பீடங்களின் உடைப்பு அரசியல் வலிமை வாய்ந்ததாகையால் நாம் அதற்கேற்ற தந்திரோபாயங்களை வகுத்து முன் செல்வதன் மூலமே உடைப்பு அரசியலை வெற்றி கொள்ள முடியும்.




ஞாயிறு காரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ஜெரா

# உண்மை மறையும் கடற்கரை

**பொலிஸும் ராணுவமும் அந்த மக்களைச் சுற்றி வளைத்திருக்கின்றது. எப்போதாவது, எங்கிருந்தாவது வெளிவரும் ஊடகங்களில் அவர்கள் வெளியிட்ட உண்மைகள் இங்கே பதிவு செய்யப்படுகின்றன. அவர்களின் அறிவு பூர்வமான விளக்கம் அந்தப் போராட்டத்தை நியாயப்படுத்தி நிற்கின்றது.**

தமிழகத்தில் நடந்து வரும் மக்கள் போராட்டம் பற்றிய முணுமுணுப்புக்கள் நம் மத்தியில் கேட்கத் தொடங்கியிருக்கின்றன. இந்திய ஊடகங்கள் எதுவும் முக்கியத்துவம் கொடுக்காத இந்தப் போராட்டத்தின் உண்மை முகத்தை ஈழத்து ஊடகங்களாவது பதிவு செய்திருக்கின்றமை பாராட்டத்தக்கது. நமது போராட்டம் போலவேதான் அவர்களின் போராட்டமும். நாம் உரிமை நிலத்துக்காக, அடக்குமுறை செய்த அரசோடு பொருதினோம். அவர்கள் வாழ்வுக்காகத் தம் சொந்த அரசுடனேயே போராடிக் கொண்டிருக்கின்றனர். இதுதான் நமக்கும் அவர்களுக்கும் இடையிலான வித்தியாசம்.

இந்தியாவின் பல மாநிலங்களில் இது போன்ற மக்கள் போராட்டங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் அவை எதுவும் இந்திய வெகுசன ஊடகங்களின் கவனத்தைப் பெறாதவையாக இருக்கின்றன. அதேபோல்தான் கூடங்குள மக்கள் போராட்டமும் இருளுக்குள் நிகழும் தீவிரவாதிகளின் தாக்குதல்களாக, இந்திய இறையாண்மைக்கு எதிரானதாக, கடத்தல்காரர்களின் போராட்டமாக பிரச்சாரப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதுவரையில் இந்தியாவில் இருந்து வெளிவரும் எந்த ஊடகங்களும் கூடங்குள மக்களுக்கு ஆதரவான நிலையை எடுக்கவில்லை. அதனாற்றான், அவர்கள் போலவே இந்திய அரசினாலும், அதன் ஊடகப் பயங்கரவாதத்தினாலும் தோற்கடிக்கப்பட்ட ஈழத்தமிழர்கள், கூடங்குளப் போராட்டம் பற்றிய உண்மையைக் கண்டுகொள்ள வேண்டும்.

**1985 இல் கூடங்குள அணு உலை உருவானது**


1985ஆம் ஆண்டு இந்தியாவில் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் ரஷ்யாவோடு நல்லுறவைப் பேணியது. அப்போது இரு நாடுகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் தமிழக கடற்கரையோர நகரமான கூடங்குளத்தில் அணுமின் நிலையம் அமைப்பதற்கான உதவிகளை செய்வதற்கு ரஷ்யா முன்வந்தது. உடனடியாக அதன் கட்டுமானப் பணிகளும் தொடங்கப்பட்டிருந்தன.

1990 ஆம் ஆண்டு நிகழ்ந்த ராஜீவ் காந்தி இறப்போடு காங்கிரஸ் இந்திய அரசியலிலிருந்து பின்வாங்கியிருந்தது. இதனால் கூடங்குள அணுமின் திட்டமும் கிடப்பில் போடப்பட்டது. 2000ஆம் ஆண்டுகளோடு மறுபடியும் ஆட்சிக் கட்டிலேறிய காங்கிரஸ் ஈழத் தமிழரின் வாழ்வுக்குக் குழி பறித்தது போலவே தனது நாட்டு சிறுபான்மை, பழங்குடியின மக்களுக்கும் குழிபறித்தது. உடனடியாக கூடங்குளத் திட்டம் நடைமுறைக்கு வந்தது. 2012ஆம் ஆண்டின் தொடக்கப் பகுதியில் அணு உலை ஆரம்பிக்கப்படுவதற்கான அனைத்துக் கட்டுமானப் பணிகளும் இறுதி நிலையை அடைந்தன.

ஆனால் இதனைத் திறக்கவிட மாட்டோம் என கூடங்குளத்தை நம்பி வாழும் மக்கள் கலகம் செய்தனர். அதற்கு உதயகுமார் தலைமை தாங்கினார். ஆனால் இவற்றை யாரும் கண்டுகொள்ளவில்லை. சில வாரப் பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகள் மட்டும் அங்கு ஏதோ நடக்கின்றது என்பதைக் காட்டின. அவற்றினால்பொதுமக்களின் கருத்தியலை மாற்ற முடியவில்லை. ஏனெனில் அன்றாடம் மக்களுக்கு செய்திகளைக் கொண்டு செல்லும் வெகுசன ஊடங்கள், கூடங்குளம் 7 அடுக்குப் பாதுகாப்புக் கவசத் தட்டுக்களைக் கொண்டது. அது எத்தனை நிலநடுக்கம் வந்தாலும் அணுக்கசிவை வெளியிடாது என்ற பிரசாரத்தை இன்று வரை செய்து வருகின்றன.

**போராட்டத்தை முன்னெடுக்கும் உதயகுமார் திடீரென எங்கிருந்து வந்தார்?**

அவர் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்த திட்டமிட்டு வேறு நாட்டிலிருந்து களமிறக்கப்பட்டவர். அவர்



இந்திய இறையாண்மைக்கு எதிராக இயங்குபவர்'' என்ற கருத்தை இந்திய வெகுசன ஊடகங்கள் பலமாக நிறுவி வருகின்றன.

இந்த அணுத் திட்டத்தால் பொது மக்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்பதை பல இளையோர்களுக்கு வழிகாட்டலாளனாக இருக்கும் அப்துல் கலாமும் நிறுவி வருகின்றார். அங்கு ஆராய்ச்சி நடத்திய ஆய்வாளர்களும் கூடங்குளத்தினால் எந்தக் காலத்திலும் பாதிப்பு வராது என்கின்றனர். ஆனால் கூடங்குள மக்கள் இவற்றுக் கெல்லாம் தயார் செய்யப்பட்ட ஆதாரபூர்வமான பதிலோடு போராடத் தொடங்கியிருக்கின்றனர். ஆனால் தமது கருத்துக்களை எந்த ஊடகங்களிலும் பகிர்ந்து கொள்ள முடியாத தனித்த வெளியில் அவர்கள் அடைக்கப்பட்டிருக்கின்றனர்.

பொலிஸும் ராணுவமும் அந்த மக்களைச் சுற்றி வளைத்திருக்கின்றது. எப்போதாவது, எங்கிருந்தாவது வெளிவரும் ஊடகங்களில் அவர்கள் வெளியிட்ட உண்மைகள் இங்கே பதிவு செய்யப்படுகின்றன. அவர்களின் அறிவு பூர்வமான விளக்கம் அந்தப் போராட்டத்தை நியாயப்படுத்தி நிற்கின்றது.

அவர்கள் போராட்டம் தொடர்பாக எழுப்பப்படும் கேள்விகளுக்குக் கூடங்குளம் மக்களே தரும் பதில்களைப் பாருங்கள்.

**உலகமே அறிந்த அணு விஞ்ஞானி அப்துல் கலாம். அவரே கூடங்குளத்தில் அமைக்கப்படும் அணு உலைகளால் பாதிப்பு இல்லை என்று சொல்லியிருக்கிறாரே?**

பாதிப்பே வராது என்று சொல்வதற்கு அப்துல் கலாம் என்ன கடவுளா? நல்ல பாம்பை அறைக்குள் வைத்து கதவைப் பூட்டிக் கொண்டு நித்திரை செய்ய உங்களால் முடியுமா? அப்துல் கலாம் அணுவிஞ்ஞானி.

விஞ்ஞானிகள் என்றைக்காவது மக்கள் அழிவை[illegible]களா? விஞ்ஞானிகள் [illegible] அவர்களின் கொள்கைகள், கோட்பாடுகள் வெற்றி பெறவேண்டும் என்பது தான் முக்கியமே தவிர, மக்கள் பாதிக்கப்படுவர் என்ற எண்ணம் கிடையாது. அப்படி எண்ணம் இருந்திருந்தால் இவ்வளவு உயிர் கொல்லி ஆயுதங்கள் உலகத்துக்கு வந்திருக்குமா?

அப்துல் கலாம் 2020ஆம் ஆண்டு இந்தியா வல்லரசு ஆகவேண்டும் என்ற கொள்கையை பரப்பி வருபவர். அந்த வல்லரசுக் கனவுக்காக இந்தியா மின்சாரத்தில் அதிக அபிவிருத்தியடைய வேண்டும் என்பதுதான் அவரின் அபிவிருத்திக்கான ஆலோசனை. ஆகவே அவரால் தனது கொள்கைகளையும் விட்டுக் கொடுக்க முடியாது. இந்திய அரசுக்கான நன்றியையும் மறக்க முடியாது.

**ஜப்பானே அணுக்கசிவை சமாளிக்க திணறும் போது நமக்கெதற்கு?**

பொருளாதாரம், தொழில்நுட்பம் போன்ற துறைகளில் அமெரிக்காவையே மிஞ்சி நிற்கும் ஜப்பானே கடந்த வருடம் புகுஷிமா அணுக்கசிவை சமாளிக்க என்ன பாடுபட்டது என்பதைப் பார்த்திருக்கின்றோம். அதில் இறந்த ஆயிரக் கணக்கானோரின் சடலங்களைப் புதைப்பதா? எரிப்பதா என்பதற்குக்கூடப் பயந்து கொண்டு ஆய்வறைகளுக்குள்ளும், கண்ணாடி பெட்டிகளுக்குள்ளும் வைத்துக் கொண்டு அந்த நாடு திணறுகின்றது.

அத்தோடு ஜேர்மனி, ஆஸ்திரேலியா, அமெரிக்கா எனப் பல முன்னேறிய நாடுகள் அணு உலைகளை மூடி வருகின்றன. படிப்படியாக அணுப்பாவனையை குறைத்து வருகின்றன. அன்றாட வாழ்வே சிக்கலுக்குரியதாக இருக்கும். நமக்கு மட்டும் ஏன் அணு உலை?

**உதயகுமார் மற்றும் போராடுபவர்கள் தீவிரவாதிகளாகக் காட்டப்படுகின்றனரே?**

யார் எல்லாம் அதிகாரத்துக் எதிராகப் போராடுகின்றானோ அவன் முதலில் தீவிரவாதி. பின்னர் தேசத்துரோகி. அவன் வென்றால் மட்டுமே அவனை மக்கள் தலைவன் எனக் கொண்டாடும் காலம் இது.

1985ஆம் ஆண்டிலிருந்து போராடுகின்றோம். உதயகுமார் இந்த ஆண்டின் தொடக்கத்திலிருந்துதான் உண்ணாவிரதம் இருக்கின்றார். அதை யாராவது கண்டு கொண்டார்களா?

எமது போராட்டத்தை யாருமே கண்டுகொள்ளவில்லை. திட்டமிட்டு அனைத்து ஊடகங்களும் இருட்டடிப்புச் செய்தன. புகுஷிமா அழிவோடு எமக்குப் பெரும் விழிப்புணர்வு ஏற்பட்டது. அதன் விளைவுதான் இப்போது நடக்கும் இந்தப் போராட்டம். இது எமது பிள்ளைகளுக்கான போராட்டம்.

**தமிழகத்தின் கல்பாக்கத்திலும் அணு உலை உண்டு. அங்கு மூன்று முறை நிலஅதிர்வு ஏற்பட்டும் எந்தப் பாதிப்புக்களும் ஏற்படவில்லை. அங்கு மக்கள் வாழ்கின்றனர் தானே?**

எப்படிச் சொல்வீர்கள் பாதிப்பில்லை என்று? கல்பாக்கத்தில் ஆராய்ச்சி செய்யப் போகின்றவர்கள் எல்லோரும் அரச அதிகாரிகள். அரசாங்கத்திடம் சம்பளம் வாங்கும் அவர்களால் அரசுக்கு எதிராகக் கருத்துக் கூற முடியாது.

கல்பாக்கத்தில் உள்ள 5 குடும்பங்களில் இரண்டு குடும்பங்களுக்குப் புற்று நோய் இருப்பது யாருக்குத் தெரியும்? அங்கு பிறக்கும் குழந்தைகள் புற்றுநோயுடனேயே பிறக்கின்றனர் என்ற உண்மை எத்தனை பேருக்குத் தெரியும்? எந்த ஊடகம் இதனை அறிக்கையிட்டிருக்கின்றது. உண்மைக்கு வாயிருந்தால் பணம் அதனையும் விலைக்கு வாங்கிவிடும்.

**ஊடகங்கள் ஏன் இதனைத் திட்டமிட்டு மறைக்கின்றன?**


இந்தியாவில் இருக்கின்ற அனைத்து வெகுசன ஊடகங்களுமே பணத்துக்காகப் பணியாற்றுபவை. எமது போராட்டத்தை மறைப்பதற்காக ஊடகங்கள் அதிகாரத்திடமிருந்து எப்போதோ பணம் வாங்கிவிட்டன. இனி எப்படி அவற்றினால் எஜமானனுக்கு வாலாட்டாமல் இருக்க முடியும்?

இங்கு பணியாற்றும் ஊடகங்களுக்கு மக்கள் கரிசனை கொஞ்சம்கூட இல்லை. ஈழத் தமிழரின் போராட்டத்தை எத்தனை ஊடகங்கள் உண்மைத் தன்மையோடு பிரதிபலித்தன? எல்லாம் வணிகம். போராட்டங்களின் வெற்றி தோல்வி ஊடகங்களால் தீர்மானிக்கப்படும் காலத்தில் வாழ்கின்றோம். நமது போராட்டத்தை தோற்கடிப்பதற்காக பணம் செலவழிக்கப்பட்டாயிற்று. இதில் வெற்றி பெறுவது, எமது உறுதியிலும் உயிரிழப்புக்களிலுமே உண்டு.

சமூக வலைத்தளங்களில் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான தொழில்நுட்ப அறிவோ, பொருளாதார விருத்தியோ எம்மிடமில்லை. ஆகவேதான் உண்மை இங்கு தொடர்ந்தும் செத்துக் கொண்டிருக்கின்றது.

இந்திய மற்றும் இலங்கை அரசுகளால் பாதிக்கப்பட்டவர்கள் நாம். அதிலிருந்து மீண்டெழ இன்றுவரைக்கும் முயன்று கொண்டிருக்கிறோம். கூடங்குளம் மக்கள் இன்னமும் பாதிக்கப்பட்டுக்கொண்டிருப்பவர்கள். அவர்களின் வேதனை, வலிகளை எம்மைத் தவிர வேறு யாரால் புரிந்துகொள்ள முடியும்? அவர்களுடன் சேர்ந்து அவர்களுக்காகவும் குரல் கொடுப்போம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# முற்றுப்பெறாத முடிவுகள்..

> பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்கும் மத்தியில் அவசர அவசரமாகத் தேர்தல்களை நடத்தி இறுதியில் மு.காவின் பொறிக்குள் அரசு இன்று விழுந்துவிட்டது.
> ''எவ்வளவோ பண்றம் இதப் பண்ண மாட்டோமா'' மங்காத்தா 'பஞ்ச் டயலக், பேசிக்கொண்டு நான்கு ஆசனங்களை தமிழரசுக் கட்சி மற்றும் மு.கா விடமிருந்து பிடுங்கும் சூழ்ச்சியிலும் அரசு இறங்கியுள்ளதாகத் தெரிகிறது.

■ சுகந்தன்

பெரும் எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் கடந்த எட்டாம் திகதி கிழக்கு சப்ரகமுவ வடமத்திய மாகாணங்களின் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடந்து முடிந்துள்ளன.

வடக்கில் தேர்தல்களை நடத்த கண்ணிவெடி அகற்றல் மீளக்குடியமர்வு போன்ற காரணங்களைக் காட்டி இழுத்தடித்து வரும் அரசு, இந்த மூன்று மாகாண சபைகளிலும் ஆட்சிக் காலம் முடிவடைய முன்னரே அவற்றைக் கலைத்து மீளத் தேர்தலை நடத்தி அதில் தனது வெற்றியையும் பதிவு செய்து விட்டது.

ஆனால் இவற்றில் கிழக்கு மாகாண சபையின் தேர்தலே பலரதும்- பல நாடுகளதும் கவனத்தை ஈர்த்த தேர்தலாக மாறியிருந்தது.

காரணம் கிழக்கைத் தவிர்ந்த ஏனைய இரு மாவட்டங்களிலும், அரசுக்குப் போட்டியான பலமான ஒரு எதிர்க்கட்சி அமையவில்லை. இவற்றில் வெற்றி எந்தப் பக்கமென்பது உள்ளங்கை நெல்லிக் கனியாகவே இருந்தது.

கிழக்கில் அப்படி இலகுவில் தனது இலக்கை அடைவது அரசால் முடியாது என்பது அரசுக்கு முன்னரே நன்கு தெரியும்.

மூவினமக்களும் வாழ்ந்து வருகின்ற மாவட்டங்களை உள்ளடக்கியதாகக் கிழக்கு தற்போது மாற்றப்பட்டு வருகின்றது. கிழக்கில் அதிகரித்துவரும் சிங்களக் குடியேற்றங்களால் சனத் தொகைப் பரம்பல் மாற்றம் அடைந்து வருகிறது. இந்த நிலையில் முஸ்லிம்களின் ஆதரவு யார் பக்கம் செல்கிறதோ அவர்களே அரியணை ஏற முடியும்.

அங்கேதான் பெரும் சிக்கல் தமிழ் மக்களுக்கு உள்ளது. 2008 ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலில் அரசின் கொள்கைகளை எதிர்த்து தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் தூக்கி எறிந்துவிட்டு எதிரணியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அந்தத் தேர்தலின் பின்னர் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஏற்றதுடன் மட்டுமல்லாது. அரசுடனேயே இணைந்து அதில் அமைச்சர் பதவியையும் பெற்றுள்ளார்.

''அரசன் எவ்வழியோ குடிகளும் அவ்வழியே'' என்பதற்கிணங்க இந்த முறை தேர்தலில் தாம் அரசுடன் இணைந்தே போட்டியிடப் போவதாக ஆரம்பத்தில் அறிவித்தார்.

இந்த அறிவிப்புக்கு முன்னரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இணையும் சாத்தியங்கள் இருப்பது போன்று தோரணையை இவர் ஏற்படுத்தி அதை வைத்து அரசிடம் தமது பேரம் பேசும் சக்தியை அதிகரித்திருந்தார் என்றும் சில உறுதிப் படுத்தப்படாத தகவல்கள் கசிந்தன.

ஆனால், கட்சிகளுக்குள் எழுந்த பலத்த எதிர்ப்புகளை அடுத்தும் தேர்தலுக்குச் சில நாள்களுக்கு முன்னர் முடிவை மாற்றி மறு அறிவித்தல் விடுத்தார். கிழக்கில் மு.கா. தனித்தே களமிறங்கவுள்ளதாக அந்த அறிவிப்பு இருந்தது. மதில் மேல் பூனையாகத் தீர்க்கமாக முடிவெடுக்க முடியாமல் திண்டாடி வந்த மு.காவுக்கு தேர்தல் முடிவுகள் படுதோல்வியைக் கொடுத்திருந்தாலும், இறுதி முடிவுகள் அதற்குப் பழம் நழுவிப் பாலில் வீழ்ந்தது போல் ஆகவிட்டன.

37 ஆசனங்களுக்கு நடைபெற்ற இந்தச் சமரில் அரசுக்கு 14 ஆசனங்களும் தமிழரசுக் கட்சிக்கு 11 ஆசனங்களும் மு.காவுக்கு 7 ஆசனங்களும் ஐ.தே.கவுக்கு 4 ஆசனங்களும் விமல் வீரவன்ஸவின் தே.சு.மு இற்கு ஒரு ஆசனமும் கிடைத்திருந்தன.

இதில் அரசின் கூட்டணிக்கு (தே.சு.முவும் சேர்ந்து) 15 ஆசனங்களும், தமிழ் அரசுக் கட்சி, ஐ.தே.கவும் இணைந்தால் 15 ஆசனங்களும் இரு பகுதிக்கும் சரிசமனாக கிடைக்கும். ஆனால் 37 ஆசனங்களைக் கொண்ட கிழக்கு மாகாண சபையில் சரிபாதி ஆசனங்கள் அதாவது 19 ஆசனங்களைப் பெற்ற அணியே ஆட்சி அமைக்க முடியும் என்ற நிலைப்பாட்டில் அரசுக்கும் தமிழரசுக்கட்சிக்கும் மேலதிகமாக 4 ஆசனங்கள் தேவைப்படுகின்றன.

ஆக மொத்தத்தில் 7 ஆசனங்களைப் பெற்று, அதேவேளை அதிக ஆசனங்களைச் சுமந்து கொண்டிருக்கும் கட்சிகள் பார்த்திருந்த அரியணை ஏறும் பாக்கியத்தைத் தட்டிப் பறிக்கும் பாக்கியம் இம் முறை மு.காவுக்கு கிட்டியுள்ளது.

பெரும்பாடுபட்டு அவசர அவசரமாகத் தேர்தல்களை நடத்தி இறுதியில் மு.காவின் பொறிக்குள் இன்று அரசும் விழுந்துவிட்டது.

''எவ்வளவோ செய்கிறோம்..'' என்று மார் தட்டிக் கொண்டு நான்கு ஆசனங்களை தமிழரசுக் கட்சி மற்றும் மு.காவிடமிருந்து பறிக்கும் சூழ்ச்சியிலும் அரசு இறங்கியுள்ளதாகத் தெரிகிறது.

இதன் ஒரு கட்டமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வெற்றியீட்டிய வேட்பாளர்கள் வீடுகளுக்குச் சென்ற அரசின் இரகசிய தூதுவர்கள் அரசுக்கு ஆதரவு தரவேண்டுமென பேரம் பேசியுள்ளமை தற்போது பரகசியமாகியுள்ளது.

இவர்கள் வேட்பாளர்களுக்கான விலையாக ரூபா ஐந்து கோடி ரொக்கப் பணம் சகல வசதிகளுடனும் கூடிய வீடு, விரும்பிய வாகனம் என்பனவற்றை நிர்ணயித்துள்ளனர்.

அரசின் இந்தக் கபடத் தனம் தொடர்பாக ஹக்கீமிடம் கேட்டபோது; ''ஆள்களைப் பறித்தெடுத்து ஆட்சியமைக்க அரசு முயன்றால் அது அரசு தனக்கே உலைவைக்கும் செயலாக அமைந்துவிடும். அவர்கள் தமது விரல்களால் தம்மையே குத்திக் கொண்டவர்களாகிவிடுவார்கள்'' என அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எது எவ்வாறிருப்பினும் அரசுக்கே மு.கா. ஆதரவு அளிக்கப் போவது உறுதி. ஆயினும் அது தனக்கான பேரம் பேசுதல் சக்தியை அதிகரித்து இயலுமான அளவு அதிகாரங்களைப் பெற [illegible] யாகபூர்வ அறிவிப்பை விடத் தயங்கி வருகிறது.

தனக்கு எதிராக சமபலம் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து கணிசமான அளவு ஆசனங்களைப் பறித்தெடுத்தால் அரசு மு.கா.விடம் கையேந்த வேண்டிய நிலையோ அல்லது கிழக்கு மாகாண சபையின் அதிகாரம் மிக்க பதவியான முதலமைச்சர் பதவியையே மு.காவிடம் தாரைவார்க்கும் நிலையோ வராது என்பது திண்ணம். இதனைக் கருத்தில் கொண்டே மு.காவுடன் அரசு சேரும் நிலைப்பாட்டை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது என்று சொல்லப்படுகின்றது.

இதேவேளை இந்தத் தேர்தலில் அரசுக்கு ஆதரவாக பக்கபலமாக ஒட்டிக்கொண்டிருந்த பிள்ளையான், கருணாவின் நிலை மிக மோசமாகவே அமைந்து விட்டது.

இவர்கள் சார்பில் தனித் தனியே நிறுத்தப்பட்ட வேட்பாளர்கள் எவரும் போதிய வாக்குகளைப் பெற்றுக்கொள்ளாது படுதோல்வியைத் தழுவியுள்ளனர்.

ஆக பிள்ளையான் மட்டுமே வெற்றிபெற முடிந்துள்ளது. இதனால் மீண்டும் பிள்ளையானின் முதல்வராகும் கனவு மெய்ப்படப் போவதில்லை என்பது திண்ணம்.

தற்போதைய முடிவுகளின் பிரகாரம் நான்கு வழிகளில் ஆட்சி அமையக் கூடிய சாத்தியப்பாடுகள் தென்படுகின்றன.

முதலாவதாக தமிழ் பேசும் மக்களின் விருப்பப்படி மு.காவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைப்பது.

இரண்டாவது அரசும் மு.காவும் இணைந்து ஆட்சியமைப்பது. மூன்றாவது சில உலக நாடுகளின் அழுத்தங்களுக்கு இணங்க அவற்றின் முயற்சிகள் வெற்றி பெற்றால் எதிர்காலத்தில் இனப் பிரச்சினைக்குத் தீர்வுக்கு அத்திபாரமாக அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து 'தேசிய அரசு' ஒன்றை அமைப்பது- நான்காவதாக அரசு, தனக்குப் போட்டியாகவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து ஒரு சில வேட்பாளர்களைக் குறைத்து, நான்கு பேரைப் பறித்தெடுத்து அதன் மூலம் தான் தனியர சமைப்பது.

நான்கு முறைகளிலும் முதல் இரு முறைகளும் மு.காவுக்குச் சாதகமாக அமைந்துவிடும். இந்த இரு ஆட்சியில் எது அமைந்தாலும் அதில் முதலமைச்சர் பதவியை 52 வருடங்களுக்குமே மு.காவே தக்க வைத்துக் கொள்ளும் சந்தர்ப்பமே அதிகம்.

இதைவிடுத்து மூன்றாவது முறையில் ஆட்சி அமைந்தாலோ அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் அரசுக்கு சமமான அதிகாரங்கள் பிரியும் சாத்தியம் காணப்படும்.

இவற்றை விடுத்து தனது இறுதி முயற்சியிலும் இறங்கித்தான் பார்ப்போமென அரசு நான்காவது முறையில் இணங்கினாலும் அதற்கான சாத்தியங்கள் தமிழ்த் தேசியக் கட்சியில் உருவாக்குவது இயலாத காரியமே. எது எவ்வாறாயினும் இரண்டாவது ஆட்சி அமையும் அறிகுறிகளே தற்போது தென்படுகின்றன.

பெரும்பாலும் மு.காவின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்ட ஹாபீஸ் நஸீர் அஹமட்டே அமையவுள்ள மாகாண சபையின் முதலமைச்சராக நியமிக்கப்படுவார் என நம்பப்படுகிறது.

எப்படி இருப்பினும் மீண்டும் முதலமைச்சர் பதவி இந்த முறையும் மட்டக்களப்பு வசமாகியுள்ளமை குறிப்பிடத் தக்கது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க அதிபர் தேர்தல் முடிய முன் ஈரான் மீது இஸ்ரேல் தாக்கும் அறிகுறி

## ஐ.நா. ஐரோப்பிய வட்டாரங்களில் பதற்றம்

உலக நடப்புகள் ஒரு பார்வை

- பிரி. சிறப்பு தூதுவர் இஸ்ரேலுக்கு அவசர பயணம்
- வடகொரியாவை கைப்பற்றும் வகையில் அமெரிக்க - தென்கொரிய படைகள் பயிற்சி
- அமெரிக்க திரைப்படத்தால் இஸ்லாமிய நாடுகள் குமுறல்

■ ரெங்கன்

ஈரானின் அணு உலைகள் மீது இஸ்ரேல் வான் தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளக் கூடிய சாத்தியக்கூறுகள் அதிகரித்து வருவதால் மத்திய கிழக்கில் மட்டுமன்றி மேற்கு நாடுகளில் குறிப்பாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் பரபரப்பு சூழ்நிலையொன்று உருவாகி வருவதாக உணரப்படுகின்றது.

இஸ்ரேல் என்ற ஒரு நாடே மண்ணில் இருக்கலாகாது என்று ஈரானியத் தலைவர்கள் கூறிவரும் அதேசமயம் அணு ஆயுத ஆராய்ச்சியிலும் ஈடுபட்டு வருவதாக மேற்கு நாடுகளில் ஐயுறப்படுகின்றது அவ்வாறு அணுகுண்டு ஒன்றை அந்தநாடு உருவாக்கி விடும்பட்சத்தில் இஸ்ரேல் மீதே அதனை அது பயன்படுத்தக் கூடும் என்றும் அஞ்சப்படுகின்றது.

ஆனால் அணு ஆயுத தயாரிப்பில் ஈரான் இறங்கிவிடக்கூடாது என்ற வகையில் அதனைக் கட்டுப் படுத்தவும் அந்த வகையிலான அதன் முயற்சிகளைக் கைவிடச் செய்யவும் ஐ.நா. சபையும் அமெரிக்காவும் வேறு பல நாடுகளும் பொருளாதார தடைகளை விதித்துள்ளன. இருந்தாலும் அத்தடைகளை மீறிக் கொண்டு ஈரான் அணு ஆராய்ச்சியில் முன்னேறி வருவதாக கருதப்படுகின்றது.

ஈரான் அணு உலைகள் மீது இஸ்ரேல் அவரசரப்பட்டு தாக்குதல் எதனையும் நடத்திவிடக் கூடாது என்பது அமெரிக்காவின் தற்போதைய கொள்கை. இந்த வகையில் சில மாதங்களுக்கு முன் இஸ்ரேலிய பிரதம மந்திரி பெஞ்சமின் நாத்தன் யாகு நியுயோர்க் சென்றிருந்த போது அதிபர் பராக் ஒபாமா அவருக்கு யோசனை கூறியிருந்தார்.


இப்பொழுது அமெரிக்காவில் அதிபர் தேர்தலுக்கான பிரசாரங்கள் சூடு பிடித்திருக்கின்றன.

தேர்தலில் யார் வெற்றிபெற்றாலும் அதற்கு முன்பதாகவே இஸ்ரேல் தன் தாக்குதலை நடத்தி முடித்துவிடக் கூடும் என்ற அச்சம் தற்போது தோன்றியுள்ளது.

ஈராக் மீது ஐ.நா. ஆதரவுடன் அமெரிக்காவும் பிரிட்டனும் மற்ற ஐரோப்பிய நாடுகளும் குற்றஞ்சாட்டியபடி அங்கு சதாம் ஹூசேன் அணு ஆயுதம் எதனையும் தயாரிக்கவில்லையென்பது தெரியவந்ததால் அமெரிக்க, பிரிட்டன் அரசுகள் அவமானத்தை எதிர்கொள்ள நேர்ந்தது போல் ஈரான் மீதான தாக்குதல் அமைந்துவிடக்கூடாது என்பது அமெரிக்காவின் கருத்தாக உள்ளது. ஈரான் உண்மையாகவே அணு குண்டைத் தயாரிப்பதில் இறங்கியிருக்கிறது என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பின்னரே அந்த நாட்டின் மீது தாக்குதல் நடவடிக்கை எதனையும் எடுக்க வேண்டும் என்று அமெரிக்காவும் பிரிட்டனும் கருதுவதாகத் தெரிகின்றது.

இந்த வகையில் இஸ்ரேலை எச்சரிப்பதற்கு பிரிட்டிஷ் அரசின் தூதுவர் ஒருவர் அண்மையில் இஸ்ரேலுக்கு அனுப்பப்பட்டிருந்தார் என்று இஸ்ரேலியப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. பிரிட்டன் பிரதம மந்திரி டேவிட் கமரோனின் கடுமையான செய்தியொன்றை அந்தத்தூதுவர் இஸ்ரேலிய பிரதமருக்கு வழங்கினார் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் டேவிட்



கமரோன் தொலைபேசி உரையாடல் ஒன்றின்போது நெத்தன்யாஹு உறுதியாக தமது கருத்தை வெளியிட்டமையால் இப்பொழுது பிரிட்டன் தான் எச்சரிக்கையை இத்தூதுவர் மூலம் தெரிவித்துள்ளது.

ஈரான் மீது ராஜதந்திர நடவடிக்கைகள் மட்டும் இப்போதைக்குத் தேவை; அதில் பொருளாதாரத் தடையும் அடங்கலாம். ஆனால் நேரடித் தாக்குதலுக்கு இது தருணமல்ல என்று பிரிட்டன் தெரிவித்திருப்பதாகத் தெரிகின்றது.

அதேசமயம் சமீபத்தில் ஈரானிய உயர் சமயத் தலைவரான கொமேனி வெளியிட்டுள்ள ஒரு கருத்தில் ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் ஏதும் நடத்துமேயானால் உலகம் முழுவதிலுமுள்ள அமெரிக்கத் தளங்கள் தாக்கி அழிக்கப்படும் என்ற வகையில் எச்சரித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### வடகொரிவைக் கைப்பற்றப் பயிற்சி

வடகொரியாவை கைப்பற்றி அரசியல் ஸ்திரத்தன்மையொன்றை ஏற்படுத்துவது தொடர்பாக தென்கொரிய படைகளும் அமெரிக்க படைகளும் ராணுவ பயிற்சி ஒன்றை நடத்தி முடித்துள்ளன.

இதே விதமான ஒரு பயிற்சியை இந்த இரு நாடுகளும் 2010 ஆம் ஆண்டும் நடத்தியுள்ளன. இந்த முறை வடகொரியாவில் அவசர நிலையொன்று ஏற்படுமானால் அந்தநாட்டைக் கைப்பற்ற நிலைமைகளை ஸ்திரப்படுத்துவது தொடர்பான ராணுவப் பயிற்சியை இரு நாடுகளும் சற்று உயர் மட்டத்தில் நடத்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

பெயர் குறிப்பிட விரும்பாத தென்கொரிய அதிகாரி ஒருவர் தகவல் தருகையில் சுயாதீன காற்று எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த ராணுவப் பயிற்சியானது கம்யூனிஸ்ட் ஆட்சி நடைபெறும் வடகொரியாவைக் கைப்பற்றி நிர்வாக சேவைகளை நிலை நிறுத்தியதன் பின்னர் வடகொரிய மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவது தொடர்பானது என்று குறிப்பிட்டார். இது வருடம் தோறும் நடைபெறும் "உல்சி பிரீடம் கார்டியன்' ராணுவப் பயிற்சியின் ஒருபகுதியாகும். இந்தப் புது மாதிரியான பயிற்சி ஓகஸ்ட் 20-31 வரை நடைபெற்றது. இப் பயிற்சியில் ஆயிரக்கணக்கான தென்கொரிய அமெரிக்கப்படையினர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். வடகொரியாவை பொறுத்த வரை போர் ஒன்றுக்கான ஆயத்தமே இந்தப் பயிற்சிகள் என்று குற்றம் சாட்டப்படுகின்றது. இதே விதமான ராணுவப்பயிற்சி வரும் ஆண்டிலும் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### முஸ்லிம்கள் கொதிப்படையச் செய்த திரைப்படம்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அவமதிக்கும் விதத்தில் தயாரிக் கப்பட்டுள்ள திரைப்படம் ஒன்று முஸ்லிம் உலகைக் கொதிப்படையச் செய்துள்ளது. அதன் காரணமாக லிபியாவிலுள்ள அமெரிக்கத்தூதுவர் கொல்லப்பட்டுள்ளார்.

பெங்காலியிலுள்ள அமெரிக்கத் துணை நகரத்தில் தூதுவர் ஜோன் கிறிஸ்தோபர் ஸ்டீவன்ஸ் இருந்த வேளையில் தீவிரவாதிகள் கும்பல் ஒன்று அத்தூதரகத்தினுள் நுழைந்து துப்பாக்கியால் சுட்டும் ரொக்கெட் குண்டுகளை பயன்படுத்தியும் தாக்குதல் நடத்தியுள்ளது. அமெரிக்காவில் தயாரிக்கப் பட்டதான குறித்த திரைப்படம் தொடர்பாக ஆத்திரம் அடைந்துள்ள தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் தூதுவர் உட்பட்ட நான்கு பேர் கொல்லப்பட்டனர் என்றுஅறிவிக்கப்பட்டது. அங்கு இஸ்ரேலிய அமெரிக்கர் ஒருவரால் தயாரிக்கப்பட்டுள்ள குறித்த திரைப்படம் நபி கள் நாயகம் அவர்களை இழிவுபடுத்துவதாக இருப்பதுடன் இஸ்லாத்தை புற்றுநோய் என்று வர்ணித்திருப்பதாகவும் 'வால் ஸ்ட்ரீட் ஜேர்னல்' சஞ்சிகை தெரிவித்துள்ளது.

ராஜாங்க அமைச்சின் செயலாளர் ஹிலாரி கிளின்ரன் விடுத்துள்ள அறிக்கையில் லிபியாவின் பெங்காலி நகரிலுள்ள துணைத் தூதரகத்தின் மீது நடத்தப்பட்டுள்ள தாக்குதலில் ராஜாங்க அமைச்சின் அலுவலர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் என்று தெரிவித்துள்ளார். கொல்லப்பட்டவர் யார் என்பதை தெரிவிக்காத செயலாளர் இந்தக் கொடும் செயலால் நாங்கள் எல்லோரும் மனம் உடைந்து போயுள்ளோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தாக்குதல் நடத்தியவர்கள் அமெரிக்கக் கொடியை கிழித்ததுடன் அதற்குத் தீ மூட்டிவிட்டு தூதரகத்தைக் கொள்ளையிட்டனர் என்று நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர். இஸ்லாத்தை அவமதிக்கும் திரைப்படம் வெளியிடப்பட்டதைக் கண்டித்து எகிப்தியத் தலைநகர் கெய்ரோவிலும் தீவிர சமயவாதிகள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

### குற்றஞ்சாட்டப்பட்ட கிறிஸ்தவப் பெண் பிணையில் விடுதலை

பாகிஸ்தானில் கிறிஸ்தவ இளம் பெண் ஒருவர் புனிதமான குர்ரான் எழுதப்பட்டுள்ள கடதாசிகளை எரித்து நிந்தனை புரிந்தமைக்காக கைது செய்து காவலில் வைக்கப்பட்டிருந்து இப்பொழுது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் 16 ஆம் திகதி சமய நிந்தனை சட்டங்களின் கீழ் றிம்ஷா மாகிஹ் என்ற அந்த இளம் பெண் கைது செய்யப்பட்டார். புனித குர்ரான் வசனங்கள் எழுதப்பட்டிருந்த காகிதங்களை எரித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. ஆனால் அவர், வயது குறைந்தவர், படிக்காதவர், கற்பதற்குத் தகைமையில்லாத குறைபாடு உள்ளவர் என்று கூறி அவர் சார்பில் வாதிடப்பட்டு வந்தது.

அப்பெண் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு ஹெலிகொப்டர் மூலம் இரகசியமான ஓர் இடத்தில் இருக்கும் பெற்றோரிடம் கொண்டு சென்று இணைக்கப்பட்டார் என்று பாகிஸ்தான் தேசிய ஒருமைப்பாட்டிற்கான அமைச்சர் பால் பாட்டி என்பவர் தெரிவித்தார். இந்த அமைச்சரின் சகோதரர் கடந்த வருடம் இந்தச் சட்டத்தில் சீர்திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என்று கூறியமைக்காக கொலை செய்யப்பட்டார். நீதிமன்றம் அழைக்கும் போது நீதிமன்றில் தோன்ற வேண்டுமென்று றிம்ஷாவுக்குக் கூறப்பட்டுள்ளது.

180 மில்லியன் மக்களைக் கொண்ட பாகிஸ்தான் நாட்டில் 97 விதமானவர்கள் முஸ்லிம்களாவர். இஸ்லாத்தை குறை கூறுவது அல்லது நபிகள் நாயகத்தை நிந்திப்பது பாகிஸ்தானில் உணர்ச்சிகளை தூண்டும் சம்பவங்களாகும். நபிகள் நாயகத்தை நிந்திப்பதற்கு மரணதண்டனையும் புனித வசனங்கள் கொண்ட காகிதங்களை எரிப்பதற்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட சட்டத்தில் இடமிருக்கிறது. மருத்துவச் சான்றிதழ் ஒன்றின்படி அவர் படிக்காதவர், 14 வயதானவர் மற்றும் மனதளவில் அவர் வயதை விட குறைந்த பருவத்தினர் என்றும் கூறப்பட்டுள்ளது. றிம்ஷாவின் வழக்கில் அவருக்கு எதிராக குற்றம் சாட்டியுள்ள சமயத் தலைவர் குற்றச் சாட்டுக்களை திணிக்க முயன்றார் எனக் கூறி கைதுசெய்யப்பட்டார்.

சமய நிபந்தனைக்கு எதிரான சட்டங்கள் பெரும்பாலும் தவறாக பயன்படுத்தப்படுவதாகவும் சில சமயம் தனிப்பட்ட குரோதங்களைத் தீர்த்துக் கொள்ளவும் பயன்படுத்தப்படுகின்றது என்றும் மனித உரிமை நிறுவனங்கள் குற்றம் சாட்டுகின்றன.

பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தாலும் தாம் தீவிரவாதிகளால் கொலை செய்யப்படலாம் என்று அந்தப் பெண் அஞ்சுவதாகச் செய்திகள் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாருக்கு ஊனம்?

அளாப்பி


செல்வராஜ்

தமிழகத்தின் காரைக்குடி பஸ் நிலையத்தில் கையேந்தி நிற்கும் பிச்சைக்காரர்களில் ஒருவர் தான் இந்த செல்வராஜ். பொருளியல் பட்டதாரியான இவரது கால்களை காலம் ஊனம் ஆக்கிவிட, பஸ் நிலையத்தில் பிச்சை எடுக்கத் தொடங்கிவிட்டார்.

இதில் என்ன புதினம் இருக்கிறது? வழமையாக பிச்சைக்காரர்கள் எல்லோருக்குப் பின்னாலும் இத்தகைய முன்னைநாள் பசுமையான வாழ்தல் பற்றிய கதைகள் இருக்கின்றன தானே என நீங்கள் எண்ணக்கூடும். ஆனால் செல்வராஜ் பிச்சை எடுப்பது தனக்காக அல்ல. அவரை நம்பி 13 குழந்தைகள் இருக்கிறார்கள். அந்தக் குழந்தைகளுக்கு பெற்றோர் கிடையாது.

அநாதைகளான இந்தப் பிள்ளைகளுக்கு கல்வி அறிவு புகட்டுவதற்காக ஏற்படும் செலவுகளை ஈடுசெய்யவே காலை முதல் இரவு வரை பிச்சை எடுத்து வருகிறார் செல்வராஜ். அநாதைகளான பிள்ளைகள் கல்வியின் மூலமாவது தங்களுடைய எதிர்காலத்தை ஒளிமயமாக்க தன்னை எரித்துக்கொண்டிருக்கிறது செல்வராஜ் என்கிற கால்களை இழந்த மெழுகுதிரி.

பஸ் நிலையத்தில் அநாதரவாக எறியப்படும் குழந்தைகளை எடுத்து ஆதரிக்கத் தொடங்கிய செல்வராஜ், அவர்களை வைத்து பிச்சை எடுத்து தன்னுடைய வயிற்றைக் கழுவாமல், அவர்களுக்கு கல்வி ஒளியூட்டி வருகிறார். பாடசாலைகளில் இந்த 13 பிள்ளைகளையும் சேர்த்ததோடு அவர்களது கல்விக்குத் தேவையான முழுச் செலவையும் பஸ் நிலையத்தில் பிச்சை எடுத்தே ஈடு செய்து வருகிறார். செல்வராஜின் அர்ப்பணிப்புக்கு ஏற்ற வகையில் இந்தக் குழந்தைகளும் கல்வியில் ஆர்வத்தைக் காட்டி வருகின்றனர்.

செல்வராஜுக்கு பிச்சை போடுகின்றவர்களுக்குக்கூட அவரது பரந்த இருதயத்தின் ஒரு சிறுபகுதியாவது இருக்குமா என்பது சந்தேகமே. போனால் போகிறது என்று அவர்கள் விட்டெறியும் சில்லறைகள் 13 சின்னக் குழந்தைகளின் வாழ்க்கையை ஒளிரச் செய்துகொண்டிருக்கிறது என்பது அவர்களுக்கே தெரியாது.

யாருக்கோ புண்ணியத்தைத் தேடிக்கொடுத்து விட்டு, 13 கைவிடப்பட்ட குழந்தைகளுக்காக தன் பயணத்தை "அம்மா தாயே! பிச்சை போடுங்க' என்று கைவிடாமல் தொடர்கிறார் செல்வராஜ்.



# சுதாவும் நானும்

-மதுஷா மாதங்கி

எழுத்துப் பிழைகளிலான உலகினை
சுதா உருட்டிக் கொண்டிருந்தாள்
அவள் உருட்டும் அழகிலோ
அல்லது
அவளின் சிறுபிள்ளைத் தனத்திலோ
இன்னும் இன்னும் உள்ள உணர்வு உடைத்தலிலோ
இவ்வாறு
ஏதோ ஒன்றில்
நான் தொலைந்து
அவள் உலகில் உருண்டு கொண்டிருந்தேன்

அவள் பொம்மைகள் செய்தாள்

பொம்மைக்கு சுதா அறிமுகம்
அழகு
அதிசயம்
ஆச்சரியம்

பொம்மை சிரித்தது அவள் சிரித்தாள்
அவள் அழுத போது பொம்மைகளை அழும் படி
கேட்டுக் கொண்டாள்
இவ்வாறு உலகினை உருட்டிக் கொண்டிருந்தாள்

மீண்டும்
சுதா பொம்மைகள் செய்தாள்
பொம்மைகளோடு ஒன்றித்துப் போனாள்
சிரித்த பொம்மைகள் அழ தொடங்கின

இப்போது
சுதாவின் உலகத்தை நான் உருட்டிக் கொண்டிருக்கிறேன்
என் பிழைகளுடன்.



# அடிமைகளின் மீட்பர்

## ஆபிரஹாம் லிங்கன்

பா.உண்மை

நெடுந் தொடர்

17



அமெரிக்காவின் பூர்வீக குடிகளான செவ்விந்தியர்களை அடக்கி ஒடுக்குவதற்காக வந்தேறு குடிகளான வெள்ளையர்கள் போரை ஆரம்பித்தார்கள். 'பிளாக் ஹாவ்க்' என்று அதற்குப் பெயரிட்டார்கள். தங்கள் வீடுகளில் உள்ள பொருள்களைச் செவ்விந்தியர்கள் சூறையாடிக்கொண்டு போய்விடுகிறார்கள் என்பதுதான் அவர்களுக்கு எதிராகப் போருக்கு அமெரிக்கர்கள் கற்பித்துக்கொண்ட நியாயம். ஆனால் செவ்விந்தியர்களின் நிலத்தையே சூறையாடி விட்டமை குறித்து அவர்கள் கிஞ்சித்தும் நினைத்துப் பார்க்கவில்லை.

அந்தப் போரில் ஆபிரஹாம் லிங்கனும் கலந்துகொண்டார். அவருடைய நண்பர்களும் தோழர்களும் அடங்கிய படைப் பிரிவுக்கு, ஆபிரஹாம் லிங்கன்தான் தளபதி. அவருடைய நண்பரான ஜேக் ஆர்ம்ஸ்ட்ரோங் அவரது முதல் உதவியாளர். இத்தனைக்கும் ஆபிரஹாம் லிங்கனுக்கு இராணுவத் தந்திரங்கள் எதுவும் தெரியாது. படை வீரர்களுக்கு எப்படிக் கட்டளையிட்டு வழிநடத்திச் செல்வது என்று தெரியாது. அங்கு தேவைப்பட்டதெல்லாம் உடல் வலிவும் மனத் துணிவும்தான். அவையிரண்டும் ஆபிரஹாம் லிங்கனிடம் இருந்தன. அதனால் அவர் தளபதியானார். அவரால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு சிறப்பாகப் பணியாற்றினார். அவரது படை வடதிசையிலும் மேற்குத் திசையிலுமாக, மிசிசிப்பி ஆற்றை நோக்கிப் பயணம் செய்தது. மிசிசிப்பி ஆற்றை அடையும் வரை அவர்கள் கண்ணில் எந்தச் செவ்விந்தியனும் படவில்லை.

லிங்கனின் படையில் இருந்த இளைஞர்களில் பெரும்பாலானோர், காட்டுப் பகுதிகளிலிருந்தும் கிராமப்புறப் பகுதிகளிலிருந்தும் வந்தவர்கள். எனவே முரட்டுக் குணத்தோடு இருந்தார்கள். அவர்களைக் கட்டுப்படுத்துவது லிங்கனுக்கு மிகக் கடினமாக இருந்தது. ஆனால் அந்தப் படையில் இருந்த அத்தனைபேரும் ஆபிரஹாம் லிங்கன் மேல் மிகுந்த மரியாதை வைத்திருந்தார்கள்.

ஆபிரஹாமின் படையினர் சண்டை பிடிக்காவிட்டாலும் தொடர்ந்து பயணம் செய்து செய்தே சில வாரங்களில் களைத்துப் போனார்கள். எந்தச் செவ்விந்தியனும் எதிர்ப்படவில்லை சண்டையும் இல்லை. இந்தச் சூழ்நிலையில் எல்லோருக்கும் வீட்டுக்குத்திரும்பவேண்டும் என்ற எண்ணமே மோலோங்கியிருந்தது. ஆனால் படைத்[illegible] [illegible]கனுக்கு எதையும் பாதியில் விட்டுவிட்டு வருவதற்கு மனமில்லை. படையிலிருந்து பிரிந்து போனவர்களை விட்டுவிட்டு, மீதிப்படையுடன் முரடான மலை, காட்டுப் பாதையில் முன்னேறிச் சென்று கொண்டே இருந்தார்.

முக்கியமான படைவீரர்களும் தன்னார்வத் தொண்டர்களும் இருந்த முகாம், வடக்கு இல்லினாய்ஸில் ராக் ஆற்றின் கரையில் இருந்தது. அந்தக் கரையை அடைந்தது ஆபிரஹாமின் படை. இங்குதான் ஓர் இளம் வயது லெப்டினன்ட்டைச் சந்தித்தார் லிங்கன். அவர் பெயர் ஜெஃபர்சன் டேவிஸ். அழகான இளைஞனாக இல்லாமல், முரட்டுத்தனம் நிறைந்த ஒரு வேட்டைக்காரனைப் போல் இருந்தார் ஜெஃபர்சன். இருவரும் பேசியே, ஒருவரைப் பற்றி மற்றொருவர் நிறையத் தெரிந்து கொண்டார்கள்; நண்பர்களானார்கள்.

அதற்கு பிறகு, மூன்று வாரங்கள் கழித்து போர் முடிவுக்கு வந்தது. செவ்விந்தியர்கள் அடித்து விரட்டப்பட்டார்கள். 'பிளாக் ஹாவ்க்' கைது செய்யப்பட்டான். அந்தப் போரில் ஆபிரஹாம் லிங்கன் எந்தச் சண்டையும் போடவில்லை. அந்த வாய்ப்பு அவருக்குக் கிடைக்க வில்லை. ஆனால் போரில் பங்கேற்றுக் கொண்டதற்காகச் சம்பளம் கிடைத்தது. 125 டொலர்கள்.

அந்த வருடம் ஜூன் மாதம், அவருடைய படை நியூ சேலத்துக்குத் திரும்பியது. அப்போது ஆபிரஹாமின் வயது இருபத்து மூன்று.

★

1832. லிங்கன் நியூ சேலத்துக்க திரும்பியபோது, மாநில சட்ட மன்றத் தேர்தலுக்கு இரு வாரங்களே இருந்தன. அக்கம் பக்கத்தவர்களும் நண்பர்களும் ஆபிரஹாம் லிங்கனைத் தேர்தலில் போட்டியிடச் சொல்லி வற்புறுத்தினார்கள்.

"ஆபிரஹாம்! நீங்கள் மேடையில பிரமாதமாய் பேசுகிறீர்கள். நன்றாகப் படித்துமிருக்கிறீர்கள். நல்லவராக வேறு இருக்கிறீர்கள். நீங்க ஏன் தேர்தலில் போட்டி போடக்கூடாது?" என்று கேட்டார்கள்.

இந்தக் கேள்வியை கிட்டத்தட்ட எல்லோருமே லிங்கனிடம் கேட்டார்கள். இதனால் ஆபிரஹாம் லிங்கனும் தேர்தலில் போட்டியிடுவது என்று முடிவு செய்தார். வேட்புமனுத் தாக்கல் செய்தார். அதற்கு அடுத்த கட்டம்? வேறென்ன பிரசாரம்தான்.

ஸ்பிரிங்ஃபீல்டிலிருந்து பன்னிரண்டு மைல் தொலைவில் இருந்த பாஸ்வில்லி என்ற ஊரில் தமது முதல் தேர்தல் பிரசாரத்தை நிகழ்த்தினார் ஆபிரஹாம் லிங்கன்.

"கனவான்களே! குடிமக்களே! உங்கள் எல்லோருக்கும் என்னைத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். நான்தான் அந்த எளிமையான ஆபிரஹாம் லிங்கன். இந்தச் சட்டமன்றத் தேர்தலுக்கு, ஒரு வேட்பாளராக, என்னுடைய நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி நான் போட்டியிடுகிறேன்" என்றார் லிங்கன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூருக்கு உயிரூட்டுங்கள்...

**வெளிநாடுகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களைக் கொண்டுவந்து கண்ணாடிகளால் அடைக்கப்பட்ட குளிரூட்டப்பட்ட அறைகளில் வைத்து விளம்பரங்கள் செய்து விற்பனை செய்கின்றனர். ஆனால் உள்ளூர் உற்பத்திகள் என்றார் வெறுப்புக் காட்டுகின்றனர். ஏன் இந்த நிலைமை இந்த நிலையில் மாற்றம் வருவது எப்போது என்று வேதனையடைகின்றனர் சிறு சிறு உற்பத்தியாளர்கள்.**



■ சுவாதி

வளங்கொழிக்கும் பூமியாகக் குடாநாடு உள்ள போதும், அதன் வளம் மழுங்கடிக்கப்பட்டு தரிசு நிலமாக மாற்றப்பட்டு வருகிறது. எதுவும் அற்ற வறண்ட பூமி குடாநாடு என்று சொல்லும் நிலைக்கு கொண்டு செல்லப்படுகிறது.

ஏன் இந்த நிலைமை? இந்த நிலை முற்றாக மாற்றப்படவேண்டும் என்று பலதரப்பட்டோர் மத்தியில் கருத்துகள் உள்ளபோதும் அதை நடைமுறைக்கு- ஒரு சீரான ஒழுங்கமைப்பின் கீழ் கொண்டு வருவதற்கு எவரும் முன்வராத நிலைமைதான் காணப்படுகின்றது.

எமது உள்ளூர் உற்பத்திகள் எவ்வளவு பெறுமதி வாய்ந்தவை என்பது உணரப்படாத வரைக்கும் அவற்றின் வளர்ச்சியில் பின்னோக்கிய நிலைமைதான் காணப்படும்.

வெளிநாடுகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களைக் கொண்டுவந்து கண்ணாடிகளால் அடைக்கப்பட்ட குளிரூட்டப்பட்ட அறைகளில் வைத்து விளம்பரங்கள் செய்து விற்பனை செய்கின்றனர். ஆனால் உள்ளூர் உற்பத்திகள் என்றால் வெறுப்புக் காட்டுகின்றனர். ஏன் இந்த நிலைமை? இந்த நிலையில் மாற்றம் வருவது எப்போது என்று வேதனையடைகின்றனர் சிறு சிறு உற்பத்தியாளர்கள்.

உணவுப் பொருள்களை இறக்குமதி செய்து விற்பனை செய்கின்றோம் என்றால், ஏன் உள்ளூர் உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யமுடியாது,

வெளிநாடுகளில் இருந்து இங்கு வருவோர் தேடுவதும் நாடுவதும் பருத்தித்துறை வடை, புழுக்கொடியல், பனாட்டு, எள்ளுப்பா, எள்ளுருண்டை என்று குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களையே.

இந்த வகையில் இவ்வாறான பொருள்களைத் தரமானவையாகத் தயாரித்து விற்பனைக்கு விட்டால், அவை விற்றுத் தீர்ந்து விடும் என்பதில் இரு வேறுபட்ட கருத்துக்களுக்கு இடம் இல்லை.

பொதுவாகத் தற்போது சுய தொழில் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆடு வளர்க்க, கோழி வளர்க்க, சிறு தொழில்கள் செய்ய என்று உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தச் சிறு உதவிகளை ஒன்று திரட்டி உள்ளூர் உற்பத்திகளைப் பெரியஅளவில் உற்பத்தி செய்யும் வகையில் நிறுவன மயப்படுத்தி இவ்வாறானவர்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்கும் போது ஒரு கல்லில் இரு மாங்காய் அடித்த வெற்றி நிச்சயம் கிடைக்கும்.

இவ்வாறான செயற்பாடுகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். ஏனோ தானோ என்று இவ்வாறான திட்டங்கள் மேற்கொள்ளப்படுமிடத்து தரமற்ற பொருள்கள் உற்பத்தி செய்யப்படுவது தவிர்க்க முடியாது போய்விடும்.

சரியான தலைமைத்துவத்தின் கீழ், வழிநடத்தலின் கீழ் சரியாகத் திட்டமிடப்பட்டு இந்த உற்பத்திகள் மேற்கொள்ளப்படவேண்டியதே அவற்றின் வெற்றிக்கு வழி சமைப்பனவாக இருக்கும்.

அது மட்டுமன்றி இந்த உற்பத்திப் பொருள்கள் எவ்வாறு விற்பனைக்கு வைக்க வேண்டும் என்பதிலும் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் அவசியம்.

அதாவது தரமான உற்பத்திப் பொருளாக இருந்த போதிலும் அது உரிய வகையில் மிகவும் கவர்ச்சிகரமாகக் காட்சிக்கு வைக்கப்படாதவிடத்து, அது விற்பனையில் வீழ்ச்சி நிலையையே எட்டும் என்பதில் இரு வேறுபட்ட கருத்துகளுக்கு இடமில்லை.

இந்த நிலையில் கைதடியில் உள்ள பனை ஆராய்ச்சி நிலையம் விற்பனை தொடர்பில் எடுத்துள்ள தீர்மானம் வரவேற்கத்தக்க ஒன்றுதான்.

அதாவது பனை உற்பத்தி மற்றும் விற்பனையை ஊக்குவிக்கும் முகமாக கைதடி பனை ஆராய்ச்சி நிலையத்துக்கு முன்பாக 'பனை எழில் நகர்' எனும் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பனை சார்ந்த கண்காட்சி நிலையம், பனைஉற்பத்திப் பொருள்களை தயாரிக்கும் நிலையம், அவற்றைச் சந்தைப்படுத்தும் வசதிகள் மற்றும் உணவு பரிமாறும் பகுதிகள் என்பவற்றை உள்ளடக்கியதாக இந்தப் பனை எழில் நகர் அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம் பனை உற்பத்திப் பொருள்களின் சந்தைப்படுத்தல்களை நிச்சயம் அதிகரிப்புச் செய்ய முடியும்.

ஏ-9 வீதியில் இதற்கெனக் கொள்வனவு செய்யப்பட்ட இதற்கான கட்டடம் அமையப்பெறவுள்ளமை மிகவும் வாய்ப்பைப் பெற்றுத் தரும் என்பதை மறுப்பதற்கு இல்லை.


இந்தக் கட்டடம் சுமார் ஐந்து மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது என்றும் இதற்கான நிதி கிடைக்கப்பெற்றதும் இந்தக் கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப் படவுள்ளதாகவும் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்துள்ளார். இந்தவிடயம் பனம்பொருள் உற்பத்தியாளர்களிடத்தில் அளவில்லா மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விடயத்தில் காலம் தாழ்த்தாது செயற்படவேண்டியது அவசியம்.

காலத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு இதற்கான செயற்பாடுகள் விரைந்து மேற்கொள்ளப் படவேண்டும். இந்தப் பனை எழில் நகரின் மூலம் சுற்றுலாப் பயணிகள் மட்டுமன்றி உள்ளூர் மக்களும் தமக்கு வேண்டிய, தமக்கு விரும்பிய பொருள்களைப் பார்வையிட்டு விருப்பத்துக்கு ஏற்றாற்போல் கொள்வனவு செய்ய முடியும்.

இந்தத் திட்டம் உரியவகையில் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுமிடத்து வேலை வாய்ப்பு இன்றி இருக்கும் ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்க முடியும்.

அரசின் கைகளை நம்பியிராது எமது உள்ளூர் உற்பத்திகள் மூலம் அதிக வருவாயைப் பெருவதுடன் தொழில் அற்று இருக்கும் குடும்பங்களையும் வாழ வைக்க நடவடிக்கை எடுப்போம்.



■ வீணா

# புரிந்து கொள்ளுங்கள்

புரிந்துணர்வு என்பது எல்லாத் தரப்பு உறவு முறைகளுக்கும் பொதுவான ஒன்று. புரிந்துணர்வு இல்லை என்றால் வேலை, சொந்தங்கள், நட்பு என்று எல்லாவற்றையும் இழக்க வேண்டிய சூழல் உருவாகி விடும்.

பிள்ளைகளுக்கும், பெற்றோர்களுக்கும் உள்ள புரிந்துணர்வு, தங்களது நண்பர்களைப் போன்று பெற்றோரையும் நேசிக்க வைக்கும்.

காரணமில்லாமல் தங்கள் பிள்ளைகள் வேண்டாத செயல்களில் இறங்கமாட்டார்கள் என்ற புரிந்துணர்வுதான் பிள்ளைகளைப் பெற்றோருடன் நெருங்கச் செய்து அவர்கள் தவறான பாதைக்குச் செல்வதற்கான தயக்கத்தை ஏற்படுத்தி அவர்களை நல்வழிப்படுத்தும்.

படிப்பில் நாட்டமில்லை என்றால் அந்தக் குழந்தையின் மனதில் ஏதும் குழப்பங்கள் இருக்கலாம் அதைப் பெற்றோர் தான் புரிந்து கொண்டு நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

தம்பதிகளுக்கான புரிந்துணர்வு கணவன், மனைவியை ஒருவருக்கொருவர் நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டும். சாதாரணமாக மறுபாலாருடன் பேசினாலே, சந்தேகத்தோடு பார்ப்பவர்கள் மத்தியில் சரியான புரிந்துணர்வு இல்லையென்றுதான் கூறவேண்டும்.

தன்னுடைய கணவனோ மனைவியோ தப்பான பாதைக்குப் போக மாட்டார்கள் என்ற அடிப்படைத் தெளிவு இருந்தால், வீணான சண்டைகளுக்கும், அதன் மூலம் வரக் கூடிய விவாகரத்துக்கும் அவசியமே [illegible]

நண்பர்களின் மத்தியி[illegible] றும் சண்டைகளுக்கும் தான் போதிய புரிந்துணர்வு இல்லாமைதான் காரணம் தற்போது இணையத் தள நண்பர்களின் எண்ணிக்கைகள்தான் அதிகம். தொடர்பு கொள்ள முடியாத சூழ்நிலைகள் இருக்கலாம், உடல் நலமில்லாமல் இருக்கலாம் [illegible] அதற்காக கோபப்பட்டு இனிய நண்பர்களையும் இழந்து விடும் நிலைமைதான் அதிகம் உள்ளது.

வேலை செய்யுமிடத்தில் கூட அதிகாரத்தில் உள்ளவர்களுக்கும், சம்பளம் வாங்குகிறவர்களுக்கு மிடையே போதிய புரிந்துணர்வு இருந்தால்தான் அந்த நிறுவனம் பல வெற்றிகளைப் பெறமுடியும்.

அதில்லாது ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசைகளைப் பார்த்துக் கொண்டிருந்தால் அனைவருக்கும்தான் நஷ்டம்.

ஒரு வேலையில் ஏதாவது சிக்கல் நிலைமைகள் ஏற்படும் போது அதை ஒருவருக்கு ஒருவர் பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும். அதை விடுத்து அதற்கான காரணக் கற்பிதங்களையோ விதண்டாவா தங்கள் கற்பித்துக் கொண்டு இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

அதிகாரத்தில் உள்ளவர்கள் தமக்குக் கீழ் உள்ளவர்கள் விடயத்தில் எந்தளவுக்குப் புரிந்துணர்வுடன் இருக்கிறார்கள் என்பதில் தான் அவர்களின் வெற்றி அடங்கியுள்ளது.

ஒருவர் குறித்து மற்றவர் கூறும் குறை- குற்றங்களைத் தூக்கித் தலையில் போட்டுக் கொண்டு குறிப்பிட்ட ஒருவர் மீது கடுகடுப்பாக இருப்பது எல்லாம் உளவியல் ரீதியான பாதிப்புகளை நிச்சயம் ஏற்படுத்தும்.

இது குறிப்பிட்டவர்களை வேலையில் நாட்டம் கொள்ளச் செய்யாது மனதளவில் சோர்வடையச் செய்துவிடும்.

அதிகாரிகள் தரப்புக்கு எவ்வளவு நம்பிக்கைக்கு உரியவர்களாகச் செயற்பட்டாலும் கூட அவர்கள் அதனைப் புரிந்து கொள்ளாத அளவுக்கு குறிப்பிட்ட நபர் தொடர்பாக அவர் மீது தவறான அபிப்பிராயம் திணிக்கப்பட்டிருக்கும். இவற்றுக்கு எல்லாம் புரிந்துணர்வு இன்மைதான் முழுக் காரணமும். புரிந்துணர்வுதான் வெற்றிகளுக்கும், சொந்தங்களை வலுப்படுத்துவதற்குமான பாலம் என்று கூறலாம்.

வாழும் காலம் மிகக் குறைவு. அதிலும் மகிழ்ச்சியுடன் வாழ்வதென்பது மிகவும் கடினம். ஆகவே நம்மால் முடிந்த விதமாக மகிழ்ச்சியை நாமே உருவாக்குவதுதான் ஒரே வழி. அதற்குப் புரிந்துணர்வுதான் மிக முக்கியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடங்குளத்தில் பறிபோகும் உயிர்கள்



■ யமுனா

தமிழகத்தின் திருநெல்வேலி மாவட்டத்தையே உலுக்கி வருகிறது கூடங்குளம். ரஷ்யாவின் உதவியுடன் உருவாக்கப்பட்டுவரும் கூடங்குளம் அணுமின் நிலையப் பிரச்சினை கடந்தவாரம் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளமை வேதனை தருகிறது.

அணு உலைப் பணிகள் ஆரம்பமாகிய நாளில் இருந்தே அணுமின் நிலையம் அமைவதை பல்வேறு தரப்பினரும் எதிர்த்து வந்தனர். இந்த நிலையில் கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் ஜப்பானில் புகுஷிமாவில் இடம்பெற்ற அணு உலை விபத்துக்குப் பின்னர் இந்த எதிர்ப்பு தீவிரமடைந்து உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது.

கடந்த 397 தினங்களாக அணுமின் நிலைய எதிர்ப்புப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. கூடங்குளம் அருகே உள்ள இடிந்த கரை கிறித்தவ தேவாலய வளாகத்தில் மக்கள் திரண்டு, நாள் தோறும் எதிர்ப்பு முழக்கங்களை எழுப்பி வந்தனர். அதற்கான எதிர்ப்புகள் ஏற்பட்டதால் இடையில் அவை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

சுற்றுச் சூழல் கடுமையாகப் பாதிக்கப்படக் கூடிய வாய்ப்பிருப்பதால் அணுமின் நிலையம் அமைய அனுமதிக்கக் கூடாது என்று கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு நிராகரிக்கப்பட மின் உற்பத்திக்கு முதற்கட்டமான எரிபொருள் நிரப்பும் பணி கூடங்குளத்தில் ஆரம்பமாகவுள்ளது என்று மத்திய அரசு தெரிவித்தது.

இதன் பின்னணியிலேயே எதிர்ப்பாளர்கள் தேவாலய வளாகத்திலிருந்து வெளியேறி அணுமின் நிலையத்தை முற்றுகையிடப் போவதாக அறிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆயிரக் கணக்கான எதிர்ப்பாளர்கள் திரண்டு கடற்கரை வழியே கூடங்குளத்தை நெருங்கியபோது பொலிஸாரால் கடும் அடிதடிகளுடன் தடுக்கப்பட்டனர்.

இந்த நிலையில் ஞாயிறன்று இரவு முழுதும் மின் நிலைய வளாகத்திலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் கடற்கரையிலேயே அமர்ந்து அணு உலைக்கு எதிரான முழக்கங்கள் எழுப்பிய வண்ணமிருந்தனர். கலைந்துபோக மறுத்த மக்கள் மீது மறுநாள் திங்களன்று காலை பொலிஸார் கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தினர். தடியடி நடத்தி கண்ணீர் புகைக் குண்டுகளும் வீசினர்.

இந்தத் தாக்குதலில் ஏராளமானோர் படுகாயமடைந்தனர். மூன்று வயதுக் குழந்தை ஒன்றும் உயிரிழந்த கொடூரம் இந்தப் போராட்டத்தின் போது இடம் பெற்றுள்ளது.

இந்தப் போராட்டத்தின் போது பொலிஸாரின் அடிதடியில் இருந்து தப்புவதற்காக இளைஞர்கள் சிலர் கடலில் குதித்தனர். இதேவேளை கூடங்குள ஆர்ப்பாட்டத்துக்குத் தலைமைதாங்கிய சுப. உதயகுமார் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் நூலிழையில் தப்பிய அவரும் மேலும் சில ஆர்ப்பாட்டக்காரர்களும் கடல் வழியாக படகுகள் மூலம் தப்பித்துச் சென்றுள்ளனர்.

இந்த நிலையில் இடிந்தகரை அன்று ரணகளமாகியது. இந்த மோதலில் பொலிஸார் சிலரும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலரும் காய முற்றனர்.

கூடங்குளத்தில் அணுமின் நிலைய எதிர்ப்பாளர்கள் மீது தடியடி மற்றும் கண்ணீர்ப் புகை பிரயோகம், தூத்துக்குடியில் துப்பாக்கிச் சூடு உள்ளிட்ட பொலிஸாரின் நடவடிக்கைக்குக் கண்டனம் தெரிவித்து தமிழ் நாட்டில் ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்களும் நடந்தேறின.

அணு மின் நிலையம் குறித்த சர்ச்சை தொடரும் நிலையில், இந்திய அணு சக்தி ஒழுக்காற்று



ஆணையம்ஜப்பானின்புகுஷிமா அணுமின்நிலைய விபத்தைத் தொடர்ந்து இந்திய அணு மின் நிலையங்களில் பாதுகாப்பு அம்சங்களை வலுப்படுத்துவது குறித்து ஆராய்ந்து சமர்ப்பித்த அறிக்கையில், கூடங்குளம் குறித்து, 17 பரிந்துரைகளை அளித்தது. இதில் இதுவரை ஆறு பரிந்துரைகள் மட்டுமே நடைமுறைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. என்று அந்த ஆணையமே, சென்னை உயர் நீதிமன்றத்தில் கூறியிருக்கிறது. மீதமுள்ள 11 பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்திய பின்னரே இந்த அணு மின் நிலையம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று இந்த மின் நிலையத்தை எதிர்ப்பவர்கள் வாதிடுகிறார்கள்.

ஆனால் இந்தப் பரிந்துரைகள் ஒவ்வொன்றுக்கும் அவை எந்தக் கட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்கான காலக்கெடு இருக்கிறது. அந்த காலக் கிரமப்படி இவை நடைமுறைப் படுத்தப்படும் என்று இந்திய அணு சக்தி ஆணையத்தின் முன்னாள் தலைவர் எம்.ஆர். ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார்.

இது ஒருபுறமிருக்க கூடங்குளம் அணு உலைக்கு எதிராக, கடந்த வியாழக்கிழமை கடலில் சத்யாகிரகப் போராட் டம் ஒன்றிலும் போராட்டக்காரர்கள் ஈடுபட்டிருந்த னர்.

அதன்படி இடிந்தகரை அருகே கடலில் இறங்கி மனிதச்சங்கிலி அமைத்து புதிய பாணியில் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் குதித்தனர். பெண்கள் உட்பட ஏராளமானோர் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கூடங்குளம் அணு உலைக்கு எதிரான போராட்டக் குழுவின் தலைவர் சுப. உதயகுமார் பொலிஸ் கண்ணில் படாமல் மறைந்திருந்த நிலையில், அவர் இல்லாமலேயே இந்தப் போராட்டம் நடைபெற்றது.

அசம்பாவித சம்பவங்கள் ஏதும் நடை பெறாமல் தடுக்க, அங்கு பெருமளவில் பொலிஸார் பாதுகாப்புக்காகக் குவிக்கப்பட்டனர்.

கூடங்குளம்அணு உலையில், எரிபொருள் நிரப்புவதை நிறுத்த வேண்டும், போராட்டக் குழுவின் தலைவரைக் கைது செய்வதை நிறுத்த வேண்டும், ஏற்கனவே கைதானவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டக்குழுத் தலைவர் உதயகுமாரை வள்ளியூர் நீதிமன்றத் தில் நேரில் முன்னிலையாகி விளக்கம் அளிக்க வேண்டும் என்று நீதிமன்றம் அழைப்பாணை பிறப்பித்துள்ளது.

நாளை மறுதினம் 18 ஆம் திகதி நேரில் முன்னிலையாக வேண்டும் என்ற அழைப்பாணையை நாகர் கோவில் பொலிஸார் உதயகுமார் வீட்டில் ஒட்டியுள்ளனர்.

போராட்டம் சூடுபிடித்த நிலையில் கூடங்குளம் அணுமின் நிலையத்தில் எரிபொருள் நிரப்புவதற்கு தடை விதிக்க வேண்டும் என்று கோரி போராட்டக்காரர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஏற்க இந்திய உச்ச நீதிமன்றம் மறுத்து விட்டது.

கூடங்குளத்தால் இன்னும் எத்தனை உயிர்கள் பறிபோகப் போகின்றன?



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பலியிடுவது பாவமா.. பாவ விமோசனமா...?

ரம்யன்

உணவுக்காக பசு மாடுகளை அறுத்துக்கொலை செய்வதற்கு எதிராக நாட்டின் பல பாகங்களிலும் இப்பொழுது பெரிய இயக்கங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. பசுவதையை பௌத்த மதத்தினர் மட்டுமல்ல இந்து மதத்தினரும் எதிர்க்கிறார்கள்.

தாயில்லாபிள்ளைகளுக்கு பாலைத்தந்து உதவுகிறது. விவசாயிக்கு உரமாக சாணத்தை வழங்குகின்றது. நவீன காலத்தில் பசுவின் சாணமும் சிறுநீரும் உயிர்வாயு உற்பத்திக்கு மூலப் பொருள்களாகப் பயன்படுகின்றன. பசுவால் இன்னும் எத்தனையோ பயன்பாடுகள் உண்டு.

ஆனால் பசுவிலிருந்து கிடைக்கும் பயன்பாடுகள் குறைந்து விடும் போது மனிதர்கள் நன்றி மறந்து அதனைக் கசாப்புக் கடைக்கு விற்றுவிடுகிறார்கள்.

இப்பொழுது மாட்டிறைச்சிக் கடைகளையும் ஆட்டிறைச்சிக் கடைகளையும் மூடிவிட வேண்டும் என்றும் கூட கோரிக்கைகள் விடுக்கப்படுகின்றன. ஆனால் இறைச்சிக் கடைகளை மூடிவிட்டால் மட்டும் மாமிசம் உண்பது குறைந்துவிடும் என்றோ மாமிசத்துக்காக உயிர்கள் கொல்லப்படுவது நின்றுவிடும் என்றோ கூறிவிட முடியாது. என்றாலும் உயிரினங்கள் மீது மனிதர்களுக்கு அன்பும் இரக்கமும் ஏற்பட்டுவருவதை பாராட்டத்தான் வேண்டும். தென்னிலங்கையில் பல இடங்களில் இறைச்சிக்காக வெட்டுவதற்காக கொண்டு போகையில் பசுமாடுகள் காப்பாற்றப்பட்டு விடுவிக்கப்பட்டதாக அடிக்கடி செய்திகள் வருகின்றன. இவை மனிதர்களின் ஜீவகாருண்யத்துக்கு அறிகுறி என்று கூறிக்கொள்ளப்படுகின்றது.

கடலில் இருந்து தினந்தோறும் இலட்சக் கணக்கான மீன்கள், நண்டுகள், இறால்கள் இன்னும் பல வகையான உயிரினங்கள் வலைகள், துண்டில்கள் மற்றும் பலவழிகளில் பிடித்துக் கொல்லப்படுகின்றன. இவை நீரில் இருந்து வெளியில் எடுக்கப்பட்டவுடனேயே மூச்சுத் திணறி இறந்து போய் விடுகின்றன. பெரிய மீன்களை துடிக்க துடிக்க வெட்டுகிறார்கள். கொதி நீரில் உயிருடன் நண்டுகளை அவிய விடுகிறார்கள். இவையெல்லாம் கொடுமையான உயிர் கொலையல்லவா? இவைகளைத் தடுக்க யார் முன்வருகிறார்கள்?

ஆனால் இவைகளை தடுத்து விடமுயன்றால் கடல் தொழில் சீர் குலைந்துபோகும். இலட்சக் கணக்கான தொழிலாளர்கள் தொழில் இழந்துபோவார்கள். கோழிகள் வெட்டப்படுவது நிறுத்தப்பட்டால் கோழிப்பண்ணைகளை மூடியாகவேண்டும். முட்டை உற்பத்தி நின்று போய் விடும். ஆயிரக்கணக்கானோர் தொழில் இழப்பர்.

நாட்டிலுள்ள அனைவரும் மாமிசம்,மீன், முட்டை மற்றும் அதுபோன்ற உணவுகளை தவிர்ப்பார்களானால் நாட்டு மக்கள் அனைவருக்கும் தேவையான மரக்கறிகளை உற்பத்தி செய்வது என்பது இன்னுமொரு பெரும் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்துவதாக அமையும். ஆக, சமய அடிப்படையில் நாட்டின் அபிவிருத்திகளை பொருளாதார நோக்கங்களைத் திட்டமிடுவதென்பது சாத்தியமற்ற விடயம். ஆனால் கோயில்களில் மிருகங்களையும் பறவைகளையும் பலியிடுவதென்பது வேறு விடயம்.

ஒருகாலத்தில் மனிதர்களையும் கூட தெய்வங்களுக்கு பலியிடும் வழக்கம் இருந்துள்ளது. அந்த வழக்கம் தவறு என்று உணரப்பட்டதன் பின்னர் மிருகங்களைப் பலியிடுவதில் மனிதன் இறங்கினான். அதுவும் தவறு என்று உணர்ந்ததன் பின்னர் சில கோயில்களில் நடக்கும் வேள்விகளின்போது பலாக்காய்கள், பூசணிக்காய்களை வெட்டி படைக்கும் நடைமுறை வந்தது என்பார்கள்.

### மனிதனை பலியிட்ட அரக்கன்

ஒரு காலத்தில் நரமாமிசம் உண்ணும் அரக்கன் ஒருவன் இருந்தான். அவன் தான் வணங்கிய வனதேவதையொன்றுக்கு மனிதர்களை பிடித்து வந்து பலியிடுவான். பின்னர் அந்த மாமிசத்தை தானே உண்டு களிப்படைவான். இவன் கொடுமை தாங்க முடியாத நாட்டுமக்கள் தங்கள் குல தெய்வங்களிடம் முறையிட்டு காப்பாற்றும் படி கேட்டு தவம் இயற்றினார்கள்.

ஒரு தினம் அரக்கன் வழமை போல் ஒரு வைபவத்தின்போது மனிதர்கள் சிலரைப் பிடித்து கட்டி இழுத்து வந்து வன தேவதையின் பலிபீடத்தின் முன் நிறுத்தி பலியிடுவதற்கான சடங்குகளை ஆரம்பித்தான். எதிர்பாராத விதமாக வனதேவதை அவன் முன்னால் தோன்றியது.

அரக்கன் மகிழ்ச்சியடைந்து தேவதையை வணங்கி கைகட்டி வாய் புதைத்து நின்றான். தெய்வம் கேட்டது

''என்னால் படைக்கப்பட்ட மனிதர்களை எனக்கே பலியிட கொண்டு வருகிறாயே, அவ்வாறு பலியிடப்படும் மனிதர்களை உன்னால் மீண்டும் உயிர்பிக்க முடியுமா''? என்று.

அரக்கன் யோசித்து விட்டு என்னால் எவரையும் உயிர்ப்பிக்க முடியாது என்று ஒப்புக் கொண்டான்.

''அவ்வாறானால் அவர்களை உயிர் பலியிடுவதற்கு மட்டும் உனக்கு உரிமை எங்கிருந்து வந்தது?'' என்று தெய்வம் கேட்டது.

அரக்கன் மீண்டும் சற்று யோசித்துவிட்டு ஆனால் அவர்களை உனக்குத்தானே பலியிட்டு படைக்கிறேன்'' என்றுஇறுமாப் போடு கூறினான்.

''அப்படி செய்யும்படியாக உன்னை நான் எப்போதாவது கேட்டதுண்டா, எனக்கு படைப்பதாகக் கூறிக்கொண்டு நீதானே வயிறுமுட்ட உண்டுகளிக்கிறாய்'' என்று கூறிய தெய்வம் அவனிடம் கேட்டது. ''உன் சொந்த தேவைக்காக உயிர்களைப் பலியிட்டுவிட்டு அந்தப் பழியை என்மீதே போட்டுவிடுகிறாயே உனக்கு தண்டனை கிடைக்காது என்ற நினைப்பா'' என்று.

அவன் செய்வதறியாது திண்டாடிக் கொண்டிக்கும்போதே வன தேவதை "உனக்கு தண்டனையை நானே தரப்போகிறேன், இந்த வனத்தில் உள்ள என்னைவிட பெரிய தெய்வத்துக்கு அரக்கனான உன்னைப் பலியிடப் போகிறேன். என்ன சொல்கிறாய்'' என்று கேட்டது அரக்கன் தடுமாறிப் போனான், தெய்வத்தின் காலில் விழுந்து கதறினான்'', ''என்னை விட்டுவிடுங்கள். இது வரை அறிவில்லாமல் இவ்வாறு செய்துவிட்டேன், இனிமேல் நரமாமிசம் உண்பதையும் மனிதர்களைப் பலியிடுவதையும் முற்றாக விட்டுவிடுகிறேன்''. என்று கூறிக் கொண்டு அந்த இடத்தை விட்டு ஓட்டம் பிடித்தான்.

இந்தக் கதை உண்மையானதோ இல்லையோ, அதில் ஓர் நீதி இருப்பதை உணரலாம்.

**அசை போட ஒரு விடயம் 44**

### கழுதையாக வந்த கண்ணன்

பிருந்தாவனத்தில் கண்ணன் விளையாடிய பொய்கையொன்றிலிருந்து தீர்த்தம் எடுத்துக் கொண்டு பக்தர்கள் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு பின்னால் ஒரு ஞானியான கிருஷ்ண பக்தரும் ஒரு பாத்திரத்தில் தீர்த்தத்துடன் சென்று கொண்டிருந்தார். கடும் வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. எல்லாருக்குமே தாகம். ஆனால் தீர்த்தத்தை குடித்து முடித்துவிட எவரும் விரும்பவில்லை. வறண்ட பாலை வனம் போன்ற அந்தப் பகுதியில் எங்குமே தண்ணீர் இல்லை. நாக்கு வறண்டு போயிற்று ஞானிக்கு, அப்பவும் தீர்த்தத்தை குடிக்காமல் கொண்டு போய் ஆசிரமத்தில் உள்ளவர்களுக்கு வழங்கவேண்டும் என்ற வைராக்கியத்தில் போகிறார்.

வழியில் ஒரு கழுதை தண்ணீருக்காக ஏங்கித்தவித்தபடி நின்றது. நடக்கவும் முடியாமல் தவிக்கும் அந்தக் கழுதையை எவரும் கவனிப்பதாக இல்லை. ஞானி கழுதையைப் பார்க்கிறார். அதன் நிலை மிகப் பரிதாபகரமாக உள்ளது. அவர் நினைக்கிறார் தெய்வம் எந்த ரூபத்திலும் வரலாம்.

இந்தக் கழுதையும் பகவானாக இருந்து என்னை சோதிக்கலாம் அல்லவா? தன்கூடதாகத்தை தீர்த்துக் கொள்ளாமல் வைத்திருந்த தீர்த்தத்தை எடுத்து கழுதையின் தாகத்தைத்தணிக்கிறார். அதன் கண்களில் நன்றி உணர்வு பெருக்கெடுத்து ஓடுகிறது. ஞானி மெய்மறந்து கண்களை மூடி இறைவனைத் துதித்து கண் விழிக்கிறார்.

தன் முன்னால் நிற்பது கழுதையல்ல. சாட்சாத் கண்ணனே மண்டியிட்டு அமர்ந்து கொண்டு இருக்கிறான் சிரித்தபடி.

இறைவன் விரும்பினால் எந்த உருவிலும் தோன்றுவார் என்பதை மட்டுமல்ல எல்லா உயிர்களிடத்திலும் அன்பு காட்ட வேண்டும் என்பதை உணர்த்துகிறது இந்த நிகழ்வு.

பசுவின் கன்றை தேர் சில்லினால் நசித்துக்கொன்ற தன் மகனையே அதேவிதமாக தேரினால் நசித்துக் கொன்று நீதி வழங்கிய மனுநீதி கண்ட சோழனின் பாரம்பரியத்தை பாராட்டும் இந்து மத்தினர் தெய்வத்தின் பேரால் மிருகங்களைப் பலியிடுவது கொடுமையல்லவா? கருணையின் வடிவமான தெய்வம் மிருக பலிகேட்பதாக பாவனை செய்து கொள்வது பாவம் ஆகாதா? சிந்திக்கவேண்டிய விடயம்.

# அழகான சிற்பங்களாய் செதுக்குங்களேன்....

மா.பத்மராஜ்
மருதங்கேணி

அ'அரிது அரிது மானிடராய்ப்பிறத்த அரிது" என்றார் ஔவையார். ஆம் உலகிலேயே கிடைத்ததற்கரிய செல்வம் பிள்ளைச் செல்வம். வாழ்க்கையில் வழிதவறி நெறி பிறழ்ந்து போகாமல் அவர்களை ஒழுக்க சீலர்களாய் உன்னத புருஷர்களாய் வாழ வழி சமைத்துக் கொடுக்க வேண்டியவர்கள் பெற்றோருமே. ஆசிரியர்களும் பெரியோர்களுமே. பிள்ளைகளின் உடல்,உள, சமூக நலன்களில் மிகவும் விழிப்பாகவும், அக்கறையாகவும் இருக்க வேண்டியவர்கள் இவர்களே. ''ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க எமது உயிரினும் மேலாகப் பாதுகாக்கப்பட வேண்டியது சீரிய ஒழுக்கமேயாகும். ஒழுக்கம் குன்றின் நமது சமூகம் சீரழிந்து சின்னாபின்னமாகிவிடும்.

உருண்டோடும் இன்றைய நவீன உலகில் பிள்ளைகளின் ஒழுக்கம் பல வழிகளில் சீர்கெட்டுச் செல்வதை நாம் காணக்கூடியதாகவுள்ளது. அதாவது பெற்றோரின் கண்காணிப்புச் சரியாக இல்லாத பட்சத்தில் அங்கு பிள்ளை தான் செய்வது எல்லாம் சரியென்றோ அன்றி தான் எதையும் செய்யலாம் என்ற நிலைக்கோ தள்ளப்படுகின்றது. பிள்ளைகளின் உணவு, உடை, கல்வி போன்ற விடயங்களில் மட்டும் பெற்றோர் அக்கறையோடு இருந்தால் போதாது. தமது பிள்ளைகளின் ஒழுக்கம் சம்பந்தமான விடயங்களிலும் மிகமிக அக்கறையாக இருக்க வேண்டும். பிள்ளைகள் எதைச் செய்கிறார்கள், எப்படிச் செய்கின்றார்கள், அவர்கள் செய்யும் செயல்கள் சரியானவையா? அல்லது பொருத்தப்பாடற்ற செயல்களா? என்பதில் விழிப்பாக இருந்து அவ்வப்போது நல்லவை எவை? தீயவை எவை? என எடுத்துரைத்து நேரிய வழியில் இட்டுச் செல்வது வேண்டற்பாலது.

இன்றைய நவீன உலகின் தேவைக்கு ஏற்ப மனிதன் தனது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வேலைகளை இலகுபடுத்திக் கொள்ளவும் பல சாதனங்களையும் கருவிகளையும் ஆக்கியுள்ளான். தொலைபேசி, கணனி, இணையம் போபன்ற தொடர்பாடல் ஊடகங்கள் இன்று வீட்டுக்கு வீடு விரவி காணப்படுகின்றன. இவற்றில் நல்ல விடயங்களை மட்டுமே பெற்று பயனடைய வேண்டும். ஆனால் இன்று பெற்றோரின் கவனக் குறைவால் பிள்ளைகள் இவற்றைத் தீய வழியில் பயன்படுத்தி சீரழிந்து போவதை நாம் காணக் கூடியதாகவுள்ளது. பெற்றோர் பிள்ளைகளின் தேவைகளை உணராது அவர்களின் விருப்பத்திற்கிணங்க கையடக்கத் தொலைபேசிகளை வாங்கிக் கொடுக்கின்றார்கள். அவர்கள் அவற்றில் தேவையற்ற உரையாடல்களில் ஈடுபடுவதோடு தாம் செல்லும் இடமெல்லாம் எடுத்துச் செல்கின்றனர். அத்துடன் வீட்டில் தொலைக்காட்சியில் பிள்ளைகள் பொருத்தமற்ற காட்சிகள் , ஆபாசப் படங்கள் என்பவற்றைப் பார்த்தல், கணினியிலும் அவ்வாறே கற்றல் விடயங்கள் தவிர்ந்த [illegible] பொருத்தமற்ற [illegible] ஈடுபடல் போன்ற செயற்பாடுகள் பிள்ளைகளின் ஒழுக்கம் சீர்கெட்டுப் போகக் காரணமாகவுள்ளது. இவை மட்டுமன்றி பிள்ளைகள் தமக்குப் பொருத்தமற்ற நண்பர்களை ஏற்படுத்திக் கொள்ளல். அதாவது தமது வயதிலும் கூடிய சகபாடிகளுடன் உறவை வைத்திருப்பதால் அவர்களிடம் காணப்படும் தீய பழக்கவழக்கங்களை இவர்களும் பின்பற்றுகின்றார்கள். எனவே இவற்றை முளையிலே கிள்ள வேண்டியவர்கள் பெற்றோர்களே. பெற்றோர்கள் தமது பிள்ளைக்கு சமூகத்தில் நல்லொழுக்கம் மிக்க பெரியோர்களை சுட்டிக் காட்டி முன்னுதாரணப்படுத்தல் நன்று. அத்துடன் இன்று பிள்ளைகள் அறியாமை காரணமாக உண்ணும் உணவுகளில் போதை தரும் உணவுகளைச் சேர்த்துக் கொள்ளவும் அணியும் ஆடைகளில் நவநாகரிகம் என்ற பெயரில் அநாகரிக ஆடைகளை அணிவது என்பனவும் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கின்றன. இவை கண்காணிக்கப்பட வேண்டும்.

இவ்வாறான பொருத்தப்பாடற்ற பழக்க வழக்கங்களால் பிள்ளைகள் சாந்தமான குணத்தைத் தவிர்த்து மூர்க்கக் குணம் உடையவர்களாகக் காணப்படுகிறார்கள். ஆதலால் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு அன்பு, கருணை, சீவகாருண்யம் என்பவற்றை உதாரணங்களுடன் எடுத்துக் கூறி நல்வழிப்படுத்த வேண்டும். சில பிள்ளைகள் படிக்க வேண்டிய வயதில் வேலைக்குச் செல்வதால் சமூகத்தில் பல சீரழிந்த நிலைகளை அனுபவிக்க நேரிடுகின்றது. எந்தவொரு பிள்ளையும் பதினாறு வயதுவரை கட்டாயம் படிக்க வேண்டும். அது கட்டாயக் கல்வி வயதாகும். இது தவிர பதினெட்டு வயதுவரை பிள்ளைகள் சிறுவர் என்னும் வகைப்பட்டிருப்பதற்குள் உள்ளடக்கப்படுவர்.

பிள்ளைகள் எப்படியும் வாழலாம் என்ற நிலையை விடுத்து இப்படித்தான் வாழ வேண்டும் என அவர்களுக்கு ஓர் இலக்கு நோக்கிய இலட்சியப்பாதையை ஏற்படுத்தி அதன் வழிச் செல்ல வழிவகுத்தல் வேண்டும். ''தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்'' எனும் முதுமொழிக்கமைய சிறுவயதிலிருந்தே பிள்ளைகளை நல்வழிப்படுத்தி சீரியராக்கல் பெற்றோரினதும் ஆசிரியரினதும் கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மம்மல் பொழுதுகள்

சிறுகதை

விஜிதா ரகுநாதன்
(மொழியியல் சிறப்புக் கலை
மூன்றாம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்)



நடு ஜாமம் தாண்டி. இரண்டு நாளிகைகளே ஆகியிருக்கும். சுற்றியுள்ள வீடுகள் அனைத்திலும் விளக்குகள் அணைக்கப்பட்டுவிட்டன. வானத்தில் ஆங்காங்கே சில தாரகைகள் முத்தமிட்டு ஒளி பாய்ச்சிக் கொண்டிருந்தன. ஆயினும், தேய்பிறைக் காலம் ஆகையால் நிலா மகளில் பொழிவு குன்றியிருந்தமை 'இருள்' எனும் அரசனின் கர்வத்தை மேலும் அதிகரித்ததோ தெரியவில்லை. தாரகைகளின் ஒளியெழிலில் போதாமை பொதிந்திருந்தது. ஆனாலும் அந்த நடு நிசிப் பொழுதில் பெரிய குளத்தின் அருகில் அந்தக் குடிசை வீட்டில் மட்டும் ஒரு விளக்கு இன்னும் அணைக்கப்படாது அமைதியாக ஒளி மலர்களை அள்ளித்தூவிக்கொண்டு தான் இருந்தது. ஓரமாக வந்து வருடிச் சென்ற காற்று சில வேளைகளில் சில்மிஷம் செய்து விளக்கின் ஒளியை மந்திக்க முயன்றபோதும் முடியவில்லை.

மின் விளக்குகள் சாம்ராஜ்ஜியம் செய்யும் இந்த யுகத்தில் இந்தக் கைவிளக்குக்கு இங்கென்ன வேலை? என்று காற்று நினைத்திருக்கலாம். ஆனாலும் மின் விளக்குகள் எனை மாநிலத்தில் மாய்க்க நினைத்தாலும் தன் மண்குடியில் எனை அரசாளச் செய்த இந்த மாணவனின் கருவிழிகள் எனை 'கலைந்து போ' எனக் கட்டளை இடும்வரை நானே இந்தக் குடிலின் இளவரசியும் ஆவேன். என் ஒளியால் அவன் உள்ளம் கவர்வேன் என்று காற்றை ஏளனம் செய்வதுபோல் அந்தச் சின்னக் குடிலில் கைவிளக்கு மேலும் தன் ஒளியை அதிகரித்தது.

"இதோ உன் மன்னனை என்ன செய்கிறேன் பார்" எனக் கூறுவது போல் கோபம் அதிகரித்ததாய் அவனை நோக்கி விரைந்த காற்று அவன் கையிலிருந்த புத்தகங்களின் பக்கங்களை அங்கும் இங்குமாக வேகத்துடன் அசைக்கலாயிற்று. ஆயினும், அவன் எந்த மறுப்பையும் காட்டவில்லை. காற்றை அதன் போக்குக்கு விளையாட விட்டிருந்தான். இதே சம்பவம் முன்பொருநாள் அரங்கேறியிருந்தால் அவனது கோபக் கனல்கள் அந்தக் காற்றை சுட்டெரிக்கவும் தயங்கியிராது. காரணம், அவன் படிக்கும் வேளைகளில் எந்தவித இடையூறுகளையும் அவன் மனம் ஏற்பதில்லை. ஊர் உறங்கும் ஊமை வேளைகளில் விழிகளை வேலை வாங்கும் வழமையை அவன் கொண்டிருப்பதற்கும் அதுவே காரணம். ஆனால் இன்று அவனைச் சுற்றிலும் நிகழ்ந்த இயற்கை ஜாலங்கள் எதுவும் அவன் மனதை எட்டவில்லை.

அவன் கண்களின் பார்வை நிலைகொண்டிருப்பது புத்தகத்திலாயினும் அவன் மனம் அவனை வேறொரு திக்கு நோக்கி கவணிட்டு இழுத்துச் சென்றவாறிருந்தது.

"இஞ்ச பாருங்கோ... குறைபடாதேயுங்கோ, நிலைமை அப்படி. என்ர இளைய மேளுக்கு ஒரு வரன் சரி வந்திருக்குது. மூன்று மாதத்துக்குள் கலியாணத்தை முடிக்கோணுமெண்டு மாப்பிளை வீட்டார் சொல்லினம். இல்லையெண்டால் நான் இப்பவே கேட்கமாட்டன். உங்கட புருஷன்ர வைத்தியச்சிலவுக்கு என்னட்டை வாங்கின ஒரு லட்சத்தை முழுசா தராட்டியும் அதில பாதியாவது இரண்டு மாசத்துக்குள்ள தந்தியெண்டா நல்லது..."

அந்தக் குருக்கள் கூறிய வார்த்தைகள் இப்போதுதான் கூறப்பட்டது போன்று மீண்டும் மீண்டும் அவன் காதுகளில்...

அருகில் கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்த தந்தை முனகி அசைவதை அவரது இருமல் ஒலி காட்டிக் கொடுத்தது. தன் நிலையிலிருந்து மீண்டவனாய் ஓடிச்சென்று தைலத்தை எடுத்து வந்து தந்தையின் நெற்றியில் இதமாக தேய்த்து விட்டான். சமையற் பகுதியை அண்டி உறக்கமற்ற சில நாள்களின் விளைவால் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த தாய் எழுந்திரா வண்ணமாக தைலத்தை எடுத்த இடத்தில் மீட்பித்து பின் மீளத் திரும்பியபோது,

உறக்கத்தில் அவள் விழிகள் ஆழ்ந்திருந்த போதும் அவளின் உதட்டோர இளம் நகையை அவன் சில நிமிடங்கள் கண் வெட்டாது பார்த்தவாறிருந்தான். தாய் சிரித்தது கனவின் விளைவேயாயினும் அவன் உள்ளம் துள்ளிக் குதித்தை அவள் அறிய மாட்டாள். அவன் அன்னை சிரிக்கிறாள்... அதுவும் நீண்ட இடைவெளிகளின் பின். அதிசயந்தான்.

கடந்த காலங்களின் இன்பமான பொழுதுகள் அவள் கனவில் வந்து சென்றிருக்கலாம். அவர்கள் ஒன்றாக செல்லும் கோயில் திருவிழா... அவனுக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது. தந்தையின் மாதாந்த வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு.. என அவள் வாழ்வில் நிகழ்ந்த இன்பமான அனுபவங்களை கனவுகள் அசைபோட்டிருக்கலாம்.

திடகாத்திரமாகச் சுற்றி வந்த கணவர், இப்படியொரு விபத்துக்குள்ளாவார் என எப்போதாவது அவள் எண்ணியிருப்பாளா? அந்தக் குடிகாரனின் கார்ச்சில்லின் வேகத்துக்கு அவள் கணவனின் பாதங்கள் பலியாகாதிருப்பின் அவளுந்தான் ஏழ்மையிலும் எளிமை கண்டிருப்பாள். இந்தப் பரிதவிப்புக்களும் தேவையற்றதாகியிருக்குமே....

புத்தகத்தை அவன் இப்போது மூடி வைத்துவிட்டான். ஆனாலும் அவன் விழிகள் உறக்கத்தை நாட மறுத்தது. விழிகளின் வலிகள்.. அந்தத் தவிப்பு.. கொஞ்சம் அதிகமாகவே...

எண்ணங்களுக்கு யார் வேலி போடுவது, அது எத்தனை திண்மையாளரையும் திடம் சாய்க்கும் மாயம் அல்லவா... அவன் இப்போது விளக்கை மேலும் தூண்டி விட்டான். யன்னலோரத்துக் காற்று திரையை விலக்கி விடுகதை தொடுத்தது. தூரத்தே அகன்ற வானம், ஆயிரம் நட்சத்திரங்கள் ஆண்டாண்டு வசித்தாலும் தாய் போன்று தாங்கி நின்றது. வால் நட்சத்திரம் ஒன்று மின்னிக் கண்ணடித்து நீண்டு பின் மறைந்தது. வாழ்வின் தொடக்கமும் முடிவும் யாசகம் செய்திடும் இந்த ஆகாயம் எத்தனை தத்துவங்களை அள்ளி வீசுகின்றது. இருள் சிலவேளைகளில் கொடுமையானது. ஆனால் இந்தக் கறுப்பு இருளினோரம் அசைவுறும் ரம்மியமானதொரு பொழுது வேறு எப்போதும் கிடைப்பதில்லை. வாழ்வின் தத்துவங்கள் அனைத்தையும் ஒன்றிணைக்கும் இந்த இருள் சில வேளைகளில் பலரின் அகவிருள் நீக்கி ஒளிதரும் வள்ளலுமன்றோ.

அவன் சில நொடிகள் வானை உற்றுநோக்கினான். ஆனாலும் இந்த ரம்மியத்தை லயிக்க தற்போது அவன் மனம் மறுத்தது. தூரத்தே தலைவிரித்தாடிய வடலிகள் காற்றுடன் இணைந்து தன்னைக் கேலிசெய்வதாக உணர்ந்தான்.

பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பள உயர்வுப் போராட்டம் இப்போது அவனுக்கு ஓரளவு நிம்மதியைக் கொடுத்திருந்தது உண்மையே..

பல்கலைக்கழக தினங்களிலும் சனி, ஞாயிறு தினங்களே அவனது கற்றலுக்குரிய தொகையை ஈட்டித்தரும். அவன் தன் கல்வியை சொந்த உழைப்பின் உதவியால் பெற்று வந்தான். பேனா பிடிக்கும் கை கல்விக்காக தேவையேற்படும் வேளைகளில் சிமெந்து மூடைகளையும் முத்தமிடத் தயங்குவதில்லை.

ஆனால், இப்போது....

நாளாந்தம் அவனது வியர்வைக்குரிய விலை அவசியமானது. அவனது நாளாந்த வருமானம் எண்ணூறு ரூபா சேமிப்புத் தொகையாக்கப்பட்டது. அவர்களது உணவுத் தேவை தாயின் தையற் கலையால் நிறைவேற்றப்பட்டது. ஒருவாறாக எல்லாம் சரியாகிவிடும் என்றே அவனும் நினைத்தான்.

இன்னும் 25,000 ரூபா சேர்த்தால் இப்போதைக்கு வாங்கிய கடனில் பாதியாவது...

குளத்தடி விநாயகருக்குப் பூசை செய்யவரும் வேளைகளில் இவர்கள் குடில் பக்கமும் தன் பார்வையை திருப்பிச் செல்ல அந்தக் குருக்களும் மறப்பதில்லை.

ஆனால்....

அன்றைய தினசரி கூறிய செய்தி...

'என்ன செய்வது...'

'என்ன செய்வது...'

'......'

மீண்டும் மீண்டும் மனதை துளைத்தெடுத்த வினாக்கள்...

★ ★ ★

காலைக் கதிரவனின்
மஞ்சள் நிறக் கதிரழகு
பார்வையிலே நான்
படித்த
பாரதியின் சொல் அழகு
''ம்கூம்''
''ம்கூம்''
சேலை மறைவினிலே
முகம் மறைக்கும் பெண்
அழகு''

''ம்கூம்''

அவன் தந்தைதான். இடையிடையே பொருமல்களை வெளியிட்டபோதும் தன்பக்கம் பார்வையைத் திருப்பிய மனைவியைப் பார்த்து புன்னகைத்தவாறு தன் மனதில் உற்பவித்த வார்த்தைகளை அவர் கவிதையாய் வடித்துக் கொண்டிருந்தார். உடல் ஊனமாகலாம். மனதுக்கு உண்டாகுமா ஊனம்?

சூரியக் கதிர்களின் வருடல்கள் இன்பமேயாயினும் உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் தன் மகனின் உறக்கம் அதனால் கலைந்து விடுமோ என எண்ணியவளாக அந்தத் தாய் வாயிற்புறமாக முகட்டினோரமாக புற்பாயைக் கட்டித் தொங்கவிட்டபின் கணவன் பக்கம் பார்வையைத் திருப்பினாள்.

''தேத்தண்ணி ஆறப்போகுது''

அந்தக் குரலில் அன்புடன் சிறு கண்டிப்பும் இருந்தது.

''சூரியனும் வந்திட்டுது. அவன் சிவராமனும் வந்திடப் போறான். அவன் இன்னும் எழும்பாமல்...'' மனைவி பார்த்த பார்வை அவரை மேலே பேசவிடவில்லை. மகன் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் வேளை அவனது உறக்கத்தைக் கலைப்பது தன் மனைவிக்குப் பிடிக்காதென்பது அவருக்கும் தெரியும். ஆனால், அவர் மகன் அவர்களின் மனோ வாக்குவாதங்களை மேலும் தொடர அனுமதிக்காது ஐந்து நிமிடங்களில் விழித்துக் கொண்டான்.

★ ★ ★

இரவில் அவன் எப்போது உறங்கினான் என்பது அவனுக்கே தெரியாத அரியகலை. அது அவன் அன்பின் கைவிளக்குக்கு மாத்திரமே வெளிச்சம்.

சிவராமன்,

அவனும் இவன்போன்றே, தன் உழைப்பில் கரை காண்பதில் ஆவல் மிகுந்தவன். அவனதும் சற்று நடுத்தரக் குடும்பமே. உடுக்க, உண்ண, உறைய என அடிப்படைகளில் எந்தக் குறைவும் இல்லை. ஆயினும்..

வறுமையின் வேர்கள் யாரையும் பற்றுதற்கு தயங்குவதில்லை. காரணம் அவனுக்கு முன்பாகவே அவன் தாய் கருவில் உற்பவித்து உதயமான உடன்பிறப்புக்கள். பாவம் மூவரும் பெண்களாகப் பிறந்ததில் அவர்கள் தவறென எதுவுமில்லையே. இங்குதான் குறைந்த விலையிலோ இலவசமாகவோ எந்த மணவாளனும் மாலை சூடுவதற்கு முன்வருவதில்லையே... அதிலும், குறைந்தது பெண்தேர்வில் மாநிறமேனம் வேண்டப்படுகிறது. கருமை நிறக் கண்ணனை யாரும் கறுப்பென ஒதுக்குவதில்லை. உண்மைதான். ஆனால், இவர்களும் இம் மண்ணில் கருமை மிளிர் கண்மணிகளே. ஆயினும்..... யாரும் இவர்களை அழகென ஏற்கவில்லையே.....

துடுப்புள்ள பயணங்களே சில வேளைகளில் கரைகாண்பதில்லை. இது துடுப்பற்ற நீள் தூர பயணம்... கற்கும் கல்வி அவனை வேண்டுமானால் கரை சேர்க்கலாம். ஆனால், அவன் குடும்பம்?

அவன் முடிவெடுத்துவிட்டான், மூன்றாண்டுகளுடன் படிப்பை நிறைவு செய்துவிட்டு சவுதியிலேனும் சரண்புகலாமென ஆனால்....

பல்கலையில் அவன் பல கலைகள் கற்கும் முன்பே உருண்டோடியது காலம். நாள்கள் மூவாண்டைத் தாண்டி முன் நின்று சிரித்தன. பரிதாபம், அவன் இன்னமும் மூன்றாண்டைத் தாண்டவில்லை. அவனை நம்பி வேறு இங்கு மூன்று....

ஆனால், நேற்றைய பத்திரிகைச் செய்தி அவனுக்கு ஓரளவு தெளிவை ஏற்படுத்தியிருந்தது.

'இன்னும் இரு தினங்களுக்குள் பல்கலைக்கழகங்களின் கல்விசார் ஊழியர் போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படலாம் என அரச தரப்பு தகவல் தெரிவித்துள்ளது....' என்றவாறு தொடர்ந்தது செய்தி.

'இந்த வருஷத்துக்குள்ள படிப்பை முடிச்சிட்டால்.....' அவன் நிம்மதிப் பெருமூச்சு விட்ட அதே இரவுப் பொழுதில் அவனது நட்பு இங்கே கரைதேடி கழன்றது அவன் அறியாதது.

★ ★ ★

வானில் எங்கோ ஒரு தொலைவிலுள்ள திக்குத் தெரியாத திசையை நோக்கி தம்மையறியாதனவாய் சென்று கொண்டிருந்த முகிற்கூட்டத்தை வெறித்து நோக்கியவாறு, வாடிய முகத்துடன் வாயிலில் நின்று கொண்டிருந்தான் சிவராமன். அவனது முகம்.... நேற்றைய மலர்ச்சி அங்கில்லை. மகிழ்ச்சியை எங்கோ தொலைத்தவனாக..... தோள்களை வருடிய நண்பனின் கைகள் அவனை சுயநிலைக்கு மீளப்பெற்றது.

அன்றைய தினசரியை தன் தோள்களை வருடிய கைகளில் திணித்தான் சிவராமன்.

நேற்றைய தினம் அரசு தரப்பிலிருந்து வெளியிடப்பட்ட செய்தி தவறெனவும் தமது போராட்டம், அரசிடமிருந்து சரியான தீர்வு கிடைக்கும் வரை தொடரும் எனவும் பல்கலைக் கழக கல்விசார் ஊழியர் வட்டாரம் தகவல் வெளியிட்டிருந்தது.

தன் கால்களை வேகமாக சைக்கிளில் ஊன்றிய சிவராமன், தன் நண்பனை பின்னிருக்கையில் ஏற்றியவாறு விரைந்தான். பின்னிருக்கையில் அமர்ந்தவாறு பெரிய குளத்து பிள்ளையாருக்கு மானசீகமாக இவன் கூறிய நன்றிகளை அவன் சுவாசம் தென்றலோடு இணைந்து காவிச் சென்றது.

இங்கே ஒரு மெழுகுவர்த்தி உருகுகின்றது. அருகே அதன்வலி அறியாது குளிர்காய்கிறது ஒரு விட்டில் பூச்சி. விட்டில் சிலவேளைகளில் வெள்ளிக் கீற்றிடையே மாளவும் கூடும், மெழுகுவர்த்தி உணராமலேயே... ஆனால், காற்று மட்டும் இன்னும் ஓயவில்லைதான், சிலவேளைகளில் சுகமாக.....

சில வேளைகளில் சுமையாக.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லிசைக் கச்சேரிகளுக்கு மவுசு இருந்த காலம்

■ எஸ்.எம்.கோபாலரத்தினம்

திருப்பூங்குடி வி.கே. ஆறுமுகம் குழுவினர் வில்லுப்பாட்டு யாழ்ப்பாணத்தில் கோயில் திருவிழாக்களில் தொடங்கி பொது நிகழ்ச்சிகளிலும் இடம்பிடித்துப் பெயர் பெறத் தொடங்கியது.

கீரைக் கடைக்கு எதிர்க்கடையும் வேண்டும் தானே என்ற புதுமொழியையும் எதிர்க்கடை போடுபவர்களே உருவாக்கிவிடுவார்கள். கீரைக் கடையிலிருப்பவர்களில் ஒருவரே எதிர்க் கடை போடுபவராகவும் இருப்பார்.

எப்படியோ வில்லுப்பாட்டுக் குழுக்கள் இரண்டு,மூன்று எனப் பெருகின. ஆறுமுகம் மாஸ்ரர் தோற்றப்பொலிவும் நெற்றியில் திருநீற்றுக் குறியும் சந்தனப் பொட்டும் அவருடைய குரலும் அவருடய வில்லுப்பாட்டுக்கு மதிப்பைத் தேடிக்கொடுத்தன. ஆனால் அவர் கதையின் சுவாரஸ்யத்தில் வில்லடிக்க மறந்துவிடுவார். இதைப் பற்றிக் கலைஞர் பற்குணம் அவர்களுடன் சமீபத்தில் பேசுகையில் குறிப்பிட்ட போது,

வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் அரசு விடும் நகைச்சுவைக் கதையில் ''சின்னமணியும் கூட வில்லடிக்க மறந்து விடுவது வழமை தான்'' என்றார். கலைஞர்களும் இரசிகர்கள்தானே.

திருப்பூங்குடி ஆறுமுக மாஸ்ரர் குழுவில் தாவடி வடிவேலு என்பவரும் அங்கம் வகித்தார். இவரும் ஒரு பிறவிக் கலைஞரே. சில மாதங்கள் அல்லது சிறு காலத்தில் ஆறுமுக மாஸ்ரரின் திருப்பூங்குடி குழுவிலிருந்து விலகி தாவடி வடிவேலு வில்லுப் பாட்டுக்குழுவாக வில்லிசைக்கத் தொடங்கிவிட்டார். இவரது வில்லிசைக் குழுவும் பெயர் பெற்றது.

இந்தக் குழுக்கள் பல இடங்களிலும் நிகழ்ச்சிகள் நடத்திக் கொண்டிருக்க சதாசிவம் என்றொரு கலைஞர் இந்தியாவுக்குப் போய் வில்லிசையில் பயிற்சி பெற்று அங்கிருந்தே வில்லுடன் வந்து சேர்ந்து இங்கு வில்லிசைக்கத் தொடங்கினார். சதாசிவம் வில்லிசைக் குழு நிகழ்ச்சிகளுக்கும் மவுசு வந்தது. இவைகளைத் தொடர்ந்து கீதாஞ்சலி பரம்பரையைச் சேர்ந்த சின்னமணி என்றே கே.என்.கணபதிப்பிள்ளை வில்லிசைக் குழுவின் நிகழ்ச்சிகள் பல இடங்களிலும் பெயர் பெற்று நாடெங்கும் விலாசம் தேடிக் கொண்டது.

இந்தக் குழுவில் இசைக்கலைஞர்களுடன் ஆமா போடுவதுடன் நகைச்சுவை உரையாடல்களுடன் கலைஞர் எஸ்.ரி. அரசுவும் பங்கு கொண்டார். சின்னமணி வில்லுப்பாட்டுக் குழு நீண்டகாலம் நிலைத்து நின்றது. சோமுவின் ஆர்மோனியமும் இடம்பெற்றதாக நினைவு.

சின்னமேளம், பெரிய மேளம் என்ற தவில், நாதஸ்வரக் கச்சேரிகள், கதாப் பிரசங்கம், வில்லிசை, மெல்லிசை என்று பல நிகழ்ச்சிகள் மக்களை மெய்மறக்கச் செய்தன.

நாட்டுக் கூத்து அதிலிருந்து மேடை நாடகங்கள், சீன்கள் என்ற திரைகள் ஓவியக் கலைஞர்களின் கைவண்ணத்தைக் காட்டும் காட்சி அமைப்புக்கள், பெண் பாத்திரங்களை ஏற்று நடித்த இளைஞர்கள் மீது காதல் கொண்ட காளையர்கள் பற்றிய கதைகள் ஏராளம்.

வில்லிசைக் கலைஞர்கள் பற்றிச் சொல்லும்போது நடிகவேள் லடிஸ் வீரமணி பற்றிச் சொல்லாமலிருக்க முடியாது. வீரமணி பேசும் வசனங்களில் கொச்சிக்கடைத் தமிழ் சில சமயங்களில் இடையே நுழைந்தாலும் வில்லின் முன்னே உட்கார்ந்திருக்கும் முறையும்




வில்லடிக்கும் ஸ்ரைலும் உடல் அசைவுகளும் அவர் குரலும் பார்வையாளர்களை மெய்மறக்கச் செய்துவிடும். அவன் கலைஞன்தான்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் மகாகவி உருத்திரமூர்த்தி (கவிஞர் சேரன் அவர்களின் தந்தை)யின் கண்மணியாள் கதையை லடிஸ் வீரமணி குழுவினர் வில்லடித்துப் பாடவிருப்பதாகவும் அந்த நிகழ்ச்சிக்கு என்னையும் கூட்டி வருமாறு சசி பாரதி சபாரெத்தினத்துக்குத் தகவல் கிடைத்தது. மகாகவிதான் இவ்வழைப்பை விடுத்திருந்தார். குறிப்பிட்ட சிலருக்கே இவ்வழைப்பு விடப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சியைப் பார்த்துத் திரும்பிய பின் ''காவியத்துக்கு ஒரு மகாகவி, வில்லுப் பாட்டுக்கு ஒரு வீரமணி'' என்ற தலைப்பிட்டு அந்த நிகழ்ச்சி பற்றி 'ஈழநாடு, இதழில் எழுதியிருந்தேன். இது இரண்டொருவருக்கு மட்டும் திருப்தியளிக்கவில்லை.

பின்னர் ''கண்மணியாள் காதை'' எழுத்துப் பிரதியை நூலுருவில் வெளியிட வேண்டுமென்று சசிபாரதி விரும்பினார். மகாகவியும் சம்மதம் கொடுத்து விட்டார். சபாரெத்தினமும் அன்னை வெளியீட்டாளராகி நூல் வெளியிடுவதற்கு அச்சகத்திடம் கொடுத்து அச்சாகி நூல்களும் தயாராகி அடுக்கி வைக்கப்பட்டுவிட்டன.

யாழ்.நகர மண்டபத்தில் நூல் வெளியீட்டுடன் லடிஸ் வீரமணியின் கண்மணியாள் காதை வில்லிசை நிகழ்ச்சியும் நடைபெற ஏற்பாடு. இதற்காக நான் கொழும்புக்குப் போய் கன்னாரத் தெருவில் லடிஸைச் சந்தித்து ஒழுங்கு செய்து வந்திருந்தேன். லடிஸும் வந்து லேக்வியூ விடுதியில் தங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுத் தங்கியிருந்தார் நண்பர்களுடன்.

மாலையில் நிகழ்ச்சி ஏற்பாடு. காலையில் வீட்டுக்கு வந்த சபாரெத்தினம் நூலின் பிரதிகளை அச்சகத்திலிருந்து எடுத்து வருவதற்குப் பணத் தட்டுப்பாடு என்றார்.

# பழிவாங்கலா பாரபட்சமா....?

■ பாண்டியம்மா

**தென்னிலங்கையை சேர்ந்த உத்தியோகத்தர்களின் நலன்களை, உடனடியாகக் கருத்தில் கொள்ளும் சுகாதார அமைச்சு வருடக்கணக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் பணி புரியும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், தாதியர்கள் தமக்கான தங்குமிட வசதியை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை விடுத்தும் ஏன் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. இது சுகாதார அமைச்சு உத்தியோகத்தர் மத்தியில் காட்டும் பாகுபாடே.**

இருள் சூழ்ந்த அமைதியான சூழலில் கடவுளிடம் மன்றாடிக் கொண்டிருந்தாள் அவள். "கொர்... கொர்..." எனக் கதவு லேசாக ஆட்டம் போட்டது. பிரார்த்தனையின் நடுவில் அவளால் எழுந்திருக்க முடியவில்லை. காலடி ஓசை கேட்டபோது திடீரெனக் கண்விழித்துப் பார்த்தபோது முன்னால் கத்தியை நீட்டிக் கொண்டு ஒரு தடியன்.

"ஐயோ அம்மே..." என கத்த முற்பட்டவளின் கழுத்தை லேசாகப் பதம் பார்த்தது அந்தக் கத்தி. சிநேகிதியின் குரல் கேட்டு மற்ற அறைகளிலிருந்தவர்கள் ஓடி வருவதற்குள் தடியன் அம்போ என மறைந்துபோனான்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் நிர்வாகத்தால் வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட ஆனைப்பந்திக்கும் ஆரியகுளத்துக்கும் இடையில் உள்ள தனியார் வீடொன்றில் தங்க வைக்கப்பட்டுள்ள 18 தாதி உத்தியோகத்தர்கள் தங்கியிருந்த விடுதியில் நள்ளிரவு 1.30 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

விடுதியில் ஏற்பட்ட பரபரப்பு அருகில் இருந்த அயலவர்களையும் சற்று விடுப்புப் பார்க்க வைத்தது. கத்தியால் கீறிக் காயப்படுத்தப்பட்ட இளம் பெண் உடனடியாகவே யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டாள். இவளுக்கு ஏற்பட்டது சிறு காயம்தான். ஆனால் சம்பவம் பெரிதாகப் புனையப்பட்டு தாதிய உத்தியோத்தர்கள் பணிபுறக் கணிப்பை மேற்கொள்ளும் அளவுக்குச் சென்றுவிட்டது.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு பணிப்புறக்கணிப்புச் செய்வது ஒன்றும் புதிதல்ல. அண்மைக் காலமாக வைத்தியசாலையில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக வேலை நிறுத்தல் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தப் போராட்டங்களுக்கு முற்றுப்புள்ளி கிடைக்கவில்லை.

இதனைவிட யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்தியர் ஒருவரின் வீட்டின் மீது கழிவு ஒயில் ஊற்றி தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமல் இழுபறியில் இருக்கும் தருணத்தில் தற்போது தென்னிலங்கையைச் சேர்ந்த இந்தத் தாதிய உத்தியோகத்தர் மீது இந்தச் சம்பவம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இது தனிப்பட்ட காரணங்களால் மேற்கொள்ளப்பட்டது என்றும் இது பெரிது படுத்தப்பட்டு பணிப்புறக்கணிப்புவரை சென்றுள்ளது எனவும் கூறப்படுகிறது.

பொதுமக்களின் நலன்கருதி சேவை வழங்கும் வைத்தியர்களும் தாதியர்களும் அச்சுறுத்தப்படுவதால் வைத்தியசாலை நிர்வாகம் தொடர்ச்சியான பணிப்புறக் கணிப்பை மேற்கொள்வதுடன் பொது மக்களுக்கான [illegible] பாதிப்புக்குள்ளா[illegible] வைத்தியசாலையில் இடம்பெற்ற ஊழல் மோசடிக்கு இதுவரை தீர்வுகாணாத சுகாதார அமைச்சு இந்தச் சம்பவத்துக்கு மறுநாளே தீர்வைக் கண்டுள்ளமை பல கோணங்களிலும் சிந்திக்க வைக்கிறது.

வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு உறுப்பினர் ஒருவர் சம்பவம் தொடர்பாக சுகாதார அமைச்சுக்குத் தகவல் கொடுத்தபோது மறுகணமே உடனடியாக அவர்களை அந்த விடுதியில் இருந்து அப்புறப்படுத்தி வைத்தியசாலை வளாகத்துக்குள்ளே பாதுகாப்பாக வைக்கும்படியும் வெகுவிரைவில் அவர்களுக்கான விடுதி வசதி ஏற்படுத்தித் தருவதாகவும் தொலைபேசி மூலமாக அமைச்சில் இருந்து தகவல் வழங்கப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சை நிபுணர் ஜெயக்குமாரன் வீட்டின் மீது இனம் தெரியாத கும்பல் கழிவு ஒயில் ஊற்றி ஜன்னல் கதவை உடைத்து தாக்கிய சம்பவம் நடைபெற்று பல மாதங்கள் கடந்தும் பொலிஸாரோ சுகாதார அமைச்சோ அந்த இனம் தெரியாத நபரைக் கண்டறிவதற்காக நடவடிக்கைகளில் துரித கதியில் செயற்பட்டதாகத் தெரியவில்லை. அவருக்கான எந்தவிதத் தீர்வையும் பெற்றுக் கொடுக்காத நிலையில் நோயாளர்களின் நலன்கருதி இது [illegible] உத்தரவாதமின்றி மருத்து[illegible]மாரன் மனிதாபிமான அடிப்படையில் சேவையாற்றுகிறார்.

இதனை விட வைத்தியசாலை பணிப்பாளர் மீது சாடப்பட்டுள்ள ஊழல் மோசடி தொடர்பாக தீர்வும் காணப்படாத நிலையில் இந்தச் சம்பவத்துக்கு மட்டும் உடனடித் தீர்வு எப்படிக் காணமுடிந்தது என்று பல தரப்பட்டோர் மத்தியில் கேள்விகள் எழாமல் இல்லை.


தென்னிலங்கையை சேர்ந்த 18 தாதிய உத்தியோகத்தர்களின் நலன்களை, பாதுகாப்பை உடனடியாகக் கருத்தில் கொள்ளும் சுகாதார அமைச்சு வருடக்கணக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் பணி புரியும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், தாதியர்கள் தமக்கான தங்குமிட வசதியை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை விடுத்திருந்த போதும் ஏன் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. இது சுகாதார அமைச்சு உத்தியோகத்தர் மத்தியில் காட்டும் பாகுபாடே என்று கூறப்படுகிறது. தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் என்ற அடிப்படையில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சிலர் விசனம் கூறுகின்றனர்.

இந்தச் சம்பவத்துக்குப் பின்னால், குறித்த தாதிய உத்தியோகத்தர் தாக்கப்பட்டுள்ள காரணங்களில் தெரிந்த நபரே தனிப்பட்ட காரணங்களால் கத்தியால் குத்த முனைந்தார் என்றும் இந்தத் தகவல்கள் கசிந்துள்ளன.

இதனைவிட வைத்தியசாலை நிர்வாகத்தால் உத்தியோகத்தர்களுக்கு தங்குமிட வசதி ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதால் இவற்றைச் சாதகமாக வைத்து வைத்தியசாலைக்குள் உள்நுழைவதற்காக இந்தக் கத்திக் கீறல் நாடகத்தை நடத்தியிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. ஒட்டு மொத்தத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் நடப்பது என்ன என்றே எண்ணத் தோன்றுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருள் வயிற் பிரிதல்



இல்லற வாழ்வை மேற்கொண்டிருக்கும் தலைவன் வாழ்வாங்கு வாழ்வதற்குத் தேவையான பொருள் தேடுவதற்காகத் தலைவியை விட்டுப் பிரிந்து போதல் இக்காலத்தில் இருப்பது போன்று, பழைய காலத்திலும் தமிழ்நாட்டில் இருந்து வந்துள்ளது. ஆனால் போக்குவரத்து, செய்திகளை உடனுக்குடன் அறியும் வாய்ப்புக்கள் அன்று இருக்கவில்லை. அதனால் 'பொருள் வயிற் பிரிதல்' என்பது தலைவன்-தலைவியருக்கிடையில் பெருந்துன்பத்தை தருவதாக இருந்தது என்பதனைப் பழைய இலக்கியங்கள் மூலம் நாம் அறியக்கிடக்கின்றது.

அந்த வகையில், களவொழுக்கத்தில் கற்புநெறிக்காதலராகப் பழகிய தலைவனும் தலைவியும் ஊர் அறிய இணைந்து வாழவிரும்புகின்றனர். அப்போது தலைவனுக்குப் பொருள் தேவைப்படுகிறது. அதற்காகத் தலைவன் தலைவியைப் பிரிதல் வேண்டும். இதனை 'வரைவுஇடைவைத்துப்பொருள்வயிற் பிரிதல்' என்று சொல்லப்படுகிறது.

இதனைத் தஞ்சை வாணன் கோவை பாடிய பொய்யாமொழியார் என்ற புலவர் எப்படிக் காட்சிப் படுத்துகிறார் என்று பார்ப்போம்.

களவொழுக்கத்தில் இவர்களுக்கு உதவியவள் தன்னலமற்ற 'பாங்கி' என்பது இவ்விடத்தில் முக்கியமானது.

இதுவரைக்கும் இவர்கள் காதலை தாயும் ஊரும் அறியாமல், பாங்கி ஒருத்தி மாத்திரம் அறிந்திருந்தாள்; இனிமேல் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வதையும் யாரும் அறியாமல் காப்பாற்றும் பொறுப்பு பாங்கியைச் சார்ந்தது. பிரிவுத்துன்பம், தலைவி - தலைவனுக்கு இருப்பது போலப் பாங்கிக்கும் உள்ளது.

அதனால், தலைவன் நேரடியாகத் தலைவியிடம் சொல்லாமல் பாங்கியிடம் சொல்லுகிறான்.

கொடிய காடுகளைக் கடந்து தஞ்சைவாணன் மலைக்குப் போய், நெற்பயிரை விளைவிக்க வரும் மழை போல, என் திருமணத்துக்கு வேண்டியன யாவும் கொண்டு வருவேன், மயில் போன்றவளே! இதனை தலைவிக்குக் கூறுவாய் என்று பாங்கியிடம் சொல்கிறான். இதோ புலவர் பாடல்.

"கழை போல் வளர்நெற் கவின் பெற வாரி
கவர்ந்து வரும்
மழை போல் வருகுவன் வன்சுரம் போய்த்;
தஞ்சைவாணன் வெற்பில்
இழை போல் இடை யாண் முலைவிலைக்கு
ஆவன யாவையுங் கொண்டு
உழை போல் அரிநெடுங்கண்
மயிலே!சென்று உணர்த்தி இதுவே"

(முலைவிலை- பெண்ணுக்காகத் தலைவன் கொடுக்கும் பொருள்: பரிசம் என்பர்)

இவ்வாறு தலைவியரிடம் பக்குவமாகச் சொல்ல வல்லவள் நீ; சொன்னபின்

"தலைவியின் நிலையை எனக்கு வந்து
சொல்வாய் என்றும் கூறுகிறான்,
காலைப்பொழுது கடும்பரித் தேர்பண்ணிக்
கானகம் போய்
மாலைப்பொழுது வருகுவல்யான்;
தஞ்சைவாணன் நன்னாட்டு
ஆலைப்பழனம் அணிந்த எம் ஊர், நும்
அகம் குளிரச்
சோலைப்பயில் குயில் போன் மொழியாய்;
என்துணிவு இதுவே"
(பொய்யாமொழியார்)

என வரும் பாடலிலே,

தலைவன், தேரில் செல்வதற்கான ஆயத்தங்களைச் செய்கிறான் என்றும் காலையில் போய் மாலையில் வருவான் (சீக்கிரம்) என்றும், கரும்பும் வயல் நிரம்பியது தனது ஊர் என்றும் சொன்னான் என நீ சொல்வாய் எனப் பாங்கியிடம் சொல்வதாகப் புலவர் கூறுதல் காண்கிறோம்.

இவ்வாறு தலைவன் சொன்னவற்றைப் பாங்கி தலைவியிடஞ் சென்று சொல்லுகிறாள். முலைவிலை தந்து (பரிசப் பொருள் தந்து) நின்னை மணஞ்செய்யவே தலைவன் அந்தப் பொருள் தேடப்போகிறான் என்று சொன்னதும் தலைமகள் இரக்கப்படுகிறாள்.

"இனிப்பிரியேன் என்று அன்று சொன்ன நம் காதலர், இன்று என் முன் வந்து சொல்வதற்கு அஞ்சியோ- அந்த மகிழ்ச்சியை ஏன் கெடுப்பான் என்றோ அவர் நின்னைத் தூதுவிட்டார்?" எனத் தலைமகள் பாங்கியிடம் வினவுகின்றாள்.

அதற்குப் பாங்கி, "மதிமுகத்தவளே! நின்பொருட்டாலன்றோ அவர் இன்று பிரிந்து செல்கிறார். இதற்காக நீ இப்படி இரக்கப்படலாமா?" என தேறு மொழி கூறுகின்றாள்.

"இல்லை; இந்த ஊரிலுள்ளார், எம் தலைவர் பொருள் வயிற் பிரிந்துதான் சென்றிருக்கிறார் என்பதை நம்புவார்களா? பழிசொல்லார் என்பது உண்மையாகுமா?" என்று தலைவி தான் இரங்குவதற்குக் காரணம் கூறுகின்றாள்.

வெப்பம் நிறைந்த பாலை வனத்தில் ஒரு பெண் மயில் தளர்வடைந்த பொழுது, அது கண்ட ஆண்மயில் தன் சிறகை விரித்து அதன் மேல் போர்த்திக் காப்பாற்றிய கதையை முன்பு தலைவன் சொன்னான் என்பதை நினைவூட்டி, நும் காதலர் நுமது பிரிவுத்துயரத்தை புரிந்து கொண்டு விரைவில் வருவார் என பாங்கி வலியுறுத்திப் பேசுகின்றாள்.

காலையில் சென்று மாலையில் வருவேன் என்று தலைவன் சொன்னது, கார்காலம் தொடங்குமுன் வருவேன் என்று சொன்னதாகக் கொள்ளல் வேண்டும் என்கிறார் புலவர்.

அவ்வாறு காலங்கழிந்து செல்லும் போது ஒரு நாள் மேகத்தின் வரவு ஆகாயத்தில் தென்படுகிறது. அந்த முகிற்கூட்டத்தைக்கண்டு தலைவி புலம்பத் தொடங்கினாள்.

அது கண்ட பாங்கி, இது கார்கால மேகமன்று; அகாலமேகம் எனக்கூறுகின்றாள். அதற்குத் தலைவி, "அன்னம் போன்றவளே! கார்காலக்காந்தள் மலரைக்கண்டு மயில் பாம்பென அஞ்சி ஓடியதையும், பின் அண்மையில் சென்று பாம்பல்ல, காந்தள் எனக்கண்டு கொண்டது எனவும் கூறிக் கார்காலம் என்பதை காட்டுகின்றாள்.

பாங்கியானவள் மேலும் தொடர்ந்து, அந்த மேகமானது எமது தலைவர் வருகையை முன்கூட்டிச் சொல்ல வந்த தூதுவன் என்று சொல்லித் தலைவியைச் சாந்தப்படுத்துகின்றாள்.

அப்போது தலைவி, தலைவனோடு தான் இன்புற்றிருந்த போது, தலைவன் சொன்னதை நினைவுகூர்ந்து பார்க்கின்றாள். இன்புற்ற காலத்தில் இருவர்க்கும் உயிர் ஒன்றெனக் கூறியிருக்கின்றார். அவ்வாறு அன்பிதயங் கொண்ட அவர், அகன்று போனார் என நாம் துன்பப்படும் போது, அங்கு அவரும் துன்பப்படுவார் என எண்ணி, கார்காலம் அண்மித்ததால் அவர் விரைவில் வந்து விடுவார் என நம்பிக்கை வெளியிடுகிறாள் தலைவி.

இன்புற்ற காலத்தில் இருவர்க்கும் ஒன்று
உயிர் என்று சொன்னார்
அன்புற்ற காதலர்; ஆதலினால் அகன்றார் என
நாம்
துன்புற்ற காலத்து அவரும் உறார் அல்லர்;
தோழி சொல்லும்
வன்புற்ற கார் அளிக்கும் தஞ்சை வாணன்
தென் மாறையிலே.

என்பது பொய்யா மொழியாரின் பாடலாகும்.

அங்கே பொருள் தேடச் சென்ற தலைவன் - "அன்புற்ற காதலியின் எண்ணத்தோடு இருந்தவன், பாகனை நோக்கி, மாலையானதும் தாய்ப் பசுவைத் தேடும் கன்று போல், கார்காலமானதும் தன்னை எண்ணியிருக்கும் தலைவியைச் சென்று சேர்வதற்காகத் தேரிற்பூட்டிய குதிரைகளை வேகமாய்ச் செலுத்துவாய்" என்கிறான்.

இவ்வாறாக ஊர் வந்து சேர்ந்து விட்டான் தலைவன். வழக்கம் போல தலைவியைச் சந்திக்க, பாங்கியின் உதவியை நாடிச் செல்கிறான்.

"நீவிர் பிரிந்து சென்று முப்பத்தைந்து நாள் ஆகிறது. அயல் நாட்டில் நின்ற நாள்களில் எம்மை நினைத்தீர்களா?" எனப் பாங்கி தலைவனிடம் கேட்கிறாள்.

"நினைபீர்,பொருட்குப் பிரிந்து அயல்
நாட்டு நின்றுழி. வேள்
அனையீர் ! நினைந்தும் அறிதிர்
கொல்லோ?......"

என்பது புலவர் கூற்று ஆகும். அதற்கு தலைவன்,

கானெடுங் குன்றம் கடந்து சென்றேன், ஒரு
கால் உமை தோய்
மானெடுங் கண்ணி மறந்தறியேன், வண்கை
வாணன் தஞ்சை
நீனெடும் பெண்ணைக் குரும்பையும் சூது
நெடுங்கு கொங்கை
தேனெடுங் கண்ணி மென்பூங் குழன் மாதர்
திருமுகமே.

என்கிறான்எனப்புலவர்கூறுகின்றார்.

காடு நிறைந்த மலை நாட்டைக் கடந்து சென்ற யான், மான் போலும் பார்வையுடையாளை, பனங் குரும்பை போலும் கொங்கையும் பூமுடித்த கூந்தலையுமுடையாள் திருமுகத்தை மறந்தறியேன் என்று கூறுவதனால், நான் மறக்கவில்லை, அதனால் நினைக்க வேண்டிய தேவை எழவில்லை எனத் தோழிக்குச் சொல்லுகிறான் தலைவன்.

இந்தக் கூற்றைத் தெய்வப் புலவர் திருவள்ளுவரும்,

உள்ளுவன் மன்யான் மறப்பின், மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம்
(குறள் 1125)

எனக் கூறியிருப்பது மனங் கொள்ளத் தக்கது. பாங்கி, தலைவன் திரும்பி வரும் வரை தலைவியை ஆறுதல் சொல்லி வைத்திருந்த திறம் பற்றி அவனிடம் கூறுகிறாள். தலைவன் தான் செல்லும் வனப் பகுதியில் நீர் குடிப்பதற்கு வசதியில்லாத போது, வனத்தில் கிடைக்கும் நெல்லிக்கனியை உண்டு தாகந் தீர்ப்பான்.

அவ்வாறு தாகத்தால் துன்பப் படாமல் இல்லத்திலே தலைவியை விட்டுச் சென்ற தலைவனைப் பற்றி, ஊரார் அறியாமல் ஆற்றி வைத்திருந்த தனது திறமையைப் பற்றிக் கூறுகின்றாள்.

இனி,தான் விரும்பிய பெண்ணைத் மணஞ் செய்வதற்கு முலைவிலையாகக் கொடுக்க வேண்டிய பரிசுப்பொருளைத் தலைவன் பாங்கி மூலம் தலைவியின் தாயாரிடம் சேரச் செய்வான்.

அங்கே பரிசப் பொருள் இருப்பதைக் கண்டதும் தலைவன் தன்னை வரிப்பது (வரைவு) உறுதியாயிற்று என மகிழ்ச்சியடைவாள்; அதனால் வரைவு இடை வைத்துப் பொருள் வயிற் பிரிந்ததனால் தலைவன் தலைவியருக்கிடையில் இதுவரை இருந்து வந்த பிரிவுத்துயரம் நீங்கிவிடும்; தலைவியின் தாயார் மணவினையாற்றி மகிழ்வாள் என்ற பழந்தமிழ் பண்பாட்டினை இலக்கியங்கள் நமக்கு உணர்த்துகின்றன.



மட்டுவில் நா.நல்லதம்பி

---

"..யாரோ ஒருவன் சொன்னான்
என்று சீதையை நடுக்காட்டில்
விட்டு வரும்படி தன் தம்பியிடம்
கூறி அனுப்பியபோது இராமனின்
மென்போக்கு எங்கே போயிற்று?..."

-உரும்பிராய் ஞானாம்பிகை

## மென்போக்குடையவன்

இராமன் மென்போக்கானவன் என்பதனை எடுத்துக்காட்ட இராமாயணத்திலே பல காட்சிகள் சிறப்பாக எடுத்துக் காட்டப்படுகின்றன.

உதாரணமாக தசரதன் இராமனை பதின்னான்கு ஆண்டுகள் வனவாசம் செய்யும்படி கூறினார் என கைகேயி இராமனை அழைத்துக் கூறுகிறாள். அதற்கு உடனே இராமன் அன்னையே இந்தக் கட்டளையை தந்தையன்றி தாங்களே கூறினால் கூட நான் நிறைவேற்றக் காத்திருக்கிறேன் என்கிறான்.

இந்தச் செயலை தாம் பெற்ற பிள்ளைகள் கூட நிறைவேற்றமாட்டார்கள். ஆனால் இராமன் தன்னுடைய மென்மைத் தன்மை பொருந்திய குணத்தின் காரணமாக உடனேயே நிறைவேற்ற தன் பட்டம், புகழ், செல்வம் அனைத்தையும் இழந்து கானகம் புறப்படுகிறான்.

இதனைவிட வேறு சான்றும் தேவையா இராமனின் மென்போக்கை உணர்த்தி நிற்பதற்கு.

## வன்போக்குடையவன் இராமன்

இராமனின் வன்போக்கை எடுத்துக் கூறுவதற்கு மிகவும் சிறந்த எடுத்துக் காட்டாக வாலி வதை படலத்தை எடுத்துக் காட்டலாம். வாலி இராமனுடன் எந்த விதமான பகைமையும் கொண்டவன் அல்ல. ஆனால் இராமன் தன் சுயலாபம் அதாவது சீதையை மீட்கும் நோக்கிலேயே சுக்கிரீவனுடன் நட்புக் கொண்டு அவன் உதவியைப் பெற வாலியை யுத்த தர்மத்துக்கும் புறம்பாக மறைந்து இருந்து அம்பெய்து கொல்கின்றான்.

இதனைவிட வேறு சான்றும் தேவையா இராமனின் வன்போக்கான தன்மையை எடுத்துக் காட்டுவதற்கு.

இப்படிப்பட்ட இராமன் தன் மனையாளைக் காட்டில் விட்டமை, [illegible] மேலும் உறுதிப்படுத்து [illegible] கருத்துக்கள் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர்களே!

உரும்பிராய் ஞானாம்பிகையின் கருத்தை ஒட்டியும், வெட்டியும், கீறியும், கிழித்தும், சேர்ந்தும், தோள் கொடுத்தும் உங்கள் கருத்து எதுவானாலும்

'சூரியகாந்தி' 361,
கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம் என்ற
முகவரிக்கு 100
சொற்களுக்குள் அனுப்பி
வையுங்கள்




தரமும்
பண்பும் கண்டு
பிரசுரமாகும்.

# கடவுளின் துணிக்கைகள்....

■ இராமஜெயபாலன்

பிரபஞ்சம் என்பது வெற்றிடம். எந்தச் சடப் பொருளுக்கும் (வாயு உட்பட்ட) இருப்பதற்கும் நகர் வதற்கும், வெற்றிடம் தேவை. உதாரணம் நீருக்குள் ஒரு போத்தலை, தலைகீழாக அமிழ்த்தினால் அந்தப் போத்த லுக்குள் நீர் புகாது. காரணம். போத்தலுக்குள் இருக்கும் காற்று வெளியேறி வெற்றிடம் ஏற்படாமையே. நீர் நிரம்பாமைக்குக் கார ணம் தவிரவும் சடப்பொருள்களுக்கு அளவு கள் எல்லைகள் இருக்கும். எல்லைக்கப்பால் இன்னொரு பொருள் இருக்கும். அல்லாது



விட்டால் வெற்றிடம்தான் மிஞ்சும். வெற்றி டம் என்பது இல்லாத ஒன்று. ஆக பிரபஞ்சம் எல்லைகள் இல்லாது விரிந்து எங்கும் பரந்து கிடக்கிறது. ஆனால் கோள்களும் ஈர்ப்புகளுமில்லாத பகுதியில் ஒரு பொருளை விட்டால் அந்தப் பொருள் எந்த அசைவும் இல்லாது நிலையாக அந்த இடத்திலேயே நின்றுவிடும். எனவே விரிந்து கிடக்கும் பிரபஞ்சம் ஒடுங்கியும் இருக்கும்.

பிரபஞ்சத்தில் எண்ணிலடங்காத பொருள் கள் இருக்கின்றன. இந்தப் பொருள்களை பஞ்சபூதங்கள் என்ற வரையறைக்குள் அடக்கிவிட முடியும்.

தவிர பஞ்சபூதத்தில் ஆகாயம் என்னும் பிரபஞ்சம் மட்டும்தான் தோற்றம் அழிவு இல்லாதது. மற்றைய நான்கு பூதங்களுக்கும் தோற்றம் அழிவு உண்டு. காரணம் நாம் அவதானிக்கும் மாற்றங்களும் இந்தப் பஞ்ச பூதங்களும் ஒன்றாகவும் இருக்கின்றன. வெவ்வேறாகவும் இருக்கின்றன. அதாவது சூரியனில் இவை ஒன்றாகவும் பூமியில் இவை வெவ்வேறாகவும் இருக்கின்றன.

எனவே பஞ்சபூதங்களின் மாற்றத்துக்கு ஈர்ப்பு சக்தி முக்கிய பங்களிக்கிறது. இந்த ஈர்ப்பு சக்தியை வெப்பமே தீர் மானிக்கிறது. எல்லாப் பொரு ளுமே வெப்பமேற்படுகிறபோது ஈர்ப்பு விசை குறைந்து திரவமாக வும் வாயுவாகவும் மாறி கண்களுக் குப் புலப்படாத வடிவத்தை அடைந்து இல்லாமலும் போய் விடும். குளிர்வடைகின்றபோது மீண்டும் வடிவங்களை எடுக்கி றது. அவற்றின் பருமனுக்கும் திணிவுக்கும் அமைவாகப் பிர பஞ்சத்திலிருக்கும் பொருள் களுக்கும் ஈர்ப்பு விசை வளை யம் காணப்படுகிறது. இவை பிரபஞ்சத்தில் இருக்கும் எந்தப் பொருளும் தனியாக இருக்க முடியாது ஒன்று சேர வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன.

1994 ஆம் ஆண்டு வியாழக் கிரகத்தில் ஏற்பட்ட ஸுமேக்கர் லெ- 7 மோதல் இந்தப் பிரபஞ் சத்தில் ஏற்படக் கூடிய மீள் உரு வாக்கம் பற்றிக் கட்டியம் கூறுகிறது. அதா வது வியாழக்கிரகத்தின் இரண்டாவது ஈர்ப்பு விசை வளையம் (உபகோள்களின் பகுதி) பல சிறு கற்களையும் உபகோள் களையும் வைத்திருக்கிறது. தவிர வியாழன் தன்னைத் தானே சுற்றி மிகப் பெரிய பாதையில் சூரியனை வலம் வரும்போது தனது உபகோள்கள் அனைத்தும் தன்னை விட்டுப் பிரியாது அனைத்தையும் கவர்ந்து செல் கிறது. அவற்றுள் இருந்த ஏழு பாறைகள் மெதுமெதுவாக வியாழனில் நேரடி ஈர்ப்பு விசைப் பிரதேசத்தில் பிரவேசிக்க அவை களை ஈர்த்து தன் மேனியுடன் இணைத்துக் கொண்டது.

எனவே அடிப்படையில் ஈர்ப்பு விசை செய்கின்ற மாற்றமே பொருள்களின் தோற்றம் முடிவாக அமைகின்றது. தவிர பரிணாமம் என்பது கூட மரபணுப் பரிசோத னைகள் மூலம் உறுதி செய்யப்பட்டிருக் கிறது. ஆக மாற்றங்கள் இடம்பெறுவதால் தோற்றம் சர்வ நிச்சயமாகிவிடுகிறது.

எனவே தான் கடவுளின் துணிக்கைகள் பற்றிய ஆய்வு முக்கியத்துவம் பெறுகிறது. பிரபஞ்சத்தின் எல்லைகள் விரிந்து செல்வ தாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். காரணம் ஒடுங்கியிருக்கும் பிரபஞ்சம் கோள்களின் தோற்றம் செயற்பாடுகளால்தான் பெறு மானமடைகிறது. இதுவே பெரு வெடிப்புக் கொள்கையாகும். முக்கியமாக வெற்றிட மாக இருள்மயமாக இருக்கும் பிரபஞ்சத்தில் கண்களுக்குப் புலப்படாத கடவுளின் துணிக்கைகள் (அணு) சடப் பொருள்களை உருவாக்கி எல்லாம் ஒன்றிணைந்து விட்டு விலக்க முடியாத ஈர்ப்பு விசையை நெருப்பு, ஈர்ப்பு விசையில் பிளவை ஏற்படுத்தி பல ஞாயிற்றுத் தொகுதிகளையே உருவாக்கி விடுகின்றமையை பெரு வெடிப்புத் தத்து வம் உணர்த்துகின்றது.

பிரபஞ்சத்தில் உள்ள கோள்களும் அதன் இயக்கங்களும் நிலையானவை என்ற விடாப்பிடியான கருத்துக்களையும் கடவுளின் துணிக்கைகளும் பெரு வெடிப்புத் தத்துவங் களும் தகர்த் தெறிகின்றன. மாற்றங்களை உடையதுதான் படைப்பின் நோக்கங்கள் என்பதை மீண்டும் மீண்டும் ஆழமாக்கிச் சொல்கிறது.

எனவே அறிவுகூட நிலையானது அல்ல. மனித அறிவு புதிய கருத்துக்களை மனங் கொண்டு புதிய வகையில் சிந்திப்பதற்கு எம்மைத் தயார்ப்படுத்தத் தூண்டுகிறது. மனித சமுதாயத்தைப் பிளவுபடுத்தி வைத் திருக்கும் அடிப்படை வாதக் கருத்துக்களி லிருந்து மனிதன் வெளிவர வேண்டிய தேவைகளையும் எடுத்தியம்புகிறது.

# பெயர்கள் தரும் பாதைகள்... 3

■ இ.சத்தியன், கொக்குவில்

விதி என்பது கஸ்ரம் எனப் பொருள்படும். கஸ்ரம் என்னும் சொல்லின் 'ர', எழுத்தைக் கவனிக்கின்றோம். 'ர' எழுத்து அமைகின்ற வேறு சில சொற்களையும் கவனிப்போம். அவை முன் வினை பாவ நிலைகளுக்கு சமனாகக் கருத முடியும்.

| | | | |
|---|---|---|---|
| கஸ்ரம் | ர | சந்திரமதி | ர |
| நரகம் | ர | வரதன் | ர |
| அசுரன் | ர | நளமகாராசன் | ர |
| ராட்சதன் | ர | ராமச்சந்திரன் | ரா |
| ராவணன் சீதை | ர | றஞ்சி | ற |
| கமக்காரன் | ர | ராணி | ரா |
| ராசேஸ்வரன் | ரா | ரத்தினம் | ர |
| அரிச்சந்திரன் | ர | | |

| | |
|---|---|
| கர்த்தர் | சவம் + குளிர் |
| கந்தன் | சர்வானந்தம் |
| அனர்த்தனன் | தசரதன் |
| பக்தன் | உடல் - உயிர்- மனிதன் |
| கண்ணதாசன் | சாரதா |
| நளமகாராசன் | தங்கம்மா |
| பாபர் பத்மநாதன் | நல்லதங்காள் |
| அன்பழகன் | மலர் |
| பால் | ஆண்டாள் |
| பணம் | காரைக்கால் |

மேற்கொண்ட சொற்கள் ஒற்றைக் கொம்பு இரட்டைக் கொம்பு இல்லாத சமநிலைச் சொற்களாக அமைவதை நாம் உணர முடியும்

(முக்காலத்திலும் நகரும் தன்மை அமைந்த வலி சொற்களாகும்)

திடீர் மரணங்களை குறிக்கும் க், ச், ங், ப், ம் போன்ற மெய் எழுத்துக்களையும் சொற்களையும் கவனிப்போம்.

| | | |
|---|---|---|
| தசரதன் | - | ன் |
| வீரப்பன் | - | ன் |
| ஒசமாபின்லேடன் | - | ன் |
| வசிட்டர் | - | ர் |
| கிருவானந்தவாரியார் | - | ர் |
| பிரபாகரன் | - | ன் |

நீண்ட கால மரணப்படுக்கையை குறிக் கும் விழி வேற்றுமை எழுத்தாகிய பா, மா, சா எழுத்துக்களையும் சொற் களையும் கவனிப்போம்

| | | |
|---|---|---|
| சாயிபாபா | - | பா |
| தங்கம்மா அப்பாக்குட்டி | - | மா |
| தவராசா | - | சா |
| சிங்கராசா | - | சா |

ராசா- துன்பம் மக்கள் சேவை

ஆண்களுக்கு பெயரின் இறுதியில் மெய் எழுத்துக்கள் அமைவது நீண்ட கால படுக் கையை கொடுக்காமல் திடீர் மரணத்தை கொடுக்க வல்ல சொற்கள் ஆகும்.

பின்வரும் பெயர்ச் சொற்கள் பகுதி பகுதியாக அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியையும் பெருக்கல் வாய்ப்பாடுகளின் தரவுகளாக கற்பனைக்கு எடுத்துப் பார்ப்போமாயின் இலகுவாகப் புரியும். மனித சமுதாயம் பயன் அடைய முடியும் (சாதகம்)

இவ்வகையான உதாரண பெயர் சொற்களை எண் சோதிடத்துடன் ஒப்பிட்டு சீர் செய்வோமாக இருந்தால் மனித சமுதாயத்துக்கு மிகவும் முன்னேற்ற நிலையாக அமையும் என்பது மறுக்க முடியாத விழிப்புணர்வு எனக் கணிக்க முடியும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைக்கப்படும் பெண்களின் உழைப்பு



பலநூறடி கோபுரத்தை எட்டிப்பிடித்தவுடன் எல்லோருக்கும் தெரிவது அந்த வெற்றியின் உச்சியே தவிர, அந்த உச்சியில் ஏற்றிவிட்ட ஏணியல்ல! இது போலவே ஏற்றிவைக்கும் ஏணியாக மறக்கப்பட்ட சமுதாயமாகவே பெண்ணினம் விளங்குகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையும் இதன் உண்மைத்தன்மை அதிகம் என்றே கூறலாம்.

எந்தவொரு நாட்டிலும் பெண்ணினுடைய பங்களிப்பானது அபிவிருத்தியில் அளப்பரியது. அதிலும் பொருளாதார அபிவிருத்தியில் மிகவும் உச்ச பங்களிப்பு பெண்களிடமிருந்தே என்றுகூடச் சொல்லலாம்.

இலங்கையின் பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் தேயிலை ஏற்றுமதி, வெளிநாட்டுக்குப் பணிப் பெண்களாக செல்லல், ஆடை உற்பத்தியும் ஏற்றுமதியும் ஆகிய மூன்று துறைகளுமே நாட்டின் மொத்த வருமானத்தில் குறிப்பிடத்தக்களவு சதவீதமாக உள்ளது. இந்த மூன்று துறைகளையும் எடுத்துக்கொண்டால் அதன் தொழிலாளர்களாக 90வீதத்திற்கு மேல் பெண்களாகவே உள்ளனர்.

சுமார் 160 வருடங்களுக்கு முன்னராக ஆரம்பிக்கப்பட்ட தேயிலைப் பயிர்ச் செய்கையானது இன்று வரை சர்வதேச ரீதியாகப் பேசப்படுகின்றது. கொழுந்து பறிக்கும் பணியைச் செய்யும் அந்த தேயிலைத் தோட்ட சகோதரிகள் இயந்திரம் போலத் தினமும் தொழிற்பட்டு தமது சக்தி முழுவதையும் அங்கேயே செலவழித்து சிறந்த பலனை நாட்டுக்காக வழங்குகிறார்கள். ஆனால் அரசாங்கமோ/ தேயிலைத்தோட்ட கம்பனிகளோ தேயிலைச் செடிகளுக்கும், உயிரற்ற இயந்திரங்களுக்கும் கொடுக்கும் முக்கியத்துவத்தின் ஒரு சிறு பகுதியையேனும் அந்தத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அளிப்பதில்லை.

லயங்களிலே சிறுசிறு அறைகளில் தமது காலத்தைக் கழிக்கிறார்கள். வேலை செய்யும் இடங்களிலோ பெண்களுக்கென்று எந்தவொரு தனியான ஏற்பாடுகளும் இல்லை. இங்கு வேலை செய்பவர்களில் 75-85 வீதமானோர் பெண்களே! ஆனால் பெண்களுக்கென்று ஒரு தனியடையாளம் இல்லை. அதே நேரம் சம்பளம் கூட பெண்களுக்கு ஆண்களோடு ஒப்பிடுகையில் குறைவாகவேயுள்ளது.

அடுத்து இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9 வீதத்திற்கும் அதிகமான வருவாயை ஈட்டித் தரும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு. அதிலும் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப் பணிப் பெண்களாகச் செல்லும் பணிப் பெண்கள் மூலமாக நாட்டுக்குக் கிடைக்கும் வருவாயாகும். வறுமையின் காரணமாக குடும்பப் பாரத்தைச் சுமக்கமுடியாது வெளிநாடுகளுக்குச் செல்லும் பெண்கள் வறுமையை விடக் கொடிய துன்பங்களை அங்கே அனுபவிக்க நேரிடுகிறது. பாலியல் தொல்லைகள், உடல் உள ரீதியிலான கொடுமைகள் எனப் பலவற்றைத் தாங்க வேண்டியவர்களாக உள்ளார்கள். பணம் கிடைக்கின்றதோ இல்லையோ நிச்சயமாக அவர்களுக்கு பழியும் அவப்பெயரும் கிடைக்கின்றது. அந்த நாட்டு ஆண்வர்க்கத்தால அதிகம் சீண்டப்பட்டு அந்நிய நாடுகளில் நம் இலங்கைப் பெண்கள் நிர்க்கதியாக்கப்படுகின்றார்கள்.

மற்றையது ஏற்றுமதியின் அரைப் பங்கிற்கு மேலாகப் பங்களிப்புச் செய்வது தைத்த ஆடை ஏற்றுமதி ஆகும். தைத்த ஆடைகளை ஏற்றுமதி செய்து இலங்கை பெருமளவு வருவாயைப் பெறுகின்றது. இந்த ஆடை உற்பத்தி நிறுவனங்களில் ஆடை தைப்பவர்களாக, வடிவமைப்பாளர்களாகப் பெண்களே பணிபுரிகின்றார்கள். ஆனால் இவர்களுக்குரிய கூலி அங்கே சரியாக வழங்கப்படுகிறதா? சுகாதார, மருத்துவ வசதிகள் அங்கே நிறுவனங்களில் சரியாகப் பேணப்படுகின்றதா? போன்ற கேள்விகளுக்கான விடை இல்லை.

தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். குறிப்பாக பால் நிலைச் சமத்துவம் பேணப்படல் வேண்டும். பெண்களையும் உரிய முறையில் சமமாக எண்ணும் எண்ணம் தேயிலைத்தோட்ட முதலாளிகளிடமும் ,அரசிடமும் ஏற்பட வேண்டும்.

வெளிநாடுகளிலே பணிப்பெண்களைப் பாதுகாக்க உடனடியாகப் பல சட்டங்களை இயற்ற வேண்டும்.அங்குள்ள பெண்களின் நிலையை அவதானித்து அவர்களுக்காக அந்த நாட்டிலேயே பேச வேண்டும். ஆடைத்தொழிற்சாலைகளில் அல்லலுறும் பெண்களின் துயர் துடைக்கப்படவேண்டும்.

ஒரு திரைப்படத்தைப் பார்க்கிறோம். பார்த்து விட்டு அதில் நடித்த நடிகர்,நடிகை, பாடல் போன்ற திரையில் தெரியும் விடயங்களைப் பேசுகின்றோமே தவிர திரைக்குப் பின்னால் நின்று சிறப்பாக திரைப்படம் வெளிவர உழைத்த இயக்குநர், ஒளிப்பதிவாளர், துப்புரவுத் தொழிலாளர், ஆடை வடிவமைப்பாளர், ஒப்பனையாளர் பற்றி மறந்து விடுகின்றோம். அதிலும் குறிப்பாக பலர் மறக்கப்பட்டு விடுகிறார்கள். இது போலவே நமது நாட்டிலும் பொருளாதார அபிவிருத்தியில் திரைக்குப் பின்னால் நின்று முகம் தெரியாமல் உழைக்கும் பெண்களை யாரும் மறந்துவிடக்கூடாது.

இதுபோல நாட்டுக்காக உழைக்கும் பெண்களின் வாழ்க்கைத் தரத்தையும், பாதுகாப்பையும் உறுதிசெய்வது சம்பந்தப்பட்ட அனைவரினதும் பொறுப்பாகும்.

பு.சௌமியா

# முதிர்கன்னி

விழும் போதும்
ஒவ்வொரு தடவையும்
எழும்பி விடத்தான்
நினைக்கின்றேன்
ஆனாலும்...
தள்ளி விட்ட படிதான் அவர்கள்

வலிகள் மறந்து
வாழ்க்கையில்
இனிப்புகள் சுவைக்கவே
விரும்புகின்றேன்
ஆனாலும்
கசப்புகளும்
ரணங்களுமே
நிரம்பி வழிகின்றது...



பள்ளி தொடங்கி
பல்கலை வரை
பட்டங்கள் சுமந்தேன்
பணக்காரர் பட்டமெல்லாம்
பறந்தது உத்தியோகமாய்
ஏழையிவள் பட்டமெல்லாம்
உறங்கியது பெட்டிதனில்
ஆனாலும் - நாற்பது அகவைதாண்டிய பின்பும்
சுமக்க முடியாத பட்டத்தை
சுமக்கின்றேன் சமூகத்தில்
முதிர்கன்னியெனும் பட்டம்
பறக்குமா பட்டம்...?
கிடைக்குமா தாலி...?

திருமதி அகிலதீபன்,
சரசாலை தெற்கு.

நிலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப
விரும்புவோர் **"திலகம்"**,
உதயன், 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள் .



# சமையல் அறைக் சில குறிப்புகள்



சமையலறை என்பது ஆரோக்கியம் தொடங்கும் இடம். ஆனால் சமையலறையை அழகாக வைத்துக்கொள்ள பெரும்பாலானோர் நினைப்பதில்லை. ஆங்காங்கே பாத்திரங்களும், அழுக்கு கரித் துணிகளும் போட்டு வைத்து அதன் அழகையே கெடுத்து வைத்திருப்பர். அப்படிப்பட்ட அழுக்கடைந்த சமையலறையை, சந்தோஷமான , அழகான இடமாக மாற்ற... சில வழிகள்.

### சுத்தமான சுவர் ஆரோக்கியம்

சமையலறையில் சுத்தமான சுவர் இருப்பது அழகுக்கு மட்டுமல்ல... ஆரோக்கியத்துக்கும் அவசியம். குறிப்பாக இளநிறத்தில் பெயிண்ட் அடித்துக் கொண்டால் சின்ன அறையும் பெரிதாகத் தெரியும். புகை, சமையல் துகள்கள் என்று அனைத்தும் சேர்ந்து சமையலறை சுவர் மேலும் அழுக்காகும். இதைப் பார்க்க அருவருப்பாக இருப்பதோடு ஆரோக்கியக் கேடும் அடிக்கடி சுவரைச் சுத்தப்படுத்தினால் சமையல் செய்யும் உணவுகளுக்கு மட்டுமல்ல, உங்களுக்கும் பாதுகாப்பு.



### புதிய தொழில் நுட்ப அடுப்புகள்

சமையலறைக்கு முகம் போல இருப்பது அடுப்புகள் தான். அது அழகாக இருந்தால்... சமையலறையே மிகவும் அழகாக இருக்கும். தரமான அடுப்பாக இருக்கும் பட்சத்தில் 50 சதவீதம் நேரமும், 50 சதவீதம் எரிசக்தியும் மிச்சமாகும். மேலும் 80 சதவீதம் புகையில்லா சுற்றுச்சூழலும் உருவாகும். அடுப்பு வாங்கும்போது விலை குறைவாக இருக்கிறது என்று வாங்காமல்... விலை அதிகமாக இருந்தாலும், நவீன தொழில்நுட்பத்தில் வசதி நிறைந்த அடுப்பை வாங்கவும். அடுப்பு நன்றாக இருந்தால், சமையல் செய்யும் சூழலில் ஆர்வம் அதிகமாகும்.

# அம்மா



விதி என்ற பெயரில் கடவுள் என்னை
உந்தன் கருவறையில் வரைந்தார்
ஈரைந்து மாதங்கள் கருவறைக்குள்- இருந்து
கண்கள் உன்னைக் காணத் துடித்தது.
போலியான மனித வாழ்க்கையில்- பொய்யான
பல உறவுகளில்-மெய்யான
உறவாய் உன்னை நேசித்தேனம்மா
என் கனவுகள் கரைசேர்வதற்காக
உன் கனவுகளைக் கலைத்தது ஏனம்மா?
நான் வெளிச்சத்தில் வாழ- உன்
கைரேகை தேய்ந்தது ஏனம்மா?
பணம் படைத்த இந்த உலகில்
பாசம் தந்த உன்னை நேசிக்கிறேனம்மா
என்றும் என் மனதில் நீயும்- உன்
இனிய நினைவுகளும் தானம்மா- மீண்டும்
ஒரு ஜென்மம் இருந்தால்- என் மகனாய்
நீ பிறக்க வேண்டுமம்மா!

சுரேஷ் கம்ஷாயினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடை தெரியுமா? 177

### உங்களுக்கும் பரிசில்கள்

1. இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் யார்?
2. நொபெல் பரிசு பெற்ற முதல் தமிழரின் பெயர் என்ன?
3. உலகின் முதலாவது பெண்தாதி என்ற பெருமைக்குரியவர் யார்?
4. 'முத்தமிழ் வித்தகர்' எனப் போற்றப்படும் ஈழத்தவர் யார்?
5. மனித உமிழ் நீரில் உள்ள நொதியங்கள் எவை?

### விடைகள் 175

1. கிப்போ கிறட்டீஸ்
2. நாஸா
3. ஒக்ரோபர் - 15
4. புறா
5. லியனார்டோ டாவின்சி

### வெற்றி பெற்றோர் விவரம் (176)

* தி.சுஜீவன், தரம்- 7பி, ஹாட்லிக் கல்லூரி
* ந.சஜீவன், தரம்- 7டி, வவுனியா தமிழ் மத்திய மகா வித்தி.
* ற.ஆதித்யா, தரம் -9 பி, வே.ம.உ.பா.
* செ.விஜித்தா, தரம்- 8, கிளி / கிராஞ்சி அ.த.க.பாடசாலை.
* சோ.சங்கீதன், தரம்- 6, மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.
* ர.ஜோகினி, தரம்-9பி, வே.ம.உ.பா.

### விடை தெரியுமா?

தெரிந்தால் 22.09.2012 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் **"சிறுவர்கதிர்"**, உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

## கன்றுக் குட்டி




வெள்ளை வெள்ளை கன்றுக்குட்டி
மிகவும் நல்ல கன்றுக்குட்டி
துள்ளிக் குதிக்கும் கன்றுக்குட்டி
சோம்பல் இல்லாக் கன்றுக்குட்டி

அம்மா என்னும் கன்றுக்குட்டி
ஆசையான கன்றுக்குட்டி
சும்மா சும்மா தலையாட்டி
சொல்வதென்ன கன்றுக்குட்டி

ம.தேனுஜன்
தரம் 4டி
யாழ்.புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை.


# தோமஸ் அல்வா எடிசன்



1) விஞ்ஞானி தோமஸ் அல்வா எடிசன் 1847ஆம் ஆண்டு அமெரிக்காவில் மிலான் நகரில் பிறந்தார்.
2) எடிசனின் ஊக்கமும் விடாமுயற்சியுமே அவரது வெற்றிக்கு ஏணிப்படியாக இருந்தது.
3) ஒன்றரை நூற்றாண்டுக்கு முன்னர் நம்மிடையே மின் விளக்குகள் காணப்படவில்லை.
4) எடிசன் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மின்விளக்கைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சி செய்தார்.
5) தனது முதல் முயற்சியில் தோல்வி கண்டாலும் சளைக்காது தனது ஆய்வைத்தொடர்ந்தார்.
6) எடிசனுக்கு முன்பு சேர் ஹம்பிரி டேவி என்பவர் மின்விளக்கைக் கண்டுபிடித்தாலும் அது குறைவான நேரமே ஒளிர்ந்தது.
7) ஆனால் எடிசன் கண்டுபிடித்த மின் விளக்கு அதிக நேரம் ஒளிர்ந்து சாதனை படைத்தது.
8) வாத்து முட்டையை அடைகாத்த அந்த ஐந்து வயதுச் சிறுவன் தான் புகழ் பெற்ற விஞ்ஞானியான தோமஸ் அல்வா எடிசன்.
9) தோமஸ் அல்வா எடிசனின் தாயின் பெயர் நான்சி எலியட் என்பதாகும்.
10) எடிசன் 25இற்கும் மேற்பட்ட கண்டுபிடிப்புகளைக் கண்டு பிடித்தார்.
11) 1929ஆம் ஆண்டு எடிசன் மின்விளக்கைக் கண்டுபிடித்ததற்காக பொன்விழா கொண்டாடப்பட்டது.
12) ஒவ்வோர் ஆண்டும் மாசி மாதம் ஃபோர்ட் மையர்ஸ் நகரில் பெரியளவிலான மின்விளக்குத் திருவிழா மூன்று நாள்கள் கொண்டாடப் படுகிறது.
13) "முயற்சி திருவினையாக்கும்" என்பதற்கிணங்க வெற்றி பெற்றார் தோமஸ் அல்வா எடிசன்.
14) 1931ஆம் ஆண்டு ஐப்பசி 18ஆம் திகதி எடிசனின் இறுதி மூச்சு பிரியும் போது அவரின் வயது 84 ஆகும்.
15) எடிசன் மறைந்தாலும் அவர் கண்டுபிடித்த மின்விளக்கு என்றென்றும் உலகத்தை ஒளிமயமாக்கிக் கொண்டிருக்கும்.

**அஸ்வினி குணசிங்கம்**
**யாழ்.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்.**





**மு.தீபிகா**, தரம்-3ஜி,
புனிதஜோண் பொஸ்கோ வித்தி.




**கு.திவ்வியா**, தரம்-7,
யாழ்.சன்மார்க்க மகாவித்தி.



**இ.றாங்கி**, தரம்-11,
உடுத்துறை ம.வி.



**செ.விஜித்தா**, தரம்-8,
கிராஞ்சி அ.த.க.பாடசாலை




**அ.ஹர்ஷனா**, தரம்-2சி,
புனித ஜோண் பொஸ்கோ வித்தி.



**பு.அக்‌ஷஜன்**, தரம்-2,
குமரகோட்டம் கோண்டாவில்

# நீர்க்கொடை



இப்போது கடும் கோடை. அதனால் ஏழைகளுக்குப் பெரும் தண்ணீர்த் தாகமாக இருக்கும். இதே தாகம் ஒரு பணக்காரருக்கு இருந்தால் உடனே ஒரு கடையில் சென்று குளிர் பானம் ஒன்றை வாங்கி அருந்தி விட்டு, தாம் செல்ல வேண்டிய இடத்துக்குச் சென்று விடுவார்.

ஏழைகள் தண்ணீர்த் தாகத்தை கடையிலா தீர்ப்பர். தாம் செல்லும் வழியிலுள்ள ஒரு வீட்டில் தான் தண்ணீர்த் தாகத்தைத் தீர்ப்பர். எந்த வீட்டிலாவது தண்ணீர் கேட்டால் சில வீட்டுக்காரர்கள் தமது நாயை திறந்து விட்டு கலைத்து விடுவார்கள். நாம் நாயைக் கண்டு பயந்து ஓடிவிடுவோம். இதைச் செய்வோர் கூடாத மனமுடைய வீட்டுக்காரரே.

சில வீட்டுக்காரர்களிடம் தாகத்தைத் தீர்ப்பதற்கு தண்ணீர் கேட்டால் உள்ளே வாருங்கள் என்று கூறி, கதிரை எடுத்து வைத்து அமரக்கூறி தேவையான அளவு நீரைத் தருவார்கள். இப்படித் தருவோர் நல்ல மனம் படைத்தவர்களாக இருப்பர்.

இப்படி இருந்தால் எல்லோருக்கும் நன்மை கிடைக்கும். நான் மேலே குறிப்பிட்டதும் நல்லதுதான். அதைவிட நல்லது ஒன்று உள்ளது.

ஒரு மண்குடம் ஒன்றை வாங்கி ஒரு மரத்தின் கீழ் வைத்து அதில் நீர் ஊற்றி வைத்தால், வீதியால் செல்லும் மக்கள் நீரை அருந்தி தமது தாகத்தைத் தீர்த்துக்கொள்வர்.

இந்தப் பேருதவியைச் செய்வதற்கு பணம் தேவையில்லை. நல்ல குணமே தேவை. ஒவ்வொரு வீட்டாரும் தம் வீட்டு வாசலில் தண்ணீரை வைத்தால் வெயிலில் செல்வோருக்கு அது அமிர்தமாக இருக்கும். அவர்களது தாகம் தீர்வதுடன் தாகத்தைத் தீர்த்தவருக்கு கடவுள் அருள் நிச்சயம் கிட்டும்.

''அறம் செய்ய விரும்பு'' என்று ஆத்திசூடியில் ஔவைப்பாட்டி சொன்னதை பணம் படைத்தோர் செய்யாவிட்டாலும் ஏழைகள் செய்து இறை அருள் பெற்று இன்புற்று வாழலாம்.

நேச-வித்தியாசாகர்,
கிளிநொச்சி ம.வி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இரக்கமில்லா மனிதனுக்கு இறையருள் கிடைக்குமா?

ம.திருவரசுராஜா,
வவுனியா

மிருகங்களைப் பலி கொடுத்து நமக்கு நலமான வாழ்வா! நம்மில் எத்தனை ஆயிரம் பேர் வதைபட்டு இறந்தார்கள். நம் பாவங்கள் சந்ததிக்கும் சேர்த்து வைக்கும் சொத்து. பழி, பாவம் தொடரவே செய்யும். இன்று சுகபோகம் காண அடுத்தவனை வதைப்பவர்களின் சந்ததிக்கும் சுகபோகம் கிடைக்குமா?

ஆலயத்தில் பலியிடல் மத பாரம்பரியமல்ல. ஒரு பக்கம் சைவர்களாக இருப்பது மறுபக்கம் ஆலயத்தில் மிருக பலி கொடுப்பது இது இந்து மத கோட்பாடு அல்ல. ஆலயம் என்பது மனித மனங்களை அதர்ம வழி செல்லாது பக்குவப்படுத்தி ஆன்மிக ஈடேற்றம் பெறும் புனித இடங்கள். அங்கு உயிர்களைப் பலியிடுவதால் எந்த இறையருளும் பெற முடியாது. மாறாக ஆலயம் என்ற சொல்லின் புனிதம் கெடுக்கப்படுகிறது. அன்பு, கருணை, இரக்கம் இல்லாத மனித மனம் தோற்றம் பெறுகிறது. பகுத்துணரும் தன்மையற்று கண்மூடித்தனமாய் பின்பற்றும் அர்த்தமற்ற செய்கை தொடர்கிறது.

பிற உயிர்கள் மீது இரக்கம் காட்டினால் இறைவன் நம்மீது பல மடங்கு இரக்கம் காட்டுவான் என்று சகல மதங்களும் கூறினாலும் அதற்கு மேலாக அன்பே சிவமென்று இந்துமதம் கூறுகிறது. மனமது தூய்மையாயின் மந்திரம் செபிக்க வேண்டாம் என்ற வாக்குப்படி எமது நினைவும், சொல்லும், செயலும் நல்லதாக அமையுமாயின் பிற உயிர்களுக்கு துன்பம் விளைவிக்காது இருக்குமாயின், அந்த உள்ளத்தில் அன்பு, கருணை, இரக்கம் குடிகொண்டிருக்கும். இறைவன் தானாக அந்த உள்ளத்தை நாடி வருவான்.

"மன்னுயிர் ஓம்பி அருளாழ்வார்க்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை"

பிற உயிர்களை நேசிப்பவர்க்கு தன்னுயிர் பற்றிய அச்சம் இல்லையாம்.

"வலியார் முன் தன்னை நினைக்க தான் தன்னின்
மெலியார் மேற் செல்லுமிடத்து"

உன்னை விட வலியவன் உன்னை வருத்தும் போது நீ படும் வேதனையை, நீ உன்னைவிட மெலியார் மேற்காட்டும் போது அவை எவ்வளவு வருத்தமுறும் என எண்ணிப்பார்.

குறள் உரைக்கும் கருத்தை உணர வேண்டாமோ? அன்று போல் இன்றும் நோய் வந்தால் நாட்டு வைத்தியமா பார்க்கிறோம். வைத்தியத்துறை, விஞ்ஞானம், அறிவு வளர நாம் அவற்றை கைவிட வில்லையா! அதே போல் சிந்தித்து அர்த்தமற்ற பாவமெனக் கருதும் பழைய சம்பிரதாயங்களை ஏன் நிறுத்தக்கூடாது. தெய்வ சந்நிதியில் உயிர்வதையானால் தெய்வம் அதை ஏற்குமானால் தெய்வம் என்ற சொல்லுக்கு அகராதியில் பொருள்ஏது!

தெய்வ சந்நிதியில் தூய அருட்கதிர்கள் தான் பிரவாகிக்கும். நம் உடலும், உள்ளமும் தூய்மையற்றதாயின் நம்மிலிருந்து வெளிப்படும் கதிர்கள் அந்த தூய கதிர்கள் எம்மை அண்டாமல் செய்துவிடும். அர்ச்சனை, பூசை, திருவிழாக்கள் ஆயிரம் செய்தாலும் மனதால் தீயதெனின் தெய்வ அருள் கிட்டாது. பாவத்தின் பலனே மேலோங்கி நிற்கும். மிருகங்களைப் பலி கொடுத்து நமக்கு நலமான வாழ்வா! நம்மில் எத்தனை ஆயிரம் பேர் வதைபட்டு இறந்தார்கள். நம் பாவங்கள் சந்ததிக்கும் சேர்த்து வைக்கும் சொத்து. பழி, பாவம் தொடரவே செய்யும். இன்று சுகபோகம் காண அடுத்தவனை வதைப்பவர்களின் சந்ததிக்கும் சுகபோகம் கிடைக்குமா? மெல்லமெல்ல இருள் சூழ்கிறது நம்மை. எதிர்காலம் சுபீட்சமானதாக இல்லை. எதிர்கால சுபீட்சம் கருதி செய்ய வேண்டியது சேவை. பழிவாங்கல்களல்ல. எதிர்காலம் துன்பமெனில் எல்லோருக்கும்தான்.

நம் மனதுக்கு இறைவன் அருட்கதிர்களை கொண்டு வர வேண்டும். அதற்கு மனம் தூய்மையாக வேண்டும். வாழ வளங்கள் படைத்தனை இறைவன். வளமான பூமி, கனிதரு மரங்கள், முயற்சி திருவினையாக்கும். பிறகேன் பிற உயிர்களை வதைத்து வாழ வேண்டும். இரக்கமில்லா உள்ளம் கொடுப்பதை இறைவன் ஏற்பானா! அன்புக் காணிக்கையாக உன் கை, கால்களை வெட்டிக் கொடு. உயிரனைத்தும் இறைவன் படைப்பு. பிற உயிரை காணிக்கையாக்க எமக்கேது உரிமை. மிருகங்களும் உணர்வுகள் உடையவைதான். எசமானைக் கண்டால் பணிந்து அன்பு காட்டும். கத்திக் குரலெழுப்பும். இறைவன் அனைத்து உயிர்களிலும் கலந்திருக்கிறான். உயிர்கள் வதைபடும் போது இறைவன் வதை படுகிறான்.

அன்று வாழ்ந்த கிராம மக்கள் நோய், துன்பம் வரும் போது ஊர் கோயில் பூசாரியை நாடினார்கள். அவரும் உடுக்கடித்து, பார்வை பார்த்து காளி, காட்டேரி, மதவடி முனி பிடித்திருக்கு என்பார். காளி கேட்குதோ இல்லையோ ஆவேசம் வந்தவர் போல் ஆடிச் சொல்லுவார் ஆடு வெட்டி பலி கேட்டு பெரியமடை போட்டால் குறை தீரும் என்பார். பிள்ளைக்கு காய்ச்சல் வந்தாலும், வாய் பிதற்றினாலும் ஆடு, கோழி நேர்த்தி வைப்பார். ஊரார் சேர்ந்து வருடமொரு வேள்வி, பொங்கல். கொட்டிலாக இருந்த கோயில்கள் தான் எங்கும் பெரும் கோயிலாக மாறியிருக்கின்றன. ஆனால் அந்தந்த ஆலயத்தில் நடைபெற்ற சடங்குகளை மக்கள் கைவிடவில்லை. தெய்வக் குற்றமாய் ஏதும் தீங்கு நேருமோ என்ற பயம் தான் காரணம். சரி தீமை வருமென்றால் வந்து தடுத்து பலியிட கொண்டு வந்ததையெல்லாம் அள்ளிக் கொண்டு போனார்களே அவர்களுக்கு என்ன துன்பம் நேர்ந்தது. பிறர் சொல்லியா நாம் சிந்திக்க வேண்டும். ஆலயத்தில் பயனற்ற நடைமுறைகள் சில.

'ஓம்' என்பது அதிர்வலைகள் கூடிய சொல். அதுவே இறையருளை எம் மனதின் பால் கொண்டு வரும் பிரணவ மந்திரம். நம என்றால் வணக்கம். "ஓம் நம பார்வதிபதியே" என்று அதாவது பார்வதிக்கும் சிவனுக்கும் வணக்கம் என்பதே அதன் பொருளும் பயனும் ஆகும். மாறாக இதை நாம் இவ்வாறு கூறுகிறோம் "பார்வதி பதையே". பதி என்றால் இறைவன். பதை என்பது பதைப்பது. பார்வதியை பதைக்க வேண்டி நாமும் வாழ்வில் பதைக்கிறோம். கல்லைக் கடவுளாக்குவது குருமார்கள் தவறு நேர்ந்தால் தீமையேயன்றி நன்மையில்லை. சிந்திப்போம்.

பாவங்கள் செய்து சீரழிந்து போகாமல் புண்ணியம் சேர்த்துவை சந்ததியும் இனமும் வாழ. கோயில்,தெய்வம் என்ற புனிதம் காக்கப்படட்டும். ஆலயத்திலும் சுற்றுப்புறத்திலும் இறைவனின் தூய அருட்கதிர்கள் பரவட்டும். எதிர்காலம் இன்பமுற இறையருள் பெறவேண்டுமாயின் வேண்டாம் ஆலயத்தில் மிருக பலி, உயிர்வதை. "மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்."

# ஈழத்தமிழர் பிரச்சினைக்கு புலம்பெயர்தல் தீர்வாகுமா?

க.குகதாசன்
யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரி,
முகிழ்நிலை ஆசிரியர்

இலங்கைத் தமிழர்களினுடைய வாழ்வு, புரையோடிப் போயிருந்த எம் சமூகத்தின் வாழ்வு, ஆரம்ப காலத்தின் நாடுகாண் பயணங்களைப் போன்றே சென்று கொண்டிருக்கின்றது.

சங்கத் தமிழன் தொடக்கம் தற்காலம் வரையிலே வாழ்வு சீராக இருந்தாலும் இலங்கைத் தமிழர்களைப் பொறுத்த வரையில் இந்த வாழ்வு நாடோடி வாழ்வாக இருப்பது வேதனையளிக்கின்றது. ஏனெனில் தன் தேசத்தைவிட்டு பணம் என்கின்ற அரக்கனைத் தேடி அலைகின்றான்.

இற்றைக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஔவையார், "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்று குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால் இன்றைய சமுதாயம் தமிழர்கள் திரைகடல் ஓடியும் வேறு இடங்களுக்குச் சென்று அகதியாக வாழ எத்தனிக்கின்றது.

உண்மையிலேயேஇலங்கைத்தமிழர் பிரச்சினைக்கு புலம்பெயர்தல் என்பது தீர்வாகிவிட முடியாது. புலம்பெயர்ந்து பல நாடுகளுக்குச் சென்று வாழ்ந்து எம்மவரின் தனித்துவ அடையாளங்களை உலகத்து நாடுகளில் சென்று அழித்து விடுதலே இன்றைய தமிழர்களின் வாழ்வாக இருக்கின்றது.

புலம்பெயர் நாடுகளில் எம்மவர் சமூகங்கள் அந்நியருக்கு அடிமைப்பட்டு சிறைகளிலும் தொழிற்சாலைகளிலும் வாழும் வாழ்வு இலங்கைத் தமிழர்களினுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வாகி விட முடியாது.



"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தவையே"

என்கின்றார் வள்ளுவப் பெருந்தகை. இன்றைய தமிழர்களுக்குப் பெற்ற தாயினையும் பிறந்த பொன்னாட்டினையும் விட மேலைத்தேச நாடுகளே மேலாகக் காணப்படுகிறது. அகதி அந்தஸ்தைப் கொடுக்கின்ற நாடுகளில் குடியேறிச் சென்று வாழ்ந்து விட்டால் எமது பிறந்த பொன்நாட்டினுடைய பெருமையினைக் காப்பது யார் என்ற கேள்வி எழுகின்றது அல்லவா?

அகதிகளாக ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு ஆபத்தான கடல் வழிகளிலே செல்லும் எம்மவர் சமூகங்கள் அடையப் போகின்ற உண்மையான இலக்கு என்ன? அகதி என்கின்ற அந்தஸ்தைப் பெற்று உழைத்து விடுவதால் என்ன பலன்? தமிழர் என்று சொல்லும் அவர்களின் இருப்பிடம் எது என்ற கேள்வியாகவே எல்லோர் [illegible] எழுகின்றது.

இற்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன்னர் காந்தியடிகள் இந்தியா எனும் மிகப் பெரும் தேசத்தில் இருந்து அந்நியனை வெளியேற்று எனக் கோஷமிட்டு வெள்ளைக்காரனை வெளியேற்ற பல பாடு பட்டமை மட்டுமல்லாமல் இந்தியத் தேசம் வெள்ளையர்களுக்கு கீழே அடிமைப்பட்டிருக்கக் கூடாது என்கின்ற நிலையைக் குறிப்பிட்டு அவர்களை இந்தியத் தேசத்திலே இருந்து வெளியேற்றி விட்டிருந்தார்.

அதனைப் போலவே தான் அந்நியரை இலங்கையிலிருந்து வெளியேற்ற சேர்.பொன் இராமநாதன் போன்ற தமிழ் சிங்களத் தலைவர்கள் பெரும்பாடுபட்டிருந்தனர்.

இவ்வாறு பெயர் பெற்றிருந்து, விளங்கிய தமிழர்கள் இன்று உலகின் பற்பல மூலைகளில் தமிழன்னையை மறந்து வாழ்ந்து கொண்டிருப்பது வேதனையளிக்கின்றது. ஏனெனில் உலகிலே தமிழர்கள் தங்கள் கலாசாரம், பண்பாடு என்பவற்றை மறந்தும், மறவாமலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்நிய தேசத்தில் அடிமைப்பட்டு வாழ்கின்ற இந்த வாழ்வானது இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வாகிவிட முடியாது என்பதே கருத்தாகும்.


புலம்பெயர் நாடுகளில் இருந்து தங்களின் நாடுகளுக்கு சொந்தப் பிரதேசங்களுக்கு வருகை தருகின்ற தமிழர்கள் தன் சொந்த நாட்டையே சுற்றுலா மையங்களாகவும் வெறும் வேடிக்கைப் பொருள்களாகவும் பார்த்து ரசிக்கின்ற நிலைமை கண்டிக்கத்தக்கதும் வேதனைக்குரியதுமாகும். வாழும் நாடுகளில் தன் கலாசாரத்தை அழிப்பது மட்டுமல்லாமல் சொந்தப் பிரதேசத்திலும் அழிப்பது வேதனை அளிக்கின்றது.

இலங்கையில் இருந்து வெளியேறும் தமிழர்கள் அந்நிய நாடுகளில் பனியிலும், குளிரிலும் வாழும் வேதனையான வாழ்க்கை, அவர்களின் துன்பங்கள், சொந்த பந்தங்களை தெரியாத சமூகங்கள் முன்னேற்றம் காணாத பிரதேசங்களில் அகதி என்ற அந்தஸ்தை பெற்ற இவர்களின் வாழ்க்கை முறை என்றும் புலம்பெயரும் தமிழர்களுக்கு ஒரு பாடமாக அமையட்டும்.

இருக்குது வழி இன்னும் உயர்ந்திட எழுந்து நீ விழி, இனிவரும் காலம் இருள் உனைச் சூழாமல் ஒளி தரும் பாதையைத் தெரிந்து தமிழர்கள் தன்நாட்டில் சொந்த மண்ணிலே தன் உரிமையைப் பெற்று சந்தோசமாக வாழ்வார்களேயனால் மேலைத்தேய நாடுகளுக்கு ஒப்பாக எமது நாடு முன்னேற்றம் பெற்று விடும் என்பதில் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 232



அனுப்புபவர் பெயர்:........................................................

விலாசம்:........................................................

........................................................

கையொப்பம்:........................................................

### இடமிருந்து வலம்

1. மார்பின் பின்புறம்
4. தீர்ப்பு வழங்குபவர்
8. இனிப்பான தாவர வகை
10. வீட்டின் முன்புறக் கட்டுமானம்
11. தாங்கள்
12. குழந்தை
14. உட்செலுத்துதல்
18. செய்தி எடுத்துச் செல்பவன்
19. மலை
20. துண்டு துண்டாக
21. உட்புறம்
22. காயத்தின் அடையாளம்
23. பத்திரிகைக்கு இது அவசியம்

### மேலிருந்து கீழ்

1. முன்னிலையில்
2. சீட்டுக் கட்டில் இதற்கு மவுசு அதிகம்
3. குத்து விழுவது இப்படி
5. சிரார்த்த நாள்
6. விலங்கு வளர்ப்பு இடம்
7. இடம் (இடப்பெயர்)
9. உண்ணுதல்
13. இராக்குமாரன்
15. மகிழ்ச்சி
16. கருங்குருவி
17. கொடுத்த பொருளில் உடனே கவிதை செய்பவன்
19. வானத்தில் தவழுவது
21. பசித்த பிள்ளை...
22. பெருக்கல் குறி

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

★ சொற்சிலம்பம்போட்டி இலக்கம்: 230 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1)வகுப்பு (4) சதாம் (6) ரதி (7) தகரம் (9) இல்லம் (11)புதியவன் (13)மது (14) ராமன் (15) கதி (16) அவன் (17) தடு (19) முக (20) பக்குவம் (22) தும்பிக்கை (23) சிபி

**மேலிருந்து கீழ்**

(1) வரப்பு (2) குதி (3) புதல்வன் (4) சரம் (5)தாம் (8) கலன் (9) இயமன் (10) காது (12) திராவகம் (13) மதி (15)கடுகு (16) அமுது (18) தம்பி (20) பக் (21) வசி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி**
**இல. 252**
*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (26.09.2012 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.232இல்வெற்றி பெறுவோர்களது விவரம்30.09.2012 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 230 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**

**க.உமாபிரகாஸ்,**
அன்புபுரம், முழங்காவில்.

**2 ஆம் பரிசு**

**நி.கார்த்திகேயன்,**
ஆண்டு - 9 'பி', சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**

**நிரஞ்சனா செல்வரஞ்சன்,**
தரம்- 10, யா/ வட்டுத்தற்பளை, காமாட்சி வித்தியாலயம்.

**4 ஆம் பரிசு**

**பா.புகேந்திரி,**
இல.23, குட்டிநகர், மகாறம்பைக்குளம், வவுனியா.

**5 ஆம் பரிசு**

**திருமதி ச.கோமதி,**
யா/ கைதடி நாவற்குழி, அ.த.க. பாடசாலை.

**பாராட்டுப் பெறுவோர்**

**சு.கதிர்காமதேவன்,**
இல.61, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம்.

**செல்வி ஹ.டாயன்சிகா,**
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

**நேச. வித்தியாசாகர்,**
கிளி/கிளிநொச்சி ம.வி., கிளிநொச்சி.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.*

## தமிழினத்தின் தவிப்பு......

கேளுங்கள் தமிழர்களே
எம் இனத்தின் நுரையீரல்
சுருங்கிவிட்டது எங்களை
களைகளென்று நினைத்து
இனவிரோத விவசாயிகள்
எம் வேர்களுக்கு நஞ்சு
திணிக்கிறார்கள்

எங்கள் பண்பாடு
கலாசாரம், சுதந்திரம்
உரிமை இவைகள்
உயிர்த்தெழுதல்
இல்லாத சிலுவைகளில்
தொங்குகின்றன

ஓ... எங்கள் கதறல்கள்
கறைகளாகிவிட்டன
எங்கே போய்
இனத்தில் பிடித்த
தூசைக் கழுவுவோம்

உறக்கங்களைத்
திருடியவர்களே
சர்வாதிகாரத்தின்
கோரச் சிலைகளை
செதுக்கும் ஆட்சி உளிகளே!

பிணமாகும் நேரத்திலும்
தமிழை உச்சரிக்க
தகுதியற்றவர்களே
கேளுங்கள்

மிஞ்சியது உயிர் அதனால்
மலட்டு அரசியலிடம்
கெஞ்சியது அதிகம்
உங்கள் ஊடக
அறிக்கைகள் ஒன்றும்
எங்கள் வயிறு
கழுவுவதில்லை

நடுவானில் எங்கள்
இறக்கைகளை அறுத்த
பருந்துகளே
போய்விடுங்கள்
எங்கள் வானம்
குயில்களின்
சிறகுகளுக்குத்தான்
சொந்தம்



உயிர்களாலும்
உடம்பினாலும்
உறவுகளாலும்
ஊனமாக்கப்பட்ட
சொந்தங்களே
வாருங்கள் இனத்தின்
சுவாசத்தை
உயிர்ப்பிப்போம்

வறண்டு போன எம்
இனத்தின் மேல்
வியர்வைகளை
ஊற்றுவோம்
பயத்தின் கதவுகளை
தாளிட்டு ஒதுங்கியவர்களே
நடந்து முடிந்தது
திருவிழா அல்ல
இரத்தம், சதை, கண்ணீரை
உறுஞ்சிய ஒரு வேள்வி யுத்தம்
களைகளாகிப் போன அந்த
இரக்கமற்ற நெருடல்களை
துடைப்போம் வாருங்கள்

எம்.நேதா, நெடுந்தீவு.

## அன்பு



பல கோணங்களில்
மாறிடும்
பல்வேறுபட்ட உள்ளங்களின்
இணைப்பாகும்
பெற்றோரிடம்- தோழரிடம்
வெளிப்படும் - ஆனால்
சொந்தமானவளிடம் மட்டுமே
ஆயுதமாய் அவள் அன்பும்
கொல்லாமல் கொல்லும்
ராட்சசியாய் இம்சைபடுத்தும்
இருப்பினும்
அவள் இல்லாமல்
என் புன்னகை கூட
வறண்டுவிடும்

சிந்து சிவதாஸ், சுதுமலைதெற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபம்

## மனித முன்னேற்றத்தின் எதிரி

■ தானா

கோபம் என்பது சினம், ஆத்திரம் எனவும் அடையாளப்படுத்தப்படும். ஏனைய உணர்வுகளைப் போன்றே கோபமும் மனிதருடன் உடனுறையும் ஓர் உணர்வே.

கோபம் பல எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்துவதால், மனிதர்கள் இயலுமான அளவுக்கு கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வது நன்மை பயக்கும் என்பது பெரியோர்கள் வாக்கு.

அனுபவபூர்வமாக இதனை உணர்ந்ததன் காரணமாகவே சமூகத்துப் பெரியோர்கள் கோபம் கெடுதி விளைக்கவல்லது எனக் கூறி வைத்திருப்பார்கள் போலும்.

ஒரு குடும்பத்தில் குடும்பத் தலைவர், நாளாந்த வாழ்வியலில் பல தரப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேர்வது வழமையே. தமது குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் தேவைப்படும் பணத்தைச் சம்பாதிக்க வேண்டிய தேவை, பொறுப்பு அவருக்குண்டு. அந்த வகையில் அந்தப் பணத் தேவையை ஈட்டிக்கொள்ள குடும்பத் தலைவர் ஓய்வு ஒழிசலின்றி உழைக்க வேண்டியவராகிறார்.

குடும்பத் தலைவர்களது தொழிற்றுறைகள் பல்வேறு வகைப்பட்டனவாய் அமைகின்றன. அரச ஊழியர்கள், மாதாந்த சம்பளம் பெறும் தனியார் துறை ஊழியர்கள், விவசாயிகள், பல்வகைசார் தொழில்களில்அனுபவம் கொண்ட தொழில்துறைசார் ஊழியர்கள், வியாபார முயற்சிகளில் ஈடுபடுவோர், அன்றாடம் கூலிவேலை செய்வோர் எனக் குடும்பத் தலைவர்கள் தாம் செய்யும் தொழில் ரீதியில் வேறுபடுவர். அதேபோன்று தத்தம் தொழில் முயற்சிகளில் அவர்கள் முகம் கொடுக்க நேரும் பிரச்சினைகளும் பல்வகைப்பட்டனவே.

இவற்றுக்கு மேலதிகமாக, குடும்பத்தில் மனைவி, பிள்ளைகள் மூலமும், உறவினர்கள், நண்பர்கள் என்ற இரண்டாம் பட்ச உறவுத் தரப்புக்கள் மூலமும் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு அவர்கள் முகம் கொடுக்க நேர்வது சகஜமே. அத்தகைய நடைமுறை வாழ்க்கை அழுத்தங்களால் அவர்களது மனங்கள் சமநிலைத் தன்மையை இழக்க நேரிடும் வேளைகளில், அந்தக் குடும்பத் தலைவர்கள் ஆத்திரம், கோபம், வெறுப்பு, விரக்தி போன்ற குண இயல்புகளுக்கு உட்பட நேரிடுகிறது. அதன் காரணமாக அவர்கள் ஏனையோர் மீது கோபம் கொள்வதும், ஆத்திரம் காரணமாக பொறுமை இழப்பதும், அதன் தொடர்ச்சியாக வேண்டத்தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்ள நேர்வதும் சாதாரண நடைமுறை வாழ்க்கையில் இடம்பெறும் சம்பவங்களே.

அத்தகைய உணர்வுகளின் பாதிப்பால் அவர்கள் தம்மைத் தாமே கட்டுப்படுத்திக் கொள்ள இயலாத நிலையில் மற்றைய தரப்பினர் மீது காட்டும் கோபத்தை, வெளிப்படுத்தும் ஆத்திரத்தைக் கட்டுப்படுத்தும் பொறுப்பை அந்தக் குடும்பத்தின் தலைவியால் ஓரளவு ஏற்றுச் செயற்பட இயலும். தமது கணவருக்கு ஏற்பட்டுள்ள கோபத்துக்கான அடிப்படைக் காரணத்தை இன்னதென ஊகித்தறியத்தக்க திறன் வாய்த்த ஒரு குடும்பத்துத் தலைவி, அத்தகைய சந்தர்ப்பங்களில் தமது கணவரது கோபத்தைக் கட்டுக்குள் கொண்டுவர வைப்பதில் கணிசமான அளவுக்கு பங்களிக்க இயலும். அத்தகைய பணியை சிறப்பாக கைக்கொள்ளத்தக்க திறன் மிக்க குடும்பத் தலைவிகளால் குடும்பங்களில் கோபம் காரணமாக உருவாகும் பிணக்குகள், கருத்து முரண்பாடுகள் பெருமளவில் தீவிரமடையாமல் கட்டுப்படுத்தப்பட வாய்ப்புண்டு. இதனால் தான் 'வீட்டுக்கு நல்லவளை வை' என்ற சிலேடையான, இரு கருத்தை வெளிப்படுத்தும் முதுமொழி வழக்கில் வந்திருக்கும் எனநம்ப இடமுண்டு.

இது தவிர, மேற்குறிப்பிட்ட மன உளைச்சல் காரணமான கோபமாகவன்றி, சுயநல நோக்கில், தமது விருப்பை எட்ட இயலாது போகும் வெறுப்பு, விரக்திநிலை காரணமாகவும் சமூகத்தில் ஆண்கள், பெண்கள் என்ற பால்நிலை வேறுபாடின்றி, மற்றவர்கள் மீது கொள்ளும் கோபம், நியாயமானதொன்றாக ஏற்க முடியாதது. இது குறிப்பிடத்தக்க அளவுக்கு மற்றையவர் மீதான எரிச்சல், பொறாமை, தோல்வி மனப்பான்மையால் உருவாகும் விரக்தி என்பவற்றின் பின்னணிகொண்டதாகும். அத்தகைய சந்தர்ப்பங்களில் தமது மன உணர்வுகளைக் கட்டுப்படுத்த இயலாது, நாகரிகமற்ற சூடான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்வதால், உறவினர்கள், அயலவர்கள், ஊரார்கள் மத்தியில் கெட்ட பெயரைச் சம்பாதிக்க நேருவது மட்டுமன்றி, குரோத மனப்பாங்கும் உருவாவதால் வேண்டத்தகாத, பின் விளைவுகள் உருவாக வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன..

இத்தகைய நிலை சமூகத்தின் பல தரப்புக்கள் மத்தியிலும், குடும்பப் பின்னணி காரணமாகவன்றி, சமூக பொது விடயம்சார் சம்பவங்கள் காரணமாகவும் ஏற்படுவதுண்டு. அயலவர்களுடனான வேலிச் சண்டை, எல்லைச்சண்டை மற்றும் சிறு சிறு விடயங்கள் தொடர்பான கருத்து முரண்பாடுகள் போன்றவற்றாலும் ஏற்படும் தகராறுகள், அந்தந்த வேலைகளில் பொறுமை காக்க இயலாது கோபத்தை வெளிக்காட்ட முயல்வதால், அனாவசியமான வார்த்தைப் பிரயோகங்களால் நிலைமை முற்றி அடிதடி வரை சென்று விடுவதுண்டு. இது ஒரு வகையில் கௌரவத்தை நிலைநாட்டும் நோக்கிலான மன உணர்வு வெளிப்பாடுகளே. பல சந்தர்ப்பங்களில் சுமுகமான முறையில் தீர்வு காணத்தக்க பிரச்சினையை ஊதிப் பெருப்பித்து, நிரந்தரமாகவே நட்பு, உறவு என்பவற்றுக்கு பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டோமே என சம்பந்தப்படும் இரு தரப்புகளும் பின்னர் மனம் வருந்தும், கழிவிரக்கம் கொள்ளும் நிலையும் ஏற்படுவதுண்டு. கோயில், சனசமூக நிலையம், கிராமமுன்னேற்றச் சங்கம் போன்றவற்றின் நிர்வாகம் தொடர்பான பிணக்குகளிலும், இவ்வித கௌரவப் பிரச்சினை காரணமாக இரு தரப்புக்கள் மத்தியில் கோபம், குரோதம் ஏற்படும் காரணத்தால் பெரும் கோஷ்டி மோதல் வரை செல்வதுண்டு. இவற்றுக்கெல்லாம் அடிப்படையாக அமைவது விட்டுக்கொடுக்க முன்வராத தன்மையும், வெறும் வரட்டுக் கௌரவத்தை சாதிக்க முயலும் தன்மையுமே ஆகும்.

அண்மைக் காலமாக எமது இளம் சமுதாயத்தினர் மத்தியில் எடுத்ததற்கெல்லாம் கோபப்படல், கருத்து முரண்படுதல் தன்மை பெருமளவில் அதிகரித்து வருவதைக்காண, உணர முடிகிறது. கடந்த மூன்று தசாப்த கால போர்ச்சூழலால் இளைய தலைமுறையினர் மத்தியில் குடும்ப சூழல் பாதிப்பு, அடிப்படைக் கட்டுமான இழப்புக்கள், குடும்ப உறுப்பினர்களது அநியாய சாவுகள், வேலைவாய்ப்பின்மை போன்றவற்றால் மனதளவில் உருவான விரக்தியின் வெளிப்பாடே அதுவென காரணம் கற்பிக்கப்படுகிறது. இது ஓரளவு ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதேயாயினும், சந்தர்ப்ப சூழ் நிலைகள் குறித்து தெளிவாக உய்த்துணரத்தக்க மனப்பக்குவம் வாய்ந்த, கல்வி அறிவு பெற்ற இளம் சமூகத்தினர் தமது இத்தகைய முன்கோபத்தை முயன்றால் கட்டுப்படுத்திக்கொள்ளலாம்; கட்டுப்படுத்துவதே சிறப்பு என்ற வாதத்தையும் இலகுவில் புறந்தள்ளிவிட இயலாது.

இளம் கன்று பயமறியாது என்ற முதுமொழி எந்தக் காலத்துக்கும் பொருத்தமுடையதொன்றேயாயினும், எமது ஈழத் தமிழினம் இன்று அனுபவிக்க நேர்ந்துள்ள கையறு நிலையைக் கருத்தில் கொண்டாவது எமது இளைய, எதிர்காலச் சந்ததியினர் தமது கோபம் என்ற பொல்லாத மனஉணர்வை முடிந்தவரை கட்டுப்படுத்தி வாழப் பழகிக்கொள்ள வேண்டியது இன்றைய காலத்தின் தேவை என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஒரு பொருளைக் கைதவறவிட்டால், அது நிலத்தில் வீழ்ந்ததும் குனிந்து எடுத்துக்கொள்ளலாம். ஆனால் ஒரு தடவை பொறுமையின்றி மற்றொருவர் மீது கடும் வார்த்தைப் பிரயோகத்தை மேற்கொண்டு விட்டால், பின்னர் தனது தவறை உணர்ந்து அதற்காக மன்னிப்புக் கோரினாலும் கூட, குறிப்பிட்ட வார்த்தைப் பிரயோகத்தால் மனம் வருந்திய மற்றைய தரப்பினரின் மனக்காயத்தை அது எந்த வகையிலும் ஆற்றப்போவதில்லை. இதையே அன்று வள்ளுவமும் ''நாவினால் சுட்டவடு ஒருபோதும் ஆறாது'' என்று எடுத்தியம்பியது.

தனி மனிதனும் சரி, ஒரு சமுதாயமும் சரி, வளர்ச்சியில் பூரணத்துவம் பெறுவதற்காகவே படைக்கப்பட்டுள்ளன. அதற்கான வாய்ப்புத்தான் இந்த மனித வாழ்வு. லௌகீக வாழ்க்கையில் கல்வி முயற்சிகளிலும் சரி, பண்பாட்டு பழக்க வழக்க ரீதியிலும் சரி இது பொருத்தமுடையதே. அதிலும் மனித வளர்ச்சிப் பருவத்தில், இளவயது, துடிப்பும், ஏனையவை குறித்து அலட்சியப் போக்குடைய தன்மையும் கொண்டது. எனவே எமது இளம் சமூகத்தினர், சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் கருத்தில் எடுத்து தமது முன்கோபத்தைக் கட்டுப்படுத்தி வாழப் பழகிக் கொண்டால், அது [illegible]

# அற்ப விடயங்கள் பிரிவைத் தரும்

உறவுகளை மேன்மைப்படுத்தத் தவறியதன் விளைவாக , வாழ்க்கையில் எல்லாமே நமக்கு எதிராக இருப்பதைப் போன்ற எண்ணம் ஏற்படுகிறது. அவசரத்தில் நாம் எடுக்கும் எந்த ஒரு சின்ன முடிவும் நமக்கு நெருக்கடியை ஏற்படுத்தி விடுகிறது. நிதானமாக யோசித்தால், நாம் பெரிதுபடுத்திய பல விடயங்கள் அற்ப விடயங்கள் என்பது புலனாகும். எதையுமே சாதாரணமாக எடுத்துக்கொண்டால் வாழ்க்கை எளிமையாகி விடுகிறது. உறவுகளை மேம்படுத்த உளவியாலாளர்கள் கூறிய ஆலோசனைகளைப் பின்பற்றுங்கள்.

**தவறான மனோபாவம்**

சின்ன விடயங்களைச் சின்ன விடயங்களாக நாம் பார்க்க முடியாதபோது இனிய உறவுகளைக்கூட அவை பாதித்து விடுகின்றன. நாம் சிறு விடயங்களை அலட்சியப்படுத்தத் தொடங்கிவிட்டால், அவை சக்தி இழந்து செயலற்றுப் போய் விடுகின்றன. யோசித்துப் பார்த்தால் எல்லாமே சின்ன விடயங்கள்தான். ஒரு விடயத்தை நாம் எப்படிப் பார்க்கிறோம் என்பதைப் பொறுத்தே அதன் தன்மையும் அமையும். எல்லாவற்றுக்கும் நம்முடைய மனம்தான் காரணம். வாழ்க்கையில் ஏற்படும் பல இடர்ப்பாடுகளுக்கும் நம்முடைய தவறான மனோபாவங்களே காரணமாகின்றன.

**முழுமையாகக் கேளுங்கள்**

ஒருவருடன் பேச ஆரம்பக்கும்போது, அவர் பேசுவதை முழுமையாகக் கேட்பது என்று முடிவு செய்து கொள்ளுங்கள். குறுக்கிட வேண்டும் என்று தோன்றினாலும் குறுக்கிடாதீர்கள். அவர் சொல்வதை நீங்கள் முழுமையாகக் கேட்ட பிறகு, நீங்கள் என்ன சொல்ல வேண்டும் என்பதைத் தீர்மானித்துத் தெளிவாகப் பேசுங்கள். மற்றவர்களை நீங்கள் பேச அனுமதித்து அக்கறையுடன் கவனிக்கின்றபோது, நீங்கள் சொல்வதையும் கவனிக்க வேண்டும் என்னும் ஆர்வம் அவருக்கும் தானாகவே ஏற்பட்டு விடும். இதைக் கடைப்பிடிக்க ஆரம்பத்தால் கருத்துப் பரிமாற்றம் எளிதாகும். மற்றவர்கள் அன்பும் சுலபமாகக் கிடைக்கும்.




**வாழ்க்கை எளிதாகும்**

திருப்தி என்பது தொடுவானம் போன்றது. நெருங்க நெருங்க தூர விலகிச் சென்று கொண்டே இருக்கும். எனவே கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடைய வேண்டும். நாம் விரும்பியது கிடைக்காமல் போகும் சந்தர்ப்பங்கள் இருக்கத்தான் செய்யும். அதற்காக அதையே நினைத்துக் கொண்டு வாழ்க்கையை வீணாக்கி விடக்கூடாது. எது கிடைக்கிறதோ, அதை விரும்பக் கற்று கொள்ள வேண்டும். விரும்புகின்றபடியே எல்லாம் நடக்காது என்ற யதார்த்தத்தை ஏற்றுக் கொண்டு நமக்குக் கிடைத்ததை விரும்புகின்ற பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் வாழ்க்கை இலகுவாகி விடும்.

**எதிர்மறைகளை விலக்குங்கள்**

எதிர்மறையான, பலவீனமான எண்ணங்கள் மன அமைதியைத் தகர்த்து சீர்குலையச் செய்யும் சக்தி படைத்தவை. ஒரு எதிர்மறை எண்ணம் இன்னொரு எதிர்மறை எண்ணத்துக்கு உங்களை இட்டுச் சொல்கிறது. இதன் விளைவாக குழப்பம் மிக்க மனநிலைக்கு ஆளாவீர்கள். மேலும் மனமானது கவலைகளும் வேதனைகளும் நிரம்பிய குப்பைத் தொட்டியாகி விடுகிறது. எதிர்மறை எண்ணங்கள் அல்லது கவலைகள் மனதில் வேகம் பெறுவதற்கு அனுமதிக்காதீர்கள். பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைப்பதற்குப் பதிலாக, பிரச்சினைகள் பற்றிய கவலைகளே அதிகமாகி மனதில் பாரம் அதிகரித்து விடுகிறது.

**நிதானத்தை கடைப்பிடியுங்கள்**

நாம் விரும்பும் விடயங்களே நம்மைச் சுற்றி நிகழ வேண்டும் என்று எதிர்பார்ப்பது வீண். இருப்பதை அல்லது நடப்பதை அப்படியே ஏற்றுக் கொண்டு விட்டால் பொறுமையை இழக்க வேண்டிய அவசியமே இருக்காது. பொறுமை இல்லாமல் போனால் வாழ்க்கையே ஏமாற்றம் நிறைந்ததாகி விடும். மற்றவர்களின் செயல்களைக் கண்டு பொறுமை இழக்காதீர்கள். அவர்கள் செய்வது அறியாமையின் விளைவு என்று நீங்கள் நினைத்தால், பொறுமை இழக்க வேண்டிய அவசியம் இருக்காது. மன அமைதியே மனித ஆற்றலின் ஊற்றுக் கண்ணாகவும் விளங்குகிறது. அமைதி நிலையில்தான் ஆற்றலை முழுமையாக ஒருமுகப்படுத்தவும் முடியும். எனவே, மன அமைதிக்கு முதலிடம் கொடுங்கள், உறவுகள் கூடிவரும், சாதனைகள் தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையமைப்புக் கலையின் இமயமாய் இருப்பவர் இசைவாணர் மு.கண்ணன்

■வயாவிளான் தவமைந்தன்

இசையுலக வரலாற்றில் பாடகர்கள், கருவியாளர்கள், பாடலாசிரியர்கள் போன்ற துறைசார் கலைஞர்கள் ஏராளமானோர் காணப்படினும் புத்தாக்கத் திறன் கொண்ட இசையமைப்பாளர்கள் ஒரு சிலரையே நாம் காண்கிறோம். ஏனெனில் சகல விதமான திறன்களும் கொண்டமைந்த ஒருவராலேயே இசையமைப்பாளராக நின்று நிலைக்க முடிகிறது.

ஈழத்தின் மெல்லிசைத்துறை வரலாற்றில் இசையமைப்புக் கலை எழுச்சியின் வடிவமாகவும் அகில இலங்கைப் புகழ்பெற்ற கண்ணன் இசைக்குழுவின் நிறுவுனராகவும் தன்வழியில் பல கலைஞர்களை உருவாக்கிய பேராசானாகவும் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி வருபவர் இசைப் பரிதி மு.கண்ணன்.

மறைந்த முத்துக்குமாரு - இராசம்மா தம்பதியரின் மகனாக 13.03.1943இல் நாச்சிமார் கோயிலடியில் இவர் பிறந்தார். யாழ்.இந்துக் கல்லூரியில் எஸ்.எஸ்.சி. வரை கல்வி கற்ற இவர் சிறு வயதிலேயே இசையையும் கற்றுக் கொண்டார். இவரது தந்தையார் இசைக் கருவிகளை இசைக்கும் திறன் கொண்டவராகவும் இசைநாடகத் துறையில் ஈடுபாடு கொண்டவராகவும் இருந்தமையால் இவரது இசைக் கலை மீதான ஈடுபாடானது விரைவாக வளர்ச்சி கண்டு வந்தது.


இசைப்புலவர் சண்முகரத்தினம், சங்கீதபூஷணம் இராஜலிங்கம், சிதம்பரம் கிருஷ்ணமூர்த்தி ஐயர், அரியாலை ச.பாலசிங்கம் போன்ற இசைமேதைகளிடம் மரபு வழியான இசையைக் கற்று இசைஞானத்தை வளர்த்துக் கொண்ட இவர் தனது சுய முயற்சியால் இசைக் கருவிகளை இசைக்கும் திறன் கொண்டவராகவும் சிறு வயதிலேயே விளங்கி வந்தார். 1960ஆம் ஆண்டளவில் இசைக் குழு ஒன்றை உருவாக்கி, மிக விரைவாக வளர்ச்சி கண்டு நாட்டின் வடபகுதி முழுவதும் புகழ் கொண்டதாகக் கண்ணன் இசைக்குழுவைத் திறமையுடன் நிர்வகித்து வந்தார்.

1967இல் தினகரன் பத்திரிகை நிறுவனத்தாரால் நடத்தப்பட்ட போட்டியில் முதலாவது இடத்தினை இவரது இசைக்குழு பெற்று தேசியப் புகழ் கொண்ட இசைக்குழுவாக உயர்வு கண்டு மெல்லிசை நிகழ்வுகளை நாடு முழுவதும் ஓய்வின்றி வழங்கி வந்தது. இதன் பின்னர் 1969இல் இலங்கை வானொலியின் ஏற்பாட்டில், முழுமையாக ஈழத்துப் பாடல்களைக் கொண்ட இசை நிகழ்வானது இவரால் நிகழ்த்தப்பட்ட போது இவரது ஆளுமையும் அனுபவமும் கற்பனை வளமும் இசைத்திறனும் அனைவராலும் வியந்து பாராட்டப்பட்டது.

இதன் பின்னர் இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவையில் இசையமைப்பாளராக நியமனம் பெற்ற இவர் பல நூற்றுக்கணக்கான தமிழ் மெல்லிசைப் பாடல்களை உருவாக்கி ஒலிபரப்பி ஈழத்து மெல்லிசைத் துறையின் பெருமையை உலகறியச் செய்தார். மேலும் அந்தக் காலத்தில் பெரும் புகழ் பெற்று விளங்கிய பொப்பிசை நிகழ்வுகளையும் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் வழங்கியதுடன் இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆக்க இசை, கூட்டிசை போன்ற புதிய முயற்சிகளையும் பொதுமக்களிடையே ஆற்றுகைப்படுத்திப் பெரும் வரவேற்பைப் பெற்றுக் கொண்டார்.

ஓர் இசைக்குழுவின் தலைவராக அந்தக் காலத்தில் பெரும் புகழ் பெற்றிருந்த போதும் புதிய இசைக் கோலங்களை உருவாக்கும் இயல்பும் பாடலின் பொருள், காட்சிகளின் தன்மை போன்றவற்றை உள்ளுணர்ந்து ஏற்கனவே கேட்டிராத இனிமையான புதுமையான மெட்டுக்களை உருவாக்கும் ஒப்பற்ற திறனும் ஒலிப்பதிவுக் கலைநுட்பத்தின் தெளிவும் கொண்டவராக இவர் விளங்கியமையால் ஏனைய இசையாளர்களில் இருந்து வேறுபட்டு, தனித்துவப் பண்பும் கற்பனை வளமும் கொண்ட சிறந்த இசையமைப்பாளராக ஈழத்து இசைவானில் பட்டொளி வீசிப் பிரகாசித்து வந்தார்.

வண்ணைக் கலைவாணர் நாடக மன்றத்தின் தயாரிப்புக்களாக 1960களில் மேடையேற்றப்பட்ட அனைத்து நாடகங்களிற்குமானபின்னணிஇசையை இனிதுற வழங்கியதுடன் 1978இல் யாழ்ப்பாணத்தில் தொடங்கப்பட்ட நாடக அரங்கக் கல்லூரியினரால் வரலாற்றுப் படைப்புக்களாக மேடையேற்றப்பட்ட பல நாடகங்களிற்கான இசையமைப்பையும் உணர்வு பூர்வமாக வழங்கி நவீன நாடகத்திற்கான இசைமரபின் தோற்றத்திற்கு வித்திட்ட சாதனையாளராகவும் இவர் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



61

சாதனைக் கலைஞரைச் சந்திப்போம் சிந்திப்போம்

இந்த வரிசையில் பொறுத்தது போதும், கோடை, புதியதோர் வீடு, சங்காரம், மண்சுமந்த மேனியர், உயிர்த்த மனிதர் கூத்து, எந்தையும் தாயும், அன்னை இட்ட தீ, யார்க்கெடுத்துரைப்பேன் போன்ற நாடகங்களையும் பல சிறுவர் நாடகங்களையும் குறிப்பிட முடியும். அத்துடன் ஈழத்தில் உருவாக்கப்பட்ட தமிழ்த் திரைப்படங்களிற்கும் குறும் படங்களிற்குமான இசையமைப்பாளராகவும் பணியாற்றியதுடன் நமது நாட்டிற்குரிய பக்திப்பாடல் உருவாக்கத்தின் முன்னோடியாகவும் இவர் பணியாற்றி வந்துள்ளார்.

இதுவரையில் ஆயிரத்திற்கும் அதிகமான பாடல்களிற்கு இசையமைத்திருக்கும் இவரது மெல்லிசைப் பாடல்கள் பல தென்னிந்தியப் பாடல்களையே தோற்கடித்து ஈழத்து மெல்லிசை என்னும் எமக்குரித்தான புதிய இசைப்பாணியை வரையறுத்து நிலைநிறுத்தி நிற்கின்றமை யாவரும் அறிந்ததே. ஹார்மோனியம், கிற்றார், கிபோட், எக்கோடியன், ஷாகிபாஜா, பியானோ, வீணை, தபேலா, மிருதங்கம் போன்ற கருவிகளை இசைப்பதில் வல்லவராக விளங்குவதுடன் அவற்றைச் சீர்திருத்தும் தொழில்நுட்பத் திறனாளியாகவும் இவர் காணப்படுகின்றார்.

இசையமைத்தல் என்பது இசைக்கலையின் உச்சமானதோர் வெளிப்பாடாகும். உணர்வுகளைத் தன்னுள் உணர்ந்து அதனைப் புதிய இசைக்கோலமாகப் பொருத்தமான முறையில்வெளிப்படுத்துபவரே உண்மையான இசையமைப்பாளர். பாடல்களுக்கோ வசனங்களுக்கோ நடிப்பிற்கோ புதிதாக இசை வழங்கும் போது அங்கே உயிரோட்டம் இருக்க வேண்டும். ஆகவே இது சொல்லிக் கொடுத்து வரும் கலையல்ல.

ஆழமான இசையறிவும் தேடலும் இசைக் கருவிகளைச் சரியான முறையில் இயக்கும் திறனும் புதியது புனையும் இயல்பான ஆர்வமும் கொண்ட ஒருவரால் நிச்சயமாக இத்துறையில் பிரகாசிக்க முடியும். ஆனால் விஞ்ஞானத் தொழில் நுட்பத்தை மட்டும் நம்பியிருப்போரால் இசையமைப்புத் துறையில் நிலைத்து விடவே முடியாது.

''எமது மரபு வழி இசையையும் மேலைத்தேச இசையையும் கற்றுக் கொள்ளத் தற்காலத்து இளம் இசையமைப்பாளர்கள் முயற்சிக்க வேண்டும்'' எனத் தனது பெறுமதியான கருத்துக்களை இவர் கூறுகின்றார்.

# கண் சூடு தணிக்கும் வாகை இலைத் தண்ணீர்




**வாகை மரம்**
**வேறு பெயர்:-பாண்டில்**
**தாவரவியற் பெயர்-** Albizzia Lebbeck **(அல்பீஸியா லெபெக்)**
**குடும்பம்-** Mimosaceae **(மைமோ சேசியே)**
**சிங்களப் பெயர் -தொட்டில**
**சமஸ்கிருதப் பெயர்-சிரிஷ**
**ஆங்கிலப் பெயர்-** Srissa Tree, Woman's Tongue

இது உலர் வலயத்துக்குரிய பெரு மரம். யாழ்ப்பாணத்தில் பரவலாக எங்கும் காணப்படுகிறது. கிளைகள் பரந்து காணப்படும். கூட்டிலைகள், இரட்டைச் சிறைப்பிரிப்பானவை. பூக்கள் வெண்மை நிறம் சித்திரை வைகாசியில் பூக்கும்.

வாகையில் சாதாரணவாகை, கரு வாகை என்ற பேதங்களுண்டு. கருவாகைப்பட்டை நரை நிறமாக இருப்பதுடன் அதன் பூக்கள் செந்நிறமானவை.

**கட்டிகளுக்கு**

வாகைப்பூவை நீர் விட்டரைத்து கட்டிகள், வீக்கம் என்பனவற்றின் மீது பூசிவர மாறும்.

**பல்லீறுகளில் இரத்தம் வடிதலுக்கு**

வாகைப் பட்டையை உலர்த்திப் பொடிசெய்து அதை வெந்நீரில் ஊற வைத்து, அந்த நீரால் வாய் கொப்பளித்துவர மாறும்.

பட்டை[illegible] வாய்கொப்ப[illegible]

**வெள்ளை சாய்தலுக்கு**

வாகைப் பட்டையை உலர்த்திப் பொடி செய்து 500 மி.கி அளவில் தேனுடன் சேர்த்து உண்டுவர வெள்ளை சாய்தல், கழிச்சல், மூலத்தால் ரத்தம் போதல் என்பன நீங்கும்.

**கண்சூட்டிற்கு**

[illegible]இலையை நீரில் [illegible] அந்த நீரால் கண்களைக் கழுவிவர கண்சூடு, கண் நோ என்பன தணிவடையும்.

வாகைவேர் தசமூலங்களில் ஒன்றாகத் தமிழ்மருத்துவத்தில் பெரிதும் பயன்படுகிறது. வாகைவேர், வில்வைவேர், பாதிரிவேர், பெருங்குமிழ்வேர், பெருமுன்னைவேர், நெருஞ்சிவேர், கண்டங்கத்தரிவேர், சிற்றிமல்லிவேர், பேராமல்லிவேர், சிறுவழுதுணைவேர் ஆகிய 10 மூலிகைகளின் வேருக்கும் தசமூலம் என்று பெயர்.

இவற்றைச் சம அளவில் எடுத்துக் குடிநீர் செய்து குடித்துவர உடற்பலவீனம், களைப்பு, பசியின்மை, கைகால் உளைவு, மூட்டுவலி, மலச்சிக்கல் முதலிய நோய்கள் தணிவடையும்.



Dr.சே.சிவசண்முகராஜா M.D.(S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

16.09.2012 முதல் 22.09.2012 வரை

தருபவர் - வித்தியா

**மேடம்**-இதமாகப் பேசி சொந்த காரியம் சாதிப்பீர்கள். உறவினர், நண்பர்களிடம் செல்வாக்கு உயரும். வீடு, வாகனம் போன்றவற்றில், தகுந்த வளர்ச்சி மாற்றம் செய்யலாம்.முக்கிய தேவைகளுக்காக நம்பகத்தன்மை இல்லாதவர்களிடம் சொத்தின் பேரில் பணக்கடன் பெறக் கூடாது. உடல் நல ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இல்லறத் துணையின் உடல்நலம், செயற்பாடுகளில் குளறுபடி ஏற்படலாம். தொழில் மற்றும் வியாபாரத்தில் எதிர்வரும் சிரமம் விலக தகுந்த பணிபுரிவீர்கள். விற்பனை சிறக்கும். அரசு தொடர்பான காரியம் நிறைவேற தாமதம் இருக்கும். கலைஞர்களுக்கு திறமை பரிமளித்து பாராட்டு, புதிய வாய்ப்புக் கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும்.

**இடபம்**- உடல்நல ஆரோக்கியம் நலம்பெறும். சமூகத்தில் கூடுதல் அந்தஸ்து, நல்ல வரவேற்பு கிடைக்கும். உடன்பிறந்தவர்களால் உதவி உண்டு. வம்பு, விவகாரம் அணுகாத சுமுக வாழ்வியல் நடைமுறை உண்டாகும். இல்லறத் துணையின் பேச்சும், செயலும், முரண்பட்டாலும், உங்கள் நலனில் கொண்ட அக்கறை அதிகரிக்கும். நண்பர்களின் பேச்சுக்களால் வரும் அதிருப்தியை வெளிப்படுத்துவதைத் தவிர்ப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், உபரிபணவரவும் வந்து சேரும். மாணவர்கள், படிப்பில் சிறந்து நல்லதர தேர்ச்சி அடைவர்.

**மிதுனம்**- உங்கள் பேச்சில் இனிமையும், பிறரை வசீகரிக்கும் ஆற்றலும் வளரும். எதிர்பார்த்ததை விட கணிசமான பணவரவு கிடைக்கும். அரசு அதிகாரிகளால் உதவி உண்டு. தந்தைவழி உறவினர் கூடுதல் அன்பு பாராட்டுவர். உங்களுக்கு எதிராக நடக்கும் செயல்களை தகுந்த திட்டத்துடன் முறியடிப்பீர்கள். இல்லறத்துணையின் அன்பு, பாசத்தில் மனம் நெகிழ்வீர்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்து உற்பத்தி, விற்பனையை அதிகரிப்பீர்கள். கலைஞர்கள், புதிய ஒப்பந்தம் கிடைத்து, திருப்திகர பணவரவு காண்பர். மாணவர்கள், படிப்பில் தேர்ச்சி பெறுவர்.

**கடகம்**- உங்களின் தகுதி, திறமை பிறர் அறியும் படி நடந்து கொள்வீர்கள். எதிரி கடந்த காலத்தில் செய்த கெடுதல் பற்றிய நினைவு வந்து விலகும். வீடு, வாகனத்தில் தகுந்த பாதுகாப்பு, பராமரிப்பு செய்வதால், திருட்டுப் பயம், விபத்து அணுகாத நல்ல வாழ்வுமுறை பெறலாம். உடல் மனநலம் சிறந்து, கூடுதல் பணிகளில் ஈடுபடுவீர்கள். இல்லறத்துணையின் பொறுப்பற்ற பேச்சுக்கு எதிர்வாதம் செய்வதைத் தவிர்ப்பதால், வாழ்வு முறை சிறக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் குறுக்கிடும் சிரமங்களைச் சரிசெய்வதால் மட்டுமே வளர்ச்சி இலக்கை அடைய இயலும்.

**சிங்கம்** -உங்கள் கருத்தை பிறர் ஏற்பதில் தயக்கமும், அதனால் உங்கள் மனதில் வெறுப்பும் ஏற்படலாம். கவனம் வேண்டும். கலகம், வாக்குவாதம் நடக்கும் இடங்களில் வேடிக்கை பார்ப்பது, கருத்து வெளியிடுவதைத் தவிர்க்கவும். எதிரியின் செயற்பாடு மனவருத்தம் தரும். வெளியூர் பயணம் நல்லபலன்களை பெற்றுத்தரும். இல்லறத்துணையின் அன்பும், பாசமும் மனதில் புதிய நம்பிக்கையை உருவாக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் சில வளர்ச்சி மாற்றங்களை செயல்படுத்துவீர்கள். மாணவர்கள், படிப்பில் உள்ள தடையை தகர்த்து, நல்லதர தேர்ச்சி பெறுவர்.

**கன்னி**-பேச்சிலும், செயலிலும் பிறரைப் பழிவாங்குகிற குணம் வெளிப்படலாம். கவனம் தேவை. சமூகப்பணியிலும் ஆர்வம் கொள்வீர்கள். வீடு, வாகனத்தில் பெறுகிற நற்பலன் சிறப்புப் பெறும். எதிரியால் இருந்த தொந்தரவு குறையும். கண்களுக்குத் தகுந்த பாதுகாப்பு, ஓய்வு அவசியம். இல்லறத் துணையின் மனதில் ஆன்மிக நம்பிக்கை வளரும். விரும்பிய பரிசுப்பொருள் தருவர். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். பணச்செலவில் சிக்கனம் நல்லது. உத்தியோகத்தர்கள், பணி தொடர்பான ஆவணங்களை பிறர் பொறுப்பில் விடக்கூடாது. கலைஞர்கள், திறமையில் சாகசம் புரிவதை தவிர்க்க வேண்டும்.

**துலாம்**-மனதில் உருவாகும் உற்சாகம், சில நேரம் பதற்றமான செயல்களை ஏற்படுத்தும். நிதானம் பின்பற்றுவது அவசியமாகும். உங்களின் நற்செயல், சமூகத்தில் நன் மதிப்பைப் பெற்றுத் தரும். அலைச்சல் பயணங்களும், கூடுதல் பணச்செலவும் ஏற்படலாம். எதிரியிடம் விலகுவதால் வீண்சிரமம் தவிர்க்கலாம். இல்லறத்துணையின் பேச்சும், செயலும் மாறுபட்டு இருக்கும். உத்தியோகத்தர்கள், பதவி உயர்வு, பாராட்டு பெறுவர். கலைஞர்களுக்கு, சக கலைஞர்களின் செயற்பாடு மன வருத்தத்தை தரும். மாணவர்கள், படிப்பில் ஞாபகத்திறன் வளர்க்க, கூடுதல் பயிற்சி முறை பின்பற்ற வேண்டும்.

**விருச்சிகம்**- வாழ்வில் தடைப்பட்ட காரியங்களை, கூடுதல் முயற்சியினால் நிறைவேற்று வீர்கள். உடன் பிறந்தவர், சொந்தப்பணிகளில் கவனம் கொள்வர். வீடு, வாகனத்தில் திருப்திகரநிலை உண்டு. உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். புத்திரர் சுயதிறன் வளர்த்து, படிப்பில் நல்ல முன்னேற்றம் காண்பர். எதிரி சிரமம் எதிர்கொண்டு விலகிப்போவர். இல்லறத்துணை, உங்களின் எண்ணங்களை மதித்து நடந்து குடும்ப நலன் காத்திடுவர். தொழில் மற்றும் வியாபாரத்தில் தேவையான வளர்ச்சி மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தர்கள் புதிய திட்டங்களை பணியாளர்களின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றுவர். கலைஞர்கள், புதிய முயற்சியில் வெற்றி பெறுவர். மாணவர்கள், படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

**தனுசு** - மனதில் தன்னம்பிக்கை வளரும். தகுந்த முன்யோசனையுடன் புதிய திட்டங்களை செயல்படுத்தி வெற்றி பெறுவீர்கள். உறவினர், நண்பர்களின் ஆதரவு, உதவி பலமாக கிடைக்கும். வீடு, வாகனம் புதிதாக வாங்க நல்யோகம் உண்டு. புத்திரர் செயல்திறன் வளர்த்து படிப்பில் நல்ல முன்னேற்றம் காண்பர். இஷ்ட தெய்வ அருள் பரிபூரண துணை நிற்கும். உங்களின் பண்பான செயல்பாடு எதிரியின் மனதில் நல்மாற்றத்தை உருவாக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் முன்னேற்றமும், கூடுதல் லாபவிகிதமும் கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள், சலுகைப் பயன் கிடைத்து சந்தோஷ வாழ்வு நடத்துவர். மாணவர்கள் படிப்பில் கூடுதல் கவனம் கொள்வது அவசியமாகும்.

**மகரம்**- சிந்தனை மற்றும் செயற்பாடுகளில் புதிய அனுகூல மாற்றம் உருவாகும். ஆடம்பரச் செலவுகளை பெரிதும் தவீர்ப்பீர்கள். உடன் பிறந்தவர்களின் ஆலோசனையை மதித்து பெருமைப்படுவீர்கள். வாகன பயணத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது. சீரான ஓய்வு உடல் நலம் சிறக்க உதவும். இல்லறத் துணையிடம் தேவையற்ற விடயங்களில் வாக்குவாதத்தைத் தவிர்க்கவும். வெளியூர் பயணம் சில நன்மை பெற்றுத் தரும். உத்தியோகத்தர்கள் முரண்பட்ட எண்ணங்களால் சிறு அளவில் சிரமம் எதிர்கொள்வர். கலைஞர்கள், அதிக பொருள் தேவைக்கு உள்ளாவர்.

**கும்பம்**-கடந்த கால சிரமங்களை, மெல்ல மெல்ல சரி செய்வீர்கள். புதிய நம்பிக்கையுடன் வாழ்க்கைப் பயணம் ஆரம்பமாகும். பிறர் உதவி இன்றி சொந்த முயற்சியில் சில முன்னேற்றம் காண்பீர்கள். வாகன பராமரிப்புச் செலவு ஏற்படும். எதிரியை வெறுப்பேற்றுகிற செயல் தவிர்த்து உங்கள் பணியில் மட்டும் கவனம் கொள்வது நல்லது. தொழில் மற்றும் வியாபாரத்தில் சராசரி நிலையும், மிதமான பணவரவும் இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு நிர்வாகத்திறன் வளர்க்க பொறுமையும், கால அவகாசமும் தேவைப்படும், கலைஞர்கள், அவப்பெயர் வராத அளவில் செயல்பட வேண்டும்.

**மீனம்**-பேச்சில் நியாய, தர்மம் பின்பற்றுவதால் மட்டுமே பிறர் வகையில் உங்களுக்கு சிரமம் அணுகாது. உடன்பிறந்தவர்களின் மங்கல நிகழ்ச்சியைச் சிறப்பாக நடத்தலாம். வீடு, வாகனத்தில் நம்பகத்தன்மை இல்லாதவர்களுக்கு இடம் தரக்கூடாது. உடல் பிணி, எதிரியால் இருந்த தொந்தரவு பெருமளவில் குறையும். இல்லறத்துணையின் அன்பு, நல்லோரின் ஆசி கிடைக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி மாற்றம் உருவாகும் லாபவிகிதம் கூடும். உத்தியோகத்தர்கள் சிறந்த பணியால் நிர்வாகத்திடம் எதிர்பார்த்த சலுகைப்பயன் பெறுவர். மாணவர்கள், ஆசிரியரிடம் நற்பெயர் பெறும் வகையில் செயற்படுவது அவசியம்.



## கவி வரிகள்

சொர்க்க புரிகளில்
இருந்து வரும்
''தேன் மொழி'' குரல்களை விட
குருதி தோய்ந்த
குண்டுகளை தாங்கிய
மண்ணில்
இனியும் வாழத் துடிக்கும்
''ஆத்மாக்களின் குரல்களே''
கவிவரி களாகின்றன
காலத்தையும் வெல்கின்றன.

நிலவன்
அச்சுவேலி.

## உதிர்ந்த உறவுகள்

முற்றத்தில் விளையாடிய பிஞ்சுகளும்
முப்பொழுதும் மடியக் கண்டோம்
ஒரு கூட்டில் வாழ்ந்த உறவுகளும்
ஒரு குழியில் புதையக் கண்டோம்
தள்ளாடும் வயதினிலும் மூத்தோர்கள்
தலை இழந்து துடிக்கக் கண்டோம்
நிழலுக்காய் ஒதுங்கிய மரம்கூட
நிதமும் அனலாய் எரிக்கக் கண்டோம்
நண்டு ஊரும் நந்திக் கடற்கரையும்
நம்மவர் பிணங்களால் நிறையக் கண்டோம்
காலங்கள் போன பின்னும்
காயாத வடுக்கள் கண்டோம்
உறவுகளை இழந்த பின்பும்
உணர்வுகளில் ஏற்றம் கண்டோம்
ஆறாத் துயரத்தில் ஆழ்ந்த நம்மவர்க்கா
ஆண்டவனை வேண்டுகின்றோம்

அஜா, யாழ்ப்பாணம்.





## சாதனை

சாதனை
என்பது
வெற்றிக்காக
மட்டுமல்ல
வேதனைக்காகவும்
தான்...

வித்தியா தர்மகுலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதாளத்தினுள் பாதுகாப்பு

சிறுவர் பாதுகாப்பு அமைப்புக்களின் விளங்கிக்கொள்ளல் அணுகுமுறை போன்றவற்றில் ஏற்படும் தவறுகளினால் விளையும் பாதிப்பான விளைவுகளை சில உதாரணங்கள் மூலம் பார்த்தோம். இவை போன்ற பல விடயங்களுக்கு சரியான பார்வையுடன் கூடிய நடைமுறை பொறிமுறைகள் கண்டு கொள்ளப்பட வேண்டியுள்ளது. இல்லையேல் சிறுவர் பாதுகாப்புக் குழுக்களே சிறுவர் உரிமை மீறுபவர்களாக செயற்படும் தற்போதைய நிலை தொடரும்.

மருத்துவர் இ. சிவசங்கர்



சிறுவர் துஷ் பிரயோகங்கள் என்று பேசிக் கொண்டிருக்கும் நாம் சிறுவர் நலன் மீறும் செயற்பாடுகள் குறித்தும் ஆராய வேண்டிய தேவை எழுந்துள்ளது.

இறுதிப் போர் எம்மிடையே எத்தனையோ இறப்புகளைத் தந்துவிட்டுச் சென்றிருக்கிறது. இந்த இழப்புகளின் முடிவில் எமக்குக் கிடைத்திருப்பது நிம்மதியற்ற வாழ்க்கையே.

நாம் இழந்த சொத்துக்களை விட உறவுகளின் இழப்பே இன்று பெரிய பின்விளைவுகளை ஏற்படுத்தி நிற்கின்றன. உறவுகள் இன்றிப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் சின்னஞ் சிறு பிஞ்சுகளே. இந்தச் சிறுசுகளுக்கு உரிய பாதுகாப்புக் கிடைக்கிறதா என்று எண்ணிப் பார்க்கும் போது அடிவயிற்றில் புளிகரைத்தால்போல் வேதனைஉச்சக்கட்டத்தைஎட்டுகிறது.

இந்தப் போர் ஆயிரக்கணக்கான சிறுவர்களை அநாதைகள் என்ற நாமத்துடன் உலவவிட்டிக்ருக்கிறது. இவர்களில் பல சிறுவர்கள் வடக்கு மாகாணத்தின் தெற்குப் பகுதியில் உள்ள சில சிறுவர் நல நிலையங்களில் பராமரிப்புக்காக உத்தியோக பூர்வமாக விடப்பட்டுள்ளனர்.

உயர்மட்ட அதிகாரிகளின் பொறுப்பில் தொடக்கப்பட்டு இயங்கி வரும் பெண்கள் சிறுவர் இல்லம் ஒன்றின் நிலைமை சோகத்துக்கு இடமானதாக உள்ளது.

இந்த இல்லத்தில் 'சிறுவர் நலன் பேணல்', 'சிறுவர் பாதுகாப்பு' என்பன கவனிப்பு அற்ற நிலையிலேயே காணப்படுகின்றன. காலையிலும் மாலையிலும் ஆயுததாரிகள் வாயில் கடமையில் ஈடுபடுகின்றனர்.

இந்த இல்லத்தின் பராமரிப்பில் பெரியோர்கள் எவரும் பங்கெடுப்பதாகத் தெரியவில்லை. சிறுவர்கள் மட்டுமே தமக்கான அனைத்து செயற்பாடுகளையும் செய்வதாக அறிய முடிகின்றது. சிறுவர்களுக்கு தேவையான உணவு வெளியில் உள்ள ஒரு கடையில் இருந்தே கொண்டுவரப்படுகின்றது.

பெண் சிறுவர்கள் இல்லத்திலிருந்து வெளியில் சென்றுவருவதில் எந்தக் கட்டுப்பாடும் இங்கு இல்லை. இரவுவேளைகளிலும் இந்தச் சிறுவர்கள் அயல் ஊர்களில் திரிவதை அவதானிக்க முடிகிறது என்றும் இவர்கள் அயல் ஊர்களில் உள்ள வீடுகளில் களவுகளிலும் ஈடுபடுகின்றனர் என்றும் நம்பத்தகுந்தவர்களும் அவதானித்தவர்களும் கூறுகின்றனர்.

இந்த வகையில் செயற்பட்டு வரும் இல்லம் குறித்து சிறுவர் பாதுகாப்பு குழுக்களதோ, நன்னடத்தைப் பிரிவினதோ அவதானிப்புகள் இல்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

இந்த இல்ல செயற்பாடு சிறுவர்கள் உரிய பராமரிப்பு, அவதானிப்பு, வழிகாட்டல் எதுவு மற்று பாதகமான சூழ்நிலைகளுடன்நலன்மேம்பாட்டுநடவடிக்கைகள் எதுவுமின்றி இயங்குகின்றது.

பொறுப்பு வாய்ந்தவர்களால் இந்த இல்லம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படாது, பொறுப்பெடுக்கப்படாது, கண்டுகொள்ளப்படாது விடப்பட்டுள்ளது. இல்லச் சிறுவர்களின் வாழ்வு சிதைந்து போவதற்குப் பொறுப்பு சொல்ல வேண்டியவர்கள் யார் என்பதை சமூகமே தீர்மானிக்கவேண்டும்.

அடுத்து இதே மாவட்டத்தில் சமய பிரமுகர் ஒருவரால் நடத்தப்பட்டுவரும் இல்லமும் இதே நிலையில்தான் உள்ளது. இந்த இல்லம் சார்பாகவும் எந்த விதமான அவதானிப்புகளும் இல்லை என்ற நிலைமைதான் காணப்படுகிறது.

இந்த இல்லத்தில் தமிழ்ச் சிறுவர்கள் மொட்டை அடிக்கப்பட்டு மதமாற்றம் செய்யப்படும் நடவடிக்கைகளும் தாராளமாக நடைபெற்று வருவதாக கூறப்படுகின்றது. இந்தச் சிறுவர் இல்லத்தில் என்ன நடைபெறுகின்றது என்பது சிறுவர் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியாது என்றும் கூறப்படுகின்றது.

வயதுக்கு வராத சிறுவர்கள் பெற்றோரினதோ, உறவினரதோ சம்மதம் இன்றி, நீதித்துறையின் முடிவுகள் எதுவுமின்றி இவ்வாறு மத மாற்றத்துக்கு உட்படுத்தப்படுவது 'சிறுவர் துஷ்பிரயோகம் என்பதற்குள் அடங்கவில்லையா?'. இதற்குப் பதில்தரப்போவது யார்? சிறுவர் நலபாதுகாப்பை உறுதிப்படுத்துவது யார்? இதையும் சமூகம் தீர்மானிக்கட்டும்.

மேலதிகமாக ஒரு இல்லத்தை பற்றியும் குறிப்பிடலாம் என்று கருதுகின்றேன். இதுவும் ஒரு சமயத்தின் பிரிவினரால் நடத்தப்பட்டு வருகிறது.

இறுதிப் போரின் பின்னர் தொடக்கப்பட்டு நடத்தப்படும் இந்த இல்லத்தின் செயற்பாடுகள், எமது சமய, கலாசாரத்துக்கு அமைவானதாக இருக்கின்றதா? சமூக ஒழுக்கக் கட்டுப்பாட்டு நடவடிக்கைக்கு ஊடாக நிர்வாக ஒழுங்கு அமைக்கப்பட்டுள்ளதா என்பவை கேள்விக்குறியவையாக இருக்கின்றன.

இந்த நிலைப்பாட்டுக்கு எல்லாம் 'சுதந்திரம் வழங்கப்பட்டால் சிறுவர்கள் கெட்டுப் போய்விட்டார்கள்' என்று கூறப்படலாம்.

இவ்வாறுசெயற்பட்டுக்கொண்டு இருக்கும் இந்த இல்லத்தின் மீதும் சிறுவர் பாதுகாப்பு குழுக்களின் செயற்பாடு போதுமானதாக இருக்கின்றதா என்பதை அவர்கள் தான் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த மூன்று இல்லங்களின் செயற்பாடுகளும் எவற்றைக் கூறிநிற்கின்றன? எம் சிறுவர்கள் மீது திணிக்கப்படும் தலையீடுகள் உத்தியோக பூர்வ அரச மட்ட குழுக்களால் பொறுப்பெடுத்து கையாளப்படவில்லை என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது.

மூன்று வருடங்களாக இயங்கி வரும் இல்லங்கள், நிலையங்கள் சார்பாக எவ்வித கலந்துரையாடல்களும் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. கவனிப்பற்று, பேசாப் பொருளாக உள்ள இவற்றுக்கு பொறுப்பு சொல்லும் கடமைப்பட்டவர்கள் யார்?

இங்குள்ள சிறுவர் எதிர்கொள்ளும், துஷ்பிரயோக நடவடிக்கைகளும், சிறுவர் உரிமை மீறல் தொடர்வதற்கும் சமூகம் பொறுப்பில்லையா? உத்தியோகபூர்வமாக சிறுவர் பாதுகாப்புக்காக செயற்படுதாக கூறிக்கொள்ளும் அரச, அரசசார்பற்ற திணைக்களங்கள், நிறுவனங்கள் பொறுப்பில்லையா?

இத்தகைய துஷ்பிரயோகங்களைப் பொறுப்பெடுத்தலில் இருந்து பொறுப்புள்ளவர்கள் விலகி இருத்தல் அவர்களின் கடமை பிறழ்வு என கூறப்படலாமா? அல்லது இவை அவர்களின் 'சக்திக்கு மேற்பட்டது' என்றோ 'பாதுகாப்பு அச்சுறுத்தல்' என்றோ கூறிவிடலாமா?

இத்தகைய விடயங்களில் தத்தமது சமூக, உத்தியோகபூர்வ கடமைகளிலிருந்து விலகி இருப்போர், தனிப்பட்ட பெற்றோர் மீதும், சமூக நலனையே நோக்கமாக கொண்டியங்கும் இல்லங்களின் மீதும் நெருக்குவாரங்களை ஏற்படுத்துவதும், நீதிமன்றம் வரையில் இழுத்து சட்ட நடவடிக்கைகள் எடுப்பதும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதா? என்பது சிந்திக்கப்பட வேண்டிய விடயம்.

தற்போதைய எமது சமுதாயச் சிதைவுகளின் மத்தியில் சிறுவர் இல்லங்களின் தேவைப்பாடு அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்த நிலையில் சமூக நலனையே நோக்கமாகக் கொண்டியங்கும் சிறுவர் இல்லங்கள் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட வேண்டிய தேவை எமக்குள்ளது.

இந்தச் சிறுவர் இல்ல நிர்வாகத்தினருடன் ஆதரவுடன் கூடிய ஆலோசனை அணுகுமுறையே சிறுவர் பாதுகாப்பு செயற்பாடுகளுக்காக நிகழ்த்தப்பட வேண்டியவை. இத்தகைய அணுகுமுறையே சிறுவர் நலன் பேணலுக்கு வழி சமைக்கும். சிறுவர் இல்லங்களின் நடைமுறை நிர்வாகக் குறைபாடுகள் சீர்செய்யப்பட ஆலோசனையும், மாற்று ஒழுங்கு முறைகளும் முன்வைக்கப்படுதல் ஆரோக்கியமானது. அவையே எதிர்பார்க்கப்படும் பயனுள்ள விளைவையும் ஏற்படுத்தும். தற்போதைய நிலையில் சிறுவர் இல்லங்களுக்கு தேவைப்படும், அறிவு, பயிற்சிகள் என்பன போதியவையாக இல்லை.

இந்த நிலையில் சிறுவர் நல தலையீடுகள் மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டியது காலத்தின் அவசியம். அந்த வேளையில் எமது கலாசார விழுமியங்களுக்கும், சமூக கட்டமைப்புக்கும் பொருத்தப்பாடான அணுகுமுறைகள் உள்வாங்கப்பட வேண்டும். எமது சமூக விழுமியங்களுக்கு முரணான முறைகள் விழிப்புடன் தடுக்கப்பட வேண்டும்.

## அவசரக் கண்ணீர்..



திருமணங்கள் இப்போது கோலாகலம், கொண்டாட்டங்கள் நிறைந்ததாக மாறி வருகின்றன. திருமண ஆடம்பரத்தால், வாழ்க்கையில் இணையும் அந்த ஜோடிகளுக்கு மகிழ்ச்சி அதிகரிக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது.

ஒவ்வொரு திருமண நிகழ்விலும் கவனிக்கவேண்டிய முக்கியமான விடயம் என்னவென்றால், அதில் இருவருடைய வாழ்க்கை மட்டுமல்ல, இரு குடும்பத்தின் நிம்மதியும் அடங்கி இருக்கிறது என்பதுதான்.

அதனால் திருமணத்தில் ஒருபோதும் அவசரம் காட்டக்கூடாது. பெண்ணாக இருந்தாலும், ஆணாக இருந்தாலும் அவர்களைப் பற்றிய தெளிவான உண்மையான தகவல்களை முதலில் திரட்டவேண்டும். அந்தத் தகவல்கள் உண்மையானவையா என்று உறுதி செய்யவேண்டும். படிப்பு, சொத்து, சுதந்திரம், அந்தஸ்து போன்ற அனைத்துக்கும் மேலாக ஒழுக்கம் வாழ்க்கையில் இணையும் இருவரிடமும் இருக்கவேண்டும். இருவரின் மனநிலையும் நன்றாக அமைந்திருக்க வேண்டும்.

வெளிநாட்டிலிருந்து ஒருவர் வந்திருக்கிறார். இன்னும் ஒரு வாரத்தில் திருமணம் என்று சிலர் சொல்ல கேட்டிருக்கிறோம்.

அப்படிப்பட்ட அவசர திருமணங்களின்போது, அவர்களுக்கு சொந்த பந்தங்களை அழைக்கக் கூட நேரமிருக்காது. வேக, வேகமாக திருமணத்தை முடித்து, பெண்ணை வழியனுப்பிய பிறகுதான் பல விடயங்களை யோசிப்பார்கள். எங்கேயோ தவறு நடந்திருப்பது அப்போது தான் அவர்களுக்குப் புரியும்.

ஏமாற்றுப் பேர்வழிகளுக்கு இந்த அவசர திருமணங்கள் ஒரு நல்ல வாய்ப்பு. தங்களைப் பற்றி கேள்வி கேட்க அவகாசம் கொடுக்காமல் மற்றவர்கள் சிந்தனையை மழுங்கடித்து காரியத்தை சாதித்துக் கொள்வார்கள்.

எப்படியாவது நம் வேலை முடிந்தால் சரி என்று நினைப்பவர்களுக்கு இந்த அவசரம் அல்வா சாப்பிடுவது மாதிரி. அதன் விளைவுகளை பற்றி யோசிக்கவே தோன்றாது.

இவ்வாறு இடம்பெறும் பல அவசர திருமணங்கள் கண்ணீர்விட வைத்திருக்கின்றன. அவசரத்திற்கு கிடைத்த பரிசு, யாரை குறை சொல்ல முடியும்? நடக்கும் அவசரத் திருமணங்களுக்குப் பின்னால் ஆயிரம் கண்ணீர்க் கதைகள் உள்ளன என்பதையும் மறுப்பதற்கு இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாரோடு நோவோம் யார்க்கெடுத்துரைப்போம்...



அருவி

நேரம் மாலை 5.30 ஐக் கடந்து கொண்டிருந்தது. அரக்கப் பரக்க சைக்கிளில் கே.கே.எஸ்.வீதி வழியாக நான் சென்று கொண்டிருந்தேன். பண்டிக்குட்டி பிள்ளையார் கோயிலடியில் மினிபஸ் ஒன்றில் வந்து இறங்கினார் ஒரு வயதான அம்மா.

சுற்று முற்றும் பார்த்துவிட்டு தன்னை இறக்கிவிட்டு தூசியை கிளப்பிக் கொண்டு சென்ற மினிபஸ்ஸை நோக்கி கையைக் காட்டி நிறுத்தும்படி சத்தமிட்டார் அந்த அம்மா. ஆனால் அவரது அந்தக் குரலையோ, சைகையையோ கவனிப்பதற்கு அங்கு மினிபஸ் இல்லை. அது பறந்துபோய் விட்டது. ''என்னம்மா...என்ன நடந்தது'' அந்த அம்மாவின் தவிப்பை உணர்ந்து மெல்லக் கதைகேட்டேன்.

''அது பிள்ளை! நாச்சிமார் கோயிலடியில இறக்கச் சொல்லி, ஏறேக்கையே காசும் கொடுத்துப்போட்டன். அங்கால இஞ்சால அசைய முடியாத அளவுக்கு நல்ல சனம். வாகனம் எங்க நிற்குது, எங்க போகுது எண்டு எதுவுமே தெரியேல்ல. ஒரு மாதிரி நெரிபட்டு முன்னுக்கு வந்து நாச்சிமார் கோயிலடியில இறக்கிவிடச் சொன்னன். 'இது தானம்மா நாச்சிமார் கோயிலடி இறங்குங்கோ' எண்டு என்னை இறக்கி விட்டிட்டான். இறங்கின உடன புரிஞ்சு போச்சு இது நாச்சிமார் கோயிலடி இல்லை எண்டு. அதுதான் அந்த மினிபஸ்ஸ மறிக்கப் பாத்தனான். அது போயிற்றுது. பொழுதும் படுகுது. நான் கிளிநொச்சியில் இருந்து வாறன். யாழ்ப்பாணம் அவ்வளவுக்கு பழக்கமில்லை. எனக்கு கண்பார்வையும் கொஞ்சம் மட்டு...'' செய்வதறியாது தடுமாறிக் கொண்டிருந்த அந்த அம்மாவை எனது சைக்கிளில் ஏற்றிக்கொண்டு புறப்பட்டேன்.

பின்னால் இருந்த அந்த அம்மா, அந்தச் சம்பவத்திலிருந்து இன்னும் மீளவில்லை என்பதை தொடர்ந்த அவரது பேச்சு எனக்கு உணர்த்தியது.

''என்ன பிள்ள! வாகனத்தில ஏறுவது வாகன வழிப்படுத்துனரை நம்பித் தானே! காசு வாங்கிறதில இருக்கிற ஆர்வத்தச் சரியான இடத்தில இறக்கி விடுறதிலும் எல்லோ காட்ட வேணும்... நான் தான் தவறான இடத்தில இறங்கினாலும், இது உங்கட இடமில்ல பொறுங்க நான் இடம் வர இறக்கி விடுறன் எண்டு சொல்லுறதுதானே மனிசப் பண்பு. இப்படியே போனா நிலமை என்ன, மனிதாபிமானம் என்கிறது இப்பவெல்லாம் நல்லாச் செத்துப் போயிற்று...''

அந்த அம்மாவின் ஆதங்கம் இன்னும் ஒய்ந்ததாகத் தெரியவில்லை. உண்மையில் மனிதாபிமானம் செத்துப் போய்விட்டதுதான். சில குறிப்பிட்ட வழிகளில் பயணத்தை மேற்கொள்ளும் மினிபஸ்களால் ஒரு தடவையல்ல, பல தடவைகள் நான் பாதிக்கப்பட்டு இருக்கிறேன். ஒரு ரூபா காசை உழைக்க ஒவ்வொரு மனிதனும் எப்படிக் கஷ்டப்படுகின்றான் என்பதை குறிப்பாக பஸ் காரர்களும் சரி, கடைக்காரர்களும் சரி கண்டுகொள்வதே இல்லை. ஒரு ரூபா என்ற நிலைமாறி இப்பவெல்லாம் 6 ரூபா, 8 ரூபா வரை மீதிப்பணம் கொடுக்கும் வழக்கமே இல்லாமல் போயிற்று.

16 ரூபா கொடுத்து பயணிக்க வேண்டிய இடத்துக்கு 20 ரூபாவைக் கொடுத்தால் 4 ரூபா மிகுதியைத் திருப்பித் தருவதாய் இல்லை. இது ஒரு மினிபஸ்ஸில் அல்ல, பல தடவை பல மினிபஸ்களில் எனக்கு மட்டுமல்ல பலபேருக்கும் நேர்ந்த நிலைமை. சில்லறை இல்லை என்பதே இதற்கான அவர்களின் பதில்.

இப்படி ஒரு பயணத்தின் போதே பல பேரிடம் 4 ரூபா, 2ரூபா என மீதிப் பணம் கொடுக்காது உழைத்துக் கொள்ளும் சுரண்டல் பணத்தில் வாழ நினைப்பவர்களை என்னவென்று சொல்வது.

இது ஒருபுறம் இருக்க ஒரு தடவை மானிப்பாய் வழியால் பஸ்சில் பயணத்தை மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் அமைந்தது. அது பாடசாலை நாள். நேரம் 8.20 ஐக் கடந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு சந்திகளிலும் பாடசாலைப் பிள்ளைகள் நின்றிருந்தார்கள். கொஞ்சத்தூரம் அவர்கள் ஏற்றப்பட்டார்கள். அதற்குப் பின் பள்ளிப் பிள்ளைகளை அடுத்த பஸ்ஸில் வரும்படி சொல்லிவிட்டு சந்திகளில் வேறு தேவைகளுக்காய்ச் செல்லும் பொதுமக்களை ஏற்றினார்கள். ஏனெனில் குறிப்பிட்ட இடங்களில் பள்ளிப் பிள்ளைகள் இறங்கி விட்டால் உழைப்பு இல்லாமல் போய்விடும் என்பதுதான் அவர்களின் நோக்கம். இப்படி எல்லா பஸ்காரரும் கைவிட்டுப் போனால் அந்தப் பள்ளிப் பிள்ளைகளின் நிலை என்ன? பாடசாலை என்பது நேரத்துக்கு போக வேண்டிய ஓர் இடம். குறித்த நேரத்துக்குச் சமுகம் அளிக்காவிட்டால் பாடசாலையிலும் அந்த மாணவர்கள் பிரச்சினையை எதிர்நோக்க வேண்டி வரும்.

பொதுவாக ஓரளவுக்கு வசதி படைத்தவர்கள் பாடசாலைக்கென ஓடும் சிறப்பு பஸ்களில் சென்றுவிடுவார்கள். சைக்கிள் உள்ளவர்கள் அதில் சென்றுவிடுவார்கள். வசதி இல்லாத வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள்தான் இந்த பஸ்ஸுகளுக்காக காத்து நிற்கும் மாணவர்கள். அவர்களை ஏற்றாது, அடுத்த பஸ்ஸில் வாங்க என்று எல்லோரும் சொன்னால் என்னவாவது..?

இந்த நாட்டில் மனிதாபிமானம் என்னும் சொல்லை எங்கே தேடுவது என்று புரியவில்லை. அந்த அம்மா இறங்க வேண்டிய இடம் வர இறக்கிவிட்டு நகர்ந்தேன்.

மாற்றம் ஒன்றின் அவசியத்தை எல்லோரும் உணரப் போகும் நாள் எப்போது? அதுவரை யாரோடு நோவோம்... யார்க்கெடுத்து உரைப்போம்...?

# சரிந்து வரும் குடாநாடு வர்த்தகம்

சோபனா

குடாநாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் மாற்றமடைந்து வருவதைப் போன்று வாழ்வாதாரத் தேவைகளையும் அபிவிருத்தி செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. மக்களின் தேவை, பொருளாதாரப் பின்னடைவு என்பன வேறுபட்டதாக இருக்கும்போது பொருளாதார ரீதியாக அவற்றை முன்னேற்ற வேண்டிய தேவையும் உள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட வடுக்கள் மாற்றம் பெற்று நவநாகரிகமாக வாழப் பழகியுள்ள குடாநாட்டு மக்களின் தேவை, பொருளாதாரத்தையும் தாண்டி ஈடுகொடுக்க முடியாத நெருக்கடிகளில் ஒவ்வொருவரையும் ஆளாக்கியுள்ளது. முக்கியமாக அத்தியாவசியத் தேவைகள், முக்கியமான ஒன்றாக உள்ளபோது அவை கிடைக்காவிட்டால் வாழ்வாதாரம் பின்னடைவுக்குத் தள்ளப்படும். இந்த நிலையில் வாழ்வாதாரத்தைப் பெற்றுக் கொள்ள தொழில் முயற்சிகளை சாதகமான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. மக்களின் தேவைக்கு ஏற்றால் போல் தொழில் முயற்சிகளையும் மேம்படுத்த வேண்டிய கட்டாயம் இருப்பதால் அதில் அக்கறை காட்ட வேண்டியது காலச்சூழல்.

குடாநாட்டு மக்களின் வாழ்க்கைப் பொருளாதாரம் பெரும்பாலும் வர்த்தகம், விவசாயம் எனத் தங்கியிருப்பதால் இவற்றை மேம்படுத்த வேண்டியுள்ளது. ஆனால் இவற்றை மேம்படுத்த நிதியும் ஆளணியும் முக்கிய தேவைப்பாடாக உள்ளன. குடாநாட்டு வர்த்தகர்களுக்கு இப்போது நல்ல காலமில்லை. கைகடிக்க ஆரம்பித்துள்ளதால் விற்பனை நிலையங்கள் பல மூடப்பட வேண்டிய நிலையில் உள்ளன என வர்த்தகர்கள் புலம்ப ஆரம்பித்துள்ளார்கள்.

குறிப்பாக நுகர்வோரின் தேவையை உணர்ந்து பொருள் கொள்வனவு செய்வதற்குத் தேவையான முதலீடு பற்றாக்குறையில் குடாநாட்டு வர்த்தகர்கள் உள்ளனர் என்று யாழ். வர்த்தக சங்கம் கூறுகின்றது. ஆனால் நுகர்வோரின் தேவையை சாதகமாகப் பயன்படுத்தித் தென்னிலங்கையிலிருந்து பல தனியார் நிறுவனங்கள் தமக்கான சந்தை வாய்ப்பைப் பெறுவதற்கு முண்டியடித்து நாளாந்தம் இங்கு வந்து குவிகின்றன என்றும் சங்கம் கூறுகின்றது.

இவர்களில் பதிவுசெய்யப்படாத தனியார் நிறுவனங்களும் அடங்குகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தனியார் நிறுவனங்கள் தென்னிலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திப் பொருள்களை வகைதொகையாக இறக்குமதி செய்து எப்படியாவது சந்தைப்படுத்துவதிலேயே குறியாக இருக்கின்றன. குறிப்பாகக் குடாநாட்டு வர்த்தகர்களுக்கு கடன் அடிப்படையில் கட்டாயப்படுத்தித் திணிக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமல் இல்லை.

வர்த்தகர்களும் தவிர்க்க முடியாமல் கடன் அடிப்படையில் தனியார் நிறுவனங்கள் நேரடியாகக் கொண்டு வந்து இறக்கும் மெருகூட்டப்பட்ட உற்பத்திப் பொருள்களை தரம், இலாபம் எதையும் கருத்தில் கொள்ளாது வாங்கி விற்கின்றனர். அவர்களின் வியாபாரத் தந்திர முறைமைகளுக்கு அடிபணிந்து தமது வர்த்தக நிலையங்களில் பொருள்களை வாங்கிக் குவிக்கிறார்கள் வாங்கிக் குவித்துக் கொண்டிருக்கின்றனர்.

குடாநாட்டு மக்கள் நாகரிக மாற்றங்களால் தரமான பொருள்களையும் சந்தையில் மதிப்புக் கூடிய பொருள்களையும் வாங்குவதற்கு ஆர்வம் காட்டுவதால் காட்சிக்கு வைக்கப்படும் பொருள்களைத் தவிர்த்து தரமான பொருள்களை வெளிமாவட்டங்களில் கொள்வனவு செய்யும் முயற்சியில் ஈடுபடுகின்றனர். கொள்வனவு செய்தும் வருகின்றனர்.

இதன் காரணமாக குடாநாட்டு வர்த்தகர்கள் உரிய சந்தை இல்லாமல் தனியார் நிறுவனங்களிடமிருந்து பெற்ற விற்பனைப் பொருள்களுக்கான கடனையும் திருப்பிச் செலுத்த முடியாமல் திண்டாடுகின்றனர். விற்பனை நிலையங்களில் சந்தை வாய்ப்புக் கிடைக்காத காரணத்தால் கொள்வனவு செய்த பொருள்கள் வியாபார நிலையங்களில் தேக்கமடைவதுடன் முதலுக்கு மீறிய கடன் தொகையும் வர்த்தகர்களுக்குச் சுமையாக மாறுகிறது.

கட்டாயப்படுத்தலில் குடாநாட்டு வர்த்தகர்களிடம் திணிக்கும் தென்னிலங்கைத் தனியார் நிறுவனங்கள் தமக்கான ஒரு கால எல்லையைப் பிறப்பித்து கடன்களை மீளச் செலுத்தாத வர்த்தகர்கள் மீது எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கவும் தவறவில்லை. ஆக மொத்தத்தில் குடாநாட்டு வர்த்தகர்கள் கடன் அடிப்படையில் பொருள்களை வாங்கி அவற்றைச் சந்தைப்படுத்தாமல் ஏனைய சொத்துக்களை அடமானம் வைத்து மேலும் மேலும் கடனாளிகளாகவே மாறிக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கடன் சுமையை நிவர்த்தி செய்ய தொழில் முயற்சிக்கான வியாபாரக் கடன் உதவிகளை வழங்க வங்கிகளும் தனியார் நிறுவனங்களும் மறுக்கின்றன. இதனால் தமது விற்பனை நிலையங்களை மூட வேண்டிய நிலைக்கு வர்த்தகர்கள் தள்ளப்பட்டுள்ளனர் என்று யாழ்.மாவட்ட வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

வங்கிகள் மக்களின் அபிவிருத்தியை இலக்காக வைத்து சேவை வழங்க வேண்டிய தருணத்தில் குடாநாட்டு வர்த்தகர்களின் வியாபார நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பாகக் கடன் உதவிகளை வழங்க பின் தங்கி நிற்பது ஏன்?

கடந்த காலங்களில் வங்கிகள், தனியார் நிறுவனங்கள் முன்வந்து வழங்கிய கடன் உதவிகளை நம்பி வீட்டுக் காணிகளையும் விவசாய நிலையங்களையும் வர்த்தக நிலையக் கட்டடங்களாக மாற்றிய தொழில் முயற்சியாளர்கள் பெரும் கடனாளிகளாகவே உள்ளனர். அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து தகுந்த ஆலோசனைகள் பெறாமல் சந்தை வாய்ப்புக்கு ஏற்ற இடமில்லை எனத் தெரிந்தும் பெரிய முதலீட்டு விற்பனை நிலையங்களை அமைத்தமை இதற்குக் காரணம்.

நகர் புறத்தின் அபிவிருத்தி தற்போது வியாபார நிலையங்களில் தங்கியிருப்பதால் சோர்ந்து போயிருக்கும் வர்த்தகர்களுக்குச் சிறந்த முதலீட்டு ரீதியான வழிகாட்டல் அவசியமானது. குடாநாடு தென்னிலங்கை வர்த்தகர்களுக்குச் சந்தை வாய்ப்பைக் கொடுக்காமல் தமது பிரதேச வர்த்தகர்களின் தொழில் முயற்சிகளை ஊக்குவிக்க வழங்க வேண்டும். இதற்குத் வங்கிகளோ, தனியார் நிறுவனங்களோ குறைந்த வட்டியுடன் அவரவர் தொழில் முயற்சிக்கான கடன்களை வழங்கி வர்த்தகத்தை நிலை நிறுத்த வேண்டும். கடன் சுமையுடன் இருக்கும் வர்த்தகர்கள் உரிய சந்தை வாய்ப்பைப் பெற்று வர்த்தகத்தை மேம்படுத்த வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்களுக்கு ஓர் எச்சரிக்கை!

■ கே.என்.ராமச்சந்திரன்

"மனித" இனம் என்று சொல்வதில் உள்ள ஆண் சார்புத் தன்மை பொருளற்றதாகி வருகிறது. அதை "மனிதி" இனம் என மாற்றியமைக்க வேண்டிய தேவை ஏற்படுகிற அளவுக்கு ஓர் இடைவெளியற்றதும், நெருக்கமானதும் இன்றியமையாதது மான தாயினப் பிணைப்பு மனிதச் சிற்றினத்தின் அடையாள வரையறையாக அமைந்திருப்பது வெளிப்பட்டு வருகிறது.






விலங்குகளில் பாலூட்டிகள் என ஒரு பிரிவு உண்டு. பெயரைப் பார்த்தாலே அதற்கான காரணம் விளங்கிவிடும். அவற்றின் பெண் குலத்துக்கு மட்டுமே தனித்துவம் வாய்ந்த பால் சுரப்பிகள் உள்ளன.

குட்டி பிறந்த பின் அது பல மாதங்களுக்கு உயிர்வாழத் தேவையான அமுதபானத்தை வழங்கி உயிரினம் உலகில் நீடித்து நிலைக்க பால் சுரப்பிகள் உதவுகின்றன.

இன்றுவரை பாலூட்டி விலங்குகள் உலகில் நீடித்து வருகின்றன எனில் அவற்றின் தாய்க் குலமே அதற்கு முழு முதற்காரணம். தாயில்லாமல் நானில்லை, அவளில்லையேல் உலகில் உயிரினமேயில்லை!

நிலைமை அவ்வாறிருக்க மனிதம் என்ற பேரினத்துக்கு ஆண் என்று பொருள்படுகிற 'ஹோமோ' என்ற லத்தீன் பெயரை இட்டது அக்காலத்திய ஆணாதிக்க மனப்பான்மையின் வெளிப்பாடு என இன்றைய பெண்ணுரிமை வாதிகள் பொருமுகிறார்கள்.

ஆணவம் என்பது பெண்களுக்கும் இருக்க முடியும் என்கிற போது அதை ஆண்களுடன் தொடர்புபடுத்திக் குறிப்பது என்ன நியாயம்? ஆனாலும் இன்றைய உலகில் ஆணாதிக்கம் கலகலத்துத் தகர்ந்து கொண்டிருக்கிறது எனவும் அது முற்றாக அழிந்து போகிற காலம் தொலைவில் இல்லை எனவும் பெண்ணுரிமைவாதிகள் வெளிப்படையாக இல்லாவிட்டாலும், மறைமுகமாகச் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கருத்தரிப்பதிலும் பிள்ளை பெறுவதிலும் அதைப் பேணி வளர்த்து ஆளாக்குவதிலும் ஆண்களின் பங்கு, பணி வரவரக் குறைக்கப்பட்டுக் கொண்டே வருகிறது. பெண்கள் எல்லா இடங்களிலும் ஆண்களுக்குச் சமானமானவர்களாகவும் சில இடங்களில் ஆண்களைவிட மேம்பட்டவர்களாகவும் வளர்ந்து வருகிறார்கள்.

''மனித'' இனம் என்று சொல்வதில் உள்ள ஆண் சார்புத் தன்மை பொருளற்றதாகி வருகிறது. அதை ''மனிதி'' இனம் என மாற்றியமைக்க வேண்டிய தேவை ஏற்படுகிற அளவுக்கு ஓர் இடைவெளியற்றதும், நெருக்கமானதும் இன்றியமையாதது மான தாயினப் பிணைப்பு மனிதச் சிற்றினத்தின் அடையாள வரையறையாக அமைந்திருப்பது வெளிப்பட்டு வருகிறது.

பிள்ளை பெறுவதுடன் நின்றுவிடாமல் அதை வளர்த்து ஆளாக்குவது பாலூட்டிகளின் தனிச் சிறப்பியல்பு. அந்த வகையில் பாலூட்டிகளிலேயே தலைசிறந்த பெற்றோர்களாகப் பெண்கள் விளங்குகிறார்கள். வேறெந்த உயிரினமும் அந்த வகையில் மனிதப் பெண்களுக்கு ஈடானதோ இணையானதோ அல்ல.

தம் பிள்ளைகள் பெரியவர்களாகிக் கல்யாணம் செய்து கொண்டு பேரப்பிள்ளைகளைப் பெற்றெடுத்த பின்னும் பிள்ளைகளைக் கண்டிக்கவும் கட்டுப்படுத்தவும், வழிநடத்தவும் உள்ள உரிமையைப் பெண்கள் கைவிட எளிதில் விரும்புவதில்லை. ஆண்களுக்கும் அந்த நாட்டம் உண்டெனினும் "தோளுக்கு மிஞ்சினால் தோழன்'' என்று தத்துவம் பேசி அமர்ந்து விடுவார்கள்.

இனப்பெருக்கத்துக்கு ஆண்களின் சரீர ஒத்தாசை இன்றியமையாதது அல்ல என்று அறிவியலாளர்கள் அறிவித்திருப்பது ஆண்களுக்கு அதிர்ச்சியைத் தரலாம்.

மேதைகள், சாதனையாளர்கள், விளையாட்டு வீரர்கள் என முன்மாதிரி ஆண்களாக மதிக்கப்படுகிறவர்களின் விந்தணுக்களைச் சேகரித்து அவற்றை உறைய வைத்துப் பாதுகாப்பது பல நாடுகளில் நடக்கிறது. ஒரு பெண் தனக்கு விருப்பமான ஆணின் விந்தணுவைப் பெற்றுத் தன் கருப்பைக்குள் செலுத்திக் கொண்டு கருத்தரிக்கலாம்.

அடுத்து 'குளோனிங்' என்ற முறையில் பெண்ணின் உடலிலிருந்தே ஒரு செல்லை எடுத்து, அதனுள்ளிருக்கிற கூறுகளை அவளுடைய முட்டைக்குள் புகுத்தி, அந்த முட்டையை அவளுடைய கருப்பையில் நட்டுவிட்டால் அது ஒன்பது மாதங்களில் முழுக்குழந்தையாக வளர்ந்துவிடும். இந்த உத்தி ஆடு, மாடு, குதிரை போன்ற விலங்குகளை இனப்பெருக்கம் செய்வதில் வெற்றியடைந்திருக்கிறது.

தகப்பனின் தயவின்றித் தாயால் மட்டுமே வளர்க்கப்பட்ட பல சிசுக்கள் நல்ல விதமாக வளர்ந்து வாழ்க்கையில் முன்னேறிச் சிறப்பெய்தியிருக்கிறார்கள். அமெரிக்க அதிபர் ஒபாமா, நடிகை மர்லின்-மன்றோ போன்றவர்கள் தகப்பன் தயவின்றி வளர்ந்தவர்கள்தான்.

பிள்ளைகள் கெட்டுப் போவதற்கு வறுமைதான் முக்கியமான காரணியே தவிர ஆண் வளர்ப்பதோ, பெண் வளர்ப்பதோ அல்ல என்று சாரா மக்லநாகன் என்ற அமெரிக்கச் சமூகவியல் ஆய்வாளர் கூறுகிறார்.

மேற்கு நாடுகளில் பல பிரபலங்கள் மணம் செய்து கொள்ளாமலேயே பிள்ளைபெற்று வளர்ப்பதற்குக் கூச்சப்படுவதேயில்லை. இந்தியப் புராணங்களில்கூட சத்யகாமன், பீஷ்மர் போன்ற மகான்கள் தாயால் மட்டுமே வளர்க்கப்பட்டவர்கள் எனக் கூறப்படுகிறது.

ஆண்களின் அலட்டலும் அலம்பலும் அளவுக்கு மீறி அதிகமாகிக் கொண்டே போனால் கலவியில்லாக் கருத்தரிப்பைத் தேர்ந்தெடுக்கும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போகும் ஆபத்து இருக்கிறது. அல்லது காரியமானதும் கணவனைக் கழற்றிவிடுகிற போக்கு அதிகரிக்கலாம். காடுகளில் பெண் புலிகள் அப்படித்தான் செய்கின்றன.

ஓர் உயிரினத்தின் வாழ்க்கை உண்மையில் அதன் தாய் வழிப் பாட்டியின் கருப்பையிலேயே தொடங்கி விடுகிறது. ஒரு சிசுவின் தாய் அவளுடைய தாயின் கருப்பையில் உருவாகிக் கொண்டிருக்கிறபோதே அவளுடைய உடலில் முட்டையகம் தோன்றி முட்டைகளும் தோன்றி விடுகின்றன.

பாட்டி பிரசவிக்கிறபோது அவையும் தாயின் உடலுக்குள் இருந்தவாறே வெளியாகும். தாய் பருவமெய்தும் வரை அவை முட்டையகத்தில் பாதுகாப்பாக இருக்கும். தாய் வயதுக்கு வந்தவுடன் மாதந்தோறும் ஒரு முட்டை முதிர்ச்சியடையும். அது சுருக்குத் தசைகளால் ஃபாலோபியன் நாளத்திற்குள் உறிஞ்சி இழுக்கப்படும். அதிலுள்ள ஊட்டச்சத்துகளும் மரபியல் பதிவுகளும் முட்டையைப் போஷித்துப் பராமரிக்கும்.

தந்தை கலவிசெய்து தமது விந்தணுக்களைக் கருப்பை வாயினருகில் செலுத்துவதோடு அவருடைய பங்குப்பணி முடிந்து போகிறது. அவற்றில் ஏதாவது ஒன்று முட்டையின் உறையைத் துளைத்துச் சில 'டிஎன்ஏ' மரபணுச் சரங்களைப் புகுத்தும். அத்துடன் அதன் பணியும் முடிவுறும்.

அடுத்த ஒன்பது மாதங்களில் கரு வளர்ந்து தாயின் உடலிலிருந்தே கனிமங்களையும் ஊட்டச்சத்துகளையும் ஒட்சிசனையும் உறிஞ்சிக் குழந்தையாகப் பரிணமிக்கிறது. தாயின் உடலிலிருந்தே அதற்குச் சக்தியும் நோயெதிர்ப்புத் திறனும் கைமாற்றப்படுகின்றன.

சிசு வெளிவரும்போது அதன் எடையான 3-5 கிலோ கிராம் முழுவதுமே தாய் தரும் கொடைதான். அதோடு ஒப்பிடுகையில் தந்தை தந்த டிஎன்ஏ சரங்களின் எடை 3.3 பக்கோ கிராம் மட்டுமே (ஒரு பக்கோ கிராம் என்பது ஒரு கிராமில் லட்சம் கோடியில் ஒரு பங்கு)

குழந்தை கருப்பையிலிருந்து புறப்பட்டு வெளிவரும்போது தாயின் இடுப்பிலும் பனிக்குடத்திலும் பிறப்புறுப்பிலும் உள்ள திரவங்களால் முழுக்காட்டப்படும். அத்திரவங்களிலுள்ள பல கோடி நுண்ணுயிரிகள் சிசுவின் உடலுக்குள் ஊடுருவி அதன் சருமத்தையும் ஜீரண மண்டலத்தையும் பொதுவான உடல் நலத்தையும் பாதுகாக்கும்.

பிறப்பின்போது தாயுடனான தொப்புள்கொடி இணைப்பு துண்டிக்கப்பட்டாலும் உடனடியாக வேறு வகையான இணைப்பு உருவாகிறது. தாயின் பால் சிசுவுக்குத் தேவைப்படுகிற நீர், புரதம், சர்க்கரை, கொழுப்புகள், நோயெதிர்ப்புத்திறன் ஆகிய எல்லாவற்றையும் முழு அளவில் அளிக்கிறது.

தாய் சிசுவைத் தழுவியணைத்து முத்தமிட்டுக் கொஞ்சும் போதெல்லாம் அதனுடைய உடலில் பரவியிருக்கக்கூடிய கிருமிகளை உட்கவர்கிறாள். உடனே அவளுடைய உடலில் அவற்றை அழிக்கும் நோயெதிர்ப்பு செல்கள் உருவாகின்றன. அவள் அவற்றைத் தன் முலைப்பாலின் மூலம் சிசுவுக்குப் புகட்டி விடுகிறாள்.

இதையெல்லாம் பார்க்கிற போது மனித இனம் தப்பிப்பிழைப்பதும் நீடித்து நிலைத்திருப்பதும் பெண்ணினத்தின் கையில் தானிருக்கிறது என்பது தெளிவாகிறது. இந்தக் கணமே உலகிலுள்ள அத்தனை ஆண்களும் மாயமாக மறைந்து போனால் கூட அஞ்சத் தேவையில்லை.

உறைய வைக்கப்பட்டிருக்கிற விந்தணுக்களைப் பயன்படுத்தியோ, குளோனிங் முறையிலோ மீண்டும் புதிய ஆண்களையும் பெண்களையும் உருவாக்கிக் கொள்ளலாம்.

ஆனால், ஒரே நாளில் பெண்கள் எல்லோரும் மறைந்து விட்டால் அத்துடன் மனித இனத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப் பட்டு விடும்.

அண்மையில் கிரெய்க் வெண்டர் என்கிற மரபணு விஞ்ஞானி மனித செல்களுக்குள்ளிருக்கிற எல்லாக் கூறுகளையும் ஆய்வுக்கூடத்தில் செயற்கையாக உருவாக்கிச் செயற்கை செல்களைப் படைக்க முடியும் என நிரூபித்திருக்கிறார். ஆனால், அவர் கூடப் பெண்ணின் முட்டைச் செல்லைச் செயற்கையாக உருவாக்க முடியாது என ஒப்புக் கொள்கிறார். ஆணுக்குப் பெண் எந்தவிதத்திலும் இளைத்தவளோ, சளைத்தவளோ அல்ல என்பது கடந்த முப்பது ஆண்டுகளாக நிரூபிக்கப்பட்டு வருகிறது. பெண்களும் உயர் கல்வி பெற்று உயர் பதவிகளில் அமர்ந்து, உயர்வான ஊதியங்களையும் பெறத் தொடங்கி விட்டார்கள்.

ஓர் ஆணின் சம்பாத்தியமோ, பாதுகாப்போ தேவையில்லை என நினைக்கிற பெண்களின் எண்ணிக்கை கூடி வருகிறது. உடலளவில் பெண் பலவீனமானவள் என்ற கருத்தையும் மேரிகோம் போன்ற வீராங்கனைகள் பொய்ப்பித்து வருகிறார்கள்.

சராசரியாக ஆண்களைவிடப் பெண்கள் அதிக நாள் வாழ்கிறார்கள், குறைவான உடல்நலப் பிரச்னைகளையே எதிர்கொள்கிறார்கள், குற்றச் செயல்களில் குறைவாகவே ஈடுபடுகிறார்கள். எனவே உலக நிர்வாகம் முழுவதையும் பெண்கள் கைப்பற்றி விடக்கூடிய நாள்கூட வரலாம். யார் கண்டது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மையினரிடம் கையேந்தும் அரசு





அதிரன்

கிழக்கு மாகாண சபையை இலகுவாகக் கைப்பற்றுவது என்ற அரசின் கனவு இம்முறை அங்கு பலிக்கவில்லை. அறுதிப் பெரும்பான்மையுடன் கிழக்கில் ஆட்சியை நிறுவுவோம் எனக் கங்கணம் கட்டிய ஜனாதிபதி மஹிந்த தலைமையிலான அரசுக்கு இந்தத் தேர்தல் ஒரு நல்ல பாடத்தைக் கற்பித்திருக்கிறது. தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை என்ற கனவு கை நழுவிப் போனதால் ஆட்சியமைக்க சிறுபான்மைக் கட்சிகளிடம் கெஞ்சிக் கூத்தாட வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. சிறுபான்மை மக்களைத் தவிர்த்துக் கொண்டு எந்தவொரு விடயத்தையும் மேற்கொள்ளப் பெரும்பான்மைச் சமூகத்தினால் முடியாது என்ற பாடத்தைக் கிழக்குத் தேர்தல் அரசுக்குக் கற்பித்திருக்கிறது.

கிழக்கில் ஆட்சியைப் பிடிப்பதிலேயே குறியாக இருக்கும் அரசு தனது கௌரவம், அந்தஸ்து என்ற எல்லாவற்றையும் கைவிட்டு அந்தத் தேர்தலில் அரசுக்கு அடுத்த படியாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகளின் துணையைநாடி ஓடும் நிலைமை வந்திருக்கிறது.

தேர்தல் நடைபெறுவதற்கு முதல் நாள்வரை அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றுவோம் என முழக்கமிட்ட அரச தரப்புப் பிரதிநிதிகளின் கொக்கரிப்பு எல்லாம் தேர்தல் முடிவுகளுடன் அடங்கிப் போனது. கிழக்கு மாகாண சபையில் அரச தரப்பு 14 ஆசனங்களையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 11 ஆசனங்களையும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 7 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 4 ஆசனங்களையும், மக்கள் விடுதலை முன்னணி ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன. இதில் யாருக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

இதனால் கிழக்கில் இலகுவாக ஆட்சியமைப்போம் என்ற வெற்றிக் களிப்பில் இருந்த அரசுக்கு இந்தத் தேர்தல் முடிவுகள் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தன. அதே நேரத்தில் அரச தரப்பில் கிழக்குத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி சார்பாகப் போட்டியிட்ட 15 வேட்பாளர்களில் முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மட்டுமே வெற்றிபெற்றார்.

அறுதிப் பெரும்பான்மை அற்ற இந்தத் தேர்தல் முடிவுகளால் கிழக்கில் ஆட்சியைப் பிடிப்பதற்குச் சிறுபான்மைச் சமூகத்திடம் கையேந்த வேண்டிய நிலை அரசுக்கு வந்துள்ளது. இந்த விடயத்தில் வெட்கப்படாமல் சிறுபான்மைக் கட்சிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் தயவை நாடும் நடவடிக்கைகளை அரசு பகிரங்கமாகவே முடுக்கி விட்டிருக்கிறது.

தேர்தல் முடிந்த கையோடு ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அமைச்சர் டலஸ் அழகப்பெரும, கிழக்கில் ஆட்சியை அமைக்க - ஒன்றிணைந்து செயற்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசு பகிரங்க அழைப்பு விடுகிறது எனத் தெரிவித்திருந்தார். இதன் மூலம் கிழக்கில் ஆட்சிக் கதிரையில் அமர அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்பை நாடியுள்ளமை பகிரங்கமாகியது. இதற்குப் பின் நடந்த சில சம்பவங்களும் கூட்டமைப்பின் தயவு அரசுக்குத் தேவைப்படுகிறது என்பதை வெளிக்காட்டின.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கிழக்குத் தேர்தலில் வெற்றி பெற்ற உறுப்பினர்களை சலுகைகளைக் காட்டி வளைத்துப் போடும் முயற்சிலும் அரசு இறங்கியது. இதற்காக அரசின் விசேட குழுவொன்று களமிறக்கப்பட்டது. அந்தக் குழு வெற்றி பெற்ற கூட்டமைப்பு உறுப்பினர்களிடம் நேரடியாகச் சென்று சலுகைகளைக் கூறி அவர்களைத் தம் பக்கம் இழுக்க முயன்றது. கொழும்பில் வீடு, ஐந்து கோடி ரூபா பணம், வாகனம் என்பன உட்பட பல வசதிகள் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. ஆயினும் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மசிந்துவிடவில்லை. சலுகைகளுக்காக அல்ல உரிமைகளுக்காகவே நாம் போராடுகிறோம். அதற்காகத்தான் இந்தக் கிழக்குத் தேர்தலில் வெற்றி பெற்று மாகாண சபைக்கு வந்திருக்கிறோம். கூட்டமைப்பின் ஒத்துழைப்பு அரசுக்குத் தேவையாயின் அது பற்றி நீங்கள் எமது தலைவர் சம்பந்தனுடனேயே பேசிக் கொள்ளுங்கள். அவரை மீறி நாங்கள் எதுவும் செய்ய மாட்டோம் என உறுதிபடக் கூறிவிட்டனர். இதனால் கூட்டமைப்பினரை வளைத்துப் போடும் அரசின் முயற்சி தோல்வியில் முடிந்து போனது.

இதனையடுத்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பக்கம் தனது ஆழமான பார்வையை திருப்பியது அரசு. அரசிடமிருந்து எவ்வளவு பெற முடியுமோ அவற்றைப் பெறுவதற்காகக் காத்திருந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு இது நல்ல சந்தர்ப்பம்.

தேர்தலுக்கு முன்னரே கிழக்கில் ஒன்றிணைந்து ஆட்சியமைக்க முன்வருமாறு முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஹக்கீமிடம் பகிரங்க அழைப்பு விடுத்திருந்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். அப்போதெல்லாம் தேர்தல் முடிந்த பின்னர் இது பற்றித் தீர்மானிப்போம் என பதிலளித்திருந்தார் ஹக்கீம்.

இப்போது தேர்தல் முடிவடைந்து கிழக்கில் ஆட்சியமைக்கும் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. யார் ஆட்சியமைப்பார்? மு.காவின் ஆதரவு யாருக்கு? என்ற கேள்விகளுக்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை. இந்த விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ந்து மௌனம் காத்து வருகிறது. எந்தத் தரப்புக்கு ஆதரவு வழங்குவது என்பதை அது இன்னும் பகிரங்கமாகத் தெரிவிக்கவில்லை. ஆயினும் அரசுடன் மு.காவின் பேச்சுக்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் மு.காவின் ஆதரவைப் பெறுவதற்கு ஹக்கீமை அழைத்துப் பேசியிருக்கிறார். ஆயினும் இதுவரை வெளிப்படையாக எதையும் கூறாமல் இருந்து வருகிறார் ஹக்கீம். மு.கா வைப் பொறுத்தமட்டில் அது இப்போது இரு தலைக் கொள்ளி எறும்பு போன்று உள்ளது. ஒரு பக்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பகைக்க முடியாத நிலை. சிறுபான்மைச் சமூகம் என்ற வகையில் முஸ்லிம் சமூகத்துக்கு தமிழர்களின் ஆதரவும் பலமும் எப்போதும் தேவை. அதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை புறந்தள்ள முடியாத நிலை. ஏற்கனவே கூட்டமைப்பு விடுத்திருக்கும் கிழக்கில் இணைந்து ஆட்சியமைப்பது என்ற கோரிக்கையை நிராகரிக்க முடியாத நிலை. மறுபக்கத்தில் மத்திய அரசில் மிக முக்கியமான அமைச்சுப் பதவியான நீதி அமைச்சுப் பதவியை தன் பக்கம் வைத்துள்ள ஹக்கீம் அரசையும் புறக்கணித்துவிட முடியாத நிலை. மத்திய அமைச்சில் பதவி வகித்துக் கொண்டு மாகாண அமைச்சில் வேறு ஒரு கட்சிக்கு எப்படி ஆதரவு வழங்குவது என்ற இடியப்பச் சிக்கல். இவ்வாறு இரண்டு பக்கத்தையும் பகைக்க முடியாத நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் உள்ளமையால் அதன் ஆதரவு யாருக்கு என்ற கேள்விக்கு இன்னும் விடையில்லை.

கிழக்கில் ஆட்சியமைப்பது தொடர்பில் தமிழ் மக்களுக்கு விரோதமாக நாம் ஒருபோதும் செயற்பட மாட்டோம் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஏற்கனவே கூறியிருந்தார். அவர் கூறிய இந்த வாக்கையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய கட்டாயம் அவருக்கு இருக்கிறது.

இதனைவிட கிழக்கில் தேசிய அரசு ஒன்றை அமைக்கும் திட்டமும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அரசில் இருக்கும் இடதுசாரி அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண ஆகியோர் இதற்கான முன் முயற்சிகளில் இறங்கியிருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் இன்னுமொரு விடயத்தையும் முஸ்லிம் சமூகம் கருத்தில் கொள்ள வேண்டிய நிலை உள்ளது. அதாவது இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த முயற்சிகள் இடம்பெறும் போதெல்லாம் முஸ்லிம்களுக்கும் அவற்றில் பங்கு தரப்பட வேண்டும், முஸ்லிம் பிரதிநிதிகளும் இந்தத் தீர்வு முயற்சிகளில் பங்குபற்ற வேண்டும் என்று முஸ்லிம் தலைவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். கடந்த காலங்களில் நடைபெற்ற பேச்சுக்களின் போது முஸ்லிம் தலைவர்களினால் இந்தக் கோரிக்கைகள் தொடர்ந்து விடுக்கப்பட்டு வந்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்த மட்டில் இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படும் விடயத்தில் முஸ்லிம் சமூகத்தையும் இணைத்துக் கொண்டே அந்தத் தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதில் அது தெளிவாகவும் உறுதிப்பாட்டுடனும் உள்ளது. ஐக்கிய இலங்கைக்குள் நீதியான - நியாயமான - அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு நிரந்தர அரசியல் தீர்வு தமிழர்களுக்குத் தேவை. அந்தத் தீர்வு முஸ்லிம் சமூகத்தையும் அரவணைத்துக் கொண்டு எட்டப்படும் தீர்வாகவே நிச்சயம் இருக்கும். அவர்களது உரிமைகளையும் மதித்துக் கொண்டே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்வுக்கான பேச்சுக்களில் ஈடுபடுகிறது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பல தடவைகளில் கூறியிருக்கிறார். தம்மைச் சந்திக்கும் சர்வதேச தலைவர்களிடமும் அவர் இதனை தெளிவாகவும் உறுதியாகவும் கூறியிருக்கிறார். கிழக்குத் தேர்தலின் போதும், ஆட்சியமைக்க வருமாறு ஹக்கீமுக்கு கூட்டமைப்பு விடுத்த பகிரங்க அழைப்பின் போதும் சம்பந்தன் இதனை சுட்டிக்காட்டியிருக்கிறார். முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் புறம்தள்ளிவிட்டு தனியே தமிழர்களுக்கு மட்டும் தீர்வை எட்டும் எண்ணம் எம்மிடம் அறவே இல்லை எனவும் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழர்கள் அங்குள்ள முஸ்லிம் மக்களுடனும் இணைந்து வாழவே விரும்புகிறார்கள் என்பதையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை.

இப்படியாக முஸ்லிம் சமூகத்துக்கும் சம அந்தஸ்து கொடுத்து அதனுடன் இணைந்து அரசியல் அபிலாஷைகளை- தீர்வை எட்டவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எண்ணுகிறது. எனவே கிழக்கில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்பதில் முஸ்லிம் காங்கிரஸ் இந்த விடயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். தொடர்ந்து அரசுடன் இணைந்து அவர்களுக்கு ஆதரவு வழங்கி அவர்கள் வழங்கும் சலுகைகளைப் பெற்று விட்டு பின்னர் அரசியல் தீர்வுக்கான பேச்சுக்கள் வரும்போது மட்டும் அதில் எம்மையும் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று கோஷம் போடுவதால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. எனவே நிதானமாகச் சிந்தித்து இந்த விடயத்தில் முடிவெடுக்க வேண்டியது முஸ்லிம் காங்கிரஸினதும், அதன் தலைவர் ஹக்கீமினதும் கடமை.

இந்த விடயத்தில் அரசும் விடாப்பிடியாக மு.காவைத் துரத்துவதால் அதன் ஆதரவு யாருக்கு கிடைக்கப் போகிறது? யார் ஆட்சியமைக்கப் போகிறார்கள்? என்பதே இப்போதுள்ள எதிர்பார்ப்பு. இதற்கு விரைவில் விடை கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 இல் தொங்கும் கிழக்கு

விகேளம்

கடந்த 8ஆம் திகதி நடைபெற்று முடிந்த மூன்று மாகாண சபைகளினதும் தேர்தல் சிறுபான்மை சமூகத்தினருக்கும் பெரும்பான்மை சமூகத்தினருக்கும் இடையிலான பலப்பரீட்சை என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடம் கிடையாது எனலாம். இப்போதுள்ள சூழ்நிலையில் இந்தத் தேர்தல் தேவைதானா என்ற கேள்வியோடு அந்தத் தேர்தல் நடைபெற்று முடிந்துவிட்டது.

வடமத்திய, சப்ரகமுவ மாகாணங்களுக்கான தேர்தல் களத்தில் பெரிய மாற்றங்கள் ஏற்படப் போவதாக எவரும் ஊர்ஜிதம் செய்யாவிட்டாலும் அங்கு ஆளும் கட்சி வெற்றிபெறும் என்பது அனைவருக்கும் தெரிந்திருந்த விடயம்.

ஆனால் கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலை உள்நாட்டு அரசியல் பிரதிநிதிகள் உட்பட வெளிநாட்டவர் வரைக்கும் பெரும் எதிர்பார்ப்புடன் அவதானித்துக் கொண்டிருந்தனர். குறிப்பாக போர் நடைபெற்று முடிந்த வடக்கு கிழக்கில் ஜனநாயக நிலைமைகளை அவதானிப்பதற்கு இந்தத் தேர்தல் ஒரு முன்னேற்பாடாக இருக்கும் என எல்லோரதும் நம்பிக்கையாக இருந்தது.

வெளியுலகுக்கு வடக்குக் கிழக்கில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டுள்ளது என்பதை அவசரமாக நிரூபிக்க வேண்டிய தேவை அரசுக்கு இருந்தது. இதனால்தான் அவசர நிலையில் இந்தத் தேர்தல் நடைபெற்று முடிந்திருக்கிறது.

பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் கிழக்கின் ஆட்சியை கைப்பற்றுவதற்கென இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய மூன்று பிரதான கட்சிகளும் இந்தத்தேர்தலில் களமிறங்கியிருந்தன.

இதில் அரசுடன் இணைந்திருக்கும் மு.க. தனித்தே நின்றது. அதுமட்டுமல்லாமல் 7 ஆசனங்களையும் கைப்பற்றியது.

இந்த 7 ஆசனங்களுமே இன்று கிழக்கின் நிலைமையை தீர்மானிக்கும் பெரும் சக்தியாக எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்பதே எதிர்கால சிறுபான்மையினரது அரசியல் ஸ்திரத் தன்மையின் கேள்விக் குறியை வெளிப்படுத்தி நிற்கிறது. அதாவது மு.கா.வின் கையில் முடிவெடுக்கும் வலுவை கொடுக்கும் அளவுக்கு இலங்கையின் எதிர்கால அரசியல் நகர இருக்கிறது என்பது இங்கு நோக்கப்பட வேண்டிய விடயமாகும்.

கிழக்கில் இலங்கைத் தமிழரசுக் கட்சி முழு மூச்சில் தேர்தலில் களமிறங்கியிருந்தது. குறிப்பாக கிழக்கின் மூன்று மாவட்டங்களிலும் தொண்ணூறு வீதமான வாக்களிப்புடன் தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க முடியும் இதற்காக கிழக்கு மக்கள் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும் என்று கூட்டமைப்பு இந்தத் தேர்தலில் களமிறங்கியிருந்தது.

கிழக்கில் ஆட்சியில் இருந்த பிள்ளையான் குழுவும் கருணா குழுவும் அரசாங்கத்தோடு ஒட்டியிருக்கும் நிலையில் அவர்களது செல்வாக்கு மேலோங்கி இருந்திருந்தால் அரசுக்கு அதிக செல்வாக்குக் கிடைத்திருக்கும். ஆனால் இவர்களின் அடாவடித்தனமான அரசியல் நடத்தைகள் கிழக்கு மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஆனாலும் இலங்கை அரசின் தூர நோக்கு அரசியல் கிழக்கின் அபிவிருத்தியில் குறிவைக்கப்பட்டிருந்தது.

மக்களின் அடிப்படைத் தேவைகள் கிழக்கில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றதோ என்னவோ அங்குள்ள உட்கட்டுமானங்கள் (குறிப்பாக வீதி) அபிவிருத்தி செய்யப்பட்டிருப்பது போல் தெரிகிறது. அதாவது வெளிமாவட்டத்திலிருந்து செல்லும் ஒருவர் கிழக்கின் வீதிகளில் வாகனம் செல்லும் வேகத்தை வைத்து 'ஓ என்ன அபிவிருத்தி' என்று வாயைப் பிழக்க நேரிலாம். இவ்வாறான ஒரு மாயை கிழக்கில் ஏற்படுத்தப்பட்ட பின்னரே தேர்தலை நடத்த அரசு முன்வந்தது.



இதில் எவருக்கும் அறுதிப் பெரும்பான்மை இல்லாது போக கூட்டாட்சி அமைப்பது என்ற தெரிவு எஞ்சியது.

இந்த முடிவு ஒருவரை ஒருவர் விலை பேசிக் கொள்ளவும், எந்த அளவுக்கு விட்டுக் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு விட்டுக் கொடுப்புகளைச் செய்யவும், மறுபக்கத்தில் எதையெல்லாம் கேட்டுப் பெறமுடியுமோ அவற்றையெல்லாம் நிபந்தனைகளாக முன்வைக்கலாம் என்று இடியப்ப சிக்கெடுப்பாக மாறியிருக்கிறது.

இந்தச் சிக்கெடுப்பை விலக்கிக் கொண்டு கூட்டாட்சிக்கு ஒத்துழைப்பது என்பது மு.காவின் கையில் தொங்கியுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இருந்து கொண்டு கிழக்கில் பிரிந்தியங்க முடியாது.

சிறுபான்மை இனத்தவருக்கு வேண்டிய உரிமைகளைப் பெற்றுக் கொள்ளவும் முஸ்லிம் சமூகத்தவருக்கு தீங்கிழைக்காத வகையிலும் நாம் செயற்படுவோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சேர்ந்து இயங்குவதில் ஹக்கீமுக்கு நேரடி விருப்பம் கிடையாது. அவ்வாறு சேர்ந்து இயங்குவதாயின் சிறுபான்மை இனம், தனது கட்சிப் பங்காளிகளது மாற்றுக் கருத்து போன்ற விடயங்களுக்காகவே தன்னை மாற்றக்கொள்ளக் கூடும். கடந்த கால அரசியல் தவறுகளை அல்லது துரதிஷ்டமான சம்பவங்களை இன்றும் நினைவுகூர்ந்து கொண்டிருக்கும் ஹக்கீம் தமிழ் சமூகத்தின் மீது மறைமுகமான வஞ்சிக்கும் எண்ணம் கொண்டவராக இருக்கிறார் என்பது பல சந்தர்ப்பங்களில் தெரியவந்த விடயம்.

தோற்றுப்போன போராட்டங்களின் பின்னர் தொலைந்து போகக் கூடிய சிறுபான்மை சமூகத்தினரது அரசியலை யாரும் கவனிக்கத் தயாராக இல்லை. பதிலாக சுயநலத்துக்காகவும் தமது இருப்புக்காகவும் சிந்திக்கும் நெறிமுறையில் சில அரசியல்வாதிகள் விடுபடவில்லை.

கிழக்கின் தலைவிதியை தீர்மானிக்கும் பொறுப்பு தம்மிடமுள்ளது என்பதற்காக குரங்கின் கையில் பூமாலை போன்று அதனைப் பயன்படுத்த மு.கா. முயற்சிக்கக் கூடாது. சிறுபான்மை மக்களின் அரசியல் அபிலாஷைக்காகவும் அந்த இனத்தின் எதிர்காலத்திற்காகவும் சிந்திக்க வேண்டிய பொறுப்பு அந்தக் கட்சியிடம் இப்போது வழங்கப்பட்டுள்ளது. ஆளுக்கொரு விலை பேசி விற்றுவிடும் அடிமட்டப் பொருளாக மக்களின் வாக்குகளைப் பயன்படுத்த யாரும் எண்ணக் கூடாது. தங்களது சுயநலன்களுக்காக மக்களின் விருப்பங்களை மழுங்கடிக்கக் கூடாது.

இந்தச் சந்தர்ப்பத்தில் முஸ்லிம் காங்கிரஸ் திணறி வருகிறது. தேர்தல் முடிந்து ஒருவாரம் கடந்துள்ள நிலையில் இன்று வரை முடிவு தீர்வாகவில்லை.

எதுவானாலும் இப்போதைக்கு முஸ்லிம் காங்கிரஸ் சொல்வதே தீர்வு. அவர்கள் எடுக்கும் முடிவே இறுதியானது. அவர்கள் கேட்கும் கேள்வியே சரியானது என்ற நிலை தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

நீண்ட காலப் போரின் விளைவாக அல்லோலப்படுத்தப்பட்டிருக்கும் தமிழ்ச் சமூகத்துக்கு விமோசனம் கிடைக்கக் கூடியதாகவும் எதிர்காலத்தில் சிறுபான்மையினரது அரசியல் நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காகவும் முஸ்லிம் காங்கிரஸ் முடிவெடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. இந்த விலை மதிக்க முடியாத வாய்ப்பை அந்தக் கட்சி சரியாகப் பயன்படுத்தும் என்பதே எல்லாக் கேள்விகளுக்கும் விடையில்லாத ஆறுதல்.

★

## மீண்டும் சந்திரிகா..

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காவே. சுமார் 11 ஆண்டுகள் ஓர் அரசியாக இந்த நாட்டை ஆண்டார்.

2005 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலிலும் சுந்திரக் கட்சி சார்பில் போட்டியிட விரும்பியிருந்தார். ஆனாலும் மஹிந்த ராஜபக்ஷவின் நடவடிக்கைகளால் அவரால் அதைச் செய்ய முடியாமல் போய்விட்டது. இதனால் மஹிந்தவின் வெற்றிக்காக சந்திரிகா மனது வைத்து உழைக்கவில்லை என்றதொரு குற்றச்சாட்டு இருக்கிறது. இருந்தாலும் 2004ஆம் ஆண்டில் அவர், ரணிலின் தலைமையில் இயங்கிய ஐ.தே. கட்சி அரசைக் கலைத்து புதிதாகப் பொதுத் தேர்தலை நடத்தி சுதந்திரக்கட்சியை மீண்டும் அரசமைக்க வழி செய்திருக்காவிட்டால் இன்று இந்த நாட்டின் ஜனாதிபதி பதிவியை வகிக்க மஹிந்தவுக்கு வாய்ப்புக் கிட்டியிருக்காது. ஆகக் குறைந்தது பிரதமர் பதவியை வகிக்கக்கூட வாய்ப்புக் கிட்டியிருந்திருக்காது.

சந்திரிகா, இந்த நாட்டின் சுபீட்சத்துக்காக பெரிய அளவில் எதுவும் செய்துவிடவில்லை என்றொரு பொது அபிப்பிராயம் நிலவுகிறது. ஆனால் சுதந்திரக்கட்சியின் தீவிர ஆதரவாளர்களில் பலர் இன்றும் சந்திரிகா மீது நம்பிக்கையும் மதிப்பும் வைத்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி ஆதிக்கத்திலிருந்த நாட்டில் தமது கட்சியை மீண்டும் பலம் பொருந்தியதாக மாற்றியமைத்தவர் அவரே என்று அடிமட்ட சுதந்திரக் கட்சியினர் இன்றும் கருதுகின்றனர்.

மஹிந்த ராஜபக்ஷவால் ஈர்க்கப்பட்டவர்களும் மற்றும் ஐ.தே.கட்சியின் தீவிர ஆதரவாளர்களும் மட்டுமே சந்திரிகா நாட்டின் சுபீட்சத்துக்காக பெரிதாக எதையும் செய்திடவில்லை என்று தெற்கில் குற்றம் சுமத்துகின்றனர். தமிழ் மக்களின் நிலை எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

இந்த நிலையில் அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிரணியின் பொதுவேட்பாளராகப் போட்டியிடும் நிலை உருவாகுமானால் சுதந்திரக் கட்சியின் தீவிர ஆதரவாளர்களும் கடைநிலைத் தொண்டர்களும் தடுமாற்றமுறுவர் என்பது நிச்சயம்.

அதேவேளை மஹிந்தவுக்கும், மஹிந்தவின் அரசில் அமைச்சர்களாகப் பதவி வகிப்போருக்கும் சந்திரிகாவை எப்படி விமர்சிப்பது என்ற பிரச்சினையும் தலைதூக்கும். ஏனெனில் அவர்கள் தமது முன்னாள் தலைவியையே விமர்சிக்க வேண்டியிருக்கும். சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற தவறான செயற்பாடுகளை அவர்கள் விமர்சிக்க முயன்றால் அது உண்மையில் தம் மீது தாமே எச்சில் உமிழ்வதற்கு ஒப்பானதாக மாறிவிடும். ஏனெனில் மஹிந்தவைப் போன்றே, இன்றைய அரசில் அமைச்சர்களாக பதிவி வகிக்கும் பலரும் சந்திரிகாவின் அமைச்சரவையின் உறுப்பினர்களாக இருந்தவர்களே!

2005ஆம் ஆண்டில் சந்திரிகா அரசிலிருந்து விலகிக் கொண்டபோது, சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களிடம் மட்டுமன்றி ஐ.தே.கட்சியின் உறுப்பினர்கள் மத்தியில்கூட சந்திரிகா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வாய்ப்பமைந்தால் அவரால் நிச்சயமாக வெற்றி பெற இயலும் என்ற கருத்து நிலவியது.

1988ஆம் ஆண்டில் ஜே.ஆர்.ஜெவர்த்தன அதிகாரத்தைப் பிரேமதாசவிடம் ஒப்படைத்து விட்டு அரசியலில் இருந்து ஓய்வு பெற்ற வேளையில் மீண்டும் ஜே.ஆர். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வாய்ப்பமைந்தாலும் அவரால் வெற்றியீட்ட இயலாது என்ற கருத்தே பரவலாக நிலவி வந்தது. ஆனால் சந்திரிகாவின் நிலை அப்படியிருக்கவில்லை.

அதனால், தொடர்ச்சியான தோல்விகளால் துவண்டு போயுள்ள எதிரணி, அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகாவே பொருத்தமான பொது வேட்பாளர் என எண்ணுவதில் தவறேதும் கிடையாது.

2005ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இயலாமல் சந்திரிகாவுக்குத் தடையாக அமைந்தது ஜே.ஆரின் அரசமைப்பில் இருந்த 2 தடவைகளுக்கு மேல் ஒருவர் ஜனாதிபதியாக முடியாது என்ற தடையே! தற்போது ஜனாதிபதி மஹிந்தவால் அந்த விதியும் மாற்றப்பட்டுவிட்டது.

ராஜபக்ஷ பரம்பரையினர் தொடர்ந்தும் இந்த நாட்டின் ஜனாதிபதிப் பதவியை வகிக்க வேண்டுமென்ற நோக்கத்திலேயே மஹிந்த ராஜபக்ஷவால் இந்த அரசமைப்பு விதி மாற்றம் மேற்கொள்ளப்பட்டிருக்கக்கூடும். ஆனால் அந்தத் தடைநீக்கம், மீண்டும் பண்டாரநாயக்கா பரம்பரை அதிகாரத்தைக் கைப்பற்ற வழியை ஏற்படுத்தி விடக்கூடும்.

சந்திரிகாவை அரசியலரங்கில் இருந்து வெளியேற்றும் எண்ணத்துடனேயே 1994 ஆம் ஆண்டு முதல் எதிரணியினர் மஹிந்த ராஜபக்ஷவை வளர்த்து வந்தனர். ஆனால் கடைசியில் அதன் விளைவு, மஹிந்த ராஜபக்ஷ தனக்கான பாதையை வகுத்துக் கொண்டு எதிரணியினரின் தோள்மேலேறி ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்றியதாக முடிந்தது.

தற்போது ஜனாதிபதி மஹிந்தவை அதிகாரத்திலிருந்து அகற்ற, சந்திரிகாவைப் பயன்படுத்த எதிரணி நினைத்தால் அது அதன் பழைய உத்திதான். ஆனாலும் பயன்மிக்க உத்தியாகவே இருக்கும்.

இருந்தாலும் பொது எதிரணி வேட்பாளராக சந்திரிகாவை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்த முயன்றால், எதிரணியின் தோள்மேலேறி சந்திரிகா மீண்டும் இந்த நாட்டின் ஜனாதிபதியாக ஆகி சுதந்திரக் கட்சி அரசை ஆட்சியில் இருத்துவாரா என்பது குறித்துத் தற்போது எதனையும் உறுதியாகக் கூற இயலாதுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயலாப அரசியலால் சூடு வாங்கும் பட்டதாரிகள்

■ தில்லாலங்கடி

அரச நியமனங்கள் இன்று அரசியல்வாதிகளின் நியமனங்களாகியுள்ளன. படித்துப் பட்டம் பெற்றிருப்பது மட்டும் இன்று அரச நியமனம் பெறுவதற்கு தகுதியாக இருப்பதில்லை. அரசியல்வாதிகளுக்கு துதி பாடினால் மாத்திரமே அந்த நியமனங்களைப் பெறலாம் என்ற நிலை உருவாகியுள்ளது. இதற்கு உயர்மட்ட அரச அதிகாரிகளும் துணைபோவது வேதனைக்குரியது.

பல சர்ச்சைகளை ஏற்படுத்தி இன்னும் முடிந்து விடாத பிரச்சினையாக, கடந்த ஜூலை மாதம் வழங்கப்பட்ட பயிலுநர் பட்டதாரி நியமனம் விளங்குகின்றது. நாடளாவியரீதியில் பட்டதாரிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு 6 மாத கால பயிற்சிகள் வழங்கப்பட்டு அதன் பின்னர் நியமனத்தில் உள்வாங்கப்படும் செயன்முறையின் கீழ் தற்போது அவர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகின்றது.



இந்த நியமனங்களானவை மாவட்டரீதியாக வழங்கப்பட்டன. ஒவ்வொரு மாவட்டத்திலும் பயிலுநர் நியமனங்கள் வழங்கப்படும்போது அவற்றுள் வேறுபாடுகள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் மாத்திரம் தேசிய உயர்கல்வியியல் டிப்ளோமா பட்டதாரிகள் நியமனத்திற்குள் இணைத்துக் கொள்ளப்படவில்லை. ஏனைய இடங்களில் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

நியமனக் கடிதங்களை பட்டதாரிகளுக்கு வழங்கும் நிகழ்வுகூட மாவட்ட செயலகம் என்ற அரச திணைக்களத்தினூடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும், அந்த நிகழ்வுகள் கட்சியின் கூட்டம் போன்றே நடந்திருந்தன. அரச சார்புக் கட்சியினர் மற்றும் அரசின் அமைச்சர்கள் மாத்திரமே கலந்து கொண்டு குறித்த நியமனங்களை பட்டதாரிகளுக்கு வழங்கியிருந்தனர். நிகழ்வில் கலந்துகொண்டிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இயன்றவரையில் பட்டதாரிகளை மூளைச்சலவையும் செய்ய முயற்சி செய்திருந்தார்.

அதாவது பயிலுநர் பட்டதாரி நியமனம் வழங்கப்படுகையிலேயே பட்டதாரிகள் மீது அரசியல்வாதிகள் தமது செல்வாக்கை பிரயோகிக்க முற்பட்டிருந்தனர். அடுத்த கட்டமான நிரந்தர நியமனத்தின் போது அரசியல்வாதிகள் வாலை ஆட்டாமல் இருப்பார்களா ? பட்டதாரிப் பயிலுநர் நியமனம் பெற்ற அனைவருக்கும் நிரந்தர வேலை வழங்கப்படும் என்ற ஒற்றைக் கோஷத்தினுள் இந்த அரசியல்வாதிகள் செய்த கைங்கரியங்கள் யாவும் யாருக்கும் தெரியாமல் இருட்டறைக்குள் பூட்டப்பட்டு விட்டன.

பட்டதாரிப் பயிலுநர்கள் பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களில் கடமைகளுக்காக இணைக்கப்பட்டனர். அதன் பின்னர் வெற்றிடங்கள் தேவையாகவுள்ள ஒவ்வொரு அமைச்சுகளும், திணைக்களங்களும் தமக்குத் தேவையான பட்டதாரிகளை நேர்முகத் தேர்வின் ஊடாகப் பெற்றுக் கொள்ளுவதே உண்மையான செயற்றிட்டமாக இருந்தது.

அதற்கு அமைவாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கான வெற்றிடங்களை முதலில் நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. விண்ணப்பிக்க விரும்புகின்ற சகல பட்டதாரிகளையும் அதற்கு விண்ணப்பிக்குமாறு ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் அறிவுறுத்தப்பட்டது. அத்துடன் யாழ். மாவட்டத்தில் மாத்திரம் 500 பட்டதாரிகளை பொருளாதர அபிவிருத்தி அமைச்சில் இணைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவிலும் ஒருவர் அதேபோன்று ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் மூவர் மற்றும் எஞ்சியோர் மாவட்டச் செயலகத்துக்கு என்ற அடிப்படையில் நியமனம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

ஒவ்வொரு பிரதேச செயலர் ரீதியாகவும் பெருமளவிலான பட்டதாரிகள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கான நேர்முகத் தேர்விற்கு விண்ணப்பித்திருந்தனர். இவர்களுக்கான நேர்முகத் தேர்வுகள் அந்தந்தப் பிரதேச செயலகங்களிலேயே நடத்தப்பட்டன. இந்த நேர்முகத் தேர்வுகளின் போது பட்டதாரிகள் பல்கலைக் கழகத்தில் கற்ற பாடங்களை மாத்திரம் கவனத்தில் கொண்டு, அதனை அடிப்படையாகக் கொண்ட பெயர்ப் பட்டியல் மாவட்ட செயலகத்துக்கு அனுப்பப்பட்டிருந்தது.

குறித்த பெயர்ப் பட்டியல் மாவட்ட செயலகத்துக்கு அனுப்பப்பட்டதன் பிற்பாடு மாவட்ட செயலகத்தில் குறித்த பட்டியல் திருத்தம் செய்யப்பட்டு மீண்டும் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது. அதில் குறிப்பிட்ட ஒழுங்குமுறையிலான பாடத் தெரிவுகளுடன் குறித்த பட்டியல் வெளியிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் திடீரென வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைய பிரதேச செயலகங்களிலிருந்து குறித்த பெயர்ப் பட்டியல் அகற்றப்பட்டதுடன் புதிய பெயர்ப் பட்டியல் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றிருந்தது. இதன்போது பட்டதாரிகளுக்கான வேலை நடைமுறைகள் தொடர்பில் பஸில் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் குறித்த பெயர்ப் பட்டியல் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்ட போதும் யாழ். மாவட்டத்தில் அவ்வாறான தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலை அமைச்சரோ, அமைச்சு அலுவலகமோ வழங்கவில்லை.

இந்தக் கலந்துரையாடல் நடந்த சில தினங்களின் பின்னர், யாழ். மாவட்டத்தில் தேர்தல் காலங்களில் பட்டதாரிகள் பிரச்சினையை கையிலெடுத்து அரசியல் நடத்தும் கட்சியினரால் தமது விசுவாசிகள் என்று நம்பப்படும் சிலருக்கு தொலைபேசி மூலம் அழைப்பு விடுக்கப்பட்டது. " நாங்கள் தோழர் அலுவலகத்திலிருந்து கதைக்கின்றோம். நீங்கள் இப்ப வேலை செய்கிற டி.எஸ். ஓவிஸிலேயே பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு இணைக்கப்பட்டிருக்கிறியள் " என்று தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் கடந்த வாரமளவில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கடிதங்கள் அரச அதிபரின் ஒப்பத்துடன் அனுப்பப்பட்டிருந்தன. கொழும்பில் அமைச்சில் கூட்டம் நடைபெற்ற பின்னர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்களை வெளியிடுமாறு அரச அதிபரிடம் கேட்ட போது, " பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரங்களை வெளியிட்டால் ஏனைய பட்டதாரிகள் தமக்கு வேலை கிடைக்காது என்று எண்ணக் கூடும். அதனால் சகல அமைச்சுக்குமான பட்டதாரிகளை தெரிவு செய்த பின்னரே பெயர் விவரங்களை வெளியிடுவேன் என்று அரச அதிபர் தெரிவித்து ஒரு வாரத்தினுள், பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களைக் கடமைகளைப் பொறுப்பேற்குமாறு அவரே அறிவுறுத்தியுள்ளார்.

இவை ஒருபுறமிருக்க பிரதேச செயலகங்களில் கடமையாற்றப் போகும் தமது விசுவாசிகளை தனது வாடகை கொடுக்காத கட்சி அலுவலகத்துக்கு அழைத்து, " நீங்கள் தொடர்ந்தும் எனக்கு ஆதரவாகச் செயற்பட வேண்டும் " என்று அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார். இவ்வாறு நியமனம் வழங்கப்பட்வர்களில் பெரும்பான்மையானவர்கள் சில வருடங்களுக்கு முன்பு இதே அமைச்சரின் சிபாரிசில் ஆறு மாத காலம் பிரதேச செயலகங்களில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றியவர்கள். ஐ.நா. முகவர் நிறுவனம் ஒன்றின் வேலைத் திட்டத்துக்காக இணைக்கப்பட்டிருந்தார்கள்.

இவ்வாறு அமைச்சர் தனது விசுவாசிகளை நிரந்தர நியமனத்தில் இணைப்பதற்காக, ஏற்கனவே தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியலிருந்து 73 பேரினது பெயர்களை நீக்கியுள்ளார். இதற்கு அரச உயர் அதிகாரிகளும் உடந்தையாக இருந்துள்ளனர்.

நீக்கப்பட்டவர்கள் அனைவரும் சமூகவியல் பாடத்தைக் கற்றவர்கள். சிறுவர் மகளிர் அபிவிருத்தி அமைச்சுக்கு அவர்களை உள்வாங்க வேண்டியிருப்பதாலேயே நீக்கப்பட்டனர் என்று மாவட்டச் செயலகத்தினர் தெரிவிக்கின்றனர்.

ஆனால் ஏனைய மாவட்டங்களில் இதே சமூகவியல் பாடத்தை கற்றவர்களையே பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு முதன்மைத் தெரிவாக இணைத்துள்ளனர். யாழ். மாவட்டம் மாத்திரம் இதற்கு விதிவிலக்காக அமைந்திருப்பது ஏன் என்று தெரியவில்லை.

இவ்வாறு தமது அரசியல் சுயலாபங்களுக்காக அரச நியமனங்களை மாற்றியமைக்கின்ற நிலையே குடாநாட்டில் காணப்படுகின்றது. தாங்கள் புனிதமானவர்கள் என்றும் கொல்ல வந்த புலிகளையே மன்னித்தவர்கள் என்றும் காட்டிக்கொள்ளப் பார்க்கும் இவர்கள் செய்வதெல்லாம் அப்பாவிப் பட்டதாரிகளின் நேர்மையான தெரிவுகளை நாசமாக்குவதுதான். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடாது தொடர்க...



ஒரு நாள் விடிகாலையில் அணுஉலைக்கு முன்னால் வந்து குழுமிய கிராமத்து மக்கள் மாதக் கணக்கில் மறியலில் குதித்த போதுதான், கூடங்குளத்தில் ஒரு அணுஉலை கட்டப் பட்டு வரும் விடயம் இந்தியாவின் ஏனைய மாநிலத்தவருக்கு தெரிய வந்தது.

ஔவண்யன்

"அம்மா தாயே! குடிக்கத் தண்ணீர் தாருங்கோ' என்று குரல் கொடுத்தான் பிச்சைக்காரன். "இப்போதுதான் விநாயகரை வணங்குகிறேன் சற்றுப் பொறு" என்று பதில் கொடுத்தாள் ஒரு வயதான பெண்மணி. சற்று நேரம் பொறுத்துப் பார்த்த பிச்சைக்காரன் மீண்டும் "அம்மா தாகத்தால் உயிர் போகிறது" என்று கூவினான். அதற்கு "இப்போது முருகனைக் கும்பிடுகிறேன் கொஞ்சம் பொறு" என்று பதில் வந்தது.

மீண்டும் சிறிது நேரம் காத்திருப்பு. தாகம் அவனை மீண்டும் கூச்சலிட வைத்தது. ஆனாலும் இன்னொரு தெய்வத்தை கும்பிடுவதாகவும் அது வரை காத்திருக்குமாறும் பதில் வந்தது. திரும்பத் திரும்ப சில காத்திருப்புக்குப் பின்னர் அவன் கூவுவதும், பதிலுக்கு ஒவ்வொரு கடவுளர்களின் பெயரைச் சொல்லி அவர்களை வணங்கி விட்டு வரும்வரை பொறுமை காக்குமாறும் பதில் வந்துகொண்டிருந்தது.

கடைசியில் வயதான பெண் தன்னுடைய வழிபாட்டை முடித்துக்கொண்டு வெளியே செம்பு நிறைய தண்ணீருடன் வந்தாள். வந்தவளின் கண்களில் ஏழு குழிகள் வாசலில் தென்பட்டன. அவள் பிச்சைக்காரனைப் பார்த்து " இதென்ன குழிகள்?" என்று கேட்டாள் அதற்கு அவன் " உங்களுக்காக காத்திருக்கும் வரை எனக்கு ஏதாவது பொழுது போக்கு வேண்டுமே அதனால் நீங்கள் ஒவ்வொரு கடவுளர்களைக் கும்பிடும் போதும் நான் ஒரு அடி ஆளமுள்ள குழி ஒன்றை தோண்டினேன். நீங்கள் ஏழு தெய்வங்களை வணங்கியதால் ஏழுகுழிகளைதோண்ட முடிந்தது" என்று பதில் சொன்னான்.

அப்போது" அட முட்டாளே இந்த ஏழு குழிகளையும் தனித்தனியாகத் தோண்டாமல் ஒன்றின் கீழ் ஒன்றாக ஏழு அடிக்கும் தோண்டியிருந்தால் அதில் நீர் ஊற்றெடுத்திருக்குமே அதைக் குடித்து தாகத்தை தீர்த்திருக்கலாமே". என்றாள் அந்தப் பெண்.

அதற்கு சட்டெனச் சிரித்த பிச்சைக்காரன் "அம்மணி நீங்களும் ஒவ்வொரு தெய்வமான தனித்தனியே வணங்காமல் ஒரு தெய்வத்தையே இவ்வளவு நேரமும் வணங்கியிருந்தால் உங்களுக்கு நிறையப் பலன் கிடைத்திருக்குமே" என்றான். அப்போது தான் அந்த வயதான பெண் தன் தவறைப் புரிந்து கொண்டாள்.

★★★

புரட்சிகள் அவற்றின் இடையறா நீட்சியிலேதான் தம்முடைய வெற்றியை தீர்மானிக்கின்றன. எந்தவொரு புரட்சியும் எடுத்த எடுப்பிலேயே எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. அதேபோன்று புரட்சித் தீ ஒரே சமயத்தில் எல்லோருடைய மனதிலும் எரிவதும் இல்லை. எங்கோ யாரோ ஒரு அதிகாரத்துக்கு எதிரான சிந்தனையாளரின் மனதில் பொறியாகும் நெருப்பு பின்னர் மெல்ல மெல்ல நீட்சி பெற்று தன் பரவுகையை அதிகரிக்கின்றது. அதேவேளை அந்தப் புரட்சிக்கு எதிரான சக்திகளையும் சம்பாதித்துக்கொள்கிறது. இந்த எதிர் சக்திகளின் எல்லா இடையூறுகளிலும் இருந்து தப்பிப் பிழைத்து தன் வலிமையை பெருக்கிக்கொள்ளும் புரட்சியே வெற்றித் தடத்தை தாண்ட முடியும். இந்தப் படிமுறைக்கு மிக நீண்ட காலமும் மக்கள் சக்தியும், தளராத மனமும் வேண்டும். இந்த மூன்று புள்ளிகளும் தத்தம் பிணைப்புகளில் இருந்து அறுபட்டால், புரட்சியின் தொடர்ச்சியும் தறுக்கணித்துப் போய்விடும்.

முகப்புத்தகம் (பேஸ் புக்) என்ற சாதாரண சமூக இணையத்தளம் ஒன்றின் மூலம் அதுவும் வீட்டுக்குள் முடங்கிக் கிடந்த முஸ்லிம் பெண் ஒருவரின் கணக்கு மூலம் பற்ற வைக்கப்பட்ட நெருப்புத்தான், எகிப்தின் நான்கு தசாப்த இருளின் ஆட்சிக்கு கொள்ளி வைத்தது. அந்த நெருப்பின் தாகம் அயலில் இருந்த டுனிசியா, லிபியா என்பவற்றின் அதிகாரங்களையும் சுட்டுப் பொசுக்கத் தவறவில்லை.

இந்த நெருப்புக்கு மூலகாரணமான குறித்த முஸ்லிம் பெண் தன் இணையக் கணக்கில் அதிகாரத்துக்கு எதிரான கருத்தை பகிர்ந்துகொள்ளும் போது இவ்வாறு அடிமுடி தெரியாத சோதிப்[illegible] உருமாறி அது அதிகா[illegible] வேர்களை எரிக்கப் போவதை உணர்ந்திருக்க மாட்டார். ஆயினும் அவரது மாற்றுக் கருத்தின் வெம்மையை குறித்த சமூக வலைத்தளத்தில் இருந்த ஏனைய பயனர்கள் தணிப்பதற்கு இடங் கொடுக்கவில்லை.

அவர்கள் அந்த அக்கினிக் குஞ்சை எல்லாப் பொந்துகளிலும் வைத்தார்கள். அக்கினிக் குஞ்சு பெரிதாகி இறக்கை முளைத்து பரவவும் வகைசெய்தார்கள். அதிகாரத்தின் காடுகள் வெந்து தணிந்தன.

கூடங்குளத்திலும் உதயகுமார் என்ற தனிமனிதனுக்கே அணுஉலையால் நிகழ்ந்த, நிகழப்போகும் விபரீதங்கள் பற்றிய சிந்தனைப் பொறி கிளம்பியது. அந்தப் பொறியை ஒவ்வொரு மக்களிடத்தும் அவர் கொண்டுசென்றார். படித்தறியா கடலோரக் கிராமத்து பாமர மக்களுக்கு புளுட்டோனியம், அணுக்கதிர் வீச்சு, புகுஷிமா என்ற சொற்கள் எல்லாம் சிதம்பர சக்கரத்து பேய்களாகத் தெரிந்தன ஆனாலும் பொறுமையோடு அவர்களுக்கு நிகழவிருக்கும் விபரீதத்தை உதயகுமாரும் அவர்களது நண்பர்களும் உணர்த்தியதன் விளைவே இன்று உலகமே கூடங்குளத்தையும், இடிந்தகரையையும் உற்றுப் பார்க்க வைக்கும் அளவுக்கு மாபெரும் மக்கள் போராட்டமாக வியாபித்துள்ளது.

ஒரு நாள் விடிகாலையில் அணுஉலைக்கு முன்னால் வந்து குழுமிய கிராமத்து மக்கள் மாதக் கணக்கில் மறியலில் குதித்த போதுதான், கூடங்குளத்தில் ஒரு அணுஉலை கட்டப்பட்டு வரும் விடயம் இந்தியாவின் ஏனைய மாநிலத்தவருக்கு தெரிய வந்தது.

ஒவ்வொரு நாளும் கதிரவன் எழுந்து பின் சரியச் சரிய புரட்சிக் காரர்களின் வேகம் கூடிக் கொண்டே போனது. "அஹிம்சைச் சக்கரவர்த்தி" கலைஞர் கருணாநிதியின் ஒரு நாள் உண்ணாவிரதத்தைப் போன்று இந்த மக்களும் ஒரு சில நாள்களுடன் தங்களுடைய போராட்டத்தை மூடை கட்டி வைத்துவிட்டு வயிற்றுப் பாட்டைப் பார்க்க கிளம்பி விடுவார்கள் என்றுதான் மாநில அரசும், இந்திய மத்திய அரசும் எண்ணியிருந்தன. ஆனால் [illegible] விக் கிராம மக்களுக்கு தங்களுக்கொரு விடிவு கிடைக்காமல் போராட்டத்தை முடிக்கத் தெரியவில்லை.

அப்துல்கலாம் முதல் ஏராளமான அரசியல்வாதிகள் அதிகாரத்துக்காக வக்காலத்து வாங்கி கூடங்குளம் அணு உலைக்காக இலவச விளம்பரங்கள் செய்து பார்த்தும் பயனில்லை மக்கள் தமது இலக்கையடைவதில் தெளிவாக இருந்தனர். ஒரே பாதையில் ஒரே சிந்தனையில் அவர்களின் போராட்டம் நீட்சி பெற்றுக்கொண்டே போனது.

அரண்டுபோன அதிகாரம் தன் காலை நக்கிக்கொண்டிருக்கும் இந்துத்துவம் சார்ந்த முதலாளித்துவத்தின் செல்லப் பிள்ளையான சில ஊடகங்கள் மூலம் மக்கள் போராட்டத்துக்கு பயங்கரவாதச் சாயம் பூசியது.

"மேற்குலகின் நிதியைப் பெற்றுக்கொண்டே உதயகுமார் கும்பல் மக்களை தவறாக வழிநடத்துகிறது" என்று அந்த ஊடகங்கள் வாய் கிழியக் கத்தின. கடலோரக் கிராமங்களை காப்பதற்காக மக்களுக்கு விழிப்புணர்வை உண்டாக்கிய உதயகுமார், விஜயகாந்த் படங்களில் வருகின்ற பாகிஸ்தான் தீவிரவாதிகளை விடவும் அதி பயங்கரமானவராகவும் தேசத் துரோகியாகவும் சித்திரிக்கப்பட்டார்.

ஆனாலும் மக்கள் துவண்டு விடவில்லை. தொடர்ந்தும் போராடிக்கொண்டிருந்தார்கள். கரையோரமாக நடந்த முற்றுகைப் போரை அரசு இரும்புக் கரம் கொண்டு நசுக்கியது. உடனேயே அவர்கள் தங்கள் இலக்கு நோக்கிய பயணத்தின் வடிவத்தை மாற்றியுள்ளார்கள்.

கடலுக்குள் கயிற்றைக் கட்டிக்கொண்டு மாபெரும் மனிதச் சங்கிலிப் போரில் குதித்துள்ளார்கள் அந்த மக்கள். இப்போது அந்த மக்களின் போராட்டத்துக்கு ஆதரவாக தமிழகம் எங்கும் பரவலாக குரல்கள் எழத் தொடங்கியுள்ளன. ஒரு வேளை கூடங்குளம் மக்களின் போராட்டம் தோற்றுப் போனாலும், அவர்கள் போராடிய பின் தான் வீழ்த்தப்பட்டார்கள் என்ற வரலாறு என்றைக்கும் மிஞ்சியிருக்கும்.

★★★

இந்தக் கணத்தில் கூட்டமைப்பின் போராட்ட முயற்சிகள் ஏனோ நினைவுக்கு வருகின்றன. நில அபகரிப்புக்கு எதிராக யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, நெல்லியடி, மன்னார் என்று மெதுவாக பரவத்தொடங்கிய நெருப்பை அவர்கள் தொடர்ந்து பேணி பெரு நெருப்பாக மாற்றத் தவறிவிட்டனர்.

நில அபகரிப்புக்கு எதிரான போராட்டங்கள் சூடுபிடிக்கத் தொடங்கிய சமயத்தில் வவுனியாச் சிறைக்கைதிகளின் படுகொலை நிகழ்ந்தது.

நில அபகரிப்பு விவகாரத்தை விடவும் கைதிகளின் மரணத்தை கையில் எடுத்துக் கொண்டுள்ளது ஆதாயம் கூடியது என்பதாலோ என்னவோ, கூட்டமைப்பின் கவனம் அந்தப் பக்கம் திரும்பியது. இப்போது அவர்கள் நில அபகரிப்பு விடயத்தையே மறந்தவர்களாக, கைதிகளுக்காக முறிகண்டியில் தேங்காய் உடைக்க கிளம்பிவிட்டார்கள்.

ஒரு சந்தேகம். தமிழ் இளைஞர்களை முறிகண்டிப் பிள்ளையாரா தடுத்து வைத்திருக்கிறார்?. இல்லாவிட்டால் எதற்கு தங்களுடைய எதிர்ப்பை பிள்ளையாரிடம் அவர்கள் காட்ட வேண்டும்? ஒரு போராட்டத்தின் நீட்சியை தமது தோள்களில் சுமக்கத் திராணியற்றவர்களாக, பழியை பிள்ளையார் மீது போடுவதற்கே இந்த தேங்காய் உடைப்பை கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்தது போலும்.

வருங்காலங்களில் அதிக அரசியல் லாபம் தரும் இன்னொரு விடயம் கிடைத்தால் கைதிகள் விடயத்தை அப்படியே விட்டு விட்டு அந்தப் பிரச்சினையின் பக்கம் போராட வருகிறோம் என்று கொடுக்கைக் கட்டிக் கொண்டு கூட்டமைப்பினர் கிளம்பினாலும் ஆச்சரியப்படுவதிற்கில்லை.

மந்திகள் போல கிளைக்குக் கிளை தாவும் போராட்டங்கள் எந்தப் பயனையும் தரப்போவதில்லை. பிச்சைக்காரன் தோண்டிய ஏழு குழிகளைப் போல பயனற்றுப் போய்விடும். இனியாவது மக்களுக்கான போராட்டங்களின் நீட்சி என்ற நெருப்பை ஒரே திசை நோக்கி பயணிக்கச் செய்து ஒரு விடிவு பிறக்க தமிழர்களுக்கு தற்போது எஞ்சியிருக்கும் ஒரே ஒரு சக்தியாக கூட்டமைப்பினர் முயல்வார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதோ! புலமைச்சுடர் - 2013

## 2013 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்ற இருக்கும் மாணவச் செல்வங்களே!

உங்களைத் தயார்ப்படுத்த புலமைச்சுடர் தனது பணியை ஆரம்பிக்கவுள்ளது. எதிர்வரும் ஒக்டோபர் 15 ஆம் திகதியிலிருந்து 45 கையேடுகள் தொடர்ச்சியாக திங்கள் தோறும் வெளிவரவுள்ளன.

**நாட்டின் பலபாகங்களிலும் உள்ள பிரபல்யமான முன்னணி வளவாளர்களின் ஒன்றிணைந்த சிந்தனையில் உருவான ஆக்கங்களைத் தாங்கி இக்கையேடு வெளிவருவது அதன் தனிச்சிறப்பாகும்.**

**தரம் 4, 5 மாணவர்கள் வீட்டிலிருந்தே பயிற்சிகளை மேற்கொள்ள சிறந்த வழிகாட்டி புலமைச்சுடரே...**

## கையேட்டின் உள்ளடக்கங்கள்

- மாதிரிப்பரீட்சை வினாத்தாள்
- கற்றல் குறிப்புக்கள் தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சிங்களம்
- கட்டுரை எழுதும் திறனை விருத்தி செய்ய கட்டுரைக்களம்
- புலமைசாலிகள் அங்கத்துவர்களின் அறிமுகம்
- கடந்தகால வினாக்களும் - விடைகளும்
- வீட்டில் மாணவர்களை பரீட்சைக்கு எவ்வாறு வழிப்படுத்த வேண்டும்? என்பதற்கான பெற்றோர்களிற்கான ஆலோசனையும் வழிகாட்டலும்
- மாணவர்களை ஊக்கப்படுத்த மாணவர் ஆக்கங்கள்
- சிறுவர்களின் சிந்தனைகளைத் தட்டியெழுப்ப மூளைக்கு வேலை
- 2012 புலமைப் பரிசில் பரீட்சையில் சாதனை ஈட்டிய மாணவர்களின் அனுபவப் பகிர்வு
- தரம் 4, 5 பாடங்களுடன் சம்மந்தமான படங்கள், ஆக்கங்கள்

இவற்றுடன் இன்னும் பல அம்சங்களை உள்ளடக்கி கவர்ச்சிகரமாக வெளிவரவுள்ளது. மிகக் குறைந்த விலையில் சகல மாணவர்களும் நன்மை பெறும் ஒரே உயரிய சிந்தனையின் அடிப்படையில் உருவான இக்கையேடு முற்றிலும் பாடத்திட்டத்திற்கமைவாக தயாரிக்கப்படுகின்றது.

## கையேட்டை பெற்றுக்கொள்ள நீங்கள் செய்யவேண்டியது

### மாணவர்கள் பெற்றுக்கொள்ள

அருகில் உள்ள உதயன், சுடர்ஒளி முகவரை நாடுங்கள். தபால்மூலம் பெற்றுக்கொள்ள 071 6850005 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுங்கள்.

### விற்பனை முகவர்கள் / பாடசாலைகள் பெற்றுக்கொள்ள

உங்கள் பிரதேசத்தில் கீழுள்ள உதயன், சுடர்ஒளி நாளிதழின் விற்பனை அபிவிருத்தி உத்தியோகத்திர்களுடன் தொடர்புகொள்ளுங்கள்.

**சரவணகுமார் - 071 8724056**
கம்பளை, கண்டி, மத்தளை, பதுளை, குளியப்பிட்டிய, மாத்தறை, களுத்துறை, அநுராதபுரம், நுவரேலியா

**சுகந்தன் - 077 0274025**
மன்னார், வவுனியா

**சுகிர்தன் - 071 6182182**
யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி

**சசி - 071 8724057**
கல்முனை, மட்டக்களப்பு, புத்தளம்

**மேலதிக தொடர்புகளுக்கு**
071 6850005, 021 5738855

**ஜோதிராஜா - 071 8724059**
கொழும்பு, நீர்கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாவரங்கள் ஓய்வு எடுக்கின்றனவா?

நாம் உழைக்கிறோம். பிறகு உழைப்பை நிறுத்தி ஓய்வு எடுக்கிறோம். நம்முடைய ஓய்வில் தூக்கம் ஒரு முக்கியமான பகுதி. ஆனால் தாவரங்களின் நிலை என்ன? அவை உழைக்கின்றனவா? ஓய்வு எடுக்கின்றனவா?

தாவரங்களின் உழைப்பின் பயன்தான் காய்களும், கனிகளும். தாவரங்களின் உழைப்பின் பயனை நாம் அனுபவிக்கிறோம். ஆனால் அவற்றின் உழைப்பைப் பற்றி நாம் சிந்திப்பதில்லை. தாவரங்களின் உழைப்பைப் பற்றியே நாம் சிந்திக்காத நிலையில், அவை எப்போது ஓய்வெடுக்கின்றன அல்லது தூங்குகின்றன என்று ஏன் யோசிக்கப் போகிறோம்?

தாவரங்கள் மழைக் காலத்தில் ஓய்வு கொள்கின்றன என்று கூறுவது மிகையாகாது. அவை அக்காலத்தில் கும்பகர்ணர்களாகின்றன. தாவரங்கள் ஓய்வு எடுக்க வேண்டிய அவசியம் என்ன? அவை உழைத்துக் களைப்படைகின்றனவா? ஆம், அவை நன்றாக உழைத்துள்ளன. எனவே நல்ல ஓய்வுக்கு அவை தகுதி உடையவை. அவற்றின் பல்வேறு உறுப்புகளும் வசந்த காலம், கோடை காலம், இலையுதிர்க் காலம் ஆகிய பருவங்களில் தமக்குரிய பணிகளைச் செம்மையாகச் செய்துள்ளன.

தாவரங்கள் எவ்வாறு உழைக்கின்றன என்று கேட்கலாம். மனிதர்களாகிய நாம்தான் சுவாசிக்கிறோம் என்று எண்ண வேண்டியதில்லை. தாவரங்களும் சுவாசிக்கின்றன. அவற்றுக்கும் உணவு ஊட்டும் உறுப்புகள் உள்ளன. அரும்புகள் தோன்றுகின்றன. அவை மலர்களாகின்றன. காய்கள் தோன்றி, கனிகளாகின்றன. இந்த விந்தை நிகழ்ச்சிகள் யாவும் தாவரங்களின் வெவ்வேறு உறுப்புகளின் இடைவிடாத உழைப்பைத் தான் சுட்டிக் காட்டுகின்றன.


பொருத்தமில்லாதவை
பிழையானவற்றிற்கு வழிவகுக்கும்...

அனைத்தும் பொருத்தமாக இருக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் பொருத்தமில்லாதவர்களை சேர்த்துக்கொள்ளும்போது அவ்வழகான தருணம் பொலிவிழந்துவிடலாம்,
அதேபோல்...

உங்கள் பஜாஜ் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டிக்கு விரைவில் பழுதாகக்கூடிய, நிறம் மங்கக்கூடிய, சரியாகப் பொருந்தாத, போலி பாகங்களைப் பொருத்துவதனால் அது உங்களின் மொத்த வாகனத்தினது அழகையும் குலைத்துவிடும் என்பது உங்களுக்குத் தெரியுமா?


இங்கு காட்டப்படுவது விரைவில் நிறம் மங்கிப்போய், வர்ணப்பூச்சில் பிளவுகள் ஏற்பட்ட எரிபொருள் தாங்கியாகும். இதேபோன்று பஜாஜ் அசல் பாகங்களில் ஏற்படுவதில்லை.

உங்களின் பஜாஜ் வாகனத்தின் அசல் தோற்றத்தை பேணிக்காத்துக்கொள்ளுங்கள்...

பஜாஜ்
அசல் உதிரிப்பாகங்கள்
மட்டுமே பொருத்திக்கொள்ளுங்கள்...

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம்: PB270
75, ஹைட் பார்க் கோணர், கொழும்பு 02. தொ.பே: 011-4700600

tradlanka



இவ்வளவு சிறப்பாகவும், கடுமையாகவும் உழைத்துள்ள தாவரங்களுக்கு ஓய்வு வேண்டும் அல்லவா? ஆகவே மழைக் காலமே அவற்றின் ஓய்வுக் காலம். நாம் ஓய்வெடுக்கையில் எல்லாப் பணிகளையும் மூட்டை கட்டி வைத்துவிடுவதைப் போல தாவரங்களும் தமது பணிகளை அறவே நிறுத்தி வைத்துவிடுகின்றன.

மழைக் காலம் தொடங்கும் போது சில விலங்குகள் மாண்டு விடுகின்றன. அவற்றைப் போல இறக்காமல் வளமாக வாழும் பெரும்பாலான தாவரங்கள், குறிப்பாக இலைகளை உதிர்க்கும் தாவரங்கள் இலையுதிர் காலத்தில் இருந்தோ அல்லது வசந்த காலத்தில் இருந்தோ ஓய்வெடுக்கின்றன. அந்தக் காலத்தில் அவற்றின் பல்வேறு பாகங்கள் தமது பணிகளை வெகுவாகக் குறைத்துக் கொள்கின்றன.

மழைக்காலத்தில் தாவரங்களின் உயிரணுக்களில் ஈரம் இருப்பதில்லை. ஈரம் உலர்ந்து விடுகிறது. தாவரங்களில் அடங்கியுள்ள தண்ணீரில் பெரும்பகுதி, இலைகளில் உள்ள ஆயிரக் கணக்கான துவாரங்கள் வழியாக வெளியேறிவிடுகிறது.

வேர்களும் தண்ணீரை உறிஞ்சுவதை நிறுத்திவிடுகின்றன. மண்ணின் வெப்பநிலை குறைவதால், வேர் ரோமங்களின் உயிரணுக்களை தண்ணீர் எளிதாக ஊடுருவ முடியாது. அதன் விளைவாக உணவு உற்பத்தி, உணவு உட்கொள்ளுதல் ஆகிய நடைமுறைகள் நின்றுவிடுகின்றன. வேர்கள் தண்ணீரை உறிஞ்சுவதை நிறுத்திய பிறகு இலைகள் உபயோகமற்றுப் போய்விடுகின்றன. அவற்றில் தாவரங்களுக்குத் தேவையான பல தாது உப்புகள் இருக்கின்றன.

மழைக் காலத்தில் தாவரங்கள் தமக்குத் தேவையான பொருள்களை மட்டும் வைத்துக்கொள்கின்றன. அவற்றுக்குத் தேவையில்லாத சுண்ணாம்புச் சத்து, சிலிக்கா போன்றவற்றை இலைகளில் இருந்து அகற்றிவிடுகின்றன. இலைகளில் தாவரங்களுக்குத் தேவைப்படும் நைட்ரஜன், பொஸ்பரஸ், பொட்டாஷியம், மக்னீஷியம் ஆகியவற்றைத் தாவரங்கள் அடிமரத்துக்கும், மாச்சத்து அதிகமாக அடங்கியுள்ள தண்டுகளுக்கும் அனுப்ப வைக்கின்றன. அவை இலைகளின் நரம்புகள் வழியாக அனுப்பப்படுகின்றன.

கடைசியில், தாவரங்களுக்குத் தேவையில்லாத பொருள்களே இலைகளில் தேங்கியுள்ளன. எனவே அவற்றைத் தாவரங்கள் கீழே உதிர்த்து விடுகின்றன. தாவரங்களின் வாழ்க்கையில் ஏற்படும் மாறுதல்களைப் பற்றிச் சொல்லும் ஒரு பிரிவு தாவரவியலில் உள்ளது. அந்தப் பிரிவுக்கு ''பெனாலஜி'' என்று பெயர். அதன் கிரேக்க மூலச் சொல் ''பாட்னோமா'' ஆகும். அதற்கு, ''தோன்றுதல்'' என்று பொருள்.


நாளைய
தலைவராகுங்கள்!
மதிப்புள்ள பிரணாம
புலமைப்பரிசிலுக்கு
விண்ணப்பியுங்கள்!

நாளைய தலைவர்களுக்கு முடிசூட்டும், 12வது செலிங்கோ லை:.ப் பிரணாம புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு விண்ணப்பதாரர்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம். இச்சந்தர்ப்பம் திறமை மிக்க செலிங்கோ லை:.ப் காப்புறுதிதாரர்களின் பிள்ளைகளுக்கானது. உங்கள் பிள்ளை கல்வி, விளையாட்டு, கலை மற்றும் புதிய கண்டுபிடிப்புக்கள் போன்ற துறைகளில் திறமையுடையவர்களாயின் இதற்கு விண்ணப்பிக்க அவர்கள் முழு தகுதி உடையவர்களாவார்கள். உங்கள் செலிங்கோ லை:.ப் பிரணாம விண்ணப்பப்படிவங்களை அருகில் இருக்கும் செலிங்கோ லை:.ப் கிளையில் பெற்றுக்கொள்ளுங்கள். மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் (011) 2 461 461.

விண்ணப்பங்கள் 2012 நவம்பர் 30ம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

நாளைய தலைவர்களுக்கு
செலிங்கோ லை:.ப்
பிரணாம
புலமைப்பரிசில்

செலிங்கோ இன்சூரன்ஸ் பிஎல்சி இனால் வெளியிடப்பட்டது (P024)

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

செலிங்கோ லைஃப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்ன அம்மை நோய் பரவாமல் தடுக்கும் சூரிய ஒளி : புதிய ஆய்வில் தகவல்

சின்னஅம்மை நோய் பரவாமல் தடுக்கும் சக்தி சூரிய ஒளிக்கு உண்டு என புதிய ஆய்வில் தெரியவந்துள்ளது. சின்னஅம்மை நோய் ஒருவித வைரஸ் கிருமியால் பரவுகிறது. அதை தடுக்க ஊசி மருந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், அந்த நோய்க்கு சூரிய ஒளி சிறந்த மருந்து என தெரிய வந்துள்ளது. லண்டனை சேர்ந்த நிபுணர்கள் குழு சின்னஅம்மை நோய் தாக்கியவர்களிடம் ஒரு ஆய்வு மேற்கொண்டனர். அவர்களை நீண்ட நேரம் சூரிய ஒளியில் நிற்க வைத்தனர்.

அவர்களுக்கு அந்த நோயின் தாக்கம் குறைந்தது. அது மேலும் பரவவில்லை. ஏனெனில் அது வைரஸ் கிருமிகளை அழித்து அவற்றின் நோய் பரப்பும் தன்மையை கட்டுப்படுத்துவதாக கருதப்படுகிறது.







As we expand rapidly throughout the country to serve our fast expanding client network, we seek dynamic personnel to build on our reputation of unparalleled reliability, trust and service.

## Regional Manager/Assistant General Manager
(Jaffna Region)

As an integral part of the company's day to day operations, we are looking for an experienced professional to recruit as the Regional Manager for the Jaffna Region.
The Regional Manager will be responsible for overall performance of the Jaffna Region which consists of seven locations. The selected candidate should be able to lead the team towards achieving set targets and aligning the team to the corporate culture. He/she should ensure the smooth functioning of the overall operations of the region and also take responsibility for staff matters.

- The selected candidate should have a good educational background with minimum 10 years experience in a similar capacity in the Financial Services Industry.
- Excellent team building and communication skills to motivate team members towards the corporate goals.
- Strong leadership skills to lead the team.
- Sound knowledge about the market behavior of the respective geographical area.
- A candidate from Jaffna area would be preferred.

## Pawning Executives (Mannar, Batticaloa, Trincomalee, Kantale, Ambalangoda, Ambalanthota, Bandaragama, Kalutara)

**Requirements**

- Over 03 years pawning experience in a reputed finance company.
- G.C.E. Advanced Level & computer literacy.
- Sound interpersonal relationship skills.

## Centre Manager (Kilinochchi)

As an integral part of the company's day to day operations, we are looking for an experienced professional to recruit as the Centre Manager for Kilinochchi. The Centre Manager will be responsible for leading the team towards achieving set targets and aligning the team to the corporate culture. He/she should ensure the smooth functioning of Centre operations and also take responsibility for staff matters.

- The selected candidate should have a good educational background with minimum 05 years experience in a similar capacity in the Financial Services Industry.
- Sound knowledge about the market behavior of the respective geographical area.
- Must have excellent team building and communication skills to motivate team members towards corporate goals.
- Computer literacy & leadership skills are essential requirements for the above position.

COMMERCIAL
CREDIT

Attractive remuneration packages and performance bonus awaits successful candidates. Apply within ten (10) days of this advertisement. Please specify the post applied for as well as the preferred location on the top left corner of the envelope or in the subject line of the e-mail.

All entries should be addressed to:
Assistant General Manager - Human Resources
Commercial Credit & Finance PLC, No. 45, Dharmapala Mawatha, Colombo 07.
Email : careers@cclk.lk | web : www.cclk.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.alaris.lk

நிஜ அழகு தரும்
அதிசய மாற்றம்

Facia
Get Radiant inside out !

Facia For Healthy Glowing Skin
Rs. 46/- for each capsule
TRIPLE ACTION Skin Hair Nails

Facia என்பது மரீன் கொலாஜன், பயோட்டின் மற்றும் இயற்கைப் பதார்த்தங்களின் அற்புதமான கலவையைக் கொண்ட தனித்துவமான சேர்வையாகும். அது உங்கள் சருமத்திற்குப் புத்துயிருட்டி, இழுதன்மையை மேம்படுத்தி, இளமையில் சருமம் முதுமையடைவதைத் தடுக்கும். மெல்லிய கோடுகள் மற்றும் சுருக்கங்களைப் போக்குவதால் உங்கள் சருமம் எப்போதும் இளமைப் பளபளப்புடன் திகழும்.

TGA தராதரங்களுக்கேற்ப அவுஸ்திரேலியாவில் தயாரிக்கப்படும் ஒரிஜினல் Facia இப்பொழுது நாடெங்கும் சகல பிரபல ்பாமஸிகளிலும் சலூன்களிலும் கிடைக்கும்.

மேலதிக விபரங்களுக்கு:
077 3624776

Alaris Lanka (Pvt) Limited.
A Division of Zifam Pinnacle Pty Ltd., Sydney, Australia.
இல. 9/3, ஹொரணை வீதி, கெஸ்பாவ, பிலியந்தலை.



மடகாஸ்கர் நாட்டில் உள்ள காடுகளில் பல்வேறு அரிய உயிரினங்கள் வாழ்வது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அங்கு ஜேர்மனி உயிரியல் விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது 18 மில்லி மீற்றர் உயரம் கொண்ட பச்சோந்திகள் (பல்லி இனவகை) அந்த காடுகளில் வாழ்வது கண்டுபிடிக்கப்பட்டது. உலகிலேயே இதுதான் சிறிய பச்சோந்தி ஆகும்.

Saravana Tex

இன்று முதல் எமது புதிய பிரமாண்டமான காட்சியறை
சங்கானையில்

குறிப்பு: பக்கம் VIII இல் நாளை என்று அச்சுப்பிழையுடன் தவறுதலாகப் பிரசுரமாகியுள்ளது. இன்று என்று வாசிக்கவும்.

16.09.2012 ஞாயிற்றுக்கிழமை

நீங்களும் இளைய தலைமுறையின்
தனித்துவமான வடிவங்களை ரசித்துக்கொள்ள
எமது பயணத்தில் இணைந்து கொள்ளுங்கள்

சரவணா ரெக்ஸ் 04
இல.219, பிரதான வீதி, சங்கானை.
(HNB வங்கி முன்பாக)
தொ.பேசி: 021 225 0909

திறப்பு விழாவில் வாடிக்கையாளர்கள்,
அன்பர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும்
கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ரெட்டினா குரூப்
Retina Group
மாபெரும் திறப்புவிழா

கொழும்பு மாநகரில் தசாப்த காலத்திற்கும் மேலாக நற்பெயருடன் இயங்கிவரும் முன்னணி நிறுவனங்களான ரெட்டினா வெளிநாட்டு வேலைவாய்ப்பு, ரெட்டினா கல்வி நிறுவனம், ரெட்டினா குடிபெயர்ச்சி சேவை, ரெட்டினா ராவல்ஸ், ரெட்டினா கணினி சேவை ஆகியவற்றின் கூட்டு நிறுவனமான ரெட்டினா குரூப் இப்போது யாழ் மக்களின் நன்மை கருதி தமது சேவைகளை 22.09.2012 சனிக்கிழமை முதல் இல. 687, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணத்தில் விஸ்தரித்துள்ளது.

தரமான நம்பிக்கை மிகுந்த சேவைகளை துரித கதியில் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்.
எமது அனுபவம் வாய்ந்த ஊழியர்கள் உங்கள் தேவைகள் அறிந்து சரியான வழி நடத்துவார்கள்.

ரெட்டினா கல்வி நிறுவனம்
* IELTS
* Computer Studies
* English Course
* Study Abroad

ரெட்டினா ராவல்ஸ்
* Air Line Tickting
* Outbond Tour
* Hotel Bookings

ரெட்டினா கணனி சேவை
* Computer Sales
* Hardware & Networking
* Software Programing
* Web Development

ரெட்டினா குடிபெயர்ச்சி சேவை
* Skill Migration
* Tourist Visas
* Setlment Visas

UK, USA, CANADA, AUSTRALIYA, NEW ZEALAND

No:687, Hospital Road, Jaffna. Hot Line: 077 770 8255
Head office: 294, Galle Road, Colombo 04. Sri Lanka. TEL: +94 114 510442/3 FAX : +94 114 723818
jobs@retina.lk http://www.retina.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Lovers Corner

No.164, Ramanathan Road, Jaffna.

எமது கிளைகள் வேறு எங்கும் இல்லை

## வாடிக்கையாளர்களே



இன்றில் இருந்து (16.09.2012) 15 தினங்கள் (30.09.2012 வரை) கொள்வனவு செய்யும் பொருள்களுக்கு 10 % விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.




கொரியா, பாங்கொக் நாடுகளில் இருந்து நேரடியாக (Import item) இறக்குமதி செய்யப்பட்ட (F) பான்சி பொருள்கள் (Fancy Items) Slippers (காலணிகள்), காப்புகள் (Bangles), தோடுகள் (Earrings), முக ஒப்பனைப் பொருள்கள் (Make up Item) மற்றும் மங்கையர் மனம் கவர் பல பொருள்களை ஒருமுறை வந்து பாருங்கள்.






**Lovers Corner**

*The Latest Fancy Collection For Youth We Have For You*

உரிமையாளர்:- V.பிரஷன்னா.

இல. 164, இராமநாதன் வீதி, யாழ்.பல்கலைக் கழகம் கலைப்பீடம் முன்பாக (பல்கலைக்கழக மக்கள் வங்கி ATM இயந்திரம் முன்பாக)

---

# After A/Level's

**Join Sri Lanka's # 1**



## DiTEC INTERNATIONAL

Diploma in Information Technology

**சிறப்பம்சங்கள்** — **காலம் 4 மாதங்கள்**

- இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட Malaysia இல் அச்சிடப்பட்ட சான்றிதழ்.
- சர்வதேசத்தினால் (Edexcel-UK) இனால் வழங்கப்படும் மேலதிக சான்றிதழ்.
- BCS-UK இனால் வழங்கப்படும் Transcript
- பட்டப்படிப்பிற்கான முதல் ஆண்டிற்கு சமனான கற்கைநெறி (B.Sc 1st Year)
- தரமான ஆசிரியர் குழாம் மற்றும் அதிக Practical வகுப்புக்கள்
- IT கற்கைநெறி கற்பவர்களுக்கு Diploma in English இல் 20% கட்டணச்சலுகை

**NEW BATCHES**

@ 9.00 am & 2.00 pm

- 17th Sept 2012
- 19th Sept 2012
- 24th Sept 2012

HOTLINE 077 309 9 308

**ESOFT Computer Studies [Pvt] Ltd**

17/1, Brown Road, Jaffna. Tel:021 222 4142

Email:jaffna@esoft.lk web: www.esoft.lk

இலங்கை அரசாலும் UK, USA, Australian மற்றும் European நாடுகளாலும் அங்கீகரிக்கப்பட்ட உடனடி தொழிலொன்றைப் பெற்றுக்கொள்ள வழிவகுக்கும்

## DiCA

Diploma in Computerized Accounting

முற்றிலும் இலவசம், எவ்வித கட்டணங்களும் கிடையாது. இவ் அரிய வாய்ப்பு எம்மிடம் மட்டுமே....!!!

- MYOB
- ACCPAC
- Peachtree
- Quick Books
- SAGE
- Tally

காலம் 4 மாதங்கள்



ESOFT The Leader in Professional ICT Education

*Trusted IT Partner*

## Other Diplomas

- DiWE — Diploma in Web Engineering — காலம் 6 மாதங்கள்
- DiBM — Diploma in Business Management — காலம் 4 மாதங்கள்
- DiSE — Diploma in Software Engineering — காலம் 6 மாதங்கள்
- DiE — Diploma in English — காலம் 4 மாதங்கள்
- DiHN — Diploma in Hardware & Networking — காலம் 4 மாதங்கள்
- DiGD — Diploma in Graphic Designing — காலம் 4 மாதங்கள்

இம் மாத பதிவுகளுக்கு எங்களுடன் இணைந்து 4GB Pendrive ஒன்றினை FREE இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்

ESOFT The Leader in Professional ICT Education

| Nelliady | Kilinochchi | Uduppidy |
|---|---|---|
| 151, Jaffna Rd | Kanagapuram Rd, | Jaffna Rd, Uduppidy. |
| 021 226 4940 | 021 228 5444 | 021 320 1303 |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## அந்தாட்டிக்காவில் பனிக்கட்டிகளுக்கு அடியில் மலைகள் கண்டுபிடிப்பு

உலகின் துருவ பகுதியில் அமைந்துள்ள அந்தாட்டிக்கா குறித்து விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். இதில் இங்கிலாந்து நாட்டை சேர்ந்த ரோலண்ட் வார்னர் தலைமையில் பல்வேறு நாடுகளை சேர்ந்த குழுவினர் ஆய்வு நடத்தி புதிய தகவல்களை சேகரித்து "பெட்மேப்-2" என்ற வரைபடத்தை வெளியிட்டுள்ளனர். அதன் அடிப்படையில் அந்தாட்டிக்காவில் சுமார் ஆயிரம் மீற்றர் ஆழத்துக்கு பனிக்கட்டி குவிந்து கிடக்கிறது என்றும், அதற்கு அடியில் மலைத் தொடர்ச்சி இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்கள். இந்த மலை தொடர்ச்சி கடல் மட்டத்திற்கும் கீழ் சுமார் 3 மீற்றர் உயரத்திற்கும், 3 ஆயிரத்து 500 கிலோ மீற்றர் நீளத்திற்கும் அமைந்திருக்கிறது. இந்த வரைபடம் வருங்கால ஆராய்ச்சிக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று ரோலண்ட் வார்னர் தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில், ராடர் மூலம் துளை போட்டு சோதனை நடத்தியபோது கிடைத்த எதிரொலியை கொண்டு இதை கண்டுபிடித்து இருக்கிறோம் என்று கூறினார்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அதிநீண்ட காலம் பாவிக்கும் தரமுயர்ந்த நீர்க்குழாய்கள்

## இன்டெலிஜன்ற் நீர்க் குழாய்கள் இப்பொழுது யாழ்ப்பாணத்திலும்




தண்ணீர் மற்றும் வெந்நீர் விநியோகத்திற்கு உகந்த உலகப் புகழ்பெற்ற FlowGuard™ CPVC (Chlorinated Polyvinyl Chloride) குழாய்களையும் பொருத்துக்களையும் ஃபீனிக்ஸ் பிளாஸ்டிக்ஸ் அறிமுகப்படுத்தியுள்ளது. தரமுயர்ந்த CPVC கொண்டு உருவாக்கப்பட்டு, கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாகப் பரீட்சித்து நிரூபிக்கப்பட்ட இக் குழாய்கள் யாழ்ப்பாணத்தில் பயன்படுத்துவதற்கு மிகப் பொருத்தமானவை. ஐக்கிய அமெரிக்காவின் லூப்ரிசோலிடமிருந்து பெற்ற அனுமதியின் கீழ் ஃபீனிக்ஸ் நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படும் இக் குழாய்கள், நீடித்த பாவனை, நம்பகத்தன்மை, பராமரிப்பு ஆகிய துறைகளில் மற்றைய குழாய்களைவிட முன்னணி வகிப்பதுடன் ASTM, DIN, BS, EN-ISO, BIS போன்ற பிரபல சர்வதேச தர நியமங்களுக்கும் அமைவாக விளங்குகின்றன.

**50+**

FlowGuard CPVC குழாய்கள் உலகளாவிய ரீதியில் இணையற்ற 51 வருட பாவனைக் காலத்தையும் 2 என்ற பாதுகாப்புக் காரணியையும் கொண்டவை. அரிப்பு, குழி விழுதல், உரிதல் என்பவற்றிற்குத் தாக்குப் பிடிப்பதால், அரை நூற்றாண்டு காலத்திற்கு மேல் பாவிக்கலாம். இந்த நன்மைகள் எல்லாவற்றிற்கும் மேலாக, FlowGuard குழாய்கள் சக்திப் பாவனையில் சிக்கனமானவை. எனவே, சூழல்நல

### பாதுகாப்பானது, வலிமையானது, தரமுயர்ந்தது

- ஈயம் அற்றது என்பதால் நீரில் நச்சுத்தன்மை உண்டாகும் அபாயம் இல்லை.
- குழாயில் அடங்கியுள்ள குளோரின், தீய பக்டீரியாக்களைக் கொல்லும்.
- கடின நீர் உள்ள பிரதேசங்களுக்கு மிகவும் சிறந்தது.
- அதிவெப்பக் காலநிலையிலும் நீரின் தரச்சிறப்பிற்கு உத்தரவாதம் அளிக்கும்.
- 93°C வரையான வெப்பத்திற்குத் தாக்குப்பிடிப்பதுடன், நீர் ஒடுக்கமும் குறைவாக இருக்கும்.
- தண்ணீர் மற்றும் வெந்நீர் விநியோகத் தொகுதிகளுக்கு ஏற்றது.
- எளிதில் தீப்பிடிக்காது.
- 100% கசிவின்றி நன்கு ஒட்டிப்பிடிக்கும் மூட்டுக்கள்.
- எளிதில் உடையாத, வலிமை மிக்க குழாய்கள்.
- நம்பகமானது. குறைந்த பராமரிப்புச் செலவுடன் நீண்ட காலம் பாவிக்கலாம்.

Phoenix

FLOWGUARD™ PIPE & FITTINGS

Lubrizol

SAATCHI & SAATCHI


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உங்களுக்கு பொருத்தமான போன் மிகக் குறைந்த விலையில்

இதோ மிகக் குறைந்த விலையில் ஸ்மார்ட்போன். Samsung Galaxy Y Duos lite ஸ்மார்ட் போனில் உங்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் உண்டு. அடிக்கடி பயணம் செய்பவர்களுக்கு மிகச்சிறந்த கைக்கடக்கமான உபகரணம். அதன் பளிச்சிடும் வடிவமைப்பு உங்கள் அழகிற்கு மேலும் அழகூட்டும். அத்துடன் செயற்படுத்துவதும் மிகவும் இலகுவானது.

- UMTS HSDPA 3.6 (900/2100MHz)
- 2.8" QVGA TFT LCD
- 2MP FF Camera
- TouchWiz for Android
- A-GPS

* நிபந்தனைகள் உண்டு * இச்சலுகை 2012 செப். 7 முதல் செப். 30 வரை மட்டுமே.

**Warranty: 2 years for mobile phones / 6 months for battery, charger and earphones as per Samsung standard policy.**

**National Distributor:** John Keells Office Automation (Pvt) Ltd., Tel: 011 2 313 000, Hotline: 0777 902 887, Fax: 011 2 431 745, E-mail: samsung@jkoa.lk.

SAMSUNG smartphone café **MobileMax** Platinum Towers, 011 5 744 455. **Chinthana GSM** Maharagama, 011 2 850 851. **Q Tel Holding** WTC, 0727 021 021, **Divine** Crescat, 0112 449 933, **JKOA** Hot Line - 0773 022 286, **Aiken** Sausiri Building Nugegoda - 0714 041 197, **Opsel** Phone Galary Malabe - 0775 795 795, **Softlink** Moratuwa - 0112 646 672

**Samsung Customer Care Centres:** Colombo: The Phone Company International (Pvt) Ltd. 0777 322 223 / 0777 595 595, Galle: 0777 361 444, Kandy: 174, Kotugodella Veediya - 0777 487 447, E-mail: support.srilanka@samsung.com.

**Samsung Call Centre:** 011 7 347 070 / 011 7 348 080.

**Singer Mega, Singer Plus and Sisil World -** 011 5 400 400. **Softlogic & Softlogic Max Outlets** - 011 5705705, **Singhagiri (Pvt) Ltd:** Hotline: 011 5 413 413

**Regional Distributors: Gampaha:** Cell Mart Telecom Services (Pvt) Ltd. - 0715 364 356, **Badulla:** H.A.Bagasrawala & Sons - 0552 222 296, **Kegalle:** Seetha Holding (Pvt) Ltd. - 0357 389 281, **Hambantota:** Aiken (Pvt) Ltd. - 0714 041 197, **Homagama:** S.T.Distributors, **Ratnapura and Embilipitiya:** Global Zone (Pvt) Ltd. - 0722 301 022, **Ampara:** Mobilix Lanka (Pvt) Ltd.- 0718 000 888, **Pettah:** Touch Cellular - 0777 122 299, **Anuradhapura:** Universal Cellular (Pvt) Ltd. - 0714 893 708, **Batticaloa:** Max Lanka (Pvt) Ltd. - 0715 358 654, **Kurunegala:** Universal Cellular (Pvt) Ltd. - 0715 346 938, **Jaffna:** Unitel - 0750 386 067, **Polonnaruwa:** Midland Air Technologies - 0272 222 277, **Galle:** Dharshana Enterprises - 0777 266 199, **Kalutara:** The Phone Arcade - 0773 509 181, **Matara:** Information & Data Management Systems (Pvt) Ltd. - 0714 297 546, **Trincomalee:** Unilever Cell Mobiles - 0775 556 868, **Vavuniya:** T Mobile - 0777 401 777, **Kandy:** Gunasekara & Sons - 0776 077 769, **Nugegoda / Maharagama:** Aiken Pvt Ltd. - 0714 041 197, **Matale:** Smart Phone House J A Shafeek - 0777 811 992, **Colombo / Moratuwa:** ST Distributors - 0715 358 387. **Nuwara Eliya :** The Phone Tik - 0714 041 380,


## வரலாற்றுச் சாதனை முயற்சிக்கான சந்தர்ப்பம்

**அன்பு நண்பர்களே!**

எமது நண்பனின் பிறந்த தினத்தை எதிர்வரும் மார்கழி மாதம் 12 ஆம் திகதி (12.12.12) கொண்டாட இருக்கின்றோம். அத்துடன் நீங்கள் யாராவது 12.12 இல் பிறந்திருந்தால் உங்களுக்கும் சேர்த்து பாராட்டு விழா யாழ்ப்பாணத்தில் வெகு விமர்சையாக கொண்டாட இருக்கிறோம்.
எனவே ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
12 பேருக்கு மட்டுமே சந்தர்ப்பம் வழங்கப்படும்
பதிவு களுக்கு முந்துங்கள்.
அனுசரணையாளர்களையும் எதிர்பார்க்கின்றோம்.

**மேலதிக தொடர்புகளுக்கு:**
**பிரபா - 077 4574565**
Kadalarasan 12 @ yahoo . Com

(22841) (45.6.7)

## பணிநிலை வெற்றிடம்

*Omega Construction (pvt.)Ltd.*
*174, Ananthapuram, Kilinochchi.*
*Contact No. 021 228 5699, 077 508 2728*

**விண்ணப்பங்கள் கோரல்**

கணக்காளர் (Accountant)
தகைமை: அனுமதிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம் (வணிகத்துறை)
ஆகக் குறைந்தது 3 வருட அனுபவம்
கணினி தொழில்நுட்ப அறிவு
வயது எல்லை - (25-40)

கணக்கியல் லிகிதர் (Account Clerk )
தகைமை: க.பொ.த(உ/த) வர்த்தகப்பிரிவு
கணினி தொழில்நுட்ப அறிவு
ஆகக் குறைந்தது 3 வருட அனுபவம்
வயது எல்லை -(20-35)

வேலை மேற்பார்வையாளர்
தகைமை: க.பொ.த(உ/த)
வீதி கட்டட நிர்மாணத்துறை தொழில்நுட்ப அறிவு
ஆகக் குறைந்தது 3 வருட அனுபவம்
வயது எல்லை -(20-35)

கனரக வாகன சாரதி
தகைமை: கனரக வாகன அனுமதிப்பத்திரம்
கனரக வாகன செலுத்துதலில் ஆகக் குறைந்தது 3 வருட அனுபவம்
வயது எல்லை -(25-40)

Dozer, JCB, Backhoe Operators டோசர்,ஜேசிபி, பக்கோ வாகன இயக்குநர்.
தகைமை: கனரக வாகன அனுமதிப்பத்திரம்
Dozer, JCB, Backhoe Operators டோசர்,ஜெசிபி, பக்கோ வாகன இயக்குகையில் ஆகக் குறைந்தது 3 வருட அனுபவம்.
வயது எல்லை-(25-40)

(19325)(5-6-7)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org